# ஸ்ரீ உபாஸனி விஜயம்



ஸ்ரீ உபாஸனி பாபா

# ஸ்ரீ உபாஸனி விஜயம்

நூலாசிரியர்:

எஸ். ராஜம்

அன்பளிப்பு
பேராசிரியர். மு. உலகநாதன், எம்.ஏ.,
செந்தமிழ்க்கல்லூரி,
மதுரைத் தமிழ்ச்சங்கம்,
மதுரை- 625001.

மதுரைத் தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMILSANGAM *

பிரசுர கர்த்தர்:

பி. ஜி. பால் அண்டு கம்பெனி,

புத்தக வியாபாரிகள்,

சென்னை

1939

*First Edition, February 1939*

The Liberty Press, G. T., Madras.

# FOREWORD

This book is an adaptation not a mere translation, of my 'Sage of Sakori'—the second edition of which is just now issued. After a rapid perusal, I am struck with the excellence of this Tamil presentation. In several parts, it is more forcible and better adapted to the taste of the Tamilian public, than the original English work. In an easy and clear style, breathing sanctity in every page and paragraph, this writer rapidly carries her readers along to view scenes and events of absorbing interest that abound in this biography, and incidentally showers upon them a wealth of philosophical, ethical and spiritual truth. Reading this book over and over will rouse people from chronic lethargy into high endeavour. She aptly closes her book with definite directions enabling earnest readers to avail themselves of the help which this living saint stands ready to render, even now in matters temporal and spiritual, *e.g.*, in obtaining relief from worldly cares and sorrows and in developing power, purity and peace.

15—2—39
Madras

*B. V. Narasimmaswami*

# முன்னுரை

ஸ்ரீ உபாஸனி பாபா என்னும் ஓர் வட இந்திய ஸாதுவினாலே பம்பாய் ராஜதானியில் கணக்கற்ற மக்களடைந்து வரும் நன்மைகளை, நம் தமிழ் மக்களும் அடைந்து வாழ்க்கையின் மனோரதங்களையும் இகபர சௌக்யத்தையும் பெற்று இன்புற வேண்டுமென்னும் கருத்துடன் எழுதப்பட்ட இப்புத்தகத்திற்குத் தமிழ் மக்களெல்லாரும் பூரண ஆதரவளிப்பார்களென நம்புகிறேன். ஏற்கனவே ஆங்கிலத்தில் "**Sage of Sakori**" என்ற பெயருடன், சேலம் ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியவர்களால் எழுதப்பட்டு இந்நூல் வெளிவந்துள்ளதை நேயர்களறிவார்கள்.

தெய்வ கிருபையினாலும், ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியவர்களுடைய ஆசிர்வாதத்தினாலும் அவர் எனக்களித்த மனோதைரியத்தினாலுமே இப்புத்தகம் எழுத முடிந்தது. ஸத்விஷயமான இதன்மூலம் நன்மையடையும் நாம் அனைவரும் அவருக்குப் பெரிதும் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

இதைப் பிரசுரம் செய்ய முன்வந்த **B. G.** பால் அண்டு கம்பெனியாருக்கும் எனது மனமார்ந்த வந்தனங்கள்.

மதருஸ்
15—2—39.

S. ராஜம்.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | ஞானச்சுடர் | 1 |
| 2. | புண்ய பூமி | 5 |
| 3. | மறைந்திருக்கும் புதையல் | 10 |
| 4. | இல்லறமும் துறவறமும் | 16 |
| 5. | நித்தியானந்த அனுபவம் | 24 |
| 6. | செல்வமும் வறுமையும் | 31 |
| 7. | ஸாதுவைச் சரணடைதல் | 40 |
| 8. | தடுத்தாட்கொண்ட தற்பரன் | 46 |
| 9. | ஸ்ரீஸாய் பாபா | 51 |
| 10. | குருவும் சீடனும் | 58 |
| 11. | தேசிகன் தந்த செம்பொன் சாஸனம் | 63 |
| 12. | ஸமதிருஷ்டி | 73 |
| 13. | உபவாஸம் | 78 |
| 14. | பிரதிஷ்டை | 82 |
| 15. | பிரும்மசிஷ்டாவஸ்தை | 86 |
| 16. | பொன்னாசையை யொழித்தல் | 96 |
| 17. | ஞானமும் ஞான திருஷ்டியும் | 102 |
| 18. | துன்பத்தின் சிகரமும் அதன் முடிவும் | 110 |
| 19. | அக்ஞாத வாஸம் | 117 |
| 20. | கரக்பூரில் அடைந்த கீர்த்தி | 121 |
| 21. | தெய்வீக சக்தியின் மகத்துவம் | 135 |
| 22. | பாபாவின் கொள்கைகளும் உபந்யாஸங்களும் | 139 |
| 23. | என்ன நன்மை ? | 155 |
| 24. | ஸகோரியிலே பாபாவுடைய தினசரி வாழ்க்கை | 162 |
| 25. | படிப்பினையும் முடிவுரையும் | 168 |
| | அனுபந்தம் | 173 |

## படங்கள்


| பெயர் | பக்கம் |
|---|---|
| 1. ஸ்ரீ உபாஸனி பாபா பிஞ்சரா(கூண்டு)வின் அருகில் | |
| 2. பூர்கட் குகை .... .... .... | 25 |
| 3. சோமனுதர் லிங்கம் (கௌரீ சங்கர்) .... | 37 |
| 4. ஸ்ரீ ஸாய் பாபா .... .... | 51 |
| 5. கண்டோபா கோவில் .... .... | 85 |
| 6. ஸ்ரீ உபாஸனி பாபா நிவாஸம் .... | 138 |
| 7. தத்தர் கோவில் .... .... .... | 139 |
| 8. ஆரதிக் கூடம் .... .... .... | 144 |
| 9. பாபாவும் கன்னிகைகளும் யாகம் செய்தல்.... | 145 |

# ஸ்ரீ உபாஸனி விஜயம்

## அத்தியாயம்—1

### ஞானச்சுடர்

* ஞான ரவியும் நகைப்பொ டெழுந்தான்
நற்பெரு வாழ்வு பெருகிய திங்கே
தானறி வாகிய சற்குரு நாதர்
தன்னரு ளெங்கும் பரவிய தம்மா!
ஈனப் பிறவி யருளினி நில்லா
தெம்பெரு மானடிக் கன்பு செய்துய்ய
வானவர் போற்றும் தனிச்சபை மீதே
மாதவர் கோனே யெழுந்தருள்வீரே-

அரிதாகிய மானிடப் பிறவி யெடுத்ததன் பயன் பேரின்ப வீட்டை யடைவதற்கேயாம். நித்தியானந்தமாகிய இந்த நிலையை அடைவதற்கு எல்லாவற்றிலும் சிறந்தது பக்தி மார்க்கமே. வேறொன்றிலும் செல்லாத தீவிரமான பக்தியினாலேயே பகவானைக் கண்டு அவரருள் பெறலாம். பக்தியினாலேதான் அவருடைய சொரூபத்தை யறியவுங் கூடும். பிறப்பென்னுந் துக்கஸாகரத்திலாழ்ந்து கரைகாணாமற் றவிக்கும் ஒவ்வொருவரும், அதைக் கடத்தி தம்மைக் கரையேற்ற வல்ல, தெப்பம் போன்ற ஞானி யொருவரை யடைந்து, ஆத்ம

* இக்குறியிட்ட பாடல்களெல்லாம் ஆசிரியராலேயே இயற்றப்பட்டவை.

ஞானம் பெற்று முத்திக் கரையை சேர வேண்டிய தவசியமல்லவா? ஸர்வஜீவதயாபரனுகிய கடவுளே மக்களின் மீது கருணை கொண்டு அவர்களுடைய அறியாமையைப் போக்கி அறிவுதந்து, ஆட்கொள்ள வென்றே ஸாதுக்களின் வடிவமா யவதரிக்கிருர். ஸாதுக்கள், இறைவனுடைய பிரதிபிம்பமாக, பேசுந் தெய்வமாக, அறிவென்னும் செங்கோல் செலுத்தி மக்களின் ஹிருதய லோகங்களிலே பக்தி யென்னும் அரசாட்சி செய்பவர்கள். ஆகவே, பக்தர்களைக் காணும்போது நாம் பரந்தாமனையே கண்ட பாக்கியவந்தர்களாகிறோம்.

வெளிச்சமில்லாவிடில் இருள் நீங்காததுபோல, ஆத்மஞானமில்லாவிடில் பிறப்பென்னும் அந்தகாரம் விலகுவதேது! தீப்பட்ட விறகு சாம்பலாவது போல ஞானத் தீயிலே வினைகளெல்லாம் சாம்பலாய் விடுகிறது. ஞானமென்னும் இந்த சுத்த அறிவே சிவமென்று சுருதிகளும் கூறுகின்றன. வியாதிக்கு ஔஷதம் எவ்வாறு அவசியமோ அதே போலத் துன்ப மென்னும் நோய்க்கு ஞானமே சிறந்த ஔஷதம். அறிவே ஆனந்தம். அறிவை யடைந்தபோது நாமும் ஆனந்தமடைகிறோம்.

அழியாத இன்ப நிலையைத் தரவல்ல இந்த ஞானத்தைப் பெறுவதற்கு எளிய மார்க்கம், ஓர் ஸத்புருஷனை யடைவது தான். ஸாதுக்கள் கங்கைநதிக் கொப்பானவர்கள். அவர்களுடைய ஸத்வத்தினுலே அவர்களைச் சேரும் நாமும் ஸத்வர்களாகிறோம். அவர்களுடைய தரிசனத்தினுலே நாம் உள்ளத் தூய்மையும், கடவுளிடத்தில் நம்பிக்கையும், பக்தியும், பெற்றவர்களாய் இகபர சௌக்யத்தையுமடைகிறோம். அஞ்ஞானத்திலமிழ்ந்து கிடக்கும் மக்களை அருட்கண்ணேக்கி, "என் குழந்தைகளே! வாருங்கள். உங்களை ஆனந்த மயமாக்குகிறேன்" என்று

பரிவுடன் கூவி யழைக்கும் கருணாமூர்த்திகளான ஸாதுக் களுடைய அவதாரம் உலகைப் புனிதப்படுத்துகின்றது. ஆனால், அத்தகைய மகான்கள் கிடைப்பது தான் அரிது.

இந்தக் கலியுகத்திலே, அப்படிப்பட்ட "ஸாது" ஒருவர் கண்கண்ட தெய்வமாகியிருக்கிறார் எனில், அது ஆச்சர்யமும் ஸந்தோஷமும் அடையத் தக்க விஷயமல் லவா! தவிர, கணக்கற்ற ஜனங்கள் நாடோறும் வந்து அவரிடம் தமது குறைகளை முறையிட்டு, சாந்தி பெற் றுத் திரும்புகிறார்களென்றால் அதைவிட ஆச்சரியம் வேறுண்டோ!

ஸத்கர்மங்களைத் தெரிந்துகொள்ள வருபவர்களும், ஞானோபதேசம் பெற வேண்டி வந்து தஞ்சமடைந்தவர் களும், ஆதரிப்பாரின்றி அடைக்கலம் புகுந்திருப்பவர் களும், சேவிக்க வரும் யாத்ரீகர்களும், பாபவிமோசனத் தைக் கருதிவந்து அவருடைய கிருபையினால் பரிசுத்த மடைபவர்களும், மோக்ஷ ஸாதனத்தை வேண்டி மல ரைச் சூழ்ந்த வண்டினங்கள் போல வந்து கூடும் பக்தர் களுமாக, அவரிடம் வந்தடையும் ஜனக் கூட்டத்திற்குக் கரையே யில்லை. அவர் மகிமைக்கு ஓர் எல்லையும் இல்லை. தன்னை நம்பினோரை அவர் தனது அகண்ட சக்தியினாலே காத்து அன்போடு ரக்ஷிக்கிறார். பூர்வ கர்ம வசத்தினாலே கஷ்டப்பட்டு நொந்தவர்களுக்கு சாந்தியையும் தைரியத் தையும் அளிக்கிறார், பக்தியும் நம்பிக்கையுமுடையவர் கட்கு இஷ்ட சித்தியையும் உண்டாக்குகிறார். அவர் ஸர்வ வியாபகர், ஸர்வக்ஞர், எவ்விடத்தும், எக்காலமும் தனது ஸர்வ சக்தியினால் யாவுஞ்செய்ய வல்ல ஸித்தர்.

ஓர் ஸமயம், அவருடைய பக்தரான ஒருவருடைய நான்கு வயதுப் பெண் குழந்தையை அவளுடன் விளை

யாடிக் கொண்டிருந்த சிறுவனொருவன் கிணற்றிலே தள்ளிவிட்டான். இரண்டே அடி யகலமுள்ள மிகக் குறுகலான அந்தக் கிணற்றில் பதினெட்டு அடியாழம் ஜலமிருந்தது. வீட்டிலுள்ளோர்க்குத் தெரிநது. அவர்கள் வந்து ஆளைக் கொண்டு கிணற்றின் அடியிலிருந்து குழந்தையை மேலே எடுக்க இருபது நிமிடங்களுக்கு அதிகமாயிருந்தும், அந்தக் குழந்தை மேலே வந்தவுடன், என்னை அந்தப் பையன் தான் தள்ளினன் என்று சொன்னாள். அவள் நாசியிலோ வயிற்றிலோ தண்ணீர் கொஞ்சமும் ஏறவில்லை. வைத்தியர்களாலும் கைவிடப்பட்ட ஒருவன் அவரிடம் வந்து அவர் சொன்ன விதமே நடந்து தன் கண் நோய் தீர்ந்து தெளிவான பார்வையைப் பெற்ருன். அவரை நம்பினவர்களை ஆதரிப்பதையே அவருடைய கடமையாகக் கொண்டிருக்கிறவர். பக்தர்களுடைய வாழ்க்கையிலே இம்மாதிரி அவர் விளைக்கும் விந்தைகளுக்களவில்லை. யாரும் அவரிடம் ஒன்றையும் மறைக்க முடியாது. அவர் ஞானதிருஷ்டியினலே எதையும் அறியும் அபார சக்தி வாய்ந்தவர்.

ஒரு மனிதன் அவரைத் தரிசிக்கப் போக வேண்டுமென்று தன் மனைவியிடம் சொல்ல, அவள், வீணாய் ஐந்து ரூபாய் சிலவாகுமே, அது இருந்தால் ஒரு நகை செய்வதற்காகும் என்று சொன்னளாம். பிறகு அவன் இவரைத் தரிசிக்க வந்திருந்தபோது இவர் பொதுவாகச் சொல்பவர் போல, "எல்லாரும் வீண் சிலவு செய்துகொண்டு ஏன் என்னிடம் வரவேண்டும்? அந்தப் பணமிருந்தால் அவர்கள் மனைவிகளுக்கு நகையாவது ஆகுமே!" என்ருராம்.

இவ்விதமாக இம்மகான் செய்யும் அற்புதங்கள் அனந்தம். இவருடைய அனுக்ரகத்தினலே அவரவர் அடைந்த

நன்மைகளெல்லாம் இவருடைய பக்தர்கள் கூற எழுதி வைத்தது ஒரு புத்தக ரூபமாக பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இம்மகானுடைய அன்புக்குப் பெரிதும் பாத்திரமானவரும், தெளிந்த விவேகமும், ஆழ்ந்த ஆத்மஞானம் பெற்றவருமான சேலம், ஸ்ரீ நரஸிம்மஸ்வாமியவர்கள், மக்களெல்லாரும் இந்த பேசுந் தெய்வமான மகரிஷியிடமிருந்து நலம் பெற்று வாழ விரும்பி, இவருடைய ஜீவிய சரித்திரத்தைக் காண விரும்புவோர்க்குக் கைத்தலக் கனியாகவும், ஞானப் பசிகொண்டோர்க்கொரு நல்லமுதென்னவும், நந்தேசத்தினர்க்கே யன்றி பிறதேசத்தினர்க்கும் பயன்படுமாறு ஆங்கிலத்திலே அழகுற எழுதி வெளியிட்டிருக்கின்றார். அவருடைய மனோ பீஷ்டத்தின்படியே நந்தமிழ் மக்கள் யாவரும் இந்த பரமஹம்ஸருடைய சரித்திரத்தை யறிந்து பக்தி யென்னும் பெருநிதியை யடைய வேண்டுமென்றே இந்நூல் தமிழில் எழுதலாயிற்று.

* அருள்வாரி தனிலெழுந்த வானந்தத் தெள்ளமுதை
மருள்தீர வுண்போம் மக்களே வாரீர்.

## அத்தியாயம்—2

## புண்ய பூமி

* எண்ணிய தனைத்தும் நமக்கீந்திடும் நன்னாடு
புண்ணிய ரவதரித்த பொற் பரதநாடு.

ஆரியத்தாயின் சீரிய திலகம் போன்ற நமது இந்திய நாடு எண்ணற்ற பக்த கோடிகளையும் பரமஹம்ஸர்களையும் உத்தம ஸ்திரீ ரத்தினங்களையும் தேசாபி

மானம் சிறந்த மஹான்களையும் பாரத வீர புருஷ சிரேஷ்டர்களையும் அறிவிற் சிறந்த ஞானிகளையும் ஈன்று நமக்களித்திருக்கிறது. உலகிலே தர்மங் குன்றி அதர்மமும் நாஸ்திகமும் தழைக்கும் ஆபத்தான காலங்களில் சீர்கெட்ட உலகைச் சிறை மீட்கவும் ஞான ஒளியை ஞாலமெங்கும் பரப்பவும் ஸத் புருஷர்கள் அவதரித்து குன்றாத புகழை நிலைநாட்டியது நமது பாரத நாட்டிலே தான். மடிந்து கிடந்த மக்களின் ஆத்ம உணர்ச்சிக்கு புத்துயிர் வழங்கினவரும் ஸ்ரீ கிருஷ்ணனைப் போல எல்லாருக்கும் எல்லாமாயிருந்தவரும் தண்ணீரில் விளக்கெரித்த ஸமர்த்தருமாயிருந்த ஸ்ரீ சாயிபாபா அவதரித்த திருநாடும் இதுவே. எம்மதமும் ஸம்மதமெனக் கொண்டு முற்றுந் துறந்த முனிவராய் அருணாசலத்திலெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ரமண பரமஹம்ஸருதித்த பொன்னாடு மிதுவே. இப்புண்ய பூமியிலே பரமஹம்ஸர்களுடைய பரம்பரை வழுவாமல் பகவானுடைய அம்சமாக ஸ்ரீ உபாஸனி மஹரிஷி அவதரித்தார்.

பம்பாய்க்கு சமீபத்திலுள்ள நாஸிக் ஜில்லாவைச் சேர்ந்த ஸதாணா என்னும் கிராமம் இவருடைய பிறப்பிடம். இதற்கு உண்மையான பெயர் ஸத்யாயனபுரம். பண்டரிநாதனின் அடியார்களுதித்த புனிதமான மராட்டிய பிராம்மண குலத்திலே பழங் கீர்த்தியுள்ளதோர் நற்குடும்பத்திலே இந்த மஹான் பிறந்தார். இவருடைய பாட்டனார் கோபால சாஸ்திரி யென்பவர் கல்வியில் அபார தேர்ச்சி பெற்றவர். நம் தமிழ் நாட்டுக் கவியரசர்களைப் போல இவரும் இவருடைய வித்யா விலாஸத்தினால் பரோடா சமஸ்தானத்தில் வித்வத் பரிசோதகராக நியமிக்கப்பட்டிருந்தார். கொஞ்ச காலத்திற்குப் பின் இளவரசனொருவன் அந்தப் பட்டத்திற்கு வரவும்

அவனுடைய அதர்ம நீதியை விரும்பாத இவர் தன் உத்தியோகம் பட்டம் பதவி எல்லாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு ஸதாணுவுக்கே வந்து உத்தமமான வைதீகத்தை ஆச்ரயித்துக் கொண்டும் சிறுவர்களுக்கு வேதம் ஸம்ஸ்கிருத இலக்கணம் முதலானவைகளை போதித்துக் கொண்டுமிருந்தார். சிறுவர்களெல்லாம் அவருடைய பேரக் குழந்தைகள் போல அவர் காலடியில் சூழ்ந்து உட்கார்ந்து கொண்டு சிரத்தையோடு படிப்பார்கள். அன்பும் சாந்தமும் இன்முகமும் உடைய இப்பெரியவரின் மிருதுவான போதனையினால் சிறுவர்களுக்குக் கல்வியிலே ஆற்றலும் அறிவும் மிகுந்து மக்கள் உத்தமர்களாய் வளர வேண்டுமானால் இவரைப் போன்ற குருவிடம் கற்க வேண்டுமென்பதற்கு சான்றாகக் கல்வியுடன் தங்கள் குருவிடம் பிரகாசித்த க்ஷமை, ஸமத்துவம், திருப்தி, புராதன அனுஷ்டானம், பணிவு, பக்தி முதலான ஸகல நற்குணங்களையும் அடையப் பெற்று விளங்கினார்கள். மிக்க தர்ம சிந்தையும் தெய்வீகத் தன்மையும் வாய்ந்த இப்பெரியார், தமது பழுத்த 69-வது வயதிலும் உத்தவர்களாகிய தங்களுக்குக் கிருஷ்ணனிடமுள்ள பக்தியையும் பெருமையையும் பற்றி உள்ளத்தை உருக்கக் கூடிய பக்தி ரஸம் நிறைந்த காவியங்களையும் கீர்த்தனங்களையும் இயற்றியவர். மாசற்ற க்ஷீரஸமுத்திரத்திலே எழும் பூர்ண சந்திரனைப் போல இவருடைய புனித குணங்களையே தாமும் கொண்டு இவருடைய பேரனாக ஸ்ரீ உபாஸனி பாபா பிறந்தார்.

இச்செல்வனைப்பெற என்ன தவம். செய்தாரோ எனக் கூறும் இலக்கியத்திற்கு முற்றும் அருகரான தகப்பனார் கோவிந்த சாஸ்திரி யென்பவர் தூலியா என்னும் இடத்தில் ஸிவில் கோர்ட்டில் காபிஸ்டர் உத்யோகத்தி

லிருந்தார். இவர் ஓய்வு நேரங்களில் கணிதமும், சோதிடமும், கற்றுப் பல புத்தகங்களும் எழுதியிருக்கிறார்.

1870-வருடம் மேமீ 5-ந் தேதியாகிய நன்னாளில் இந்தக் குடும்பத்தினரின் அருந்தவப் பயனாகவும், அன்பரின் மங்கலமனையாகிய இதயத்தை யலங்கரிக்க வந்த நன்கலமாகவும், ஸ்ரீ உபாஸனி மஹரிஷி அவதரித்தார். ஞானச்சுடர் ஒன்று உலகிலுற்பவிக்கும்போது பல நன்னிமித்தங்கள் காணப்படுவதுண்டு. பின் ஏற்பட்ட இவருடைய உன்னத வாழ்க்கையின் அறிகுறிகள் அப்போது தோன்றியிருக்குமென்பதற் கையமில்லை. அவதார புருஷர்களுடைய பிறப்பும் மகிமையும் நீறுபூத்த நெருப்புப் போல ஆரம்பத்தில் ஸர்வ ஸாதாரணமாயிருப்பது ஸகஜந்தானே. அதனாலதைக் கவனித்திருக்கமாட்டார்கள். காசிநாதன் என்னும் புனித திருநாமத்தை குழந்தைக்குச் சூட்டினார்கள். குடும்பம் மிக்க ஏழ்மை ஸ்திதியிலிருக்கும்போது தான் காசிநாதர் பிறந்தார். ஞானத்தையே செல்வமாகக் கொண்டவதரித்த செல்வனுக்கு செல்வம் எதற்கு? மஹான்களுதித்ததெல்லாம் அனேகமாக மாட்டுக் கொட்டிலிலும் சிறைச்சாலையிலுந் தானே! எளிய வாழ்க்கையிலே தான் கடவுள் இலேசாக பிரதிபிம்பிக்கிறார். சிறு வயது முதல் தன் பாட்டனாருடனேயே வளர்ந்து வந்ததனால், உபாஸனிபாபா மதத்திற்கும் தேசத்திற்கும் உழைக்கும் புண்ய புருஷராக அமைந்ததற்கு, அவருடைய பாட்டனாருடைய குண விசேஷங்களும் அரிய முயற்சியுமே காரணம் என்று சொல்வது மிகையாகாது.

பிறவியிலேயே நற்குணம் பொருந்திய மக்களும், தக்க முறையில் வளர்க்கப்பெறாததால் சீர்கெட்டுப் போவதும், இயற்கையில் கேடாயிருப்பவர்களும், வளர்க்

கும் முறையில் நல்லவர்களாவதும் காண்கிறோம். ஆதலால் மக்கள் நல்லவர்களாயிருப்பதற்கு, குடும்பத்திலுள்ள பெற்றோர், பெரியோர்கள், மேலான சித்தமுடையவர்களாயிருக்க வேண்டுவதவசியம். இப்படியிருப்பதனால் பல குடும்பங்கள் பரம்பரையாக கீர்த்தியுடனிருக்கின்றன.

காசிநாதருடைய தமயனாகிய பாலகிருஷ்ண சாஸ்திரியும் மிகுந்த புத்திமான். ஆரிய பாஷையில் கற்றுத் தேர்ந்து பம்பாய் ஸர்வகலாசாலையில் **M. A.** வகுப்பு ஸம்ஸ்கிருத பரிசோதகராயிருந்தார். மனுதர்மத்தைக் கரைகண்ட மேதாவியாதலால், ஹிந்து மன்னர்கள் கூட ஒரொரு ஸமயம் தங்கள் குடிகள் விஷயத்திலேற்படும் தர்ம சங்கடங்களில் இவருடைய ஆலோசனையைக் கேட்பதுண்டு. அவருடைய பெருந்தன்மை வாய்ந்த இதயமும், மிருதுவான பேச்சும், புன்சிரிப்பும், தேன் சொரிவதுபோலக் கேட்பவர்களுக்கும் பார்ப்பவர்களுக்கும், களிதருமாதலால், அவரை (தேன்) மது சாஸ்திரியென்றே எல்லாரும் அழைக்கலாயினர்.

நற்குணக் கடலாகிய இக்குடும்பத்திலுதித்த ஞான நவியே ஸ்ரீ உபாஸனி மஹரிஷியாவர்.

* தந்தையும் பிதாமஹனும் தமயனும் அறிவுடையோர்
மைந்தனும் ஞான மணிச்சுடர்.

# அத்தியாயம்—3

## மறைந்திருக்கும் புதையல்

* உள்ளிருக்கும் ஞான வொளிப்படிப்பை யோராமல்
பள்ளிக்கு வைத்தாற் பயனுண்டோ வம்மானை.

பள்ளிக்குப் போவதும், படிப்பு முடிந்தவுடன் ஸம்பாத்யத்தைக் கருதி ஏதாவதொரு தொழிலை மேற்கொள்வதுமே, ஒவ்வொரு குடும்பத்தின் கருத்தும் வழக்கமு மாயிருந்து வருகிறது. அன்னிய தேசம் சென்று, ஆயிரக்கணக்காகப் பணம் செலவழித்தாவது ஆங்கிலப் படிப்பும் பலவித தொழிலுக்குபயோகமான கல்வியும் கற்பதும், வருமானத்தையும் கீர்த்தியையும் எதிர்பார்த்தே கற்கப்படுகிறதன்றி ஆத்மஞானத்திற்காகப் படிக்க வைப்பர் அரிதினும் அரிது. அத்யாத்மக் கல்விக்குப் படித்துத்தானுக வேண்டுமென்பதில்லையல்லவா! தானுகக் கற்கும் தனிக்கல்வி யல்லவோ அது!

மஹான் புத்தரும், ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரும், ரமணரும், பட்டினத்தாரும் எந்தப் பள்ளியிலதைக் கற்றனர்! ஏதோ வொரு மொழியோ முகாந்தரமோ நெஞ்சில் வந்தமையும். அதுதான். அதையே நினைந்து நினைந்து ஞானவூற்றைப் பரித்தெடுத்து அதில் மூழ்கி பக்குவமடைந்திருப்பர். பள்ளிப் படிப்பு அவர்களைப் பதம் செய்யவில்லை. பாராமல் கேளாமல் உள்ளத்தே யெழுந்த படிப்பை யுள்ளத்திலேயே கற்றுத் தெளிந்தனர். இந்த ஆத்மவித்தைக்காக எத்தனையோ நூற்றுக் கணக்கான நூல்களைக் கற்றுத் தெளிந்தவரும்,,

முடிவில் அவ்வளவும் ஏட்டுச்சுரக்காயென்று தள்ளிவிட்டு "சும்மா" யிருக்கவில்லையா!

அதேபோல ஞானத்தை யுலகிற்குபதேசிக்கவந்த நாதனை, ஸர்வ ஜீவராசிகளையும் பிணைக்கக்கூடிய அன்பென்னும் முப்புரிநூலைப் பிறவியிலேயே தரித்துப் பிறந்த செல்வனைப் படிப்பிக்கக் கருதிய பெற்றோர், சிறுவனுக்கு எட்டு வயதானதும், கிரமப்படி உபநயனம் செய்வித்து அவ்வூரிலுள்ள ஓர் ஆரம்ப பாடசாலைக் கனுப்பினார்கள். பையனும் மூன்று வருஷங்கள் அதில் வாசித்து வந்தான்.

ஒருநாள், இரக்கமற்ற உபாத்தியாயரான 'கார்ப்பூரே' என்பவர் காசிநாதனை ஆடு மாடுகளை யடிப்பதிலும் கொடுமையாக அடித்துவிட்டார். பாலகனின் தேகமெல்லாம் தடித்துவிட்டது. தாங்கமுடியாமல் கதறிக் கொண்டு வீட்டுக்கு ஓடிவந்தான். அதற்குப்பின் அவன் பள்ளிக்கூடம் போகவேயில்லை. சரீரமெல்லாம் புண்ணாகும்படி அடிக்க கன்னெஞ்சரான உபாத்தியாயர் மனந்தான் எவ்விதம் துணிந்ததோ! இதுவும் ஈசன் செயல். கடவுள் தன் குழந்தையின் மனவுறுதியை மிக்கச் சிறு வயதிலேயே சோதிக்கத் தொடங்கினர் போலும்!

* பொன்னுறு தளிர்மேனி புண்படவோ அன்றியிம்
மண்ணுறு மாந்தர் மயல்கெடவோ—பண்ணுறுந்
தெய்வகதை செய்யவோ செல்வனை யாசான்றன்
கைபட அடித்தனர் காண்.

கைகேயி ஸ்ரீராமசந்திரனை கானகத்திற் கனுப்பியதினால் பூபாரம் நீங்கியதன்றி, ராமாவதாரம் சிறப்புற்றது. ஸுருசியின் கடூரமான சொல்லம்பினால் துருவனுக்குப் பரமபதம் கிடைத்தது. தமயனுடைய உதாசின வார்த்தையினால் ஸ்ரீரமணர் ஜோதிமலையிலே எல்லாப்

பதவிக்கும் மேலாய முத்தராக விளங்குகின்றார். அவ்விதமாகவே உபாத்தியாயர் அடித்ததினால், காசிநாதன் முதலில் துக்கமடைந்தாலும், அவனுடைய வருங்கால வாழ்க்கை மேன்மையடைவதற்கும், அதற்கிடையூறாயிருந்த வித்யாபிமானத்திலிருந்து அவன் விடுபடவும், இப்பொழுதிருக்கும் அழியாத இன்பநிலைக்கு வருவதற்கும் அதுவே ஹேதுவாயிற்று.

* மிக்க குருசெய்த வெஞ்சினமே பாலகனின்
பக்குவத்திற் கிட்ட பயிர்.

அழுதுகொண்டு வீட்டுக்கு வந்ததுடன் அவனுடைய பள்ளிப்படிப்பு தீர்ந்தது; படிப்பிலிருந்த சொல்ப ஆசையும் ஒழிந்தது. கல்விக்கே மதிப்போ அதனாலுபயோகமோ இல்லையென்ற சித்தாந்தமும் ஏற்பட்டு வீட்டிலுள்ள பெரியோரிடம் கற்கத் தொடங்கினபோதும், சிரத்தையில்லாமல் விதியேயென்று கடனுக்குப் படிப்பவன்போல் படிக்கலானான். பல பாடசாலைகளில் ஆசிரியர்களுடைய அளவு மீறிய சிக்ஷைகளினால் மக்களுக்கு பால்யத்திலேயே கல்வியில் வெறுப்பேற்பட்டு அதிகமாய் முறுக்கப்பட்டதனால் அறுந்து போகும் வாத்யக்கருவியின் தந்தியைப்போல அவர்கள் ஒன்றுக்கு முதவாதவர்களாய் விடுகிறார்களென்பதை யிங்கு கவனிக்கவேண்டிய தவசியம். ஆனால் காசிநாதன் விஷயம் அதற்கும் மாறானது. பதினெட்டு வயதாகியும் எந்த வேலைக்குந் தகுதியற்றவனா யிருந்தான். கல்வி யென்பது வயிற்றுப் பிழைப்புக்காக மண்டையிலேற்றிக்கொள்ளும் விஷயமென்ற எண்ணம் மனதில் வேரூன்றி யிருக்கும்போது சிரத்தை யெப்படி யிருக்கும்?

படிப்பில் தானக்கரையில்லை. தேகாபிமானமாவதுண்டா! சரீரத்தை சத்துருவாக பாவித்தான். அதனால்

பல பிராணபத்துகளும் அவனுக்கு நேர்ந்தன. பக்கத்தில் வசித்துவந்த ஓர் தனிகன், நாள்தோறும், உயர்ந்த மிட்டாய் தினுசுகளும், பக்ஷணங்களும், பழங்களும் ராஜ போஜனமுமாய், மிகுந்த செலவுசெய்து சாப்பிட்டுக் கொண்டிருந்தவன் ஒருநாள் வாந்திபேதியில் அத்தனையும் கக்கிவிட்டு இறந்துபோனான். அவன் அவ்வளவு அருமையாகப் போஷித்தும், அந்த நன்றியற்ற உடல் அவனை அந்தகாரத்தில் தள்ளிவிட்டுப் போய்விட்டதே. நமது மித்ரன்போல நடிக்கும் இவ்வுடல் உண்மையில் நம் சத்துருவல்லவா ? என்று காசிநாதன் பெரியவர்கள் முன்னிலும் தைரியத்தோடு சொல்வான். இவனென்ன இப்போதே மோக்ஷத்திற்குப் போகிறவன்போலப் பேசுகிறானே ! என்றவர்கள் சிரித்துக்கொண்டு தக்கவயது வந்தால் எல்லாரையும் போலாய்விடுவானென் றெண்ணி பேசாமலிருப்பார்கள்.

நூறுவயதளவும் மனிதன் ஜீவித்திருந்தாலும் அவன் மரணமடைபவனே. கனக சிங்காதனத்திலிருப்பவனானாலும், மரணம் அவனைத் தப்பவிடாது. ஆதலால் அழியும் பொருளாகிய இச்சரீரத்தில் ஞானிகள் அபிமானம் வைப்பதில்லை. காசிநாதனுக்கு இந்த பகுத்தறிவு மிக்க சிறுவயதிலேயே மனதிலூன்றி உறுதிப்பட்டுவிட்டதனால், தேகாபிமானமற்று எந்த ஆபத்தையும் பொருட்படுத்தாமல் திரிந்தான். அவன் அப்படியிருந்தும், இப்பொழுதுள்ள மேலான பதவிக்கு வருவதற்காகவே, எண்ணற்ற ஆபத்துக்களிலிருந்து கடவுள் அவனைக் காப்பாற்றினார்.

ஸ்ரீ உபாஸ்னி மஹரிஷி தான் பால்யத்தில் அவ்வாறு சரீரத்வேஷம் கொண்டிருந்ததைப் பற்றி இப்பொழுது சிரித்துக்கொள்கிறார். தவிர, பழவினையின் வடிவாகிய இத்தேகமே அத்தொல்வினையைத் துலைப்பதற்

கேற்ற துணைக்கோலெனவும், தர்மத்தைத் தேடுவதற்கும், பரமாத்மா வொருவரே ஸர்வத்திலும் வியாபித்திருக்கிறார் என்ற உண்மையைக் கண்டறிவதற்கும், இச்சரீரம் மிகவும் உபயோகமானதென்றும் இப்போதவர் அறிகிறார். மோக்ஷ ஸாதனத்திற்குரிய கல்வியை விரும்புகிறார். ஆனாலும் தன்னையும் ஸகலத்தையும் மறந்தாலொழிய பகவானை யறிவது கடினம் என்பதவர் துணிபு.

வீட்டுப்படிப்பிலும், காசிநாதனுக்கு வேண்டியிருந்த பகவத் விஷயந் தவிர உலக விஷயத்திற்குரிய மற்ற எதுவும் அவன் மனதிற் புகவே யில்லை. ராமாயண மகாபாரத புராணங்களிலிருந் தறிந்துகொண்ட தப, ஜப, மந்திரங்களுடைய எல்லையற்ற சக்தியும், ஸாமான்யர்களான, விஸ்வாமித்ரர், துருவன் போன்றவர்களும், மந்திரம், தபம், பிராணாயாமம் முதலானவைகளால் பகவானை தரிசித்து மேலாம் பதமெய்தினராதலால், அவனுக்கதில் நம்பிக்கையும் சிரத்தையுமுண்டாயிற்று. அந்த கிராமத்திலும் ஏதாவது வியாதி வந்தால் ஜபம், சாந்தி இவைகளால் பரிகாரம் செய்வது வழக்கம். தான் துர்க்கனவு கண்டால் பாட்டனாரிடம் கற்ற மந்திரங்களாலதை நிவர்த்தித்துக்கொள்வான். மாருதிக்கும் ஸ்ரீராமருக்கும் தினந்தோறும் பூஜைசெய்வான். வீட்டிலும் மயானத்திலுமாயிருந்து ஆஸனம், பிராணாயாமம் இவற்றை யிரவும் பகலும் அப்பியாஸம்செய்து ஸஹஸ்ரநாமம், ஸப்தசதி முதலானவற்றை ஜபித்துவருவதுமா யிருந்தான்.

எப்படி யிருந்தபோதிலும், "தனிமை கண்டதுண்டு, அதில் சாரமிருக்குதம்மா" என்று பெரியோர் கூறியதுபோல, ஏகாந்தமா யிருக்க வேண்டுமென்ற ஆவலும் அடர்ந்த காட்டிலாவது குன்றிலாவது போய்த் தவம் செய்ய வேண்டும் என்ற எண்ணமும் அவனைத்

தகித்துக்கொண்டே யிருந்தது. அவனுடைய தோழர்களெல்லாம் தெருவில் ஸந்தோஷமாய் விளையாட, இவன் மாத்திரம் வீட்டுக்குள் தனிமையா யுட்கார்ந்துகொண்டு நினைந்து நினைந்து உருகுவான். இவனுடைய உற்சாகமற்ற, எதிலும் பற்றில்லாத மனப்போக்கைக்கண்டு, "கவைக்கும் உதவாதவனுயிருக்கிறனே, தாமரை பூத்த தடாகத்தில் பாசி பூத்ததுபோலும், அன்னங்களுடைய வம்சத்தில் வாத்து பிறந்ததுபோலும், வித்வத் சிரேஷ்டமுள்ள குடும்பத்தில் இந்த மந்தன் பிறந்தானே!" என்று வீட்டிலுள்ளோர் சலித்துக்கொள்வார்கள். ஊராரும் பரிஹஸித்தனர். ஆனால் காசிநாத னெதிரில் யாரும் எதுவும் பேசமாட்டார்கள். ஏதாவது சொன்னால் அவனுடைய கடோத்கஜன்போன்ற பலத்தைப் பிரயோகித்து விடுவானே என்ற பயந்தான். மறைந்திருக்கும் புதையலுக் கொப்பான அவனுடைய மேலான ஹ்ருதயம் அப்போது சாணை பிடிக்காத வைரத்திற்குச் சமமாயிருந்ததனால் அதைப் பிறரறியக்கூடவில்லை. ஆயினும் எல்லாரும் தன்னைப்பற்றி நினைப்பதெல்லாம் காசிநாதனும் அறிவான். தானும் அதைப்பற்றி வருந்துவான். ஸதா தனியே யிருந்து துக்கிப்பதனல் பால்யத்திலேயே அவனுக்கு வாழ்வு விஷமாயிருந்தது.

## அத்தியாயம்—4

### இல்லறமும் துறவறமும்

*தனிமையில் இனிமையுண்டாம் தருமது இல்லையாயின்*
*மனிதனுக்கினிய செய்யும் மனையியல் வாழ்வு:*

—என்பர் மேலோர்.

பிரும்மச்சரியத்தில் எல்லாரு மெய்தக்கூடிய கல்வியோ, சந்துஷ்டியோ, எதுவும் காசிநாதனுக்கு ஏற்படாவிடினும், இல்லற வாழ்வேனும் இன்பமுள்ளதாயிருக்கலாகாதா! எத்தனை இளைஞர்களுக்கு மணவினையினால் பெரும் மாறுதல்களேற்பட்டிருக்கிறது! இல்லறமின்றி யிவ்வுலகேயில்லை யென்றும், துக்கம்நிறைந்த இப்பிரபஞ்சம் கூட அவர்களுடைய ஆரம்ப மனை வாழ்க்கையில் ஸ்வர்க்க போகமாகத் தோன்றவும் காண்கிறோமே! மனிதனுடைய குணத்தை மாற்றி அவன் வாழ்நாட்களைத் திருத்தியமைக்கவும் வல்ல அபார சக்தி ஓர் ஸ்திரீயின் பிரேமைக்கு உண்டு. "காதல் செய்யும் மனைவியே சக்தி யென்றும் கடவுள் நிலையவளாலே எய்தவேண்டும்" என்றும், பாரதியார் கூறியிருக்கின்றார். இதே உண்மையை ஸ்ரீ உபாஸனி மகரிஷியும் விளக்கிக் கூறியிருப்பதை இப்புத்தகத்தில் காணலாம். உத்தம பத்னியை அடைந்து அவளுடன் இல்லறம் நடத்தியவர்கள் இம்மையிலும் மேம்பட்டு, வீடு பேற்றினையும் அடைந்ததாக புராண இதிகாஸங்களும் கூறுகின்றன. தப்பான வழியில் செல்லும்போது எதுவும் துன்பந்தராமலிராது. இல்லறமும் அவ்வாறே. கணவனும் மனைவியும், மாறின்றி

நடத்தும் இல்லறமே முக்தி மார்க்கத்தின் எளிய பாதையாம். காசிநாதனுடைய விதி இந்த விஷயத்திலும் வேறு விதமாயிருந்தது.

பதினொன்கு வயதுச் சிறுவனுக்கு வீட்டிலுள்ள இரண்டு தலை முறைப்பாட்டன் பாட்டி முதலான பெரியோர்களெல்லாம் கூடி விவாகம் செய்துவைக்கத் தீர்மானித்தார்கள். காசிநாதனுக்கு இது கொஞ்சமும் இஷ்டமில்லை. தன்னைக் காத்துக்கொள்ளவே சக்தியற்றுத்தானிருப்பதை அவன் நன்குணர்ந்தவனுதலால் குடும்பமிருக்கும் ஸ்திதியில் தன் பொருட்டு மற்றவர்களுக்குத் தானே கஷ்டம் என்றும், இன்னும் பல நியாயங்களை எடுத்துக் கூறினுன். ஏழை சொல் அம்பலமேறுமா! இந்தச் சிறுவனுடைய பேச்சை யார் மதிக்கிருர்கள். இவனுடைய மனதிற்கு விரோதமாகவே, நாம்பூர் தாலூகாவைச் சேர்ந்த தூர்க்காபாய் என்னும் பெண்ணைக் கல்யாணம் செய்து வைத்தார்கள். காசிநாதன் சூத்திரப் பாவைபோல சொன்னதைக் கேட்கவேண்டியதாயிற்று.

ஸதிபதிகளுடைய ஒற்றுமைக்கும், பதிவிரதா தர்மத்திற்கும், கடமையை உணர்ந்து கொள்வதற்கும், சிறு வயதிலேயே பையன்களுக்கு குடும்ப பாரத்தை ஏற்படுத்துவதனல் வயது வந்த பின் அவர்கள் எதையும் நிர்வாகிக்கும் சக்தி பெறுவார்கள் என்ற கருத்தினுலும், முற்காலத்தில் பால்ய விவாகம் அனுசரிக்கப்பட்டு வந்தது. காசிநாதனுக்கு மாத்திரம் அவ்விதமில்லையென்று விரைவிலேயே நிதரிசனமாய் விட்டது. உலகப் பசையையே ஒழித்துப் பிறந்தவனுக்கு இல்லறத்தில் ஆசை யெப்படி வரும்? படிப்பிலும், ஸம்பார்த்யத்திலும், அவனுக்குச் சிந்தனையேயில்லாதிருப்பதைக் கண்டு, அவனுடைய பந்துக்

களான நற்குணமுள்ள சிலர், காசிநாதன் ரொம்ப நல்ல வனுச்சே! ஏராளமாக ஸம்பாதிக்கப் போகிறுன். தன் சின்னஞ்சிறு மனைவிக்கு நிரம்ப நகைகள் செய்துபோட்டு அவளுடன் குசாலாயிருக்கப் போகிறுன் என்று தமாஷாகச் சொல்லிப் பார்த்தார்கள். இகழ்ச்சியோ, புகழ்ச்சியோ, எல்லாவற்றிற்கும் எல்லை கடந்த நிலையில் நின்ற அவனுடைய மனம் இதற்கெல்லாம் அசையவேயில்லை. யாரென்ன சொன்னுலும் மௌனமாயிருப்பான். இந்த விவாகத்திஞல் அவனுக்கு ஆசை உண்டாவதற்குப் பதிலாக வெறுப்பே அதிகரித்தது.

சில மாதங்கள் சென்றன. மனதில் பொங்கும் வெறுப்பின் வேகத்தை அவனுலடக்க முடியவேயில்லை. தைரியத்துடன் தனது பாட்டனுரிடம் 'என்னுல் இனி வீட்டிலிருக்க முடியாது. எவ்வளவு தூரத்திற்குப் போகிறேனே அவ்வளவும் எனக்கு நல்லது' என்று சொன்னுன். இவனுடைய மன நிலைமையைப் பெரியவரும் யோசித்தார், பேரனுடைய பிடிவாதம் மாற்றக்கூடிய தன்றுதலால், ஊர் மாறுவதாலும், பெற்ருேர் ஆதரவினுலும் ஒரு வேளை மனசாந்தியடைவான் என்றெண்ணி, தூலியாவுக்கனுப்பினுர். அங்கு போன பின்பும், அவனுக்கு மனம் மாறவில்லை. மகாதேவர் கோயிலுக்குப் போனுல் அங்குள்ள குகை யொன்றில், மணிக்கணக்கில் தியானத்தி லாழ்ந்து விடுவான். வீட்டு வாழ்க்கை விஷமாயிருந்தது.

ஒரு நாள் அதிகாலையிலெழுந்து தான் போகும் காரணங்களை யொரு காகிதத்தி லெழுதி வீட்டிலுள்ளோர் பார்க்கக்கூடிய இடத்தில் வைத்துவிட்டு யாருக்கும் தெரியாமல் வீட்டைவிட்டுப் புறப்பட்டு, ஓட்டமாய் ஓடினுன். பத்து மைல்கள் தூரம் ஓடிய பின் தன்னை

யாரும் பின் தொடரவில்லை யென்று தெரிந்து கொண்டு மெல்ல நடந்து நான்கு நாட்களுக்குப் பின் நாஸிக் போய்ச் சேர்ந்தான்.

பெற்ற மனம் பித்தல்லவா! பையனைக் காணோமே என்று பதைத்தனர் பெற்றோர். பல இடங்களிலும் தேடிக் காணாமையால், அவனுடைய மனப்பான்மையை நினைத்து அவனைப் பின் தொடராமல், கடவுள் விட்டவழி யென்று வாளாவிருந்தனர். தங்கள் மகன் ஓடிப் போனது அவமானமாயிருந்தும், அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டியதாயிற்று. உலகத்திற்கும், தங்கள் குடும்பத்திற்கும், அழியாப் புகழைத் தருவதற்கே தெய்வம் அவனை ஓடச் செய்ததென்றாலும், அச்சமயத்தில் இது அவர்கட்கு மனத் தாங்கலாகத் தானே யிருக்கும்.

நாஸிக் வந்ததும் பெற்றோர் தன்னைக் காணமல் கவலைப்படுவார்களே என்ற எண்ணம் காசிநாதனுக்குத் தோன்றவே தன் குடும்பத்திற்கு தெரிந்த சினேகிதர்கள் வீட்டில் தான் வசிப்பதைத் தெரிவித்தான். இரண்டொரு மாதங்கள் சென்றதும், அவன் தாயாருக்கு தேக அசௌக்யமென்று தெரியவே திரும்பவும் ஊருக்குவந்து சேர்ந்தான். அடுத்து முயன்றாலும் ஆகுநாள் வர வேண்டுமன்றோ! பழவினையானது அவனை அவன் விரும்பிய மார்க்கத்தில் செல்லவிடாமல் திருப்பி யழைத்துவந்தது. இதனிடையில் சில நாட்களில் அவன் பால்ய மனைவி இறந்துவிட, தனிமையும் நிம்மதியும் நீடிக்கவிடாமல் வெகு சீக்கிரத்திலேயே மறு விவாகமும் செய்து வைத்தார்கள். பையனுக்கிருக்கும் ஆசா பாசத்தை யறிந்தே மறுவிவாகம் செய்தார்களென்றால் இதற்கென்ன சொல்லக்கூடும்! இந்தப் பெண் சுமார் ஏழு வருடகாலம் போல அவன் வீட்டிலிருந்தாள். ஆனால் விவாகமான

ஒரு வருடத்திற்குள்ளேயே காசிநாதன் வீட்டைவிட்டோடிப் போய் விட்டான்.

*** மெய் விளங்கும் தெய்வ விண்ணரசை வேண்டியவர்**
**பொய் விளங்கும் வாழ்விலங்கைப் பூண்பாரோ வம்மானே,**

மனம் இல்லறத்தில் நிலைத்தாற்றானே அவன் நிலைத்திருப்பதற்கு! உயிர், உடல் எதிலும் ஆசையற்று, ஏதோ காலத்தைத் தள்ள வேண்டுமே என்றிருப்பவனுக்கு இதெல்லாம் எதற்காக! கொஞ்சகாலம், பூனாவில் சிலர் வீட்டில் குற்றேவல் செய்தும், பிக்ஷை யெடுத்துக் கொண்டும் கடத்தினான். பிறகு சில காலம் வீட்டுக்கு வருவதும் போவதுமாயிருந்தான். எப்படியிருந்தாலும் அவன் மனதில் வெறுப்பும் துக்கமும் அளவற்றிருந்தது வறுமையின் கொடுமைக்கும், நிந்தனை, இழிவு, அவமதிப்பு, அனைத்துக்கும் ஆளாகி வருடக் கணக்கில் கஷ்டத்தை யனுபவிக்கும்படியான பாவம் என்ன செய்தேனோ! என்று தன் விதியை நொந்துகொள்வான். அவனுடைய ஆரம்ப ஜீவிய காலம் அவனுடைய வாழ்க்கையிலேயே மிகுந்த பரிதாபகரமாயிருந்தது. ஆகாரமில்லாமல் ஜலமும் வேப்பிலை விழுதையும் சாப்பிட்டுவிட்டு நாட் கணக்கில் பட்டினி கிடக்க நேர்ந்தது. கட்டியிருந்த ஒற்றைத் துணியோடு வெய்யிலிலோ மரத்தடியிலோ படுப்பான். நற்குண நற்செய்கையற்று, பிச்சை யெடுத்த சோற்றுக்கும் சண்டையிட்டுக் கொள்ளும் சோம்பேறி பிச்சைக்காரர்களைத் தவிர நல்ல சிநேகத்தைக்கூட அவனறிய மாட்டான். எங்கும் நிறைந்த ஆண்டவனே அவனுக்கு ஸகல பந்துவும்.

ஆனால், உலையிற் காய்ச்சப்படும்போது தங்கத்தினுடைய பிரகாசம் வெளிப்படுவதுபோல, கஷ்டப்படும்

போது தான் மனிதனுடைய உண்மையான குணமும் வெளிப்படுகிறது. போர்க்களத்தில் படுகாயமடைந்திருக்கும்போது தன் தாகத்திற்காக கொண்டு வந்த ஜலத்தை அருகில் மரணத் தருவாயிலிருந்த சாமானிய சிப்பாய்க்குக் கொடுத்து உன் தேவை தான் எனதிலும் பெரிது என்று கூறியிருக்கிறார் ஸர் பிலிப் ஸிட்னி என்ற ஆங்கிலேயர். பாரதத்திலே, தம்பியர் நால்வரும்நச்சுப் பொய்கையினுலிறந்தபோது, தர்ம தேவனிடம் யுதிஷ்டிரர், தன் தாய்க்குத் தானொருவனிருப்பதுபோலத் தன் மாற்றாந் தாய்க்கும் ஒருவனிருக்க வேண்டி நகுலனைப் பிழைப்பித்துத் தரும்படியும், பார்ப்பனச் சிறுவனிழந்த மான்றோலையும் மீட்டுத் தரும்படி வேண்டினர். கஷ்டத்திலும் அவர் மேலான மனதுடன் நடந்துகொண்டது இன்றும் இவ்வுலகம் புகழப் பிரகாசிக்கின்றது.

இந்த மகத்தான குணம் காசிநாதனுக்குப் பிறப்பிலேயே அமைந்திருந்தது. பூனு நகரத்தின் எல்லையிலுள்ள ஓங்காரேசுவரர் கோயிலில், பசியினுல் வருந்தும் பிச்சைக்காரர்களுடன் இவனும் ஓர் சமயத்தில் மூன்று நாட்கள் ஆகாரமே யில்லாமல் கடும் பட்டினி கிடக்க நேர்ந்தது. நான்காம் நாளன்று ஊரெங்கும் அலைந்ததில், ஓர் உத்தமி அவனுக்கு வேண்டிய ஆகாரம் அளித்தாள். நாட்கணக்கில் பட்டினிகிடந்ததால் 3 நாள் வரையில் காசிநாதனுக்குப் பசியடங்கவேயில்லை. அன்றுமுதல் அவன், தனக்குத் தரும் சாப்பாட்டை யெடுத்துக்கொண்டுபோய் கோயிலில் இருக்கும் பிச்சைக்காரர்களுடைய பசியைத் தீர்ப்பான். இவனுடைய பரோபகாரச்செயலை யறிந்த அம்மாதும், தினந்தினமும் அதிகமான ஆகாரம் கொடுத்ததுமன்றி ஒருமாத காலத்திற்குள் ஆயிரம்பேர்வரைக்கும் அன்னமிடலானுள். இவரைப்போலவே, ஓர் பெண்மணி,

பட்டினத்தடிகளுடைய பசியை ஆற்றியதாக சரித்திர வரலாறுண்டு. பட்டினத்தார் ஸ்தல யாத்திரை சென்று மதுரைக் கோவிலில் தங்கியிருக்கையில் முன்னிரவில் பிச்சைக்குப் போகும்போது ஓர் பெண்மணி அவர்க்கு தினந் தோறும் தவறுமலன்னமிட்டு வந்தாள். ஒருநாள் இரவு பசியின்மையால் பிச்சைக்குப் போகாம விருந்துவிட சோதனைபோல நள்ளிரவில் பொறுக்கொணுப் பசியினல் குடல் துள்ளவும், சகிக்கமாட்டாதவராய் அம்மங்கையின் வீட்டுவாசலிற் சென்று தம் பசியை முறையிடவே, அவள் இவர் குரலே யறிந்து, விரைந்து நடந்தால் தன் சிலம் பொலியினுல் வீட்டுள்ளோர் விழித்துகொள்வார்களென்ற பயமும், தாமதித்தால், வந்த மூர்த்தி ஏகிவிடுமே என்ற மனோவேகமும் தூண்ட ஓடிச்சென்று அடுக்களேயில் வைத்திருந்த அன்னமனைத்தும் கொணர்ந்து அவர்க்கு சொரிய, அடிகளும் தம் பசியார உண்டு பொல்லாப் பசியைப் பழித்து, பரமனிடம் முறையிட்டுச் சென்றார். "தாயினுஞ் சிறந்த கருணையே" என்று அருள்வள்ளலாருடைய பாடல்களினுங் காணப்படுகிறது. பெண் மக்களேக் கருணைக் கிருப்பிடமாகச் சிறப்பித்திருப்பதாகும். அத்தகைய உத்தமிகளினுலேயே இவ்வுலகம் செழிக்கின்றது.

ஸமயம் நேர்ந்தபோதெல்லாம் பிறர்க்குதவுவது போலவே காசிநாதன், ஸத்புருஷர்களுடைய போதனைகளையும் அவற்றிலுள்ள நன்மையையும் கிரகித்துக் கொண்டு வந்தான். சிலநாளில் பூஜையைவிட்டு ஓர் ஸாது பிரும்மச்சாரியை யண்டி, பிரும்மச்சரியத்திலும் சிவ பூஜையிலுமுள்ள மேன்மையை யறிந்து அதைத் தன்னிடம் வருபவர்கட்கும் போதித்துவந்தான். ஆனல் காற்றிலகப்பட்ட பஞ்சுபோல் ஒரு நிலையில்லாமல் தவித்தான்.

ஸாதுவைவிட்டுப் பிரிந்து மேற்குநோக்கிச் சென்றான். ஒருநாள் ஏதாவது சாப்பிட்டால் பலநாள் பட்டினி கிடப்பான். வறுமை அவனை விட்டகலவில்லை. இவ்விதம் பலநாட்கள் பட்டினியோடு, கல்யாண் என்னும் ஊரில் புகுந்து சில பிராம்மண உத்தியோகஸ்தர்கள் வீட்டில்போய் பிச்சைகேட்க, ஒருவரைப்போல எல்லாரிடமும் "இல்லை போ" என்ற பதில்தான் வந்தது. எவ்வளவுதான் நிந்தனையும், அவமதிப்பும், பால்யத்திலிருந்து அனுபவித்திருந்தாலும், கல்யாணில் அவனுக்கு சகிக்க முடியாமல் துக்கம் மீறிவிட்டது. பத்தும் பசி வந்திடப் பறந்துபோமல்லவா? ஓர் கிணற்றில் கொஞ்சம் ஜலம் அருந்திவிட்டுக் கண்ணீர்பெருகி முகத்தில் வழிய, தன் பொல்லா விதியை நொந்துகொண்டு ஓர் மரத்தடியில் போய்ப் படுத்தான். அப்போது காருண்யமூர்த்தியான பகவானே தன் பக்தனைத் தேற்ற வந்ததுபோல அவ்வழியே சென்ற ஓர் மராட்டியக்கிழவி பத்தொன்பதாண்டுள்ள பாலகன் அழுவதைப் பார்த்துச் சகியாமல் தானும் தன் பால்யத்தில் பல கஷ்டங்களை யடைந்ததாகக் கூறி அவனைத் தேற்றினாள். "வேறொன்றும் கிடைக்காவிடினும் தண்ணீரைக் குடித்தாவது உயிர் வாழ்ந்திரு. கஷ்டத்தையும் விதியையும் பொறுத்துக்கொள். அதிர்ஷ்டம் ஏற்பட்டாலும் அதை லக்ஷியம் செய்யாமல் ஒதுக்கித் தள்ளு. ஸத்ஸங்கத்தைமட்டும் கைவிடாதே." என்ற கருத்தடங்கிய ஓர் மராட்டியப் பாட்டையும் அவனுக்குச் சொல்லிக்கொடுத்தாள். அவள் சொன்னதெல்லாம் அவன் ஏற்றுக்கொண்டான். ஆனால் அவளிடம் எதுவும் வாங்கி சாப்பிட அவன் மதாபிமானம் இடந்தரவில்லை. அந்தக் கிழவி மேலும் இவனைப் பார்த்து "குழந்தாய்! நீ வாசற்பக்கமாகச் சென்று கேட்டால் கன்

னெஞ்சமுள்ள ஆடவர்கள் பிச்சையிடாமல் உன்னை விரட்டினார்கள். கொல்லைப்புறமாகச் சென்று அங்குள்ள ஸ்திரீகளைக் கேட்பாயானால் உனக்கு ஆகாரமும் ஆதரவும் கிடைக்கும்'' என்று சொல்லி பிச்சை யெடுப்பதற்குள்ள மார்க்கத்தையும் போதித்துச் சென்றாள். அப்படியே போய்க் கேட்க காசிநாதனுக்கு வேண்டிய ஆகாரம் கிடைத்தது. அவன் அந்தக் கிழவி தன் இனத்தையும் உலகத்தையும் எவ்வளவு நன்றாக அறிந்த, அனுபவம் பெற்றவளா யிருக்கவேண்டும் என்றெண்ணி ஆச்சரியப்பட்டான். அவள் கற்றுக்கொடுத்த பாடலின் அருமையான கருத்தை மனப்பாடம் செய்து அவ்விதமே நடக்கத் தீர்மானித்தான்.

* சூடுங் கயிற்றினல் தொல்லறியாதே சுழன்று


ஆடுங் குரங்குபோல்—பலவித கஷ்டங்களி னிடையே தவித்துக்கொண்டிருந்தும் அவனுடைய மனம் தான் கொண்ட உறுதியிலேயே மாறாமலிருந்தது.

## அத்தியாயம்—5


## நித்தியானந்த அனுபவம்

* பின் விளையும் பேரும் பெரும்புகழ்க்கும் வித்தாக
முன் விளைந்ததிந்த முழுமோனம்.................

காசிநாதன் கல்யாணிலிருந்து நாஸிக்கைக் கடந்து தன் சொந்த ஊரான சதானவைநோக்கி வந்து கொண்டிருந்தான். நாசிக்கிலிருந்து 10 மைலுக்கப்பாலுள்ள இரண்டு சிவாலயங்களை யடைந்து அங்கிருந்து பார்க்க ஓர் அடர்ந்த வனமும் அதன் நடுவே பல செங்




ஸ்ரீ உபாஸினி பாபா



25-ம் பக்கம் பார்க்க.

பூர்க்கட் குகை



37-ம் பக்கம் பார்க்க.

சோமனுதலிங்கம் (கௌரிசங்கரர்)

குத்தான பாறைகளுடன் கூடிய (பூர்கெட் என்னும்) ஓர் குன்றும் அதனுள் மனிதராலும் விலங்குகளாலும் அணுக முடியாத உயரத்திலே ஓர் குகையும் காணப்பட்டன. அந்த குகையைப் பார்த்தவுடன் தான் வெகு நாட்களாய்க் கருதியிருந்த பிராயோபவேசத்திற்குத் தக்க இடம் அதுவேயென்று அவன் மனதில் மின்னல்போல் ஓர் எண்ணம் தோன்றியது. உடனே அவன் உடலும் உள்ளமும் பரவசமடைந்தது. என்னதான் சுகபோகங்களை வெறுக்க மனம் வந்தபோதிலும் மரணத்தை யாரேனும் விரும்பி யழைப்பதுண்டா! இந்தச் சிறுவன் அங்கு [illegible]ட்கார்ந்து உணவின்றி உடலை உலர்த்திக் காலன் வரவை எதிர்பார்க்கலாமென்று கருதினனென்றால் இதை விட ஆச்சரியமுண்டோ? அவ்வளவு உயரத்திலுள்ள குகைக்குப் போவது எவ்வளவு கஷ்டம் என்பதை அவன் கருதவேயில்லை. கற்களிலும் முட்களிலும் புதர்களிலுமாய் ஊர்ந்து சென்று அந்தக் குன்றின் அடிவாரத்தை யடைந்தான். இடையூறெதையும் அவன் பொருட்படுத்தவேயில்லை. அருகிலுள்ள மரக்கிளைகளைப் பிடித்துத் தொத்திக்கொண்டு சுமார் 30 அடி உயரமுள்ள அந்தப் பாறையின்மேல் ஏறி அங்கிருந்த ஓர் ஆலமரத்தின் உதவியால் தான் கண்ட குகைக்குப்போய்ச் சேர்ந்து விட்டான். அந்த குகை சுமார் ஐந்தடி உயரமும் ஒன்பதடி நீளமும் நான்கடி அகலமுமிருந்தது. அதன் தரை மேடுபள்ளமா யிருந்தது. அங்கே உட்கார்ந்து பார்க்க அவ்வனாந்திர முழுவதும் மனித சஞ்சாரமற்றதென்று காசிநாதனுக்குத் தெரிந்தது. சில மைல் தூரத்திற்கப்பால் ஏதோ குடிசைகள் மாத்திரம் காணப்பட்டன.

காசிநாதனுக்கு இனி என்ன குறை! ஓடும் மனதை யொடுக்கிப் பரமனிடம் பக்தி செலுத்துதற்குத் தனிமை

அவசியமென்று பெரியோர் கூறியிருக்கின்றனர். அந்தத் தனிமையும் அவன் விரும்பியதுபோன்ற ஏகாந்த ஸ்தலமும் அவனுக்குக் கிடைத்துவிட்டது. அவனடைந்த சந்தோஷத்தைச் சொல்லவும்கூடுமோ ! அந்தக் குகைக்குள் உட்கார்ந்துகொண்டு, ஊணுறக்கமின்றி மரணத்தையெதிர்பார்த்துக்கொண்டு இரண்டு நாட்கள் கழித்தான். மூன்றும்நாளன்று இவ்விதம் மரணத்தை யெதிர்பார்த்துக்கொண்டு, காலத்தை வீணுக்குவதைவிட ஈசுவரத்தியானம் செய்யலாமே என்ற நல்லெண்ணம் உண்டாகவே, மற்ற நினைவுகளனைத்தையும் ஒழித்துவிட்டு, மௌனமாய் கடவுளைத் தியானிக்கத் தொடங்கினன். பகவத் தியானத்தினுல் மனிதனுடைய மனம் பரிசுத்தமடைவதாக அறிவுறுத்தும் நூல்கள் கூறுகின்றன. பித்தளை, செம்பு முதலியவற்றின் களிம்பைப் போக்க புளி, மண் போன்றவைகள் உதவுவதுபோல தியானமானது மனித இதயத்திலுள்ள மாசகற்றுமோர் சிறந்த சாதனமாம். பலநாட்கள் ஜலத்தில் ஊறிய கயிருனது இற்றுப்போவதுபோல, தியானத்தில் மூழ்கியவனுடைய பிறவிப்பிணியும் அவனை பந்திக்க முடியாமல் மடிந்துபோகிறது. அன்றியும், ஈசனுடைய திருவருளைப்பெற தியானத்தைவிட ஸுலபமான மார்க்கம் இல்லையெனலாம். பகவத் தியானத்திலீடுபட்ட நம்முன்னோர்கள் தம் ஆனந்த நிலையை "மாசில் வீணையும், மாலைமதியமும், வீசுதென்றலும், வேய்ங்குழவேழலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே ஈசன் எந்தையிணையடி நீழலே." என்று பகர்ந்திருக்கின்றனர். "என்னை யெவன் பக்தியுடன் தியானிக்கிருனே அவன் எப்படிப்பட்டவனுயினும், நான் அவனுக்கு வசப்படுகிறேன்" என்று கீதையிற் கண்ணன் கூறியிருக்கிருர். இறைவன் திருவடியிதயத்தே புகுந்த பின் மாயா விஷய

மான வேறு சிந்தனைகளங்கே நிற்காதல்லவா! அருணோதயமாகி சூர்யனுடைய கிரணங்கள் பரவப்பரவ, இருளகன்று எங்கும் வெளிச்சமே நிறைவதுபோல, காசிநாதன் பகவத் தியானத்திலேயே ஆழ்ந்து லயித்துவிட்டதனால், மனம் ஏகாக்கிரத்தை யடைந்து, காலதேச சிந்தனை விஷயங்களனைத்தும் படிப்படியாக அழிந்து நிவாசஸ்தல தீபம்போல் அசைவற்று ஸமாதி நிலையை யடைந்து விட்டான்.

* நினைக்க நினைக்க மடநெஞ்சத்திரு ளகன்று
தனிக்கதிர் சோதியிலே தான்நிறைந்தா ரம்மானை.

தேவாதி தேவர்கட்கும் சிந்தையை யடக்குவ தரிதென்றும், சமதமாதிகளினாலேயே இந்திரிய நிக்ரகம் உண்டாகுமென்றும், கணக்கற்ற புத்தகங்களைப் படித்துத் தேர்ந்தவர்களும், விஷயத்தினின்று மனதைத் திருப்புவது கடினமென்றும் புராணங்களிற் காணப்படுகின்றது. அத்தகைய இந்திரிய நிக்ரஹமுள்ளவனைப் புகழ்ந்து அறநெறிச்சாரமும்

"இந்திரியக் குஞ்சரத்தை ஞான இருங்கயிற்றால்
சிந்தனைத் தூண்பூட்டிச் சேர்த்தியே—பந்திப்பர்,
இம்மைப் புகழும் இனிச்செல் கதிப்பயனும்
தம்மைத் தலைப்படுத்து வார்."

என்று கூறுகின்றது.

அனுபவமும், அப்பியாசமும், அறியாத ஓர் பாலகன், சஞ்சல ஸ்வபாவமுள்ள மனதை மேற்கூறிய தூணுக்கு உவமையாய், அசையாமல் வசப்படுத்தி கடவுளுடைய தியானத்தில் பிணைத்துச் சமாதி என்னும் அரிய செயலை மேற்கொண்டது, அவனுடைய அவதார லக்ஷியத்தினுடைய முக்கியாம்சத்தை விளக்கினதாகுமன்றோ! அவனறியாமல் அவனுள்ளேயிருந்த இந்த சக்தியே 'பல்

பொருள்களைத் தோற்றுவித்தாலும் பளிங்குதன்னுள் நிர்மலமாகவே யிருப்பதைப்போல' வாழ்க்கையில் பலவித மாறுதல்களை யடைந்தாலும் முடிவில் அவரை "ஸாது" வாக்கியது.

காசிநாதன் இந்த ஸமாதி நிலையில் எவ்வளவு காலம் இருந்தானென்று அவன் விழித்துக்கொண்ட பின் அறிந்துகொள்ள முடியவில்லை. ஸமாதியின் இறுதியில், யாரோ தன் உடம்பின் முழுத்தோலேயும் உருவுவது போலக் கண்டதும் பிரக்ஞையை யடைந்து தூக்கிப்போட்டதுபோல ஸமாதியிலிருந்து விழித்தான். தன் உடம்பின் தோலப்படியே யிருக்கப் பார்த்து ஆச்சரிய மடைந்தான். ஆனால் பிரக்ஞை வந்தவுடன் தாகம் பொறுக்க முடியாமல் நாவரண்டு அசைக்க முடியாம லிழுத்துக்கொண்டுவிடவே கத்தவும் முடியவில்லை. கத்தினாலும் அந்த வனாந்திரத்தில் யாருக்குக் கேட்கப் போகிறது! கண்ணுக்கெட்டிய வரையில் அங்கு தண்ணீரே கிடையாது. வலதுகை தவிர மற்ற ஸர்வாங்கமும் உணர்ச்சியற்றுக் கிடந்ததால் அவனால் நகரக்கூட முடியவில்லை. தாகத்தினால் உயிர் போய்விடும் போலிருந்தது. இறப்பதைப்பற்றி அவன் கவலைப்படவேயில்லை. அவன் தான் அதையே விரும்பி அங்கு வந்தவனாயிற்றே! ஆனால் சோர்ந்து போய் இறப்பதைத் தவிர வேறு வழியில்லை யென்ற நிலைமைக்கு வந்துவிட்டான்.

பரம்பொருளின் செயலை யாராலறிய முடியும்! இனி விமோசனமில்லை யென்ற இறுதியிலும் ஈசனுடைய அற்புத சக்தியினால் எதிர்பாராத நன்மை யேற்படுவதை மனித வாழ்க்கையில் இன்றும் காண்கிறோம். அப்படியே காசிநாதனுடைய ஆபத்தான நிலைமையில், அவன் எதிர்பாராதவிதமாய் பலத்த இடி மின்னல்களுடன் மழை

தாரைதாரையாய்ப் பொழிந்து அவ்வனுந்திரமெல்லாம் ஜலமயமாய் நிறைந்ததன்றி காசிநாதனிருந்த குகையினுள்ளெல்லாம் புகுந்து, அவனருகிலிருந்த சிறு பள்ளத்திலும் தேங்கி நின்றது. வலக்கையாலந்த ஜலத்தை யள்ளிக்குடித்து தேகத்தைத் தடவிக்கொடுத்து ஸ்மரணை வருவித்துக்கொண்டான். அவன் தாகந் தெளிந்து தேகஸ்வாதீனம் பெற மூன்று நாளாயிற்று. நாலாம் நாள் அவனுக்கு கனவு போன்றொரு தரிசனம் ஏற்பட்டது. அதாவது அவன் தாகசாந்திக்காக ஒரு ஆற்றுக்குப் போவதுபோலும், அப்போது ஒரு ஹிந்துவும், ஓர் முஸ்லீமும் அவனருகில்வந்து அவன் சரீரத்தின் தோலையுருவி உள்ளேயிருக்கும் சோதி வடிவைக் காட்டி, 'நீ ஏன் சாக விரும்புகிறாய்? நாங்கள் உன்னைச் சாகவிட மாட்டோம். நாங்கள் எப்போதும் உன்னுடனேயே இருப்போம்' என்று சொல்லி மறைந்துவிட்டதாகக் கண்டான். இதிலிருந்து தனக்கு மரணம் ஏற்படாதென்று நிச்சயமாய்த் தெரிந்துகொண்டதால், இனி குகையை விட்டு வெளியேறும் எண்ணங்கொண்டான்.

முன்பு அந்த செங்குத்தான குன்றுக்கு நினைத்தவுடன் நிமிஷத்தில் தாவியேறினான். தேகத்தில் அப்பொழுதிருந்த திடம் இப்போதில்லையே! சரீரத்தில் எலும்பும் தோலுந்தானிருந்தது. தேக வலிமையில்லாதிருந்தும் அவனுடைய யூகபுத்தியினால் ஆலமரத்தின் கிளையொன்றைப் பற்றிக்கொண்டு பல்லிபோலூர்ந்து சென்ற பின் கடவுள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு அங்கிருந்து கீழே குதித்தான். கொஞ்சம் காயமும் வலியும் தவிர அங்க சேதமொன்றும் ஏற்படாமல் தப்பினான். அப்போது சுமார் மாலை நான்கு மணியிருக்கும், தவழ்ந்த வண்ணமாய் புதர்களையும் பாறைகளையுங்

கடந்து இரண்டு மைல்களுக்கப்பாலுள்ள பில்லர் என்ற ஜாதியாரின் குடிசைகளுக்கு வந்து சேர்ந்தான். இரவிலே விகாரமான உருவமொன்று வருவதைக் கண்டங்குள்ள ஸ்திரீகள் பயந்து ஓடத் தொடங்கினார்கள். நான் மனிதன் தான் பயப்படாதீர்கள் என்று காசிநாதன் சொல்லவும், அவர்களவனைத் தங்கள் குடிசைக் கழைத்துக் கொண்டு போய் மூன்று நாட்கள் வரையிலும் பாலைக் கொடுத்து அவனுக்குக் கொஞ்சம் பலம் வரச் செய்தார்கள். ஒரு மாதம் வரைக்கும் அவர்கள் தரும் தானியத்தைச் சாப்பிட்டுக்கொண்டு அவர்களுடன் தானும் விறகு பிளந்து நாஸிக்கில் கொண்டு போய் விற்றுப் பணத்தை அவர்களிடம் கொடுத்துக்கொண்டிருந்தான். பிறகு 1890-வருடம் ஜூலை மாதம் 22-ந் தேதியன்று ஸதாணாவுக்கு வந்து சேர்ந்தான். வீட்டுக்கு வந்த பின் தனது யாத்திரையின் நாட்களைக் கணக்குப் பார்த்ததில், தான் பூர்கட் குகையில் பல மாதங்கள் ஸமாதியிலிருந்திருக்க வேண்டுமென்றுணர்ந்தான். மாதக் கணக்கில் யோக நித்திரையிலாழ்த்தி, குளிரிலும், மழையிலும், வெய்யலிலும், அவனுயிரைக் காத்து, தாகத்தினால் அவனிறந்து விடாதபடி, மழையைத் தந்து காப்பாற்றி, அவனுள்ளிருக்கும் ஒளிப் பிழம்பையும் விளக்கிய கருணையங் கடவுள் அவனை எவ்விதம் தன்னடிமையாக்கினார் என்பதைப் பார்ப்போம்.

* அள்ளினுங் குறைபடாத அருள்நிதித் தலைவனை
உள்ளெழுந்த அன்பிலே உணர்ந்துகொள்ள லாகுமே.

## அத்தியாயம்—6

## செல்வமும் வறுமையும்

* தாழ்விக்கும் பொய் வாழ்வைத் தவிர்த்து நல்லுயர்வெய்த,
வாழ்விப்பான் போல்வந்த வறுமைகா ணம்மானை.

ஒரு பொருள் எப்போதும் தாழ்ந்த மதிப்பிலேயே யிருக்க முடியாது. அதுபோல ஓர் மனிதனும் எப்போதும் இகழ்ச்சிக்குரியவனுகவே யிருக்க முடியாது. காசிநாதன் தன்னை மறந்து ஸமாதியின் உச்ச நிலையில் மாதக் கணக்கிலிருக்கக் கூடுமென்று அவனுவது, பிறராவது நினைக்கவேயில்லை. உயிரை மாய்த்துக்கொள்ள வேண்டி குகைக்குப் போனவன் க்ஷேமமாய்த் திரும்பி வந்ததும், அவனுக்கு நிகழ்ந்த ஸமாதியனுபவ விஷயமும், வெளியே, பரவவே, எல்லார்க்கும் அவனைப் பற்றி மிக்க உயர்வான எண்ணமும், அவனுடைய அசாத்தியமான செய்கையைப்பற்றி ஆச்சரியமும் உண்டாய்விட்டது.

மந்தனென்றும், சோம்பேறி யென்றும், குத்துச் சண்டைக்கு ஆயத்தமாயிருப்பவனென்றும் எல்லாரும் நினைத்துக்கொண்டிருந்த காசிநாதன் இப்போது பெரிய யோகியாய் விட்டான். மறைந்திருந்த அவனுடைய தெய்வீக வாசனை வெளிப்பட மலர்ந்து வீசத்தொடங்கி விட்டது. ஆனல் முன்பு ஜனங்கள் செய்த நிந்தனையே அவன் எண்ணிய கார்யத்தை முடிக்கும்படியான வைராக்யத்தை யவனுக்கு ஏற்படுத்தியது. கீதையிலும் இதைப் பற்றி,

ஸம்மாநந பராம் ஹானிம் யோகாதே குருதேயதஃ
ஜனைவமதோ யோகீ யோக ஸித்திம் சவிந்ததி
(பகவத் கீதை) 26-சு-

ஜனங்களால் புகழப்பட்ட யோகி யோக ஹானியையடைகிறுன்
ஜனங்களால் இகழப்பட்ட யோகி யோக ஸித்தியையடைகிறுன்

என்று கூறுகின்றது. ஊருக்கு வந்த பின், காசிநாதனுக்கு மனம் மாறத் தலைப்பட்டது. ஒன்றையும் விரும்பாதிருந்தவனுக்கு, சமூக அபிப்பிராயத்தைப்பற்றியும், தன் மதிப்பும், குடும்ப விஷயங்களைக் கவனித்தலும் ஏற்பட்டது. அவன் வந்து சேர்ந்த பதினெட்டு நாட்களில் 8-8-1890 கோகுலாஷ்டமியன்று அவனுடைய பிதா இறந்து போனுர். ஆபத்துக் காலத்தில் உதவவே அவன் வந்து சேர்ந்ததன்றி, அச்சமயத்தில் இவனே மூத்தவனுக அங்கிருந்ததால், தன்னுடைய பிதாவுக்குச் செய்யவேண்டிய கடமையை யவன் செய்து முடித்தான்,

அவனுடைய பாட்டனுரும் வியாதியாய்க்கிடந்தார். காசிநாதன் அவருடைய வைத்திய விஷயத்தில் மிகுந்த சிரத்தையுடன் கவனித்து வந்தான். வைத்தியர்களுடன் அவருடைய தேகஸ்திதியையும், ஔஷதங்களையும் பற்றிக் கலந்தாலோசிப்பதும், ஔஷதங்களைக் கலந்து கொடுப்பதும், ஆயுர்வேத வைத்திய நூல்களைப் படிப்பதுமாயிருந்ததில், அதைத் தனக்குத் தொழிலாய்க் கொள்ள வேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. குடும்பத்தை மிகுந்த வறுமையிலும் கடனிலும் தவிக்கவிட்டு, அவனுடைய பிதா இறந்த இரண்டு வருஷத்திற்கெல்லாம் பாட்டனுரும் இறந்து போனுர். பிறகு ஒரு வருட காலம் குடும்ப ஜீவனத்திற்கே ஸ்ரீ பாலகங்காதர திலகருடைய உதவியை நாடவேண்டியிருந்தது. இந்த சமயத்தில் காசிநாதனுடைய இரண்டாவது மனைவியும்

இறந்துவிட்டாள். மூன்றும் மனேவியும் வீட்டுக்கு வந்தாள். இடையில் பாலகிருஷ்ண சாஸ்திரி உழைத்து ஏதோ சம்பாதிக்கலானார். வைத்தியத் தொழிலே விரும்பிய காசிநாதர் ஸாங்களி என்னும் ஊரிலுள்ள வெங்கடரமணுச்சார் என்ற பிரபல வைத்தியரிடம் ஆயுர்வேதமும் ஸம்ஸ்கிருத இலக்கணமும் கற்றுக்கொண்டார். காசிநாதனை இனி பண்டித காசிநாதர் என்றே யழைப்போம்.

1896-ம் வருடத்தில் அமராவதி என்னுமிடத்தில் தனது வைத்தியத் தொழிலே யாரம்பித்தார். அதிலும் ஓர் கடுமையான அனுபவத்திற்காளானர். ஜப்பல்பூரிலுள்ள கோவிலொன்றிலிருந்த கோஷ்டியினருக்கு இவர் சிற்றுண்டி கொடுக்க அதை சாப்பிட்டவர்களில் சிலர் நோய் கண்டிறந்து போகவே, அதனுல் இவருக்கு நான்கு மாதங்கள் ஸாதாரண சிறைவாசம் ஏற்பட்டது. ஆனல், அதனுலிவருக்கு மதிப்பென்னமோ குறையவில்லே. 1896 ம் வருடத்தில் அமராவதியில், அவர் கவுன்ஸில் ஆப் ஸ்டேட் அங்கத்தினராயிருந்து காலம் சென்ற திவான் பகதூர் G. S. கபார்டே என்பவருடைய உதவியினுல், அங்கொரு வைத்தியசாலேயும், நாகப்பூரில் அதன் கிளேயொன்றுமாய் ஸ்தாபித்து, ஔஷதங்களே விருத்திசெய்ய, 'பேஷஜரத்னமாலா' என்ெருரு மாதப் பத்திரிகையையும் வெளியிட்டுத் தன் தொழிலே சிறப்பாக நடத்திக் கொஞ்சம் பணமும் சேர்த்தார். மொத்தத்தில் பத்து வருட காலமாக அவருடைய தொழில் நன்ருக விருத்தியடைந்திருந்தது.

அவருடைய மூன்றும் மனேவியும் அவரைப்போலவே ஆசாரசீலமுடையவளாயும், உத்தமியாகவு மிருந்தாள். மக்கட்பேறில்லாத குறை யொன்றிருந்ததானுலும், செல்வாக்கும், அதிருஷ்டமும், ஸந்தோஷமுமுள்ள உலக

இயல்பை யொட்டிய ஸாதாரண கிரகஸ்தராகவும், ஸத்குணமுள்ளவரும், தனவந்தருமான ஓர் வைத்தியர் பிறர்க்கெவ்வளவு நன்மை செய்யக் கூடுமோ அவ்வளவும் செய்பவராகவும், நிம்மதியான இல்வாழ்க்கை நடத்துபவராகவும், காணப்பட்டார். இந்த அதிருஷ்டம் நீடித்திருந்திருக்குமாயின், நாகப்பூரிலாவது அமராவதியிலாவது வீடு, நிலம், முதலியவைகளைத் தேடிக்கொண்டு, இல்லறத்திலேயே தனது வாழ்நாள் முழுவதையும் கழித்திருப்பார். பத்து வருடகாலம் அவருடைய தொழில் உன்னத ஸ்திதியிலிருந்த வரைக்கும் வேறெவ்வித மாறுதலும் ஏற்படக் காரணமில்லை.

ஆனல் அவருடைய பிறப்பின் இலக்ஷியம் இதுதானு? சொல்லரிய சோதனைகளுக்குட்படுத்தி, தானுகவே ஸமாதியின் மேன்மையை யவரறியச் செய்து, பூர்கட் குகையில் எதிர்பாராவிதமாக அவரை ரக்ஷித்த கடவுளுடைய சித்தம் யாது? திவ்ய சரீரத்தை யவர்க்கு விளக்கிக்காட்டிய அப்பரம்பொருள் எங்கேனும் சென்று மறைந்துவிட்டதா? அல்லது அவரைத் தொடர்ந்து மறுபடியும் அவருட் புகுந்து அவருடைய வாழ்வை மாற்றித் தனக்கு அடிமையாக்கிக் கொள்ளுமா பார்ப்போம். ஆட்டிவைப்பானும், உண்மை காட்டிவைப்பானுந் தன்னுள், கூட்டுவிப்பானும் பொன்னம்பலத்தாடுங் கூத்தனேயல்லவா! கருணையங் கடவுளுடைய சித்தமானது,

* "மாயைப்புதரிற் புதைந்த வொளி மணியைத்
தாயினருளோடு தான்தேடி தன்னெளியாந்
தூயசுடர் தந்து சோதி யுருவாக்கி,
சாயுமுயிர்க் கெல்லாந் தழுவு மரமாக்கி
மண்ணிற் பிறவா மருந்துதரும் வந்திரியாய்
எண்ணும் பொருள்தா னீயுஞ்சுர தருவாய்

நண்ணும் மெய்வீடருளும் நாதகுரு வடிவாய்க்
கண்ணி லொளிபோல் கருத்துணர்த்தும் காரணமாய்
முத்திக்கு வாயில் இதுவென்று முன்செல்லும்
பக்தரைத் தாங்கும் பழங்கருணை ஆலயமாய்”

அவரைச் செய்யவேண்டி யிருக்கும்போது, காசிநாதர், கேவலம் ஸாமான்ய ஸம்ஸாரியாகவே யிருப்ப தெங்ஙனம் நிகழும் !

ஸம்பாதித்த பணத்தில் வீட்டுச் சாமான்கள், வெள்ளிப்பாத்திரங்கள் இவைகளுக்குச் செலவழித்ததுபோக பணம் மீதியிருந்தது. குவாலியர் பிரதேசத்தில் மால்குஸாரிகள் என்ற ஜமீன்கள் மலிவான விலைக்கு வந்தன. 600 ரூ. டிபாஸிட்டால் 2000 ஏகர் விஸ்தீரணமுள்ள ஜமீன் கிடைப்பதாலும் அதில் குடியேறி யிருக்கும் பாகந் தவிர மற்றதைத் தானே பயிரிடவோ குத்தகைக்கு விடவோ கூடுமென்றும், குடிகளிடம் வசூலித்து அரசாங்கத்திற்குக் கட்டுவது போக ஏராளமான லாபம் கிடைக்கும் என்ற ஆவலும் ஏற்படவே கையிலிருந்த பணத்திற்கு நிலத்தை வாங்கி, வைத்தியசாலை, தொழில், பத்திரிகை யனைத்தையும் நிறுத்திவிட்டு அமராவதியையும் நாகப்பூரையும் விட்டுவிட்டு ஜமீனுக்கு வந்து குடியேறினர்.

பண்டித உபாஸனி சாஸ்திரி, இதற்குப்பின் உபாஸனி மால்குஸார் என வழங்கப்பட்டார். ஜமீன் நிர்வாகஸ்தராயிருப்பது எத்தனை கஷ்டமென்பதை அவர் முன்பு உணரவில்லை. வெளியிலிருந்து வந்தவர்களை அங்குள்ளோர் நிலப்பேய் பிடித்தவர்களாக நினைத்தார்கள். குடிகள் கூலிகள் கிராமாதிகாரிகள் எல்லாரும் முன்னிருந்த ஜமீன்தாரின் தூண்டுதலினால் இவர்களை மிகவும் கஷ்டப்படுத்தினர்கள். வரி சரியாக வசூலாகாது. கூலிகள் அடங்கமாட்டார்கள். அதிகாரிகளிடம் முறையிட்

டாலும் கவனிப்பதில்லை. கோர்ட்டுக்குப் போவதனாலும், கண்ணியக்குறைவும், சந்தேகமும், ஆலசியமுந் தவிர லாபமொன்றுமில்லை. ஜமீன் வாங்கினதில் பண்டிதர் தான் வைத்திருந்த பணமெல்லாம் செலவு செய்ய நேர்ந்தது. அப்படியும் சர்க்காருக்குக் கப்பப்பணம்கட்ட தாமதமாகவே இவரை அவமானப்படுத்தவென்று அதிகாரிகள் இவருடைய ஸாமான்களை ஜப்தி செய்யலானார்கள். மேலதிகாரிகளோ எத்தனை முறையிட்டும் கவனிக்கவில்லை. விசாரத்தினாலும், அலைச்சலாலும், அவருடைய தேகஸௌகம் கெடவாரம்பித்தது. சில சமயங்களில் கூலிகளாலும் குடிகளாலும் அவருயிருக்கே ஹானிவரும்போலிருந்தது. இரண்டு வருஷம் இவ்விதம் கஷ்டப்பட்டுப் பயனற்றுப் போகவே முடிவில் ஜமீனை அரசாங்கத்திற்கு ஒப்புவித்துவிட்டுத் திரும்பி அமராவதிக்கே சென்று வைத்தியத் தொழிலைப் பின்பற்றினர்.

கெட்டகாலம் விடாததாலும், ஒருமுறை நிறுத்திவிட்டு மறுபடி தொடங்கினதாலும் மருந்துகள் விற்பனை குன்றி பத்திரிகையும் நின்று வரும்படியுமில்லாமல் தேகமும் சீர் கெட்டுப்போய்த் தவிக்கலானர். நோயாளிகளைப் பார்த்து வந்தால் இரவில் களைத்து சோர்ந்து போய் வீட்டுக்கு வருவார். வந்தது போதுமென்றும் அலைச்சலைக் குறைத்துக்கொள்ளும்படியும் அவர் மனைவி சொன்னல் தனக்குப் பின் அவளுக்கு வேண்டுமேயென்றே தான் ஸம்பாதிப்பதாக இவர் சொல்வார். அவ்வம்மைக்கு இது மிகுந்த வருத்தமுண்டாகி, பர்த்தாவுக்கு முன்னரேதான் இறந்துவிடுவே னென்று உறுதியாகக் கூறுவாள். பண்டிதருக்கு வறுமையும், சஞ்சலமும், தேக அசௌக்கியமும் அதிகரிக்கவே, நாளடைவில் சிறிது சிறிதாய்க்குறைத்து வந்த வைத்தியத் தொழிலை,

10-4-1910 தேதியோடறவே நிறுத்திவிட்டு கையிலிருந்த சொற்பத்துகையுடன் மனைவியையும் அழைத்துக்கொண்டு யாத்திரை கிளம்பினர்.

நற்குணமும் தூயசிந்தையுமுள்ள இந்த ஸதிபதிகள் நர்மதையாற்றங் கரையிலுள்ள ஓங்காரலிங்கம் என்னு மிடத்திற்குப் போய்ச் சேர்ந்தனர். அங்கே நர்மதைக் கும் அதன் கிளையாகிய காவிரிக்கும் நடுவேயுள்ள காட்டின் மத்தியில் மிகவும் பெரியதோர் லிங்கத்துடன் கூடிய சிவாலயமொன்றுண்டு. அதற்கு ஸோமநாதர் கோவில், அல்லது கௌரீசங்கராலயமெனப் பெயர். அங்குள்ள சிவலிங்கத்தின் சுற்றளவு சுமார் 11 அடியும் பீடத்துடன் 9 அடி உயரமும் உள்ளது. தவிர அந்த கோவில் எப்போதும் ஏகாந்த வாசத்திற்குரியது. பண்டிதரும் அவர் பத்தினியும் அங்குவந்து லிங்கத்தை வணங்கி அதன் இருபக்கத்திலும் வெவ்வேருக உட்கார்ந்து பகவானை தியானிக்கலானார்கள். காசிநாதர் தெரிந்தோ தெரியாமலோ தனது பழய வழக்கமான பிராணாயாமத்தைக் திரும்பச்செய்யத் தொடங்கினர்.

கொஞ்சநேரம் சென்றதும், அவருடைய மனைவி கண்திறந்து பார்க்கத் தன் கணவர் நினைவற்றுக் கீழே விழுந்து கிடப்பதைக்கண்டு பயந்து அவர் முகத்தில் ஜலத்தைத் தெளிக்கவே, அவருக்கு மூச்சில்லாதிருந்தும் உள் நினைவுண்டாகி தனக்கதுவரையிலும் ஹிருதயத்துடிப்பே நின்றிருந்ததென்றுணர்ந்து உடம்பையசைத்தார். ஏதோ ஓர்விதமான சப்தத்துடன் சுவாசம் திரும்பிவந்து பிறகு மெள்ள எழுந்தார். எப்படியிருந்தாலும், இம்முறையும் ஓர் பிராணபத்திலிருந்து பகவான் அவரைக் காப்பாற்றினரென்று தான் சொல்லவேண்டும்.

இருவரும் பகவானை மனதார வாழ்த்திக்கொண்டு நாகப்பூருக்கே திரும்பவும் வந்து சேர்ந்தனர்.

நாகப்பூர் வந்தபின்பும் ஸ்வாசம் விடுவதற்கு கஷ்டப்பட்டுக் கொண்டும், சாப்பிட முடியாமலும், எதனாலெந்த ஸமயத்தில் உயிர் நின்று போகுமோவென அஞ்சும்படி கஷ்டப்பட்டார். தனக்கே வைத்யம் செய்துகொள்ளவேண்டிய அவசியம் நேர்ந்து விட்டதால், வைத்யத்தொழிலை நடத்தவும் முடியாமல் போயிற்று. பல வைத்தியர்களிடம் காட்டியும் அவருடைய நோய் இன்னதென யாருக்கும் புலப்படவில்லை. சிலர் இது வியாதியல்ல, பிராணாயாமம் செய்ததால் ஸ்வாச ஸ்தம்பனமான ஹடயோகமாயிருக்கலாம். வைத்தியமே தேவையில்லை. நாளடைவில் சரியாய்ப்போகும் என்றனர்.

ஒன்றும் அனுகூல மேற்படாததால், அங்கிருந்து பிறர்க்கு சிரமங்கொடுப்பதைவிட தன் தாயுந் தமயனுமிருக்கு மிடத்திற்குப் போய்விட்டால் எவ்விதத்தும் நலமென்றெண்ணிய பண்டிதர் தூலியாவுக்குப்போனார். அங்கும், எத்தனையோ வைத்தியமும், மாந்திரீகமும் தோஷ பரிகாரங்களும் செய்தனர். இந்திய குலஸ்திரீகளுடைய வழக்கப்படி, அவருடைய மனைவியும் தன் கணவருடைய சௌக்யத்திற்காக லக்ஷத்திருபத்தியையாயிரம் அரச பிரதக்ஷிணம் செய்தாள். வியாதி பூர்வகர்மத்தினாலேயே விளைவதனால் அக்காலத்தில் நற்கருமத்தை செய்வதனாலது விலகுமென்றும், வியாதியஸ்தனுடைய பார்யையே அதை செய்ய மிகவும் அருகதை யுள்ளவளென்றும் சாஸ்திரங் கூறுகின்றது. அனுஷ்டானத்திலும் ஸத்யவானுக்காக ஸாவித்ரி விரதமிருந்து மேன்மையடைந்ததுபோன்ற பல உதாரணங்களிருக்கின்றன. ஆனால் காசிநாதருக்கெதனாலும் வியாதி தீரவில்லை.

நாளுக்குநாள் உடல்மெலிந்து போனார். எந்த வேளையிலோ தன்னுயிர் போவது நிச்சயமென்றெண்ணினார். ஆனால் சாகப்போவது அவருடைய உயிரா! அல்லது ஸ்தூல அபிமானமா! அதை விளக்கிக் காட்டத்தக்க விமலனிடம் சென்றால் தானே நோய்தீரும்! ஆதி வியாதிகளையெல்லாம் பரிகரிப்பதற்காக வந்த வியாதியைத் தன்னைக் கொல்லவந்த கொடுங்கூற்றமென்றெண்ணி விசாரப்படலானார். தன் பந்துக்களும் தன் பொருட்டு கஷ்டப்படுவதை யெண்ணி வருந்தினார். நாளுக்குநாள் அவருக்கு மனஞ்சலித்து வாழ்வே கசந்துபோயிற்று.

தாலியாவில் ஒரு வருஷம் இப்படித் தள்ளியபின், தன்னை சௌக்கியப் படுத்தக்கூடிய யோகியைக் கண்டு பிடிப்பது, இன்றேல், சாவது என்று உறுதிகொண்டு வெளிக்கிளம்பினார். இதைத் தவிர வேறு விமோசனமிருப்பதாக அவருக்குத் தெரியாததால், இரண்டு சிறுவர்களைத் துணைக்கு அழைத்துக்கொண்டு 1911-ம் வருஷம் ஏப்ரல் மாத ஆரம்பித்தில் புறப்பட்டார். ஆனால் அந்த சிறுவர்களையும் மறுநாளே திருப்பி யனுப்பிவிட்டுத் தான் மட்டும் தனியே சென்றார்.

*பொருள் விரும்பி யலைந்ததெல்லாம் போதும் உன் பொன்னடி
அருள்விரும்ப வைத்திட்டலாகாதோ அச்சுதனே [யின்

# அத்தியாயம்—7

## ஸாதுவைச் சரணடைதல்

** பிறவிநோய் தீர்க்கின்ற பேரருளார் தேசிகராந்
துறவிதனைக் காண்பதற்குச் சூழ்ந்தார்—இரவிதனைக்
கண்டால் விலகாதோ கங்குல் கடவுளருள்
கொண்டால் விலகாதோ கூற்று.*

யோகஸாதனம்பெற்ற ஸாதுக்களால்தான் தன் வியாதியைப் போக்கமுடியும் என்ற எண்ணம் பண்டிதர்க்குத் தோன்றுவானேன்! அவருடைய வாழ்க்கை மாறுதலடைவதற்கு ஏதாவது வழி வேண்டுமல்லவா! அனைத்தும் அவன்செயல். இயற்கையிலேயே காசிநாதர் வேதாந்த மனப்போக்கும், சாஸ்திர நம்பிக்கையும் குருபக்தியுமுள்ளவராதலால் யோகீசுவரர்களுடைய ஆசியைத் தேடி அவர் புறப்பட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை. அமைதியாய்ப் போகும் மேகங்களை திடீரெனத் தோன்றிய காற்றானது தன் போக்கில் தள்ளிக்கொண்டுபோய் விடுவதுபோல, பத்து வருடகாலம் இல்லறத்தில் நிலைத்து வைத்தியத் தொழில் செய்து கொண்டு இருந்த அவரை, பணத்தாசையை உண்டாக்கி வறுமையைக் கொடுத்து, அலையச்செய்து, வியாதியை ஏற்படுத்தி தள்ளிக்கொண்டு வருபவர் கடவுள்தானே! எப்படியானாலும் ஸாதுக்களுடைய தரிசனத்தினால் மனித ஆன்மா கடைத்தேறுகின்ற தென்பதற் கையமில்லை.

ஸ்பர்ச மணியிற்பட்ட இரும்பு பொன்னாவது போலும், புண்ணிய நதியைச் சேர்ந்த சேற்றுக் கால்வா

யும் புனிதமாவது போலும், ஸாதுக்களைச் சேர்ந்த பாமரரும் ஸத்புருஷர்களாவர். ஈன்ற தாயினு மன்போடு, தன்னை யடைந்தவனை யாதரித்து, அவன் பாபங்களைப் போக்கி, அவன் மனதிலுள்ள காமக் குரோதாதிகளை வேரறுத்து, அன்புநீர்ப் பாய்ச்சி, சிவானந்தப் பயிரைச் செழிக்கச்செய்து ஜீவன் முக்தனுக்கும், ஸத்குருமூர்த்திகளின் தரிசனமானது மனிதப்பிறவி யெடுத்தோர்க்குக் கிடைக்கரிய பாக்கியமாம். அஞ்ஞானத்தினால் பார்வையிழந்த அகக்கண்ணை ஞானமென்ற மைக்குச்சியினால் திறந்துவிட்டு வெளிச்சத்தைத் தரும் ஓர் ஸத்குருவினுடைய பாதங்கள், மனிதனுக்குப் பிறவிப்பெருங் கடலை நீந்துதற்கேற்ற தெப்பமாகும். ஸர்வமும் பிரும்ம ஸ்வரூபமாகக்கண்ட ஞானி பரபிரும்மஸ்வரூபமாவதால் அவரைப் பவபய மணுகாது. அவருடைய அருட் பார்வைக்கிலக்கானவர்களுடைய பாவங்கள் ஆதித்தனைக் கண்ட பனி போல் விலகும். இறைவருந் தொண்டருள்ளத் தொடுக்கமென்றும், தொண்டர் தம் பெருமை சொல்லவரிதென்றும் ஔவையாரும் மொழிந்திருக்கின்றார். அடியார் நினைப்பின் ஆகாததுண்டோ ?

* "சீராருந் திருவருளின் செயலறிந்து சொல்வார்
தேவரொடு சேருமொரு சேவைதர வல்லார்
மாறுத அன்புடனே வந்தபணி செய்வார்
வந்தடையு மடியவர்தஞ் சிந்தைபறி கொள்வார்
தீராத வெம்பிறவி நோயகற்றி வைப்பார்
தேசுடையோர் உள்ளமதில் வாசமென் றிருப்பார்
பாராரு மெவ்வுயிர்க்கும் பரிந்தவுள்ளம் பூண்பார்
பார்த்தபொரு ளனைத்தினிலும் பரமனுருக் காண்பார்."

இத்தகைய ஸாதுக்களாலேயே தன் நோய் தீரும் என்ற நம்பிக்கையுடன் காசிநாதர் ஆமத்நகர்க் கருகி

னுள்ள ராகூரி யென்ற ஊரைச்சேர்ந்த யோகி, கூல்கர்னி யென்பவரிடம் சென்றார். இவருடைய விஷயங்களை யெல்லாம் கேட்ட அவர், ஸோமநாதர் கோவிலில் பண்டிதருக் கேற்பட்ட மூர்ச்சையானது, யோகத்தின் பூர்ண உச்சத்தில், மூச்சும், ரத்த ஓட்டமும், நின்று போகக் கூடிய, பழுத்த நிர்விகல்ப ஸமாதியே யென ஐயமற உணர்ந்துகொண்டு, இவருக்கு உபதேசம் செய்து இவரை அபாரமாகக் கொண்டாடலானார். இது காசிநாதர் மனதைப் புண்படுத்தியது. காசிநாதருக்கு, அவருடைய முயற்சியில்லாமல் தானாகவே அவருடைய ஸூக்ஷ்மமுனையானது அவருடைய உணர்ச்சிக்கு வந்து பக்குவமாகிவிட்டதால், யோகாப்பியாசமும், சிக்ஷையுமில்லாமலே அவர் யோக ஸித்தியின் உச்சத்தை யடைந்திருப்பதாகவும், அதில் இன்னும் அதிகமாயறிந்து பலனடைய வேண்டுமானால், ஷிர்டியிலுள்ள "அவாலியா" "ஸாயிபாபா" என்பவரிடம் போவது நலம் என்றும் யோகி கூல்கர்னி சொன்னார்.

"அவாலியா" "ஸாயி" என்னும் பதங்களைக் கேட்டதும், அந்தப் பேர் கொண்டவர் அநேகமாய் மகமதியராகத் தானிருப்பார் என்று யூகித்த பண்டிதருடைய ஆசாரமுள்ள மனம், தான் ஒரு முஸ்லீமுடைய காலிலா பணிவது! என்று தத்தளித்தது. ஞானிக்கு மதமேது! அங்கிங் கெனாமலெங்கும் பரந்து கிடக்கும் அருட்சோதியைத் தன்னுள்ளே கண்டு தெளிந்தஞானியே பரம்பொருள். ஈன மதத்தில் பிறந்தாலும் அவர் ஈசனே, எம்மத நிலையும் ஆண்டவன்றன் அருள் நிலையிலே யிலங்குகின்றதென்று அறிந்து ஸம்மதங்கொண்ட அடியாரும் இதைக் குறித்து,

*நால்வருண மாச்சிரம மாசார முதலா*
*நவின்ற கலைச்சரிதமெல்லாம் பிள்ளை விளையாட்டே*
*மேல்வருணந் தோள்வருணங் கண்டறிவாரிலை நீ*
*விழித்திதுபார்* (திருவருட்பா)

என்று விளம்பியிருக்கின்றனர். பரமஹம்ஸரி லொருவ ராகிய ஸ்ரீராம தீர்த்தர், தன்னையே உலகமென்றும், தனது நகரத் தெருக்களில், கண்ணன் குழலூதவும், புத்தன் பிக்ஷையிரந்து கொண்டும், கிறிஸ்து ஸத்தியத்தைப் பிரஸங்கித்துக் கொண்டும் நடக்கிறார்கள் என்றும் பல ஸந்தர்ப்பங்களில் கூறியிருக்கின்றார். மெய்ஞ்ஞானிகளே பேதமற்ற நிலையை யடைந்தவர்கள் என்பதற்கு இதை விட மேலான உதாரணமுண்டோ! ஷிர்டியிலுள்ள ஸ்ரீஸாயிபாபா என்பவரும் ஸாதாரண யோகிகளைப் போன்றவரல்ல.சாதிமதபேதங்கடந்த பரிபூரண பரபிரம்ம சொரூபமானவர். எப்பொழுதும், எவ்விடத்தும் எதையுஞ் செய்ய வல்லவர். அவரிடம் போவதனால் குறை யொன்றுமில்லை. என்று யோகி கூல்கர்னி எவ்வளவோ எடுத்துரைத்தும், பண்டிதர்க்குத் தன் வழக்கத்திற்கு விரோதமாகப் போக மனம் இசையாததாலும், அவருள்ளம் அத்தகைய ஸமரஸ நிலைக்கு இன்னும் வராததாலும், தன்னை சௌக்கியப்படுத்த வேறு ஹிந்து யோகியே கிடைப்பாரா என்று பார்த்துக் கொண்டிருந்தார்.

இப்படியிருக்கும்போது ஒரு நாள் அவர் அந்த ஊர்த் தெருக்களின் வழியே போய்க் கொண்டிருந்தார். அப்போது ஓர் வயோதிகன் இவரிடம் க்ஷேமலாபங்களை யெல்லாம் விசாரித்துவிட்டு இவருக்கிருக்கும் வியாதி வெறும் வாதந் (வாயு) தான். அதற்கு வென்னீர் குடித்தாலது சௌக்கியமாய் விடும் என்றும் சொல்லிவிட்டுப்போனான். வலுவிலே வந்த வைத்திய

மல்லவா! இவர் அதை ஒரு அவசியமாய் எண்ணுமல் பாடக் என்ற பேர்கொண்ட ஒரு யோகி மோர்கான் என்ற ஊரிலிருப்பதாய்க் கேள்விப்பட்டு அங்கே போகப் புறப்பட்டார். வழியிலேயே சித்தம் மாறிவிட்டது. இந்த உடம்புக்கு என்ன வந்தாற்றுனென்ன! இனி இது எப்படியானுலுமாகட்டும் என்று சலிப்பும் வெறுப்பும் அதிகமாகவே, அங்கேயே யிருந்த ஒரு கள்ளிப்புதருக் குள்ளே போய் உட்கார்ந்துகொண்டு நீடித்த ஸமாதியில் அமர்ந்து பசித்தபோது அந்தக் கள்ளி பழத்தையே தின்றுகொண்டு ஏழெட்டுநாள் வரைக்கும் தள்ளினர். அந்த இடத்திற்குப் பக்கத்தில் ஜெஜுரி என்றொருகிராம மும் ஒரு ஆறும் உண்டு. கடைசிநாளன்று தாகம் அதிக மாயிருந்ததால் இவர் அந்த ஆற்றுக்குப்போனர் போகும்போதே ராகூரியில் குளிர்ந்த தண்ணீர் குடிக் காதேயென்று கிழவன் சொன்னது நினைவு வந்தது. உடனே அந்தக் கிழவன் தன்னெதிரில் வந்து நிற்பதைக் கண்டதும் அவருக்குத் தன் கண்களையே நம்ப முடியா மல் ஆச்சரியமாய்விட்டது. அந்தக் கிழவன், "உன்னைத் தான் வென்னீரே குடியென்று நான் சொன்னேனே! சாகவா வெண்ணுகிருய்! இங்கேன் வருகிருய்! போ! ஊருக்குள்போய் யார் வீட்டிலாவது கேட்டு வென்னீர் வாங்கிக் குடி என்று சொல்லிவிட்டு மறைந்துவிட்டான். பண்டிதர்க்கு ஆச்சரியத்தின்மேல் ஆச்சரியமாயிருந்தது. பேசாமல் ஊருக்குள்போய் சிந்தோபந்த்பெல்சாரி என்ற ஒரு கனவான் வீட்டில் வென்னீர் வாங்கிக் குடித் தார். வென்னீர் குடிக்கவாரம்பிக்கவே வேர்வை ஏராள மாய்விட்டு வெகு நாட்களாய் இல்லாதிருந்த தூக்கமும் வரவே இருபது நாட்களில் அவர் பூர்ண சௌக்யமடைந் தார். உடம்போ சௌக்கியமாய் விட்டது. வீட்டுக்குப்

போய் சந்தோஷமாய்க் குடும்பத்தை நடத்தலாமென்று அவர் கிளம்பி யிருக்கலாம். தெய்வசங்கற்பம் வேரு யிருப்பதனுலோ என்னமோ "பாடக்" யோகியைப் பார்க்கவேண்டுமென்ற உறுதியான எண்ணத்தினுலும், தனக்கு இன்னும், பூரண சௌக்யம் உண்டாகவில்லை யென்ற அவநம்பிக்கையினுலும், மோர்கானுக்கு வந்து சேர்ந்தார். அங்கே அந்த யோகி யில்லாததால் பம்பாயி லிருக்கும், கீர்த்தி பெற்ற தத்த பக்தரான "நாருயண மகராஜ்" என்பவரிடம் வந்து சேர்ந்தார்.

அங்கே இவரை அவர் வரவேற்ற மகத்தான வரவேற்பு இவரை மெய் மறக்கச் செய்து விட்டது. நாருயண மகராஜ் இவருக்கு ஆத்ம பரிபக்குவம் கிடைத்து விடுகிறதென்ற கருத்துடன் இவரைப் பார்த்து, இவரைத்தாம்பூலம் போடச் சொல்லி, உமக்கு உள்ளும் புறமும் சாயம் நன்ருயிருக்கிற படியால் நீர் என்னை நாட வேண்டியது அவசியமேயில்லை. நீர் என்னிடம் வந்த வேலை முடிந்தது என்று சொல்லி விட்டார். பண்டிதர்க்கு ஒன்றுமே விளங்கவில்லை. சாயம் நன்ருயிருப்பதாகச் சொன்னது வெற்றிலைக் காவி நன்ருய்ப் படிந்திருக்கிறதென்றர்த்தமா! தேகம் சௌக்யமாய் விட்டதென்பதற்காக வேலை முடிந்ததென்று சொன்ஞரா! அல்லது வேறர்த்தமாயிருக்கலமா! என்று யோசித்து மனங்குழம்பின பண்டிதர் மறுநாளும் நாருயண மகராஜிடம் சென்று கேட்க அன்றும் அதையே சொல்லி அனுப்பி விட்டாரவர். பண்டிதர் ஆசா பங்கத்துடன் திரும்பி வீட்டுக்குப்போக வேண்டியதே யென்று வரும்போது மீண்டும் யோகி கூல்கர்னியைச் சந்தித்தார். அவர் "நீ போகும் வழியிலேதானே ஷிர்டியிருக்கிறது! அங்கே தங்கி ஸ்ரீஸாயிபாபாவைப் பார்த்து விட்டுப் பிறகு ஊருக்குப் போயேன்" என்று வற்புறுத்தினர்.

இவருக்கு ஒன்றும் மறுத்துச் சொல்லவும் தோன்றவில்லை. பம்பாயிலிருந்தே தமையனுக்குத் தன் க்ஷேமத்தைப் பற்றி கடிதம் எழுதியாயிற்று. மனதில் ஏதோ ஒன்று ஷிர்டிக்குப் போகும்படித்தூண்டுவது போலிருந்தது. தன்னாலதைத் தடுத்து நிற்க முடியாதென்றும் தோன்றியது. அவருடைய சொல்லுக் குட்பட்டு ஷிர்டிக்கு வந்து சேர்ந்தார். 27-7-1911-ந்தேதிதான் அவர் அங்குவந்து ஸ்ரீபரமஹம்ஸ ஸாயியைத்தரிசித்து அந்தப் புண்ணிய மூர்த்தியின் கருணைக்குப் பாத்திரமான ஒப்பற்ற மகத்தான நந்நாள்.

*மிடியா லயரா ரொருநா யகன்றன்
னடியா ரிருபூ வடிசேர் பவரே.*

## அத்தியாயம்—8

## தடுத்தாட்கொண்ட தற்பரன்

** வாழ் வென்னுஞ் சோலையினி லிலையுமொருபறவை
மனதையவர்பால் வலிய அன்புபெறச்செய்து,
ஆழ்வுற்ற உலகமயற் காளாகி யழியா
தருளுடைய அன்பர்திரு வடிக்கடி மையாகப்
பாழ்பட்ட பிறவியெனும் நோயகற்றி வைத்துப்
பந்தமுறு சிந்தைதனைச் சொந்தமெனக் கொண்டே
தாழ்வற்ற ஸத்துவ ஸமத்துவ நிலைதந்த
சற்குருவின் பாதமலர் சித்தமதில் வைப்பாம்,*

அவனன்றி யோரணுவும் அசையாது, என்றும், ஒன்றை நினைக்கின் அது வொழிந்திட் டொன்றாகும், என்றும் மூத்தோர் கூறியிருப்பதுபோல வீட்டுக்குப் போவதற்காகப் புறப்பட்ட பண்டிதரை, தெய்வச் செய

லானது ஷிர்டிக்கு இழுத்துக் கொண்டு வந்து சேர்த்தது. தானகவே அவருக்கு யோகானுபவத்தையும், சில ஸம யங்களில் ஞானனுபவத்தையும், கொடுத்து, அவருடைய உயிரையும் ஆபத்தின்றி தெய்வம் காப்பாற்றியதானது அவர் கேவலம் ஸம்ஸாரக் கடலில் உழல்வதன் பொருட் டல்லவே! அவர் பிடிவாதமாக வீட்டுக்கே போவே னென்றாலுங்கூட அவரைத் திருப்பி மேலாம் நிலையிலே யிருத்த "தெய்வ வல்லமை" யிருக்கும்போது அவர் எவ்விதம் போக முடியும்? பன்முறை சொன்னாலுங் கேளாமல் மண்ணைத் தின்னுங் குழந்தையை தாயான வள் கடைசியில் பலவந்தமாக மண்ணை யகற்றி யழைத் துக் கொண்டு போவதுபோல, உலக விஷயத்திற் காளாகாதிருக்க வேண்டி பல அனுபவங்களைத் தன் மக் களுக்குக் காட்டும் இறைவன், மேலும் அவர்கள் தவறு வதைக் கண்டு சகிக்காமல் எவ்விதமாயினும் தானே தடுத் தாட் கொள்ளுகிறார். ஸாதாரணமாக நமது வாழ்க்கையி லேற்படும் ஒவ்வொரு ஸம்பவங்களையும் ஊன்றிக் கவனிப் போமாயின், நம்மைச் சூழும் மாயையும், அத்துடன் ஈசுவரனின் எல்லை யற்ற கருணையுந் தெளிவாக விளங்கும். இவ்விதமே தெய்வத்தின் அபூர்வசக்தி காசிநாதரை ஷிர் டிக்குத் தள்ளிக் கொண்டு வந்தது.

பண்டிதர் ஷிர்டியில் இரண்டொரு நாள் தங்கியிருந் தார். பிறகு ஊருக்குப் புறப்படுவதற்காக ஸ்ரீஸாயி பாபாவிடம் விடைப் பெற்றுக் கொள்ளச் சென்றார். பாபாவுக்கு இவரை யனுப்ப மனமில்லாததால், நீ இப்போ போக வேண்டாம். இன்னும் சில நாளிருந்து விட்டுப் போகலாம், என்றார். இப்போ தங்குவதற்குச் சௌகரியமில்லை யென்று பண்டிதர் மிகவும் மன்றாடவே, நீ போனல் எட்டு நாளில் திரும்பி வந்துவிட வேண்டும்

என்றார் பாபா. பணமுடையாயிருப்பதால் போனால் உடனே திரும்பி வர முடியாதென்று பண்டிதர் ஆக்ஷேபித்ததற்கு, அப்படியானால் போகவே வேண்டாம் இங்கேயே யிரு என்றார் பாபா. ஊருக்குப் போகாமலிருக்கவும் முடியாது. போனால் எட்டு நாளில் திரும்பி வருவதும் முடியாது. இரண்டும் பண்டிதர் மனதிற்கு ஸமாதானமற்றதாகவே அவர் பாடு தர்ம சங்கடமாயிருந்தது. இவருடைய தவிப்பை யறிந்து கொண்ட பாபா நீ மிகுந்த கலக்க மடைந்திருக்கிறாய் போலிருக்கிறது, ஸரி. நீ போவதானால் போ. என்னாலானதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று சொல்லவும், இம்மட்டுமாவது தனக்கு அனுமதி கொடுத்தாரே என்ற ஸந்தோஷத்துடன் ஷிர்டியை விட்டுக் கிளம்பினார் பண்டிதர்.

வீட்டுக்குப்போக வேண்டு மென்று மிகுந்த ஆவலுடன் அவரிருந்ததால், நேராக அங்கே செல்வாரென்று தான் நாம் நினைக்கக்கூடும். ஆனால், என்ன காரணத்தினாலோ, அவர் மெதுவாக ஒரொரு இடமாகச் சென்று ஷிர்டிக்குப் பதினான்கு மைல் தூரத்திற்குமேல் போகாமல் அந்த பிரதேசத்திலேயே திரிந்து கொண்டிருந்தார். அவர் வந்த எட்டாம் நாளன்று, கோபர்கான் என்ற ஊரிலுள்ள ஒர் பிரும்மச்சாரி பூவாவுடன் அவரிருந்தபோது, நீ திரும்பவும் ஸ்ரீஸாயி பாபாவைப்போய் பார் என்றவர் இவரைக் கட்டாயப்படுத்தினார். அதற்கேற்றவாறு ஷிர்டிக்குச் செல்லும் சில யாத்ரீகர்கள் அங்கு வந்து சேரவே இந்தக் காசிநாதனையும் உங்களுடன் அழைத்துக் கொண்டு போங்களென்று அவர்களிடமும் பூவா சொன்னார். இன்னதென்றறிய முடியாத ஸாயியினுடைய ஏதோ ஒரு ஆகர்ஷண சக்தியானது காந்தம் இரும்பைக் கவர்வது போலப் பண்டிதரை ஷிர்டிக்கு இழுத்ததால்,

பண்டிதர் தான் கனவிலும் நினையாவிதமாக அவர்களு டன் புறப்பட்டுத் திரும்பவும் ஷிர்டிக்கே வந்து சேர்ந் தார். வந்து ஸாயிபாபாவிடம் சென்று வணங்கினதும், பாபா அவரைப் பார்த்து, ஓஹோ ! நீ வந்து விட்டாயா! இங்கிருந்து எப்போ புறப்பட்டுப் போனாய்? என்று கேட் டார்.

பண்டிதர்—வியாழக்கிழமை

பாபா—எத்தனை மணிக்கு?

பண்டிதர்—மூன்று மணிக்கு.

பாபா—இன்று என்ன கிழமை ?

பண்டிதர்—வியாழன்.

பாபா—இப்போ மணி என்ன ?

பண்டிதர்—மூன்று.

பாபா—அப்படியானால் நீ, இங்கிருந்துபோய் எத் தனை நாளாயிற்று ?

பண்டிதர்—ஒரு வாரம் இன்றுதான் எட்டாவது நாள்.

பாபா—நீ போகும்போது எட்டு நாளில் திரும்பி வர முடியாதென்று சொன்னையே ?

பண்டிதர்—ஆம். இதெல்லாம் எப்படி நடந்த தென்றே எனக்குத் தெரியவில்லை, எல்லாம் நீங்கள் செய்ததுதான்.

பாபா—இந்த எட்டுநாளும் நான் உன்னோடுதானிருந் தேன். ஸரி, இங்கிருக்கும் வாடா* வில்போய் தங்கி யிரு, என்று உத்தர விட்டார்.

எந்த விதத்திலும் பாபாவுக்கு மாறாகத் தன்னா லொன்றுஞ் செய்ய முடியாதென்றறிந்து கொண்ட காசி


*வாடா என்றது பாபாவைத் தரிசிக்க வருபவர்கள் தங்கும் காகாஸாஹேபினுடைய கட்டடம்.

நாதர் பாபாவுண்டிய கட்டளைப் படியே வாடாவில் போய் தங்கியிருந்தார். நீ போவதானால் போ. என்னாலானதை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று அவர் சொன்னதும், அதேபோல எட்டு நாளில் தன்னை யவரிடம் திரும்பி வரும்படிச் செய்ததும், தன்னாலொன்றும் செய்ய முடியாமல் தன்னுடைய மனோ வாக்குக் காயமனைத்தும், அவரிடம் பவ்யப் படுத்திக்கொண்ட அவருடைய அபார சக்தியையும் அப்போதான் உணர்ந்தார். ஆச்சரியமும் ஆனந்தமும் ஒருங்கே அவர் மனதைக் கவிந்து கொண்டது. தன்னை தடுத்தாட்கொள்ள வந்த கருணா நிதியே யவர் என்று எண்ணினார். அன்பும் பக்தியும் அவருடைய உள்ளத்தினின்று ஊற்றெடுத்துப் பெருகியது.

என்னாலோர் துரும்புமசைத்தெடுக்க முடியாதே
எல்லாஞ்செய் வல்லவனென் றெல்லாரும் புகலும்
நின்னாலிவ் வுலகிடைநான் வாழ்கின்றே னரசே
நின்னருள்பெற் றழியாத நிலையையடைந் திடவென்
றன்னாலோர் சுதந்திரமு மில்லைகண்டாய் நினது
ஸகல சுதந்திரத்தை யென்பாற் றயவுசெயல் வேண்டும்.
பின்னாலென் றிடிற் சிறிதும் தரித்திருக்க மாட்டேன்
பேராணை யுரைத்தேனென் பேராசை யிதுவே.

(திருவருட்பா)

என்ற திருமுறைபோலத் தன் செயலொன்றுமில்லை யென்று பணிந்து ஸ்ரீ பாபாவையும், அவருடைய முக்கிய சீடர்களைப் பற்றியும் தெரிந்து கொண்டும், அங்கே நடக்கும் வைபவங்களை யெல்லாம் கவனித்துக் கொண்டும், மற்ற சீடர்களைப் போலத்தானும் அவற்றில் கலந்து கொள்வது மாயிருந்தார்.



கண்டோபா கோவில் 85-ம் பக்கம் பார்க்க



51-ம் பக்கம் பார்க்க.

ஸ்ரீஸாய் பாபா

# அத்தியாயம்—9

## ஸ்ரீஸாய் பாபா

* தெய்வத் திருவருளே திருவடிவாய் வந்துலக
மையறப்படு முன்பே மனத்துறவு பெற்றூர்த்
கையகத்தே வாழ்ந்து களங்கமில்லா உள்ளத்தில்
அய்யனருள் ஒன்றே அறிந்தவராய், அற்புதமாம்
ஆதியந்த மில்லா வரும்பொருளைத் தன்னுள்ளே
பேதமறக் கண்டு அருட்பித்துடைய சிந்தையராய்,
எவ்வுயிர்க்கும் அன்புசெய்து எம்மதமும் ஸம்மதமென்
றெல்லார்க்குமவர் விரும்பு மெல்லாமாய்ப் பூரணித்து,
ஸத்தியமே யுருவான ஸாயிமகானென்றும், தன்
பக்தரைக் காக்கவந்த பரிவுடைய மூர்த்தியென்றும்,
தொன்மறைக்கும், எட்டாத சோதியென்றும், அன்பரெலாம்
சொன்மாலைசூட்டும் குருபரனைச், சொல்ல வென்றால்,
வாக்கு மனம் எட்டா அகண்டமன்றோ! மாயையிலே
ஏக்கமுறும் ஏழையதை யியம்பல் எளிதாமோ!

மக்கள் தெய்வம் உண்டென்பதை உணர்வில் அகலாமல் இருத்தி, அதன் சக்தியையும், மகிமையையும் அறிந்து, அஞ்ஞானத்திலிருந்து விடுபட்டு அகண்ட வெளியிலே இன்புற வேண்டியே பகவானுடைய அவதாரங்கள் ஏற்பட்டன. ஸர்வேசுவரன் எங்கும் இருக்கிறார். ஆனாலும், அவருடைய அவதாரங்களினாலே தனது ஸர்வ வியாபகத்தையும் வல்லமையையும் வெளிப்படுத்துகிறார். ஸத்புருஷர்களிடத்தில் பகவான் தன் அவதாரத்தைச் செய்கிறார் என்றும், அவர்களை யடைந்தவர்கள் பகவானையே அடைகிறார்கள் என்றும், முன்னோர்கள் மொழிந்திருக்கின்றனர். ஒரு ஆன்மா தனது பல பிறவி

களின் புண்ணிய வசத்தினுலே, முடிவிலே "எல்லாம் பரம் பொருள்" என்ற தத்துவத்தை யுணர்ந்த ஞானி யாக உற்பவிக்கும்போது அது ஈசனுடன் ஒன்று பட்டிருக்கும் அறிவுச் சுடராயிருத்தலினுல், அதன் மூலமாய்க் கடவுளுடைய மகிமையை எல்லாரும் அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கிறது. அந்த "ஞானி" என்பவனுக்கு பிறப்பு இறப்பு ஏதுமில்லை. அருமருந்து போன்ற இந்த "ஞானி"களுடைய தரிசனமே ஜனங்களுக்கு க்ஷேமத்தையும், பாக்கியத்தையும், விவேகத்தையும் தரும் வரப்ரசாதமாம். இந்த "ஞானி"களுடைய பரம்பரையிலே அவதரித்தவர்தான் ஸ்ரீஸாய் பாபா.

நிஜாம் ராஜ்யத்திலே பத்ரி என்னும் கிராமத்தில் ஓர் பிராமணக் குடும்பத்தில் 1856-ம் வருடத்தில் இவர் அவதரித்தார். மிக்க சிறு வயதிலேயே ஓர் மகம்மதிய பக்கீரிடம் அளிக்கப்பட்டு, பிறகு சேலு என்னும் கிராமத்தில் வேதிய ஸத்புருஷரான வேங்கடேச குருவிடம் பிரேமை மார்க்கத்தில் ஈடுபட்டு நற்குணங்களனைத்தும் பொருந்தி, நுட்பமான அறிவும் பெற்று, மேதாவிலாசமுள்ள ஓர் பால ஸந்யாஸியாய் விளங்கினர்.

அதிபால்யத்திலேயே, பதினறு வயது நிறைவதற்கு முன்பே, அமானுஷ சாத்தியமான, விந்தைகளையும், செயல்களையும் செய்து தன் அவதார விசேஷத்தை வெளிப்படுத்தவே, அந்த தேசத்தில் அவருடைய வல்லமையைக் கண்டு சிலர் பிரமிக்கலாயினர். தூப்கேடா என்ற ஊரிலிருக்கும் சான்பாய் படேல் என்பவனுடைய ஓர் குதிரை எங்கேயோ ஓடிப்போய் விட்டது. அவன் அதைத் தேடியலைந்து கொண்டிருப்பதைக் கண்ட ஸாய் அது இருக்கும் இடத்தை அடையாளத்துடன் சொன்னர். அவனை இவர்க்கு இதற்குமுன் தெரியாது. இவர் சொன்ன

அதே இடத்தில் அவன் குதிரையைக் கண்டு பிடித்தான். படேலுக்கு சந்தோஷம் தாங்காமல் திரும்பி ஸாயியிடம் வந்ததும் ஒரு க்ஷணத்துக்குள் ஸாய் பூமியைத்தட்டி ஓரிடத்திலிருந்து தண்ணீரும், ஓரிடத்திலிருந்து தணலும் உண்டாக்கி அவனுக்கு ஹுக்கா பிடிப்பதற்குக் கொடுத்தார். விந்தையின் மேல் விந்தையாக விளக்கும் இந்த பால்யத்துறவியின் அபாரசக்தியைக் கண்ட படேலுக்கு அவரைப் பிரிந்திருக்க முடியவில்லை. 1872-ம் வருஷத்தில் தன் சொந்தக்காரருள் நடந்த ஒரு கல்யாண வைபவத்தின் போது அவரைத் தன் விருந்தாளியாக ஷிர்டிக்கு அழைத்து வந்தார். அதிலிருந்து இந்த பால்யத்துறவி அவ்வூரிலேயே வசிக்கலானர். அங்கு அவரை எல்லாரும் "ஸாய்" என்று பெயரிட்டழைக்கலானர்கள். "ஸாய்" என்றால் "ஸாது" என்பதாம்.

அவருடைய ஊரோ, பேரோ, யாரும் அறிய முடியவில்லை. ஜனங்களிட்ட பெயராகிய "ஸாய்" என்னும் பெயர்தான் இன்றும் வழங்கி வருகிறது. அவருக்கு சாதிமத வித்தியாஸம் கிடையாது. பிறவியிலேயே துறவியான பரமஹம்ஸராகிய இவர் அந்த கிராமத்திலுள்ள மசூதியிலிருந்து கொண்டு, கந்தைகளையே ஆடையாகத் தரித்து, தெருக்களிலே பிச்சையெடுத்துண்டு ஓர் வேப்பமரத்தடியிலே உட்கார்ந்திருப்பார். தனக்குத்தானே பேசிக் கொள்வார். சில ஸமயம் கோபமாயும், அழுவதும் சிரிப்பதும், பலவிதமாயிருப்பார். என்ன, எதனால், என்று யாருக்கும் தெரியாது. பிருந்தாவனத்திலே கண்ணனைத் தேடி அவனுடைய அடிச்சுவடுகளைப் பின் பற்றியலைந்து கொண்டு தங்கள் மனை, மக்கள், பதி, முதலான யாவற்றையும் மறந்து கண்ணனைக் கண்டு, அவனுடைய மதுரமான குழலோசையினின்பத்திலே மூழ்கி, அவனு

டைய லீலா விநோதங்களில் மயங்கிய கோபியரைப் போலத் தனது அகலோகத்திலே பகவானுடன் ஒன்று பட்டு எல்லை காணாத இன்பத்திலே கிடந்த அவர், பார்வைக்குச் சித்தஸ்வாதீனமற்றவர் போலக் காணப்பட்டதால், எல்லாரும் அவரைப் பைத்தியக்காரப் பரதேசியாகவே நினைத்தனர். இருந்தாலும், அவருடைய உத்தம குணம் பொருந்திய ஹிருதயத்தை ஜனங்களறிந்து கொள்ளும்படி அது வெளிப்படாமலிருக்கவில்லை.

தானே மருந்துகளைச் செய்து நோயாளிகளுக்குக் கொடுத்து சௌக்யப் படுத்துவார். அவர்களுக்குப் பணிவிடை செய்வார். கிராமத்தில் ஸன்யாசிகளிருந்தால் அவர்களிடம் அடிக்கடி சென்று வேதாந்த விஷயங்களைப் பற்றிப் பேசுவார். ஸதாகாலமும் "ஹரி ஹரி" என்று பகவந் நாமம் ஜபித்து ஹரியின் ஸாக்ஷாத்காரமடைந்து அளவற்ற சக்தியுள்ளவராய், நோயாளிகளை, மருந்தில்லாமல் விபூதியைக் கொடுத்தே குணமாக்கலானார். ஒவ்வொருவரும் இரண்டு அல்லது மூன்று தாரங்கள் மணந்தும் புத்திரப் பேறில்லாமல் தவித்த மிராசுதாரரொருவரும் ஒரு இன்ஸ்பெக்டரும், அவருடைய ஆசீர்வாதத்தினாலே புத்திரப் பேற்றை யடைந்தனர். இவரைப் பைத்தியக்காரரென்றெண்ணிய கிராமத்தினர், மசூதியில் விளக்கேற்றுவதற்காக மாமூலாகக் கொடுத்து வரும் எண்ணெயை ஒரு தரம் கொடுக்காமலிருந்து விட்டனர். ஸ்ரீஸாய் அன்றிரவு தண்ணீரை விட்டே விளக்கெரிய வைத்தார்.

இவருடைய மகிமை பம்பாயில் வெகுதூரம் பரவவும் லக்ஷக்கணக்கான ஜனங்கள் இவரை வந்து தரிசிக்கலானார்கள். அவரைக்,

* கண்ணன் இவரென்பர் கார்மேகன் தன்னடியார்
நண்ணுஞ் சிவனென்பர் நடராஜன் தன்னடியார்
விடலன் என்பர் சிலர் நாருயணனென்பார்
விரும்பியதெல்லாம் அருளும் விக்கினேஸ்வர னென்பார்.
சொல்லுக்கடங்கா சொருப மொன்றதன் தன்
எல்லை "அவாலியா" என்பர் மகமதியர்.—அவர்
யாரார் நினைத்தபடி அவரவர்க்குத் தோன்றிடுவார்
அவர் மனதிலுள்ளதெலாம் அறிந்து செயலாற்றிடுவார்,
சொல்வார்துயர் கேட்டுத் தானுந்துய ருறுவார்
சொல்லருமை யிட்டவர்தந் துக்கமெலாம் போக்கிடுவார்

ஹிந்துக்கள் தங்கள் மந்திர முதலான சப்தங்களோடு முறைப்படி அவரைப் பூஜிப்பார். அவர் இந்துக்களை முஸ்லீ மாக்கவுமில்லை. முஸ்லீம்களை ஹிந்து வாக்கவு மில்லை. அவரவர் மதக் கோட்பாடுகளையே அனுசரிக்கச் செய்தார். தானிருந்த மசூதிக்கு "துவாரகமாயீ"* என்று பெயரிட்டு அதிலொரு துளசி மடத்தையும் ஸ்தா பித்தார். ஸ்ரீ பாகவதத்தை வாசிக்கச் செய்தார். ஓர் தெலுங்கப் பிராமணர், பாலும் இறக்க மில்லாமல் வியாதி யில் கிடந்த ஒரு குழந்தையை ஐந்து நிமிஷத்தில் பால் குடிக்கும்படி சௌக்யப்படுத்தி விட்டால் ஸாயியைத் தத் தரின் அவதாரமாகத் தான் ஒப்புக் கொள்வதாக சௌரி யம்பேசினுர். ஸ்ரீஸாய் அக்கணமே அந்தக் குழந்தையைப் பால் குடிக்கச் செய்து சௌக்யப் படுத்தவே அந்தப்பிராம ணர் ஸாயியை தத்தரே என்று வணங்கினுர். சிலர் அவரை பண்டரிபுர விடோபா என்றெண்ணினர். சிலர் கண் ணன் என்றும், கணபதி யென்றும், லக்ஷ்மி நாருயண னென்றும், அவரவர் மனம்போலக் கருதினர். முஸ்லீம் களோ அவரிடம் சென்று "அவாலியா" ("அபூர்வ

---

* என்ருல் "தாயாகிய துவாரகா"

மான" என்று பொருள்) என்று தொழுவார்கள். அவரோ பகவத்கீதையிலே கண்ணன்,

யோ யோ யாம் யாம் தநும் பக்த: ச்ரத்தயார்சிதும் இச்சதி ।
தஸ்ய தஸ்யாசலாம் ச்ரத்தாம் தாமேவ விதாம்யஹம் ॥

(பகவத் கீதை)

பொருள்

"எங்கெந்த பக்தன் எங்கெந்த வடிவத்தை நம்பிக்கையோடு பூஜிக்கக் கருதுகிருனே, அவனவனுக்கு நான் அதே நம்பிக்கையை அசையாததாகச் செய்கிறேன்."

என்று சொன்னதுபோல, எல்லார்க்கும் எல்லாமாயிருந்தார். அவரவர் நம்பிக்கையை அசைவற்றதாக்கி, அதற்கேற்ற அனுக்ரகத்தைச் செய்தார். ஸர்வமத பக்தர்களும், அவரை முக்காலமு முணர்ந்த முனிவரென்றும், பொய்யா மொழியரென்றும், எச்சமயத்திலும், எங்கும், தோன்றி, தனது விந்தைகளைச் செய்து அந்தர்தானமாகும் சத்தி வாய்ந்தவரென்றும், யாவுஞ் செய்ய வல்ல சித்தரென்றும், கருதினர்கள். அவர் பண அபேக்ஷையின்றி தன்னிடம் தஞ்சம் புகுந்தவர்களைத் தனது, சர்வசக்தி, ஸர்வ வியாபகம், ஸர்வ திருஷ்டி முதலான மகத்தான சக்தியைக் கொண்டு காத்து ரக்ஷித்தார். தன் கடைசி நாட்களில் தன்னிடம் வருபவர்களிடம் தக்ஷிணை யாசித்தார். அதுவும் அவர்க்காக வல்ல. அவர் யாசித்த ஒவ்வொரு ஸந்தர்ப்பமும் அதைக் கொண்டு ஒரு நன்மை செய்வதற்காகவே தான். பணத்தாசையினலல்ல. அவருடைய வாழ்க்கையின் இறுதி நாட்களாகிய பத்து வருடங்களில் தினந்தோறும் முந்நூறு ரூபாய்க்குக் குறையாமல் தக்ஷிணை வரும். அதில்

முக்காற் பாகத்தை பக்கீர்களுக்குக் கொடுத்து விடுவார். மீதியைத்தான் ஷிர்டிக்கு வந்த காலத்தில் தன்னை யாதரித்த பாயிஜாபாயி யுடைய குமாரன் தாதியா படேல் என்பவருக்குக் கொடுத்து வந்தார். சில சமயங்களில் தன்னிடம் வருபவர்க்குத் தங்க வசதிக்கும் சாப்பாட்டிற்கும் செலவழிப்பார். ஒவ்வொரு இரவிலும் காலையிலும் தம்பிடியும் கையிலில்லாத ஏழை பக்கீரியாகவே யிருப்பார். பணம் ஏராளமாய் வந்து குவிந்த பகல்களிலும் தான்போய் பிச்சை யெடுத்தே புசிப்பார். அபார மகிமையும் மதிப்பும் வாய்ந்து ஜனங்கள் பிரத்தியக்ஷ தெய்வ மென்று கொண்டாடும்படி யிருந்தும் அகம்பாவம் என்பது ஒரு போதும் அவரை யணுகவில்லை. ஆனால் தைரியமாகவும், ஒருவர்க்கும் கட்டுப்படாதவர்போலு மிருப்பார். ரவினியூ கமிஷன ரொருவர் தன் மனைவியோடும், ஜில்லாக் கலெக்டருடனும், மற்றுமுள்ள அதிகாரிகள் சிலருடனும் இவருடைய சக்தியை அறிய ஆவல் கொண்டு, இவரிருப்பிடத்திற்கு வந்தனர். அவர்களை சாவடியில் காத்திருக்கும்படிச் செய்து விட்டு இவர் வெளியே பிச்சை யெடுக்கப் போய் விட்டார். அவர்கள் வெகுநேரம் காத்திருக்க சம்மதியாமல் திரும்பிப் போய் விட்டார்கள். அவர்கள் தன்னைத்தேடி வந்ததனால் சந்தோஷமோ, திரும்பிப் போனதால், மனத்தளர்வோ ஏதும் அவருக்கில்லை. துறவிக்கு வேந்தனும் துரும் பென்பது, அவரிடம் நிதரிசனமாயிருந்தது. அவரை மனோவாக்குக் கெட்டாத அபூர்வ மகிமையுள்ளவர் என்று சொல்லக்கூடுமே யன்றி அவர் மகிமை இன்னதென எடுத்துரைக்க வியலாது. அவரை நினைப்பார் வாழ்க்கையிலே இன்றும் அவரால் விளையும் அற்புதங்கள் அனந்த முண்டு. அவருடைய சரித்திரத்தையும் அவர்

விளைத்திருக்கும் அற்புதங்களையும் ஜனங்கள் அறிய வேண்டிய தவசியம். இத்தகைய மகான்களை யீன்ற பாரத புண்ணிய பூமியிலே நாமும் பிறக்கப் புண்ணியம் செய்திருக்கவேண்டு மல்லவா?

அவருடைய சீடரும், அமராவதி வாசியும் பூர்வம் கவுன்ஸில் ஆப் ஸ்டேட் அங்கத்தினருமாயிருந்த திவான் பகதூர் G. S. கபார்டே என்பவர் "ஸ்ரீஸாய் பாபா வானவர் பூவுலகிலே அவதரித்த தெய்வம்" என்று சொல்வதைப் போலவே அவருடைய கணக்கற்ற அடியார்களும் சொல்லக்கூடும் என்பதற் கையமில்லை.

* மாநிலஞ் செழிக்கவந்த மாதவப்பரிதி யென்கோ!
தானெனுஞ் சதுரறுத்த சத்தியத்துறவி யென்கோ?
காணுமெப் பொருளும்நல்குங் கற்பகவிருக்ஷ மென்கோ!
ஞானநற்சுடர் கொளுத்தும் நாயகன் ஸாயிதன்னை.

## அத்தியாயம்—10

## குருவும், சீடனும்

* அன்பை வளர்த்துத்தனை யாட்கொள்ளுந் தெய்வத்தின்
இன்ப மலரடிக்கீழ் இன்புற்று ரம்மானை.

ஸ்ரீ ஸாயி, பண்டிதரிடம் "அந்த வீட்டில் தங்கியிரு" என்றுமட்டும் சொன்னாரே யன்றி, எதற்காக எப்படி நடந்து கொள்ள வேண்டும், என்று எதுவும் சொல்ல வில்லை. அவருடைய கருத்து மறை பொருளா யிருந்தது. அவர் எப்போதுமே யாருக்காவது ஏதாவது சொல்ல வேண்டுமானால் அது அவனுக்கு மாத்திரம் தெரியும்படி ஜாடையாகத்தான் சொல்வார். என்ன,

ஏன், என்று எவரும் அந்த தெய்வீகப் புருஷனைக் கேட்கத் துணிய மாட்டார்கள்.

குருவுடைய பழக்க வழக்கங்களையும், அடியார்களுடைய அனுபவங்களையும் பற்றி அங்குள்ள தொண்டர்களிடம் பண்டிதர் ஆவலுடன் விசாரிப்பார். அவர்களனைவரும் ஸாயியின் ஒவ்வொரு அமிசமும் பகவானுடைய வடிவேயென்றெண்ணி அவருடைய சொல்லை வேதவாக்காக மதித்துத் தட்டாமல் நடப்பதைக் கண்டு, அந்த தெய்வீகச் சக்திக்கு வசப்பட்டுத் தானும் அவர்களைப் போலவே நடந்து கொள்ளலானார். இருந்தாலும் அதிக வயதானவரல்ல வாதலால், அடிக்கடி மாறுன எண்ணங்களும் அவர் மனதில் தோன்றுவதுண்டு. ஆனால், ஸாயியினுடைய தெய்வாம்சமும், மட்டற்ற அன்பும், சக்தியும், பக்தியும், இவர்க்கு மனசாந்தியை யளித்து, ஞானத்தைப் புகட்டி ஜீவபிரகாசத்தைக் கொடுத்து அந்நிலையிலேயே ஸ்திரமாக வைத்தது.

தன்னை யடைந்த சீடனுக்குத் தன் குருவினிடம் உன்னதமான பக்தியையும் வணக்கத்தையும் உண்டாக்கித் தாயை விழையுங் கன்றுபோலப் பெருகும் பரிசுத்தமான அன்பை அவன் ஹ்ருதயத்தில் தழைக்கச் செய்து அதை அசையாமற் செய்வதே ஸ்ரீஸாயியின் உபதேசத்தின் முதலாவது ரஹஸ்யம். அவரிடம் அன்பு கொண்டவர்கள் கடவுளிடமே அன்பு கொண்டவர்களாவதுடன் அவர் தங்களிடம் காட்டும், சிரத்தையையும், அன்பையும் எண்ணிப் பூரித்து அவரே தாங்கள் வழிபடுந் தெய்வமென்று வணங்குகின்றனர்.

ஒரு நாள் ஸ்ரீஸாயி தன்னைச் சூழ்ந்திருக்கும் பக்தர்களை நோக்கி, "நான் ஒரு நாள் ஓர் கர்ப்பிணியைக் கண்டேன். அவள் வயிறு மிகுந்த பருமனாகவும் கைகால்

களெல்லாம் மிக மெலிந்தும், நடக்க முடியாமல் கோலை யூன்றி நடந்து கொண்டும் தனியாக கஷ்டப்பட்டுக் கொண்டுமிருந்தாள். நான் அவளிடம், அவளை எனக்குத் தெரியுமென்றும், வென்னீர் சாப்பிட்டால் இந்த வேதனை களெல்லாம் நீங்கி சுகமாய் பிரஸவிப்பாள் என்றும் சொன்னேன். ஆனல் அவள் என் சொல்லைக் கேளாமல் ஒடையில் தண்ணீர் குடிக்கப் போனுள். எனக்கு, பாவம்! அவள் அநியாயமாய் இறந்து போவதன்றி அவள் வயிற்றி லிருக்கும் குழந்தைகளும் வீணுக மடிந்துவிடுமே எனக் கவலையாயிருந்ததினுல், பக்கத்திலிருந்த கிராமத்திற்கு வழிகாட்டி அங்கே போய் வென்னீர் வாங்கிக் குடிக்கச் சொன்னேன். அன்று முதல் அவள் வென்னீரே குடிக்கி ருள். இப்போது அவள் செளக்யமாயிருக்கிருள். இது வாயுவினுல் வரும் உபத்திரவந்தான்.'' என்று சொன் ஞர். இதைச் சொல்லும்போது காசிநாதர் இருக்கும் திக்கில் அடிக்கடி கையைக் காண்பித்தும் பார்த்துக் கொண்டும் சொன்னதால், மற்றவர்களெல்லாரும் ஸாதா ரணமாய்க் கேட்ட போதிலும், காசிநாதர் மட்டும் இதன் உட்கருத்தை நொடியிலறிந்து கொண்டார். ஆஹா! என்ன ஆச்சரியம்! ராகூரியில் வந்து என்னை வென்னீ ரருந்தச் சொன்ன முதியோன் இவர்தானே! இவரே 156 மைல்களுக் கப்பாலுள்ள ஜெஜூரியில் தோன்றி மீண்டும் என்னை வென்னீரருந்தும்படி வற்புறுத்தினரோ! வைத்தியரும் யோகிகளும் கைவிட்ட எனது நோயை இவரே இவ்விதம் குணமாக்கினர் போலும்! தானே வலிய வந்து என்னைக் குளிர்ந்த ஜலம் குடிக்காதே வென் னீர்குடி என்று என் விஷயத்தில் மட்டற்ற சிரத்தை யோடு சொல்ல, அவர் எவ்வளவு கருணையுள்ளவரா யிருக்க வேண்டும்! ஸ்ரீஸாயியினுடைய அன்புக்கு நான்

எவ்வளவு கடமைப் பட்டிருக்கிறேன். ஏன் இவ்வளவு கஷ்டம் எனக்காகப் படுகிறார். என்றெண்ணி காசிநாதர் உள்ள முருகினர்.

* சென்று சென்றலைந்துமே திரிந்த ஏழை யெந்தனை
யன்றுவந்து நன்றுகூறித் துன்றுநோ யகற்றியே
யென்றனுவி யைம்புலன் அனைத்து முன்ன தாகவே
யுன்றனிற் கலந்துகொண்ட உண்மையா னுணர்வனே!

என்று ஆற்றுமைக் கொண்டார்.

இவருடைய சந்தேகத்தை நிவர்த்திக்க ஸ்ரீஸாயி ஒரு நாள் இவரிடம், "ருணனுபந்தம் நம்மிருவருக்கும் இருக்கிறது. ஆயிரக்கணக்கான வருஷகாலம் நம் குடும்பங்களில் ஒன்றுக் கொன்று ஸம்பந்த மிருப்பதால் உனக்கும் எனக்கும் பேதமில்லை." என்றார்.

இவ்விதம் சொன்ன ஸாயியின், சொந்தமும், அன்பும் கனிந்த சொற்களைக் கேட்ட பண்டிதர்க்கு மனங்கசிந்து கண்களில் நீர் பெருகியது. பின்னும் ஸாயி கூறினதாவது:—ஒரு கிணற்றினருகிலிருந்த விருக்ஷத்தின் மேல் பக்ஷிகளிரண்டு உட்கார்ந்திருந்தன. அதிலொன்று கிணற்றில் தவறி விழுந்து மூழ்க விருக்கும்போது அதைக்கண்ட அதன் சிநேகப் பறவை அதைக் காப்பாற்றுவதற்காகத் தண்ணீரிற் குதித்தது. முதலில் விழுந்த பறவை உயிர் தப்பியது ஆனல் அதைக் காப்பாற்ற வந்தபறவை, தன் பிழைப்புக்கே கேடு வருமளவு பிரயாசப் பட்டது. என்று கூடார்த்தமாகச் சொல்லி வந்தவர் அத்துடன் நிறுத்தி விட்டார். ஆனல் இதிலிருந்து, காசி நாதருக்கும் தனக்கும் உள்ள ஸம்பந்தம், அவர் முன்னோர்களிடையே மேற் கூறிய ஆபத்தும் ஸஹாயமும் ஏற்பட்டதென்றே அல்லது அவர்களுடைய முற்பிறப்பில் அவ்

விதமான கர்மஸம்பந்தத்தை யடைந்து இப்பிறப்பிலும் அதன் தொடர்பினுல் பிணைக்கப் பட்டிருப்பதாகவோ அர்த்தம் செய்து கொள்ளத் தக்கதாயிருந்தது. இந்த ஸம்பந்தமே பூர்கட் குகையிலும் ஸோமநாதராலயத்திலும் காசிநாதரைக் காப்பற்றி யிருக்கலாம்.

தன் குருவுடைய சிரேஷ்டமான வார்த்தைகளையும், தன் மனதில் எழும் சங்கைகளை யெல்லாம் அவர் எவ்விதமாகவோ அறிந்து அதற்கு ஸமாதானம் கூறி நிவர்த்திப்பதையும், தன்னிடம் அவர் வைத்துள்ள வாஞ்சையையும் சொந்தத்தையும் கண்டுகாசிநாதருள்ளம் பாகாயிளகியது. அக்கணமே அவர் அடியார்தம் அன்புக்கடிமையானுர். மாற்ற வொணுதனதையும் மாற்றுவதும், மானிடப் பிறவியை கரையேற்றுவதும் இறைவன் அருளை எளிதில் பெறச்செய்ய வல்லதும் அன்பெனும் ஒன்றே. எங்கும் பரந்துள்ள ஸர்வேசுவரனை நம்முடன் பிணைக்கக் கூடியது அன்பென்னும் பாசமே. அன்புக்கடிமையான காசிநாதருடைய மனுேதிட மெல்லாம் சிதறிப் போயிற்று. இலே சாய்போன அந்த ஹ்ருதயத்தில் தனது குருவின் அன்பைப் பற்றின ஆனந்தமும் அவரிடம் தனக்குப் பெருகும் அன்பின் வெள்ளமும் நிறைந்து திணறினுர்.

* அருள்வடிவாகி வந்தென் னகத்தும் புறத்தும் நின்ற
இருளைக் களைந்தாரடி—கிளியே
இன்ப மளித்தாரடி.
வம்புக்கலையும் பொல்லா மனமெனும் பேயையவர்
அன்புக்கலைய வென்றே—கிளியே
அருள் தொட்டழித்தாரடி.
ஓடியுழலுமென்தன் உள்ளத்தை தன் பதத்தில்
கூடிப் பிணைத்தாரடி—கிளியே
குற்ற மொழித்தாரடி.
அன்னையினுந்தயவோ டென்னையழைத்து அவர்

சொன்னதை நினைத்திடுங்கால்—கிளியே
சோகம் பெருகுதடி.
மாளாப் பிறப்பறுக்கும் மாதவர்தம் பொன்னடிக்கே
ஆளாய்க் கிடப்பதல்லால்—கிளியே
ஆறுதலில்லையடி.

## அத்தியாயம்—II

## தேசிகன் தந்த செம்பொன் சாஸனம்

கட்டுற்ற பிறவிக் கலிதீரக் கண்பார்த்த
மட்டற்ற கருணை மழையே குருமணியே.

ஸ்ரீ ஸாயிக்கும் காசிநாதருக்கும் பூர்வஸம்பந்த வசமாகப் பரஸ்பரம் மனம் ஒன்றுபடலாயிற்று. சீடனுடைய உள்ள முழுவதையும் தன் அன்பினால் வசீகரித்துத் தன்னுடையதாக்கி விட்டாரவர். குருவினுடைய முதற்கடமை அதுதானே. காசிநாதரைச் சிறுகச் சிறுகத் தன்னிடம் ஐக்யப்படுத்தும் விஷயத்தில் அவர் முயற்சிக்கும் போது அதற்கு விக்னங்களும் உண்டாயின. ஸாயி பண்டிதரிடம் விசேஷ அன்பு காட்டுவதைக்காண அவருடைய பழய பக்தர்கள் பொறாமையினாற் புழுங்கி, பண்டிதருடைய தனிப்போக்கான வழியையே காரணமாய்க் கொண்டு அவரை துன்புறுத்தலானார்கள். பண்டிதர்க்கு ஷிர்டியின் ஒட்டல் சாப்பாடு ஒத்துக்கொள்ளவில்லை. தவிர அவர் விவகார பந்தங்களையும் விட்டுவிலக விரும்பினதால், கிராமத்திற்குச் சற்று தூரத்திலுள்ள இடிந்த கோவிலொன்றில் வசித்துக்கொண்டு, ஸாயியையும் முக்ய சீடர்களைப்பற்றிப் பேசும்போது தவிர மற்ற நேரங்களி

லதிகம் பேசாமலும் ஏகாந்தமாகவும் இருந்துகொண்டிருந்தார்.

இவர் மறைவாகவும் தனித்தும் வசிப்பதைக் கண்டு அவ்வூரார் இவரை ராஜதுரோகியோ அல்லது துப்பறிபவரோ எனச் சந்தேகித்து போலீஸாரிடம் கூற, அவர்கள் இவரை உண்மையைச் சொல்லாவிடில் சிறையிலிடுவோம் என்று பயமுறுத்தினர்கள். பண்டிதர்க்கு இந்த தொந்தரவைக் காட்டிலும் ஊருக்குப் போய்விடலாமென்று தோன்றவே, ஸாயியின் முக்கியசீடரும், பள்ளிக்கூட உபாத்தியாயரா யிருந்தவருமான மாதவராவ் தேசபாண்டே, என்பவரிடம் தான் ஊருக்குப் போவதற்கு ஸாயியிடம் உத்தரவு வாங்கித்தரும்படி, பலமுறை கேட்டார். ஆனல் ஸாயி அதற்கனுமதிப்பவராயில்லை. "பிறருடைய தொந்தரவைப் பொருட்படுத்தாதே, தைரியமாயிரு" என்றார். இதனல் பண்டிதர்க்குக் கொஞ்சம் தைரியம் வந்ததானாலும், அவருக்கு, சொந்த ஊருக்குப் போகவேண்டும், வீட்டோடு சுகஜீவியாய் காலங்கழிக்க வேண்டும் என்ற ஆவலே மிகுந்திருந்ததால் ஸதா அதே நினைவாய் ஸாயியிடம் உத்திரவு கேட்டுக்கொண்டேயிருந்தார்.

ஸாயியோ "கணக்கெல்லாம் தீரட்டுமப்பா! போகலாம்" என்பார். என்ன கணக்குகள்? என்று கேட்டால் "என்னை யண்டினவர்கள் கணக்கை நான் தீர்க்கவேண்டுமல்லவா!" என்று மறைபொருளாய்ச் சொல்வார். சில வாரங்கட்குப்பின், "இன்னும் இரண்டு அல்லது நான்கு வண்டிபாரம் மீதியிருக்கிறது. அதைத்தவிர பாக்கி தீர்ந்துவிட்டது" என்றார். பின்னும் சிலநாட்கள் சென்றபின் பண்டிதரின்னும் நான்கு வருஷங்கள் ஷிர்டியிலிருக்கவேண்டும் என்றார். அவர் பண்டிதரை அனுப்பும் எண்ண

முள்ளவராகவே காணப்படவில்லை. சொந்த வீட்டையும் ஊரையும் விட்டு இந்த ஷிர்டியில் இன்னும் நான்கு வருஷ காலம் ஸந்தோஷமில்லாமல் நான் எப்படிக் கழிப்பே னென்று பண்டிதர் மனங்கலங்கி அழலானார். இன்னும் நான்குவருடங்களிருந்தால் உனக்கு பகவானுடைய பூர்ண மான அருள் கிடைக்குமே! என்று அவரைத் தேற்றினார் ஸாயி. நான்கு வருடங்களிங்கு என்ன செய்யவேண்டும்? எனக்கேட்டார் மாதவராவ். ஒன்றும் செய்யவேண்டாம் அவன் சும்மா விடோபா கோவிலில் உட்கார்ந்திருக்கட் டும் போதும் என்றார் குரு. பண்டிதரைப்பார்த்து, ஒரு வரையும் கவனியாதே. உன்வருங்காலம் திவ்யமாயிருக் கும், வேறு யார்க்கும் அம்மாதிரி யிராது என்று சொன் னதுந்தவிர அங்கு கூடியிருந்த மற்றவர்களையும் பார்த்து, "அவ்னுடைய மகிமை அத்தகையது. உலகமனைத்தும் தராசின் ஒருபுறமானால் அவன் ஒருவன் ஒரு பக்கத்திற் கீடானவன். ரொட்டியும் காய்கறிகளையும் புசித்துக் கொண்டு அவன் சும்மாயிருக்கட்டும், மற்றவைகளை நான் முடித்துவைப்பேன்'' என்றார்.

அவருடைய உண்மையும் உறுதியும் நிறைந்த இந்த சொற்கள் அவர் தன்னை விடமாட்டாரென்பதைப் பண்டி தர்க்குத் தெளிவாக்கியதுடன், பண்டிதரை ஸாயி, அன் புடனும், விசேஷமாகவும், பாராட்டிப் பேசுவதைக் கண்ட அங்குள்ள பழய சீடர்களுக்கு ஆத்திரமும், கோபமும், மிகுந்து அவர்களுடைய பொறுமைத் தீ கொழுந்து விட்டெரியலாயிற்று. பண்டிதரை மாத்திரம் பாபா சிலாகித்துப் பேசுவதை அவர்களால் சகிக்க முடிய வில்லை. அவர்களில், பிரபு வகுப்பினனும் பம்பாயிலிருந்து அங்கு வந்தவனுமான ஒருவன் ஆத்திரத்துடன் ஸாயி யைப்பார்த்து,

"நல்லது பாபா! நாங்கள் உமது காலடியில் எத்தனை நாட்களாய்க் கிடக்கிறோம்! எங்களைப்பற்றி நீர் ஒன்றும் சொல்லாமல், அவன் புதிதாய் வந்தவன், அவனைப்பற்றி யாருக்கும் ஒன்றும் தெரியாது. அவனுக்கு மாத்திரம் நான்கு வருடங்களில் அருள் புரிவதாய்ச் சொல்கிறீரே! அவனை உலகத்திற்கே ஸமானமென்கிறீர்! எங்கள் வாணாளையெல்லாம் நாங்கள் உம்மிடம் வீணுக்கா கழித்தோம்! உமது அருளை அவனுக்கு தாம்பிரசாஸனத்திலெழுதிக் கொடுக்கப்போகிறீரா?" என்று கத்தினான்.

ஸாயி இதற்கெல்லாம் பயந்தவராயில்லை. முடிவாகப் பேசினவனை, நன்றாகத் திரும்பிப்பார்த்து "நான் பொய் சொல்வதாக நினைக்கிறாயா? இது என்ன பொய்யர்களுக் கேற்பட்டிருக்கிற மடமா? நான் சொன்னாற் சொன்னது தான். என்னிடமுள்ளதெல்லாம் அவனுக்குக் கொடுத்து விட்டேன். நீ தாம்பிரசாஸனமா என்று கேட்கிறாயே! தாம்பிரசாஸனமென்ன! தங்க சாஸனமே கொடுத்து விட்டேன். நீ என்னவேண்டுமானாலும் சொல்" என்றார். காசிநாதரையும் பார்த்து "எது உத்தமம்? தாம்பிர சாஸனமா? தங்கசாஸனமா?" என்று கேட்டார். அவருக்கோ இங்கே இன்னும் நான்குவருஷங்கள் இருக்க வேண்டுமே என்ற விசாரத்தில் மதிமயங்கிக்கிடந்ததால் அவரதற்கு ஒன்றும் பதில் சொல்லத்தெரியாமல் "இதைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியவில்லை" என்று தழ தழத்துச் சொன்னார்.

அதற்கு ஸாயி-"தாம்பிரசாஸனம் துருப்பிடிக்கும், தங்கமோ அழியாது. எவ்வளவு உபயோகித்தாலும் ஒரேமாதிரி யிருக்கும், நீயோ பரிசுத்தமான தங்கத்திற்குச் சமானமானவன். எங்கிருந்தாலும் நீயே பகவான்,

உண்மையாகவே இப்போ உன்கையில் தங்கசாஸனம் கொடுக்கப்பட்டிருக்கிற தென்றறிந்துகொள், உன்முன்னோர்களும் என் முன்னோர்களும் பரஸ்பரம் கடமைப்பட்டிருந்தார்கள். நீ இனி அடிக்கடி யென்னிடம் வரவேண்டியதில்லை. எப்போதாவது வந்தால் போதும், நானும் உன்னுடன் அதிகம் பேசமாட்டேன். இன்னும் நான்கு வருடங்களில் உனக்கு மஹாளஸாபதியின் கிருபையுண்டாகி நீ எல்லாவற்றையும் அறிவாய்'' என்றார்.

காசிநாதர்:—“பாபா! நீங்கள் இவ்வளவு பெருஞ் சுமையை என்மீது வைக்கிறீர்கள்! நான் இதைத்தாங்க சிறிதும் சக்தியற்றவன். எனக்கு அப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று ஆசையில்லை. நான் ஊருக்குப் போகிறேன். எனக்கு உத்திரவு தாருங்கள்'' என்றார்.

ஸாயி:—“அதையெல்லாம் இப்போ நினைக்காதே. நீ யார் எப்படிப்பட்டவனென்று எனக்கு நன்றாய்த் தெரியும். என்னை யாரென்று நீ அறியாய். நீ என்னை யறியாவிட்டாலும், உன்னை முற்றும் நானறிவேன். நீ செய்த நன்மை தீமை யனைத்தும் நான் செய்ததே. பல வருடங்களாக உன்னைப்பற்றியே நான் கவனித்துக் கொண்டு இருக்கும்போது நீ இப்போது ஊருக்குப்போவதாவது! வருவதாவது! உன்னால் ஒன்றும் முடியாவிட்டால் “சும்மாஇரு'' என்று சொல்லி, தன் மார்பைத் தட்டிக்கொண்டு “நான் உன்னுடனேயே இருக்கிறேன். உனக்குப் பிரயாணச் சீட்டு வாங்கித்தந்து வண்டியில் இடம் பார்த்துக்கொடுத்து நீ போகவேண்டிய இடத்திற்குப்போய்ச் சேரும்படி செய்கிறேன்'' என்று சொன்னார்.

இவைகளெல்லாங் கேட்ட பம்பாய் பிரபு—“பாபா இதென்ன உங்களிடமிருப்ப தெல்லாவற்றையும் இவனுக்கே கொடுத்து விட்டீரே!'' என்றான்.

ஸ்ரீஸாயி.—"ஆமாம், எல்லாம் கொடுத்தாயிற்று, அவன் நல்லவனோ கெட்டவனோ எப்படியிருந்தாலும் அவன் என்னுடையவன். எனக்கும் அவனுக்கும் பேதமே இல்லை. அவனைப்பற்றிய பொறுப்பனைத்தும் இப்போது என்னைச் சேர்ந்தவை." என்றார்.

இவ்விதமாக குருவின் ஸத்யவாக்கினின்று சொரிந்த அருட்சொற்கள் பண்டிதருடைய மனதை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து தனக்கு இனி கிரகஸ்தாசிரமமென்பது இல்லை யென்றும் ஸாயியின் பதவிக்குத்தானே உரியவர் என்பதையும் நிச்சயமாயறிந்து கொண்டார். குருசொன்ன ஒவ்வொரு வாக்கியங்களின் கருத்தும் அற்புதமானவை. "எல்லாம் என்பொறுப்பு" என்றதில் தன்னை யடைந்தவனைக்காக்கும் கடமையைச் சொல்லும் மகத்தான உண்மையும், "நீ செய்ததெல்லாம் நான் செய்ததே" என்றதில், குரு சிஷ்ய பேதமின்றி நோக்கும் ஸர்வஸமதிருஷ்டியும், "நீ போவதேது வருவதேது என்றதில்," இறப்பும் பிறப்புமற்றவனாகினை என்னும்ஆசீர்வாதமும், பொதிந்து. "சும்மாயிரு" என்ற உபதேசத்தையும் சீடனக்குச் சொல்லி யருளியதாயிருந்தது. ஸத்குருவுடைய பூஜிதமான இம்மொழிகள், காசிநாதருடைய மானிட வாழ்வைக் களைந்து பகவத் சொரூபமாக்கும் ஆசீர்வாதமும் ஞானோபதேசமுமாயின:

ஈசனைவிடைமேல் கண்டும் எய்திடா ஞானம் அந்நாள்
ஆசகல் குரவன் நாட்டம் அமைந்ததோர் கிழிநல்கிற்று
பாசநோய் தவிர்ந்து முக்திப் பயன்பெற முயல்வார் மட்டில்
தேசவிர் தெய்வந்தன்னில் தேசிகன் சிறந்தோனன்றோ!

(பட்டினத்தார் புராணம்)

பட்டினத்தாருடைய சரித்திரங்களில் இவ்வரலாறு வேறுவிதமாயிருப்பினும் பட்டினத்தார் புராணமென்ற

நூலிலிது காணப்படுகின்றது, அதாவது:—பட்டினத்தார், அயல் நாடு சென்று வாணிபத்தில் நஷ்டமுற்றுத் திரும்பிய மைந்தனாகிய மருதவாணனைச் சினந்து அறைக்குள்ளிட்டுப் பூட்டிவிடவும், தாயானவள் வந்த குழந்தை பசித்திருப்பானே என் வருந்தி அவராறியாமல் வந்து அறையின் பூட்டைத் தொடவே அந்த உத்தமியின் அருளினால் கதவு தானே திறந்துகொண்டது. உள்ளே மங்கையோர் பாகனும் விடைமேலமர்ந்து சோதியாய் விளங்கிய ஈசுவரனைக் கண்டு தனது நாயகனையும் அழைத்துக் காண்பித்து இருவரும் வணங்கினர். ஈசனைத் தரிசித்தும் பட்டினத்தாருக்கு பொருளாசை முற்றும் போகவில்லையென்றும் அவருக்கு நல்லுபதேசம் செய்துவந்த பாணன் என்பவன் இவரிடம் வாங்கிய கடனுக்கீடாக தந்துபோன கந்தை முடிப்பிலிருந்த "காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே" என்ற ஓலையையும் காதற்றவூசியையும் பார்த்தவளவிலே துறவு பெற்றார் என்றும் சொல்லப்படுகிறது. கடவுளை தரிசித்தும் வராதிருந்த ஞானம் குருவினுடைய சிறு பொருளினாலேற்பட்டமையால் "தேசவிர் தெய்வத்தினுந் தேசிகன் சிறந்தோ" னென்கிறார். இவ்விதமே தன்னுள்ளிருந்தும் தானறியாதிருந்த முடிவை "ஸாயி" யென்னும் விமலனால் விளக்கிக் காட்டப் பெற்றார் பண்டிதர் ஸாயியைப்போலத் தானும் தன்னிடம் வருபவர்கட்கு சித்தியும் முக்தியும் தரவல்ல சக்தியு முடையவரானார். ஸ்ரீஸாயி அவரை ஸத்புருஷனுக்குவதாக உறுதி கூறினார். பண்டிதரிடம் அதற்கு வேண்டிய சில அம்சங்களேற்பட வேண்டியிருந்தது. ஆனாலும் அவர் ஸாதுவாக வேண்டுமென்பது நிச்சயமாய்விட்டது.

ஆனால், பண்டிதர் குரு தன்னையே மேலாக நினைக்க வேண்டுமென்று கருதினாரா? இல்லை. தங்கசாஸனமும்

அவர் கேட்கவில்லை. ஸாயியும் எல்லாரிடமும் ஒரே விதமான கருணை காட்டுபவர்தான். ஸூர்யனுடைய காந்தி எங்கும் ஒன்றுபோலத்தான் விழுகிறது. ஆனால் நிர்மலமான கண்ணாடியும் ஜலமுமே அதை பிரதி பலிக்கச் செய்கிறது. அதுபோல பரஞ்சோதி எங்கும் நிறைந்திருந்தும், பரிசுத்த ஸாது மனமே அதை பிரதி பலிக்கச் செய்கிறது. குருவுடைய அன்பும் இவ்விதமே எல்லாரிடத்தும் ஸமமாயிருந்தும், மற்றோரைப்போலப் பொறாமையில்லாமலும், பேதமற்ற பெருங்குணமும், உபதேசத்திற்கருகமான பரிசுத்த உள்ளமும் உடைய பண்டிதரிடமே பிரதிபலித்தது. தவிர அவருடைய பூர்வ புண்ணிய விசேஷத்தாலும், ஸாயியே இவரை வலிய தன்னடிமை கொண்டதாலும், அது விகசிக்கலாயிற்று.

முன்னே 'சாயம் நன்றாயிருக்கிறது' என்று பண்டிதர்க்கு நாராயண மகராஜ் சொன்னதன் அர்த்தம் ஸாயியின் உறுதிமொழிகளால் இப்பொழுது விளங்கிவிட்டது. "நீ எங்கிருந்தாலும் பகவான்" 'நீ யாவற்றையு மறிவாய்' என்ற ஸாயியின் திருவாக்கு மிகவும் அருமையானது. ஸாமான்ய வேதாந்தி மற்றவரை சொல்வதுபோன்றதல்ல. பண்டிதர் பகவதம்சமுள்ளவர், பூஜிக்கத்தக்கவர், எல்லாருக்கும் அருளவந்தவர், என்று சொன்னதாகும். எப்படி அவர் பூஜிக்கத்தக்கவரானார் என்றால், ஆற்றின் பிரவாகத்திலொதுக்கப்பட்ட ஸாமான்யமான கல்லைப் பொறுக்கி, அதைச் செதுக்கிச் சித்திரித்து நம் தேசத்தில் அதை விக்கிரகமென வைத்துப் பூசித்து வணங்கி கோரிய மனோபீஷ்டங்களை யடையவில்லையா! அதுபோலக் காலமெனும் ஆற்றினாற்றள்ளப்பட்ட காசிநாதரை ஸாயியென்னும் சிற்பியானவர் நான்கு வருடத்தில் சித்திரித்து பகவத் சொரூபமாக்கக் கருணை வாக்களித்தார்.

தன்னால் கூடியமட்டும் பண்டிதர் ஜன சமூகத்தை விட்டு விலகி நித்யகர்மானுஷ்டானங்களிலும், பகவத் கீதா விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணத்திலும் காலங் கழித்தார். ராமகீதை அத்யாத்ம ராமாயணம் முதலிய வைகளையும் அடிக்கடி படிப்பார். பாலியத்திலிருந்தே, சாஸ்திர நம்பிக்கையும் ஸத்வித்தையின்மீதாவலும் இவ ருக்கிருந்தது. மேலான அறிவைத்தரும் நூல்களைப் படிப் பதனால் மனமும் ஆன்மாவும் சுத்தமடைகிறதல்லவா? G. S. கபார்தே என்பவர் பரமாமிருதம், பஞ்சதசி, இவைகளைப்பற்றிப் பிரசங்கம் செய்யும்போது வாடா வுக்குப்போய் வருவார்.

இப்படியிருக்க, 1912-ம் வருடம் ஜனவரி மாதத் தில் அவருடைய மனைவிக்கு தேக அசௌக்யமெனக் கடிதம் வந்தது. தான் போய்ப் பார்த்து வரவேண்டு மென்று குருவிடம் கேட்டதற்கு அவர் அனுப்ப முடியா தென்று சொல்லிவிட்டார். ஒரு வாரத்திற்குப் பின் அவளிறந்துபோனதாகச் செய்தி வரவே, பண்டிதர் மிக வும் வருந்தினர். இந்த மூன்றும் மனைவியுடன் தான் அவர் தன் ஸந்தோஷ நாட்களைக் கழித்தார். அவளு டைய பிரிவு அவரை மிகவும் வருத்தியது. ஸாயி இவரை நான்கு வருடங்களிருக்கச் சொன்னபோது அவளைத் தருவித்துக் கொள்ளவும் முயற்சித்தார். குருவிடம் அதைப் பிரஸ்தாபித்தபோதெல்லாம் அவர் ஸரி யென்று லும் இவன் ஸம்சார பந்தத்தை மீண்டும் அழைக்கிறானே என்று தன் உண்மையான அருவருப்பைக் காட்டின தால் இவர் அந்த எண்ணத்தையே தள்ள வேண்டியதா யிற்று. தற்சமயமும், தன் மனைவியிறந்த பின் தனக்கு கடவுள் அருள் கிடைத்துத் தான் என்ன உபயோகம் என்று கூறிப் போக விடை கேட்டார். ஸ்ரீ ஸாயி, அவ

ளுடைய ஆன்மா தன்னிடம் வந்து சேர்ந்து விட்டதால் மோக்ஷமடைந்து விட்டதென்றும், இனியவர் போக வேண்டியதில்லை யென்றும் சொன்னார். பண்டிதர் ஸமாதானமடையாமல், பத்து ரூபாயைக் கொடுத்துத் தன் மனைவி நற்கதியடைவதற்கு சிலவழிக்கும்படி சொன்னார். அவர் எவ்வளவு வேண்டியும் ஸாயி அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டு "என் அருள் உனக்கு முன்பே கிடைத்துவிட்டதே! உனக்கு வேண்டியது கொடுத்திருக்கிறேன். வேண்டாதது நீக்கப்பட்டது. உன்னைப் பற்றிய பொறுப்பு என்னைச் சார்ந்தது, நீ பேசாமல் விடோபா கோவிலில் உட்கார்ந்திரு. ஸமயம் வந்தால் சியாமா (என்ற மாதவராவ்) உன்னை வெளியிலழைப்பார் அப்போது நானுன்னை வெளியே உட்காரச் செய்கிறேன். எதையும் நினையாதே. நீ உலகத்திற்கே ஈடானவன்" என்று சொன்னார். இன்னதென்றறியக் கூடாத ஓர் சக்திக்கு கட்டுப்பட்டவர் போலப் பண்டிதர் குருவுடைய வார்த்தையை சிரமேற்கொண்டார். இதிலிருந்து அவருடைய வாழ்க்கையின் போக்கானது துன்பமயமான உலக சமூக ஸம்பந்தத்தைவிட்டுப் பரம்பொருளைத் தொடரும் பக்தி மார்க்கத்தில் பிரவேசித்தது.

# அத்தியாயம்—12

## ஸமதிருஷ்டி

* பார்க்கும் பொருளெல்லாம் பரம நீயென்றறிய
மார்க்க முறைத்த பெரு வாழ்வே குருமணியே.

சும்மா உட்கார்ந்திருப்பதற்கும் அடக்கம் வேண்டுமே! ஸாயி "சும்மாயிரு"க்கச் சொன்னதன் அர்த்தம் சோம்பேறித்தனமாய்க் குறட்டைவிடச் சொன்னதல்ல. சிந்தனைகளை விலக்கி, ஈசனைத் தியானம் செய், என்பதாம். இருதயத்திலுள்ள குற்றங்களை நீக்க தியானம் சிறந்த ஸாதனமாகும். மனதைப்பற்றிய பிணியாகிய காமக்குரோதாதிகளை தியானமென்னும் ஒளஷதத்தாலே விலக்கலாம். ஆத்ம வித்தையை விரும்பினவர்கள் மது போல் மயக்கத்தைத் தந்து பவக்கடலிற்றள்ளும் ஆசாபாசங்களை யொழித்து இந்திரியங்களை யிழுத்தேகும் விஷய வாசனைக்காளாகாமல், சமதமாதி திதீக்ஷையினுல் இந்திரிய நிக்ரஹம் செய்து உபாதி பூர்ணமடைய வேண்டும். மனமெனும் வயலிலே மத மாச்சர்ய முதலானதுகளை யகற்றி தியானமென்ற பயிரை பக்தி நீர்ப்பாய்ச்சி செழிக்க வளர்த்தோமானுல் முக்தியின் முத்தீந்திடும் சித்ஸுகக் கதிரைப் பெற்றுக் களிக்கலாம் என்பது முன்னேர் மொழிந்த உண்மை.

ஸாயியின் பாத நிழலில் வந்தபிறகுதான் நீடித்த ஆனந்தம் ஒன்று உண்டு என்பதும், அதன் அனுபவமும் பண்டிதர்க்குச் சிறுகச் சிறுகத் தெரியலாயிற்று. தாரணம், தியானம், ஸமாதி யிவற்றின் மெய்யான வின்

பத்தைக் காண மிக்க சிரமமேற்பட்டது. குருவிடம் பக்தியை வகித்து மற்ற சிந்தனைகளைத் தள்ளி அவருடைய போதனையை மனதில் அசையாமற் கொண்டு தன்செயல், தன் நினைவு, தான் மதிப்பாய்க் கருதியவை, யெல்லாம் உதறித்தள்ள வேண்டியிருந்தது. சீடனானவன் வித்யா கர்வம் முதலானதை விலக்கினாலொழிய குருபாத ஸேவையின் பலன் கிடைப்பதருமை. குருவுடைய வார்த்தைகள் ஒவ்வொன்றையும் தெய்வ வாக்காக மதித்தனுசரித்து அவருடைய செய்கைகளைப் பின்பற்றுவதுதான் பூரண குருபக்தியின் அடையாளம். தன் காலம், கவனம், அனைத்தும் குருவிடமே செலுத்த குருவடிவம் மனதில் பதிந்து பக்தியேற்பட்டு குரு மூலமாகப் பரம்பொருளின் சந்திப்பு கிட்டும். இதனாலேயே, குருவே பரபிரும்மம் என்றும், ஈசனே குருவடிவாகி வந்து உலக பந்தமென்னும் பிணைப்பிற் சிக்குண்டு தவிக்கும் ஜீவனை ஞானோபதேச வாயிலாக விடுவித்துத் தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொள்கிறானெனப் புராணங்கள் முறையிடுகின்றது. பண்டிதர் தனக்கு எல்லாம் ஈவது தன் குருவேயென்று எண்ணி வேறு சிந்தையற்று காலந்தள்ளும்போது ஸ்ரீ ஸாயியானவர் அவருடைய மனதிலிருந்த விஷய பேத வளர்ச்சிகளை யெல்லாம் அழித்து சீடனுடைய பக்தி நிறைந்த மனமாகிய மேன்மையான பூமியிலே கண்ணுக்கெட்டாத மதிப்புள்ள வித்தை விதைத்தார் அது யாதெனில்-கடவுள் எங்கும் நிறைந்தவர் (ஸர்வம் பிரும்ம மயம்) என்பதேயாம்.

கீதா பாராயணம் செய்பவர்களைப்போலக் கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பதைக் காசிநாதரும் அறிவார். அமராவதியிலிருந்தபோது பிரசங்கித்துமிருப்பார். அதை வாக்கினாலுரைப்பது சாத்தியமாயிருக்கலாம். ஆனால் ஸர்வ

வியாபகனுன அந்த ஈசனை உள்ளத்திற் காணுமற் கண்டு பரமானந்தத்தை யடைந்தவர்கள்தான் அதன் உண்மையை யறிந்தவர்களாவர். காணும் பொருளெல்லாங் கடவுள் என்றறியும் அனுபவத்தை ஸ்ரீ சாயி காசிநாதருக்கு உண்டாக்கினுர்.

புகைச் சுருட்டுப் பிடிப்பதில் ஸாயி மிகவும் பிரியமுள்ளவர். ஒருநாள் காசிநாதர் தன்னிடம் வந்தபோது அதைக் கொடுத்துப் பிடிக்கச்சொல்ல அவர் மறுத்தும் வற்புறுத்தினுர். பிறகு, நீ யிருக்கிற கோவிலுக்கு யாராவது வருவது போவதுண்டா? என்று கேட்டார்.

**காசிநாதர்** :—இல்லை ஒருவரும் வருவதில்லை.

**ஸாயி** :—பாதகமில்லை. நான் வந்துகொண்டிருப்பேன். ஆனுல் நான் வந்தால் நீ யென்னை யடையாளந் தெரிந்துகொண்டு எனக்கு சுருட்டு தருவாயோ?

**காசி** :—பாபா! நீங்கள் என்ன சொல்கிறீர்களென்று தெரியவில்லையே! நானெங்கிருந்து உமக்குச் சுருட்டுக் கொடுப்பேன்.

" நல்லது " என்முர் ஸாய்.

இரண்டு மூன்று மாதங்களுக்குப் பின் காசிநாதர் தானே சமைத்து சாப்பிடத் தொடங்கினுர். அடியார்கள் உணவை பகவானுக்கு நிவேதிப்பதுபோலத் தானும் சாப்பிடுவதற்குமுன் கொஞ்சம் உணவெடுத்துக் கொண்டுத் தன் பகவானுகிய சாயியிடம் போய் வருவார். ஒருநாளிவர் சமைப்பதைக் கவனித்துக் கொண்டிருந்த கறுப்பு நாயொன்று இவரை யுற்றுப் பார்த்து இவர் மசூதிக்குப் போகும்போது கொஞ்ச தூரம் பின் தொடர்ந்து வந்தது. நாயைப் பார்த்த காசிநாதர் அதற்கு ஒன்றும் போடாமல் குருவைப் பார்த்துத் திரும்பி வந்தபின் போடலாமென்றெண்ணினுர். ஆனு

னும் மனம் மாறித் திரும்பிப் பார்க்க நாயைக் காண வில்லை. ஸாயியிடம் சென்றதும், அவர் சாப்பாட்டை யெடுத்துக்கொண்டு இந்த வெய்யலில் இங்கேன் வந்தாய்! நானே உன் கோவிலுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந் தேனே! என்றார்.

பண்டிதர்:—பாபா! நீங்களெங்கே யிருந்தீர்கள் அங்கே?

ஸாயி:—நீ சமைக்கிற வரையிலும் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தேனே!

பண்டிதர்:—பாபா! ஓர் கருப்பு நாயைத் தவிர அங்கே வேறொருமில்லையே!

ஸாயி:—ஆமாம். நான்தான் அது.

காசிநாதருக்கு குருவை யடையாளங் கண்டு கொள்ளாமற் போனோமே யென்று அழுகை தொண்டை யை யடைத்தது. அவர் சொன்னதை மனதிற் பதிய வைத்து இனி ஒருபோதும் இம்மாதிரி தவறுவதில்லை யென்று உறுதி செய்துகொண்டு திரும்பினார்.

மறுநாள் சமைக்கத் தொடங்கியதுமுதல் கருப்பு நாய் எங்காவது இருக்கிறதா என்று ஆவலோடு தேடி னார். அதை யெங்கும் காணவில்லை. இன்று தன்மேல் ஒன்றும் தவறுதலேற்படாதென்று தைரியங் கொண்டு சமைக்கலானார். ஓர் சூத்ர பிச்சைக்காரன் அங்குள்ள சுவர்மேல் சாய்ந்துகொண்டு இவர் சமைப்பதையே கவனித்துக் கொண்டிருந்தான். ஆசாரப் பித்துள்ள காசிநாதர் சமையலை சூத்ரன் பார்க்கிறானே என்ற வருத் தத்தால் அவனை தூரப்போ என்றார். சாப்பாட்டை யெடுத்துக்கொண்டு குருவிடம் வந்ததும் அவர் கோபமா யிருப்பதைக் கண்டார்.

ஸாயி :—இப்போ தென்னத்திற்கு வந்தாய் நீ? இங்கே வரவேண்டாமென்று நான் சொல்லவில்லையா? நேற்று எனக்கு நீ சாப்பாடு போடவில்லை. இன்றும் "நிற்காதே போ" என்று விரட்டிவிட்டாய்! இனிமேல் உன்னுடைய நைவேத்யத்தை யென்னிடம் கொண்டுவர வேண்டாம்.

பண்டிதர் :—பாபா! நீங்கள் எங்கேயிருந்தீர்கள்?

ஸாயி :—நான் சுவரில் சாய்ந்து கொண்டிருந்தேன். நீ என்னை 'நிற்காதே போ," என்று சொன்னாய்!

பண்டிதர் :—ஓ! (பெருமூச்செறிந்து) அது நீங்களா!

ஸாயி :—ஆம். நான் எல்லாவற்றிலு மிருக்கிறேன். கடந்து மிருக்கிறேன். நீ எங்கு பார்த்தாலுமிருக்கிறேன்.

தன் மடமையை யெண்ணி காசிநாதர் வருந்தியதற்கு அளவேயில்லை. முதல் நாளே குரு சொல்லியிருந்தும் தான் அறிந்துகொள்ளாமற் போனதைப்பற்றி மனம் புண்ணுனார். உண்மையான ஸாதுவுக்கு வீணுசாரங்களினுல் முக்திக்கு அனுகூலமொன்றுமில்லையென்றும் பசித்தவர்க்கு அன்னமளிப்பதும், எல்லா ஜீவராசிகளுக்கும் இரங்குவதும் ஸர்வமும் ஸர்வேசனுகப் பாவிப்பதுமே ஈசுவரனுக்குகந்த திருப்பணியென்றும், அருளுடைய நெஞ்ச மிருந்தாற்ருன் முக்திபெற முடியும் என்றும், ஸ்ரீ ஸாயியாகிய அவதார புருஷன் எங்கும், யாவற்றிலும் இருக்கிருர், அவரே மானிடவுருவாய் வந்த பகவத் ஸ்வரூபம், என்றும் அறிந்து கொண்டார். இந்த உண்மையை அறிந்தொழுகுபவர்கள் இல்லறத்திலிருந்தாலும் துறவறத்திலிருந்தாலும், அவர்களே "ஸாதுக்கள்". பக்த பரம்பரைச் சரித்திரங்களொவ்வொன்றிலும் இவ்வுண்மையைக் காணலாம்.

எவ்வுயிரும் பராபரன்தன் ஸந்நிதியதாகும்
இலங்குமுடல் உயிரனைத்தும் ஈசன்கோயில் (அருட்பா)

என்று இறைவனன்புக்கே திருத்தொண்டு செய்த அருள்வள்ளலார் கடவுளுடைய ஸர்வ வியாபகத்தை ஸாமான்ய ஜனங்களும் அறிந்து மனமுருகி பகவத் கைங்கரியம் செய்யும்படி முறையிட்டிருக்கிறார். எங்கும் ஸமதிருஷ்டியுடையவனாய் யாவற்றிலும் தானும், தன்னுள்ளே யெல்லாமும் இருக்கக்கண்டவனே ஞானி. அவனுக்கு துக்கம் என்பது கிடையாது. ஏனெனில். ஈசனையே எங்கும் காண்பதால், அவன் மனமும் அவரிடமே பற்றி யிருக்குமேயன்றி உலக விஷயங்களில் பற்றாது. அவன் ஜன்னமரண பந்தம் விடுபட்டவனாகின்றான். ஸ்ரீ ஸாயிநாதர், இந்த மேலான உண்மையைக் காசிநாதருக்கு அனுபவவாயிலாகக் கற்பித்து அவருடைய ஞானக்கண்ணைத் திறந்துவிட்டார். இந்த அனுபவத்தினால் காசிநாதர் உண்மைச் "சாது" வானார்.

## அத்தியாயம்—13

## உபவாஸம்

* நற்றாயுந் தந்தையுமாய் நாயேனை யாட்கொண்டு
வற்றாதருள் சொரிந்த குருவே அருண்முகிலே.

ஸ்ரீ ஸாயியானவர் தனது சீடனுடைய உள்ளத்தில் விவேகமென்னும் நூலை நூற்று வைராக்யமென்ற நெசவும் நெய்யத்தொடங்கி விட்டார். சொன்னதை எவ்விதமும் நிறைவேற்றி விடுவாரவர். தனது சித்தஸம்வித்

சக்தியினல் எவர் மனதிலும் பிரவேசித்து அங்குள்ள தெல்லாம் ஆராய்ந்தறிந்துகொண்டு அதற்கு அவசிய மான நன்மையையும் செய்வார். காசிநாதருக்கு இயற் கையிலேயே கொஞ்சம் வைராக்யமுண்டு. ஆனுலும், அதைப் பூர்ணத்திற்குக் கொண்டுவந்து ஒருநிலேப் படுத்தி ஞர் ஸாயி.

மனே சக்திக்கும், மனே தைரியத்திற்கும், சித்திக் கும், மோக்ஷஸாம்ராஜ்யத்திற்கும் வைராக்கியம் மூல காரண மல்லவா? பண்டிதர்க்கு சரீரஸ்வபாவத்தினுலோ, மற்ற கஷ்ட நிஷ்டூரங்களினுலோ, பால்யத்திலேயே அவர் பல விஷயங்களே வேண்டவேயில்லே, பலமுறைபசிக்கொடு மையையும் சகித்திருக்கிருர். உபவாஸமானது தவங்களில் மேலானதென மகாபாரதம் சாந்தி பர்வத்தில் கூறப் படுகின்றது. பசியெடுத்தபோது ஊண் கிடைக்காத தால் உபவாஸமிருப்பது கொஞ்சந் தாழ்ந்ததுதான். ஆனுல் வறுமையினுலோ, கோபத்தினுலோ, பிரார்த்தனே யினுலோ உபவாஸமிருப்பதானது ஸாதகனுக்கு அனு கூலத்தையும் மாதக் கணக்கில் ஸமாதியிலிருக்கக் கூடிய வலிமையையும் கொடுத்துத் தானே வைராக்கியமாய் உபவாஸமிருக்கவும் செய்து நல்வழியில் சேர்க்கக்கூடும்.

ஷிர்டியிலுள்ள ஓட்டலில் சில மாதங்கள் பணம் கொடுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார் பண்டிதர். குரு ஒரு நாள் ஏதாவது தக்ஷிணேயிருந்தால் கொடு ” என்று கேட்கவும் தன்னிடமிருந்ததைக் கொடுத்து விட் டார். இது ஸாயிக்கு மிக்க ஸந்தோஷத்தைக் கொடுத் தது. ஆனுல் பண்டிதர் இருந்த காசையும் குருவிடம் கொடுத்து விடவே கையில் பணமில்லாததால் ஆகாரத் தைக் குறைத்ததால், உஷ்ணமதிகரித்து மூல வியாதிக் காளானுர். யாராவது கொடுக்குந் தான்யங்களேக்

கொண்டு பசியாறுவார். இதைக் கண்ட காகா தீக்ஷிதர் என்பவர் தன் வாடாவில் இலவசமாகவே சாப்பிடலாம் என்று சொல்லி இவரை வருந்தி யழைக்கவும், பண்டிதர் அங்கே சாப்பிட்டுக்கொண்டு சிலநாள் தள்ளினர். இதற்குள் சிலருக்கு இவர் பேரில் துவேஷம் பொறாமை ஜுகுப்சை முதலியன உண்டானதால், 1912-ம் வருடம் ஜூன்மாதக் கடைசியில், ஒரு நாள் பண்டிதர் சாப்பிட உட்கார்ந்ததும், தீக்ஷிதருடைய சிப்பந்தியிலொருவர் மறு நாள் முதல் அவருக்கு சாதம்போட முடியாதென்று சொல்லவே, பண்டிதர் மற்றவர்களெதிரில் தன்னை அவமதித்ததையும், வயிற்றுக் கொடுமையையும் எண்ணித் துடித்து, மனதில்லாமல் போட்ட உணவைத் தொடவும் விரும்பாதவராய் எழுந்து, நீ தான் என்னை வலிய வந்து அழைத்தாயே தவிர நானாக வரவில்லை. நான் யாராவது ஏதோ தான்யங் கொடுத்தாலதைத்தின்றுகொண்டு கவலையற்றிருந்தேன். நான் உன்னை வந்தழைக்கச் சொல்லவில்லை, என்று உதறிப் பேசிவிட்டு, "கஷ்டாதபி கஷ்டதரம், பரக்கிரஹவாஸம் பரான்னம்", என்றபடி பாழும் ஊண் விருப்பமன்றோ பிறரிடம் யாசிக்கச் சொல்கிறது. இதிலிருந்து இனி சாதமே சாப்பிடுவதில்லையென்று விஸ்வாமித்ர விரதம் பூண்டார். வயிற்றுத்தொல்லை பொல்லாதது தான், "சாணும் வளர்க்க அடியேன் படுந்துயரம் சாற்றரிதே" என்று பட்டினத்தாரும் புலம்பியிருக்கிறார். இருந்தாலும் இது நீடித்து நடக்குமா! ஏழுநாட்கள் வரைக்கும், சிநேகிதர்களும் பிறரும் தரும் ஆகாரமெல்லாம் பன்றிக்கும் நாய்க்கும் இறைத்தார். கடைசியில் ஸாயி தலையிட்டுச் சொன்னதன்மேல், சாப்பிட இசைந்தாராயினும் இடையிடையே உபவாஸத்தையும் அனுஷ்டித்தார். இதனால் கடவுளை யறியவேண்டுமென்ற ஊக்க

மதிகரித்தது. தவிர தன்னைச் சூழ்ந்துள்ள விஷயங்கள் ஒன்றுக்கொன்று மாறுகவும், பெரியவை சிறியனபோலும், சிறியவை பெரியன போலும் பலவிதமாகவும், விழுங்கிய உணவு வாயிலேயே யிருப்பதுபோன்ற உணர்ச்சியும் தோன்றலாயின. அடிக்கடி ஸ்வப்னவஸ்தைபோன்ற தன் மறப்பும் உண்டாயிற்று. இத்தனை அவஸ்தைகளிலும் கருணாநிதியான குருவின் மேல்பார்வை யிருந்தபடியால் அவர் ஆபத்து ஒன்றுமின்றி, பிரமிஷ்ட, உன்மத்த அவஸ்தைகளைக் கடந்தார். தான் கண்ட பல தரிசனங்களைப் பற்றி பிறர்க்கும் எடுத்துரைப்பார்.

1913-ம் வருடம் சங்கராந்தியன்று உபவாஸமிருக்கத் தொடங்கினவர், ஒருவருஷம் வரையிலப்படியே யிருந்தார். மிகவும் மெலிந்துபோயிருந்தும், யந்திரத்தில் மாவரைப்பார். தெரு வேலைக்காரர்களுக்கு உதவியாய் மண்கொட்டுவார். 1913 ஏப்ரல் 15-ல் டாக்டர் சிதம்பரம் பிள்ளை அவருடைய நாடியைப் பரீக்ஷித்தபோது நிமிஷத்திற்கு 40 அடித்தது. மூன்று மாதத்திற்குப்பின் 20-க்குக் குறைந்து வந்தது, இந்நிலைமையிலும் குருபக்தியினாலும், ஈசுவர பக்தியினாலும் அவர்க்கு எல்லாம் செய்ய முடிந்தது. ஷிர்டியிலுள்ள பக்தர்களும் ஆச்சரியமடைந்தார்கள். ஸ்ரீ ஸாயியின் சக்தியினாலும், பண்டிதர்க்கு ஆண்டவனருள் ஏற்பட்டிருப்பதாலுமே அவருக்கிதெல்லாம் கஷ்டமாகத் தோன்றவில்லை யென்றனர். "போகாத வாணவத்தைப் போக்கி நின்ற புண்ணியர்க்கு ஆகாததுண்டோ?"

# அத்தியாயம்—14

## பிரதிஷ்டை

* அருளெனும் பரிதியின் முகமலர் கண்டு
அடியவர் மனமெனுங் கமலங்கள் மலர
உறுமிரு வினையெனு மிருளகன் றெங்கும்
உண்மையி னொளிபரந் தோங்கிய தையே.
கருணையின் கொழுந்தென எழுந்துயிர்க் கெல்லாம்
கருவரும் பிணிதவிர்த் துயர்கதி நல்குந்
திருவடி தந்தருட் குருவடி வாக
திருச்சபை மீதென் றுஞ் செழித்திடு வீரே.

1913-ம் வருஷம் ஜுலை மாதம் 18ந்-தேதி குரு பௌர்ணமி அன்று, ஸ்ரீ ஸாயி தனது ஸ்திரீ பக்தர்களி லொருவரான சந்திரா பாயை யழைத்து, கண்டோபா கோவிலுக்குச் சென்று தன்னைப் பூசிப்பதுபோலக் காசி நாதரைப் பூசித்துவிட்டு வரும்படி சொல்லியனுப்பினர். குருவின் ஆக்ஞைப்படியே அவள் கோவிலுக்கு வந்தாள். தான் குளிக்காததுபோலவே யாராவது சுத்தஞ் செய்ய வந்தாலும் காசி நாதர் தடுத்து விடுவதால் அந்தக் கோவில் குப்பையுங் கூளமும் புழுதியும் நிறைந்து ஆபாசமாயிருந்தது. சந்திராபாய் அவைகளொன்றை யும் கவனிக்க வில்லை. தான் வந்த காரியத்திலேயே கருத்துள்ளவளாய், அவரெதிரிலமர்ந்து ஆராதனைக்காகக் கொண்டுவந்த ஸாமான்களை யெடுத்து வைத்துக்கொண்டு அவர் பாதங்களை யலம்பி அர்ச்சிக்கத் தொடங்கும் போது, இரண்டு கனவான்களுமங்கு வந்தார்கள்.

பண்டிதர் அவள் திடீரென்று வந்து தன் பாதங் களைப் பூசிப்பதைப் பார்த்து ஆச்சரியமும் பிரமிப்பு

மடைந்தவராய் "தயவு செய்து என் காலைத் தொடாதே. விரைவில் வெளியே போ" என்றார். அவளோ ஸாயியின் கட்டளைப் பிரகாரம் தான் செய்வதாகச் சொன்னாள்.

காசிநாதர்:—ஸாயியின் ஆக்ஞை யென்ன ?

சந்திராபாய்:—இன்று குரு பௌர்ணமி யாதலால் தங்களை யாராதித்து விட்டு வரும்படி எனக்கு உத்தர விட்டார். தாங்களும் வெகு நாட்களாக உபவாஸ மிருப்பதால் நான் கொண்டுவந்திருக்கும் நைவேத்யத் தையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். என்றுரைத்து அவர் காலைத்தொடவும் "என் பாததைை விட்டுவிடு நான் இதற்குச் சம்மதிக்கமாட்டேன்" என்று கத்தி காலைப் பின்னுக்கிழுத்துக்கொண்டார். சந்திராபாய் தேகபலத்தி லும் மனோபலத்திலும் சிறந்தவள். அவள் நீங்கள் என்ன சொன்னாலும், என்னை அடித்தாலும், நான் பாபா வுடைய ஆக்ஞையை நிறைவேற்றாமல் போகமாட்டேன் என்று அவர் காலைப்பற்றியிழுக்கவே காசிநாதர் கோபத் துடன் அடிக்க ஓங்கின கையைத் தாழ்த்திவிட்டுக் காலைப் பின்னுக்கிழுத்துக் கொண்டார்.

இந்தப் பாதங்கள் உம்முடையதல்ல. உமது சரீரமே உமக்குச் சொந்தமில்லை; அவைகள் உலக மனைத்திற் கும் சொந்தமாய் விட்டதால் யாருடைய ஆராதனையை யும் நீர் தடை செய்யலாகாது. இன்றுமுதல் நீங்கள் அடி யார்க்கும் அடியாராகவும், அடைந்தவர்களுக்கு முக்தி யளிக்கும் குருமூர்த்தியாகவும் பிரதிஷ்டை செய்யப்பட்டு விட்டீர் என்பதை உங்களுக்கு உணர்த்துவதற்காகவே, ஸ்ரீஸாயி இந்த ஆராதனையைச் செய்யும்படி என்னை யனுப்பினார். என்று சொல்லிவிட்டு அங்கு வந்திருந்த ஆடவர்களைக் காசிநாதரைப் பிடித்துக் கொள்ளும்படி

வேண்டினுள். அவர்கள் காசிநாதரைப் பலவந்தப் படுத்தினுல் கோபித்துத் தம்மை யடித்து விடுவாரோ வென்று அவரிடம் நெருங்க பயந்தார்கள். பிறகு சந்திராபாய் தானே தன் பலத்தைக்கொண்டே ஒரு கையினுல் அவருடைய பாதத்தைப் பிடித்துக்கொண்டு மற்ெருரு கையினுல் பால்முதலியன கொண்டலம்பி சந்தன குங்குமங்களை யிட்டு அவர் சிரஸில் புஷ்பங்களைப் போட்டு நைவேத்தியத்திற்குக்கொண்டுவந்த பாலை அவர் வாயருகில் கொண்டுபோகக் காசிநாதர் அதைத் தள்ளி விட்டு எழுந்திருந்து, ஏ சந்திராபாய்! நீ செய்வது நியாயமா? ஏன் என்னை ஹிம்சிக்கிருய்? என்று கத்திஞர். சந்திராபாய் நீங்களென்ன தடுத்தாலும் ஸத்குரு ஸாயி என் மூலமாக இந்த குரு பௌர்ணமியில் ஆரம்பித்து வைத்திருக்கும் இந்த ஆராதனை நடந்துகொண்டு தானிருக்கும். உம்மால் இதைத் தடுக்க முடியுமா? என்ருள். காசிநாதர் இந்த ஆராதனை யெனக்கு வேண்டாம் நீ பேசாமல் உடனே போ என்று சொல்லி அவளை யனுப்பி விட்டார். அவருக்கிருந்த கோபத்தில் அந்த ஸ்திரீ இந்தப்பாதங்களில் உமக்குச் சொந்தமேது? என்று தனக்குமேலான ஓர் உண்மையைப் போதிக்க வந்தவள் என்பதைக்கூட யோசிக்கவில்லை.

எப்படியிருந்தாலும் ஸ்ரீஸாயி அவரை ஸத்குருவாக அபிஷேகம் செய்து வைத்துவிட்டார். தன்னைப்போல பக்தி உலகைப் பாலிக்க ஒருவர் வேண்டுமே! தவராஜர்க்கெல்லாம் மகாராஜராக யாருக்கும் கிடைக்கரிய அரசை அவருக்கு முடிசூட்டி அடியார்களின் மனதை அருளென்னுஞ் செங்கோல் கொண்டாளவும், அடைந்தவர்க்கில்லை யென்னுமல் இகபர ஸாதனந்தரும் வரப்ரஸாதியாகவும், சிரேஷ்டமும், புனிதமும், கடவுளம்சமுமான

குருவடிவத்தைக் கொடுத்து தெய்வசக்தி பெற்ற மகரிஷியாக்கலானார் ஸ்ரீஸாய்.

இப்படித் தன்னிஷ்டத்திற்கு விரோதமாகத்தன்னைக் குருவாக்கியதைப்பற்றிக் காசிநாதர் 1924-ம் வருஷத்தில் செய்ததோர் பிரசங்கத்தில் சொன்னதாவது:—

ஓர் பிராமணன் ஒரு கிராமத்திற்கு வந்தான். அவன் அந்த ஊருக்கே புதியவன். அப்போ அந்த ஊரிலிருந்த ஒரு விஷமக்காரன் இவனை வைத்தியனென்று நினைத்துத் தான் வைத்தியனல்லவென்றிவன் என்ன சொல்லியும், வெட்கத்தாலும், அடக்கத்தாலும், சொல்கிறானே யொழிய வைத்தியன்தானென்றெண்ணிக்கொண்டு, அந்த ஊருக்கு ஒரு கெட்டிக்கார வைத்யன் வந்திருக்கிறானென்றும், தொந்தரவு செய்து கேட்டாலன்றித் தான் வைத்தியனென்று சொல்கிறதில்லையென்றும் ஒரு வதந்தியைக் கிளப்பி விட்டு விட்டான். ஜனங்கள் எல்லாம் வைத்தியத்திற்காக வந்து வந்து தொந்தரவு செய்யவே, அவன் பொறுக்க முடியாமல், வேறுவிதியும் இல்லாமல் தான் வைத்தியனென்று ஒப்புக்கொண்டு சுக்குத்தூளோ ஏதோ கொடுத்துக்கொண்டு வந்து கடைசியில்மெய்யான வைத்தியனே யாகிவிட்டான் என்று சொன்னார்.

இதை மனிதனுக்குத் தானாக வரும் பெருமை யென்றுதான் சொல்லவேண்டும். ஸத்ய ஸங்கல்பரான ஸாயியின் அனுக்ரஹம் இருக்கும்போது காசிநாதர்க்கு எதுதான் கிட்டாது? இதிலிருந்து அவரை மகராஜ ரென்றே யாவரும் அழைக்கத் தொடங்கினார்கள். நாமும் அவ்விதமே சொல்வோமாக.

# அத்தியாயம்—15

## பிரும்ம சிஷ்டாவஸ்தை

* ஆக்கைதனை நானென் றலைந்தவல மாகாமல்
போக்குவரவற்றதைப் போதித்த புண்ணியனே.

ஒரு செடியை நட்டால் அது தானே வளர்ந்து விடுமா? அதற்குத் தண்ணீர் ஊற்றி யெருப் போட்டுக் கொத்திவிட்டு பழுதுவராமல் சுற்றி முள்ளணைத்துப் பாது காக்க வேண்டுமல்லவா? ஆயிரத்திலொன்று பகவத் கடாக்ஷமிருந்தால் தானாக வளருகிறது. அதுபோல் காசிநாதரைக் குருவாக அபிஷேகம் செய்துவிட்டார் ஸ்ரீஸாய். ஆனால் அது நிலையான உண்மைத் துறவாக வேண்டுமே! தன்னுடைய ஸத்ய வாக்குப் பழுதாகக் கூடாதல்லவா! ஆகையினால், காசிநாதர் "துறவி"யாவ தற்கு வேண்டிய ஒரொரு மாறுதலையும் அவருள்ளத்தில் படிப்படியாக சிருஷ்டிக்கலானார் ஸாயி.

கடவுள் துன்பத்திலிருந்து சுகத்தையும், தீமையி லிருந்து நன்மையையும், விஷயங்களிலிருந்து வேதாந்தத் தையும் உண்டாக்குகிறார். மனிதனுடைய குணத்தையும் பொறுமையையும், சுகத்தின் மேன்மையையும், கஷ்டமும் வறுமையும் தான் வெளிப்படுத்துகிறது. சுகம் அதை மறைத்துவிடும். பசி, தன்மறப்பு முதலான கஷ்டங்களி னால் மகராஜருடைய தேகம் இயற்கைக்கே மாறாகி, அன் னத் வேஷமும், பசியென்பதே யில்லாமலும் இருந்ததால், அவர் உணவென்பதையே தொடுவதில்லை, யாராவது கொடுத்தாலும் நாய்க்கும் பன்றிக்கும் பக்ஷிகளுக்கும் போட்டுவிடுவார். அவைகள் சாப்பிடக்கண்டு தான்

உண்டதுபோல திருப்தியடைவார். முதன்முதல் ஸாயி காட்டிய அனுபவத்திலிருந்து "சகல ஜீவராசிகளும் குரு தானே" என்ற உணர்வு அவர் மனதில் கல்லின்மேலெழுத்துப் போலப் பதிந்துவிட்டது. கீதைபோன்ற பல நூல்களிலிருந்தும் இதுபோன்ற மேலான கருத்துகளை யறிந்து கொண்டார். இருந்தாலும், பசியில்லாமல் பலவித தொந்தரவுகளினால் மிகுந்த சிரமமேற்பட்டதாலதை ஸாயியிடம் அடிக்கடிபோய் முறையிட்டார். அவர் "நீ பயப்படாதே, இதெல்லாம் நன்மைக்குத்தான். நான்தான் உன்னுடனேயே யிருக்கிறேனே; இப்போ கஷ்டப்படுகிற அளவுக்குமேல் பின்னால் மேன்மையடைவாய், உலக சிரேஷ்டனும் அவதூத ஸ்வாமியுமாகப் போகிறாய். ஆயிரக்கணக்கான ஜனங்கள் உன்னை தரிசிக்க வருவார்கள்" என்று சொல்லி ஸமாதானப்படுத்தினார். இவ்விதமிருக்கும்போது உபவாஸத்தினாலோ அல்லது ஸூர்யகாந்தியைக்கண்டு கண்கள் மழுங்கினதனாலோ அவருக்கு அரிய தோற்றங்கள் ஸம்பவித்தன.

1913-ம் வருட ஆரம்பத்தில் ஒருநாள் நடுப்பகலில் அவர் இரண்டு கைகளிலும் ஜலமெடுத்துக்கொண்டு சூர்ய பகவானுக்கு அர்க்கியம் விடும்போது தண்ணீரில்தெரிந்த சூர்ய பிம்பத்தைத் தன் பார்வை மங்கும் வரையில் நெடுநேரம் பார்த்துக்கொண்டேயிருந்ததில் கண்ணே தெரியவில்லை. எங்கும் ஒரே யிருள்மயமாய்த் தோன்றியது. கோவில் விளக்கு வெளிச்சமும் தெரியாமல் குருடர்களைப்போலத் தடவலானார். பிறகு இராத்திரிவேளையில் சூர்யகிரணங்கள் அவருடைய மண்டைக்குள்ளேயிருந்து கொண்டு கண்களிலே பிரகாசிப்பதைக் காணவே பயந்து போய் கிராமத்திற்குச் சென்று தன் கண்களுக்கு ஒத்தடமோ, வைத்தியமோ ஏதாவது செய்யும்படி கேட்டார்

எல்லாரும் ஸாயிபாபாவுடைய செயல்தானிதுவும் என்று நினைத்து அவருக்கு சூடாக ஆகாரந்தந்தார்கள். உபவாஸத்தினுல் ஒருவேளை பார்வை மங்கியிருக்கலாமென்று அவர்கள் நினைத்தார்கள். ஆனுல் இவர் அந்த ஆகாரத்தை விழுங்கக்கூடமுடியாமல் உமிழ்ந்துவிட்டார். பிறகு கமலாகர் தீக்ஷிதர் என்பவருடைய துணையில் கோவிலுக்கு வந்து சேர்ந்தார்.

தூங்கிப்பார்க்கலாமென்ருல் தூக்கம் வரவில்லை. அவர் கண்ணுக்கருகில் வெளிச்சம் சிறு சிறு துளியாகத் தோன்றிப் பரமாணுக்கள்போலக் காணப்பட்டன. சிறு சிறு வட்டங்களாகத் தோன்றும் ஒளி அவருக்குச் சமீபத்தில் வரவரப் பெரியதாகி மறைந்தன. அவருக்கெல்லாம் ஆச்சரியமாயிருந்தது. மற்ருெருநாள் பகல் இரண்டு மணிக்கு திடீரென்று பூமி, ஆகாயம், சூர்யன் மூன்றும் தன்னைத்தானே சுற்றிக்கொள்வதையும், ஆனுல் தான் மாத்திரம் அவைகளில் ஸம்பந்தமற்றவராய்த் தனியே வெளியில் நின்று அதைப் பார்ப்பதாகவும் கண்டார். தவிர இப்படிச் சுழலும் ஒவ்வொன்றும் இவரருகில் வரவரச் சிறியதாகி இவருள்ளேயோ அன்றி அருகிலோ சுழற்காற்றுப்போல மறைந்தது. அந்த ஸமயம் காற்றென்னமோ வீசவில்லை. தான் எங்கேயிருந்துகொண்டு அந்தக் காக்ஷியைப் பார்த்தோமென்பதையும் அவரா லறிந்துகொள்ள முடியவில்லை. இந்தத் தோற்றம் சுமார் ½ மணி நேரம் இருந்து மறைந்துவிட்டது.

இந்தக் காக்ஷியானது ஜீவனுக்கும் ஜகத்துக்குமுள்ள ஸம்பந்தத்தை அவர்க்குத் தெளிவாக்கியது. எல்லாம் பிரமையென்றும், உலகமாயையை விட்டுத் தான் தன்னையறிந்து விலகுவதற்காகவே இத்தோற்றம் உண்டாயிற்றென்றும் நினைத்தார்.

"தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண் தடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்',
(ஆழ்வார் திருவாக்கு)

அந்த உலகமும், மற்றும், தன்னிடமிருந்தே யுற்பவித்து மீண்டும் தன்னிலேயே யொடுங்குகின்றதென்றும், ஆன்மாவாகிய பிரும்மம் (அதாவது தான்) எப்போதும் மாருத, அழிவற்றதாகையால், அதுவே நித்தியப்பொருளென்றும், அநித்யமான இவ்வுலகைச் சேர்ந்த இச்சரீரமும் தனக்கு வேருனதேயன்றி, "அதுதானல்ல" வென்றும் செவ்வனே யறிந்துகொண்டார்.

இப்போதுதான் அவர் மெய்யான வேதாந்தியானுரென்றும், இயற்கையான ஞானேதயம் ஏற்பட்டதென்றும் உபாஸனி லீலாம்ருதம் என்ற புத்தகத்திலெழுதப் பட்டிருக்கிறது. இந்த தரிசனங்களினுல் அபூர்வ விஷயங்கள் புலனுவதுடன் அறிவும் ஈசுவர பக்தியும், அதிகரிப்பதால் இவைகள் மோக்ஷசாம்ராஜ்யத்தின் வாயிற் படிகளென்றவர் கருதினுர். அவருடைய அனுபவங்களைக் கேள்வியுற்ற வாடாவிலுள்ள பெரிய உத்தியோகஸ்தர்கள், டாக்டர்களெல்லாம் அவரிடம் மிகவும் பக்தி கொண்டனர்.

ஞானிகள் நாடுவதும், நல்லோர் விரும்புவதும், மேலானதெல்லாவற்றிலும் மேலானதுமான ஆன்மாவனுபவ விஷயத்தை விவரித்தெழுத சக்தியற்றிருக்கிறேனுதலால் சொற்பமே எழுதலாயிற்று

அடுத்தாற்போல் அவருக்கு, அகங்கார மமகாரங் களைப் போக்குந் தோற்றமொன்று உண்டாயிற்று. ஒரு நாள் மாலை, இவர் ஸந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தார். அப்போ, 20 வருஷங்களுக்கு முன்னிறந்து போன அவருடைய பாட்டனுர் கோபால் சாஸ்திரி

கோயிற் கதவுகளுக்கு வெளியே கையை நீட்டிய வண்ணம் நிற்கக்கண்டதும் அவ்வுருவம் இவருடைய கவனத்தையிழுக்கவே, அதையே பார்த்துக்கொண்டிருந்தார். சாஸ்திரியின் உருவம் மெள்ள "அஹமத் நகர்" என்றது. எதனுல் தானிருக்கும் ஜில்லாவின் பேரைக் குறிப்பிடுகிருரெனக் கேட்க விரும்புபவர்போலத் தலை நிமிர்ந்து அவ்வுருவத்தை நோக்கினுர். அவ்வுருவம் திரும்பவும் அதையே சொல்லி அஹம், மதன், கர், எனப் பிரித்துக்கூறியது. அப்போதும் இவர்க்கு விளங்காததால் மறுபடியும் கைஜாடைகாட்டிப் பிரித்துச் சொல்லி மறைந்துவிட்டது அவ்வுருவம்.

உருவம் மறைந்த தக்ஷணமே மகராஜர்க்கு அதனர்த்தம் விளங்கியது. அஹம் என்பது நான். மதன் என்பது அதிகாமம். கர் என்ருல்விஷம். நானென்னும் அகந்தையும், காமமும், விஷம்போன்றவை யென்றும், ஆத்மா பரிசுத்தமடைவதற்கு விஷம்போலக்கெடுப்பவையென்றும், தன் பேரகிய இவர் அவைகளைத் தள்ளவேண்டுமென அறிவிப்பதற்காகவே அவர் பாட்டனுர் உருவமாகத் தோன்றி சொல்லிவிட்டுப் போனுரென்றும் தெரியவே, நன்றியறிதலினுலும் அவரிடமுள்ள அன்பினுலும் மனமிளகிக் கண்ணீர் விட்டார். மராட்டியக் கிழவி கற்றுக்கொடுத்த பாட்டைச் சொல்வதுபோல, இதன் கருத்தையும் நினைத்து "அஹமத் நகர்" "அஹமத் நகர்" என்று தானே அடிக்கடி சொல்லிக்கொள்வார். இதைக்கேட்ட ஊரார் இவருடைய பித்துமொழிகளில் இதுவும் ஒன்றெனநினைத்தனர்.

அகங்காரத்தையும், ஆசைகளையும் ஒழிக்காவிட்டால் ஸாதுவாவ தெங்ஙனம்? அவைகள் மனிதன் கடைத்தேறுவதற்கு இடையூருனவைகளாதலால் அவைகளை

ஜயிக்கவேண்டிய தவசியமென்று ஒவ்வொரு மதமும் போதிக்கின்றது. கோடிக்கணக்கான கிரந்தங்களைப் படித்ததாலும் வேதாந்த விஷயத்திலேயே ஈடுபட்டதனுலும் உண்மை வேதாந்தி யாகமுடியாது. உள்ளத்தில் அகந்தைகளின்றி ஆசாபாசங்களை யொழித்து, ஈ யெறும்பு முதல் ஈசனீருக அனைத்தும் ஒருயிராகவே கருதி எல்லாம் கடவுளென்று அந்த பரம்பொருளிடம் பக்தி செலுத்துவதே வேதாந்தத்தின் உண்மை. தன்னை யிந்த நிலைக்குக் கொண்டுவர மகாராஜர் அடைந்த சிரமம் அளவற்றது.

இந்திரிய நிக்ரஹமும் ஸாமான்யமானதல்ல. பலருக்கு இதில் வெற்றி பெற ஆவலுண்டு. சிலர் இது அசாத்தியமென்றும், சிலர் இதனுல் கெடுதல் விளையும், என்றும், சிலர் இது ஜனஸமூகத்திற்குச் சரியல்லவென்றும் பலவிதம் நினைப்பர். மகாராஜருடன் நரஸிம்ம ஸ்வாமியவர்கள் பேசியதிலிருந்தும், உபாஸனி லீலாம்ருதமென்ற நூலிலிருந்தும், மகாராஜருக்குச் சில அபூர்வ விஷயங்கள் இதைப்பற்றி நேர்ந்ததாகவும் காண்கிறது. தேள் கொட்டின வலியை மறக்கடிப்பதுபோல இதற்கும் அனேக விதமான தேக உபாயங்கள் சொல்லப்பட்டிருந்தாலும், ஒன்றிலும், முழுவதும் பயனின்மையோ, அனுகூலமோ காணப்படவில்லை. உபவாஸத்தினுலும் சத்துள்ள பொருள்களைத் தள்ளுவதனுலும் ஒன்றும் லாபமில்லை. மனுேபாவப்படி பார்த்தால் அனுகூலமுண்டாகும். ஸத்ஸங்கமும், நல்ல பழக்க வழக்கங்களும், மித போஜனமும், ஏகாந்த வாஸத்தையும் அனுசரித்து வெறும் வெளியிலே ஒன்றிலும் செல்லாத மனத்துடன் காமத்தை வேரறுக்குங் கருவியான உறுதியைக் கைக் கொண்டு சோம்பலின்றி ஈசுவர தியானம் செய்தால்

காமத்தை வெல்லக்கூடும். இதற்கு இல்லறமா! துறவறமா! எது சிரேஷ்டமென ஆராயவேண்டியதில்லை, ஜனக மகாராஜரைப்போலும், ஸ்ரீராமபிரானைப்போலும் கிருஹதர்மத்திலிருந்தே இந்திரிய நிக்ரஹம் செய்தவர்களில்லையா? சூர்ப்பனகையானவள் தெய்வமாதுபோல வடிவெடுத்து எதிரே வந்து நின்றபோது ராம லக்ஷ்மணர்களுடைய மனங் கொஞ்சமாவது கலங்கினதா? இல்லையே! துறவிகள் எத்தனைபேர் இதற்கு மாருக மனநிலையிழந்ததாகக் கேட்டும் வாசித்தும் இருக்கிறோம்! இருதரத்தாருக்கும் இந்திரிய நிக்ரஹம் அத்யாவசியமானதே.

ஸம்சாரத்திலிருக்கும்போதே மகாராஜர் மேற்கூறியவைகளில் பலமுறைகளை அனுசரித்திருந்தார். போராததற்குத் தேக அசௌக்யமும் சேரவே, அந்த சிந்தனையேயில்லாமல் போய்விட்டது. பாலியத்திலேயே இந்திரியங்களைத் தன் வசமாக்கியிருந்தாரவர். சிறுவனாயிருக்கும்போதே அடுத்த வீட்டுக்காரனைப்பற்றி "இப்படி அழிந்துபோகிற சரீரத்தை அவ்வளவு பாடுபட்டு போஷித்தானே" என்று விரக்தி உபதேசம் செய்தவர்தானே. ஷிர்டிக்கு வந்து சேர்ந்த பிறகு ஸாயியினுடைய புனித போதனைகளினால் இந்திரிய நிக்ரஹத்தை நன்றாய்ப் பழகி, உடைக்க முடியாத இரும்புத்தூண் போன்ற மனோவுறுதியைப் பெற்று, மானிட ஸ்வரூபமே களையப் பெற்று தெய்வீக ஸாதுவின் ஸ்வரூபமடைந்ததால் தன் சரீரத்தையும் உணர்ச்சியே யற்றதாகச் செய்துகொண்டு விட்டார். எந்தவிதத்திலும் இந்திரியங்களால் துன்பம் என்பது அவரிடம் கிடையாது. இல்லாவிடில் துஷ்டப் பையன்கள் கூடி செய்யத்தகாத காரியம் செய்தபோதும் அதை அவர் சகித்திருக்க முடியுமா? அதன் விபரம் பின்வரும் அத்தியாயங்களிற் காணலாம்.

அவருடைய மனதை இவ்வளவு உறுதியுள்ளதாக்கி அதை அசையாமற் செய்த மகத்தான செய்கை, ஸ்ரீஸாயியைத் தவிர, வேறொருவராலும் முடியாது. ஸர்வ சக்தியுள்ள அந்தப் பரமபுருஷன், அர்ஜுனனுக்குக் கிருஷ்ணன் சொன்னதுபோல் "நீ சும்மாயிரு, நான் முடித்து வைக்கிறேன்." என்று சொல்லி அப்படியே ஒவ்வொன்றாய் நிறைவேற்றியும் வைத்தார்.

ஒரு நாள் இவர் கண்ட ஒளி வட்டத்தில் ஓர் ஸம்பவம் உண்டாயிற்று. பதினாறு வயதுள்ள பெண்களிருவர் வந்து இவரைப் பிடித்திழுத்துக்கொண்டுபோய் வானளாவிய ஸ்தம்பமொன்றில் கட்டிப்போட்டு இவர் என்ன கெஞ்சியும் விடுவிக்காமல் அங்கிருந்த ஏராளமான பெண்களெல்லாருமாய்ச் சூழ்ந்து கொண்டதும், அதிலிருவர் இவரைப் பார்த்து, நீயும் எங்களைப்போல ஸ்திரீயாக மாறுவதாக உறுதி சொன்னால்தான் விடுவோமென்க, அது சாத்தியமா என இவர் சந்தேகிக்கவே தாங்களே இவரை ஸ்திரீயாக மாற்றி விடுவதாகச் சொல்லி, இவருடைய கைகளில் நிறைய கண்ணாடி வளையல்களைப் போட்டுப் பெண்ணுருவாக்கிக் கட்டையவிழ்த்துவிட்டு ஒவ்வொருவரும் ஒரொரு நற்கருத்துள்ள கதைகளைச் சொன்னார்கள். தோற்றம் மறையவே அவர்கள் சொன்ன கதையின் கருத்தவ்வளவும் தன் மனதில் நன்றாய்ப் பதிந்திருப்பதைக் கண்டும், அதிலிருந்தே தானும் ஒரு "பெண்"ணென்ற உணர்ச்சி அடிக்கடி மனதிலெழுவதையும் எண்ணி ஆச்சரியமடைந்தார். இப்போதுங்கூட அவர் தனக்கு இவ்விஷயமெல்லாம் நினைவுக்கு வரும்போது தான் ஸ்திரீயாகவே யிருப்பது போலும், அச்சமயம் தான் பகவானுடைய அகண்ட பாக்யவதியான பார்யை என்றும் நினைக்கிறார்.

இம்மாதிரி தம் இனத்தையும் மறக்கும் நிலைமை எல்லா அடியார்களுக்கும் அமைந்ததுதான். பக்தியின் உச்ச நிலையே காதலாகப் பரிணமித்து, இறைவனை நாயகனாகவும், தம்மை நாயகியாகவும் பாவித்து அன்பின் சிகரத்தை யடையச் செய்து விடுகிறது. கற்புடைய உத்தமி தனது பர்த்தாவை வழிபடும் முறைக்கு ஈடாக வேறெதுவும் சொல்லமுடியாததலால், அந்த ஒப்பற்ற பரிசுத்த அன்பின் வழியைக் கடவுளுக்கும் உகந்ததாகக் களித்துப் பின்பற்றுகின்றனர் பக்தர்கள். அந்த பாவத்திலே பயம் என்பது பறந்துபோய், சொந்தம் எல்லையற்று நிற்க பக்திப் பெருங்காதலென்னும் பிரவாகம் உள்ள மடையுடைந்து பெருகி விடுகிறது. சைவ, வைஷ்ணவ, ஆசார்யர்களுடைய சரித்திரங்களில், பகவானிடம் முறையிட்டும், குறையிரந்தும், தூது போக்கியும் அவனைக் காணவில்லையே யென்று பதறியும், கண்டு அடைந்த ஆனந்தத்தைப் போற்றி மனமுருகியும், அவர்கள் உள்ளத்திலெழுந்த அமுதம் போன்ற பாட்டுகளிலே நாயக நாயகி பாவமே பெரிதும் விசேஷித்திருக்கிறது. தக்ஷிணேசுவர பரமஹம்ஸருடைய சரித்திரத்தில், அவர் தன்னை இறைவனுக்குகந்த நாயகியாகக் கருதித்தான் பதிவிரதைகளுடைய சிநேகத்தையே நாடியதாக நினைத்தாரென்று காணப்படுகிறது. ஸ்ரீஸாயி நாதர் தன்னை ஸ்திரீயாகவே பாவித்துக் குரலை மாற்றிப் பேசி ஸ்திரீபோலவே நடிப்பார். அவருடைய சிஷ்யர் உபாஸனி மகாராஜரோ இன்னும் அதிகம்: தன்னை ஸ்திரீயாக எண்ணித் தன்னைக் காணவரும் பெண்களிடம் குங்குமம், வளையல், எல்லாம் கேட்பார். சில ஸமயம் என் குழந்தை எங்கே? என்பார். இதைக் கேட்டெல்லோரும் சிரிப்பார்கள். இவருக்குச் சித்தம் பேதித்துவிட்டது என்றே

நினைக்கலானார்கள். உண்மைதானே, அவரோ கடவுள் பித்துக் கொண்டவராய் விட்டார். அவர் பேச்சும் எல்லாருடைய கண்ணுக்கும் பித்தாய்த்தானிருக்கும். பிறகு ஸகோரியில் அடிக்கடி புடவையும் கட்டிக்கொள்ளத் தொடங்கிவிட்டார். பதிவிரதைகளும் பரிசுத்தமுமுள்ள ஸ்திரீகளுடன் எப்போதும் தாராளமாகப் பேசிப் பழகி வந்திருக்கிறார். ஸன்யாஸியின் உடைக்குப் பதிலாக இரண்டு கஜம் நீள, அகலமுள்ள சாக்குப் பையினால் தன் தேகத்தைச் சுற்றி மறைத்துக் கொண்டிருப்பார். இதைப் புத்தகத்திலுள்ள படத்திலிருந்து காணலாம். அதிகமாய் விஸ்தரிக்கவேண்டியது அனவசியமாதலால் இத்துடன் நிறுத்தப்பட்டது.

ஆனால் படிப்போர்க்கு, உபாஸனிரிஷி காமத்தை வென்றவராயிருக்கக் கூடுமா! என்ற சந்தேகமுண்டாகலாம். இதைப்பற்றி விவரிப்பதும், புத்தி குறைவான செயலாகவே தோன்றலாம். புனா, பம்பாயிலுள்ள சில மூடர்கள் அவரைப்பற்றி அவதூறு செய்ததால் இவ்வளவு விரிவாக அவருடைய வாழ்க்கையை யெடுத்துரைக்க வேண்டியிருந்தது. ஆயிரக்கணக்கான பெரிய மனிதர்களும், புத்திமான்களும் ஆண்பெண் இருபாலரும், பலவயதினரும், அவருடன் நெருங்கிப் பழகினவர்களில், ஒருவராவது, ஒருமுறையாவது அவர் கெட்டவரென்று சொல்லவில்லை. இருபது வருஷகாலமாக அவரிடம்பழகி வந்த இத்தனைபேருமா மறைக்கமுடியும்? அவர் இருபாலருடனும் தாராளமாய்ப் பழகி வந்திருக்கிறார். அப்படிப்பட்ட துர்ச்சிந்தனை கடுகளவாவது அவரிடம் இருக்குமாயின், அவரிட மணுகும்பக்தர்களை ஒருஸமயமில்லா விட்டாலும் ஒருஸமயம் அது பாதிக்காமலிருக்குமா? உண்மையாக பக்தர்கள் அவரிடமிருந்து பிருமச்சரிய போதனை

யும், அதை யனுஷ்டிக்க வேண்டிய பலத்தையுமே யடைகிறார்கள். ஸ்திரீகளுங்கூட இவ்வுலகப்பற்றை யலம்பி விட்டு புரந்தர விடலனுக்கே தங்களை யர்ப்பணஞ் செய்து விட்டு, பாட்டும் பஜனையும் பாகவத கைங்கரியமும் செய்வதி லீடுபடுகிறார்கள். அவருடைய பரிசுத்தத்தைப் பற்றியும் கிருகஸ்தராயிருந்தபோதுங்கூட அவர் இந்திரிய நிக்ரஹமுள்ளவராகவே யிருந்தாரென்று பலர் நம்பத் தக்க ருசுக்களுடன் அனுபவ வாக்குமூலம் கொடுத்திருக்கிறார்கள். இனி அதிகம் சொல்லவேண்டியதில்லையாகையால் இந்த வயோதிக ஸாதுவின்மீது அபாண்டமாக வெளிவந்த பழியைச் சந்தேகமின்றித் தள்ளிவிடலாம்.

பாவ ஸம்பந்தமுள்ள சிந்தனைகளையெல்லாம் வென்ற இந்த நிலைமையானது அவரை உள்ளும் புறமும் கற்சிலை போலாக்கி ஸாதுக்களுக்குள்ள தெய்வ ஒளியை வீசச் செய்தது. மாசற்ற இந்த மகரிஷியிடம், மக்களெல்லாரும் எல்லையற்ற நம்பிக்கைகொண்டு தங்கள் பக்தி மார்க்கத்தைச் சிரத்தையோடனுசரித்து மோக்ஷ ஸாதனம் பெற முந்துகிறார்கள்.

## அத்தியாயம்—16

## பொன்னாசையை யொழித்தல்

* ஆற்றுப் பெருக்கென் றலைத்திழுக்கும் ஆசையெலாந்
தோற்றமெனக் காட்டித் தொலைத்தார் குருநாதர்.

மகாராஜரிடமிருந்த சொற்பக் காசையும் ஸாயி தக்ஷிணையாக வாங்கிக்கொண்டபின் அவர் கையில் வைத்துக்கொள்ளக் காசொன்றுமில்லை. மாதவராவிடம்

எப்போதோ கொடுத்து வைத்திருந்த சிறு துகையையும் ஸாயி வாங்கிக்கொண்டு விட்டார். இடுப்பு வேஷ்டிகூட கந்தலாய் விட்டது. ஊரிலிருந்து ஸகோதரன் புது வேஷ்டி அனுப்பினுல் அது உடுத்திக்கொள்வதற்கு முன்பே திருட்டுப்போய்விட்டது. இந்த கஷ்டங்கள் தான் பொருள்மேல் பற்றறச் செய்யும் என்று நினைத்தே ஸ்ரீ சாயியே அதைப் போக்கடித்திருக்கலாம். ஏனெனில் ஆசையென்பது மனிதனை அந்தகாரத்திற் கிழுக்கும் நரகத்வாரமல்லவா! இதை விலக்குவது மிகக் கடினம். உலகமே இதற்கடிமைப் பட்டிருப்பதனுல் மன வுறுதி யற்ற மக்கள் இதை விலக்க அசக்தர்களாகின்றனர். இருந்தாலும் தீராத பாவப்பிணியாகிய இதை வழக்கத் தினுலும் நிராசையினுலும் நிவர்த்திக்கலாகும் என்று ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கூறியிருக்கிருர்.

இருபத்தாறு வயது வரைக்கும் வறுமையின் கொடுமையை சகிப்பிற்கு மீறி யனுபவித்திருப்பதால், ஜீவாதாரத்திற்கும், சுகவாழ்வுக்கும், பணம் எவ்வளவு அவசியமானதென்று மகாராஜர் உணர்ந்திருக்கலாம். அல்லது அத்தகைய வறுமையை எதிர்த்துப் போராடியதில், பொருளின்றியே காலந்தள்ளக் கூடிய சக்தியையும், பொருளாசையை யடக்குந் திறமையையும் அடைந்திருந் தாலுமிருக்கலாம். வைத்தியத்தொழிலில் ஏராளமாக வந்த பணமும், பின்னர் குவாலியர் பிரதேசத்தில் வந்த நஷ்டமும் அவர் குணத்தை வெளிப்படுத்தி யிருக்கும். இருந்தாலும் பணம் சம்பாதிப்பதில் அந்நாளில் ஆசை கொண்டிருந்தவரல்லவா! பணத்தின் அந்தப் பழைய வாசனைகள் மனதில் வேரூன்றி யிருந்தாலு மிருக்கலா மென்றெண்ணியே அவைகளை நீருக்கத்தக்க தோற்றங் களை ஸ்ரீசாய் உண்டாக்கினர்.

ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒருமுறை தன்னைப் போன்ற கரிய உருவமொன்றைக் கண்டார். பகவானைப் போன்ற சோதி யுருவமொன்று ஆயுதபாணியாக இவரிடமிருந்து கிளம்பி அந்தக் கரிய உருவத்தை ஸம்ஹரித்ததைக்கண்டு தன்னுடைய பாபம் அழிக்கப்பட்டதென் றறிந்தார்.

அதேபோல, மகாராஜர் ஓர் தோற்றம் கண்டார். அதில் ஓர் நாள் எங்கெல்லாமோ அலைந்து ஸாயி உட்கார்ந்திருக்கும் ஓர் பழைய கட்டடத்திற்கு வந்து சேர்ந்தார். ஸாயி இவரைத் தன்னருகிலழைத்து இவருடைய காதைத் தன் வாயினருகே கொண்டு வந்து உபதேசம் செய்யப்போகும் போது, மகா ராஜரைப் போலவே ஓர் அழுக்கடைந்த உருவம் அவருக்குப் பின்னால் நின்றுகொண்டு "ஸாயி பாபா சொல்வதைக் கேளாதே. நான் சொல்வதைக் கேள்" என்று சொல்லி பிடித்திழுத்தது. அதைக் கவனிக்காதே என்று ஸாயி சொல்லியும், அவருடைய உபதேசத்தைக் கேட்கவொட்டாமல் அது தடுத்துக் கொண்டே யிருக்கவே, ஸாயி அதன் தலைமயிரைப்பற்றி யிழுத்துக்கொண்டு போய் சேறு நிரம்பிய ஆற்றில் புரட்டி யெடுத்து, கட்டைகளைப்போட்டு எரித்து சாம்பலாக்கிவிட்டார். தானே அது என்று நினைத்திருந்த காசிநாதருக்கு பயம் அதிகமாய்விட்டது. அவர்—நீங்கள் ஸம்ஹரித்த மனிதன் நானல்லவோ! என்னையேன் இப்படிக் கொன்று விட்டீர்?

பாபா:—ஸந்தேக மின்றி நீதான் அது, யாரில்லையென்றார்கள். நீ அந்த பாவரூபத்திலிருந்தாய். அது நமது முயற்சினால் கைகூடவேண்டிய பலனுக்கு இடையூறுதலால் நான் அதை அழித்து விட்டேன், இப்பொழுது நீ பரிசுத்தமாய் இருக்கிறாய்.

காசிநாதர்:-என் காதில் நீங்கள் என்ன சொன்னீர்கள்?

பாபா:—இப்போ சொல்வதற்கு ஒன்றுமில்லை. போகப் போக உனக்கே தெரியும், வந்த விக்னம் நிவர்த்தியாய் விட்டது. அவ்வளவுதான், என்று சொல்லி ஸாயி மறைந்து விட்டவுடனே ஸாயிபாபாவுடைய குருவானவர் வந்து மகாராஜருடைய காலில் நமஸ்கரித்துவிட்டுப் போனார். அதை தன்னைபோன்ற வேறோர் உருவமும் கவனித்துக் கொண்டிருந்ததாகக் கண்டார்; தோற்றம் மறைந்தது.

இதிலிருந்து தன் குருவுடைய குருவைக் காட்டிலும் தன்னை ஸாயி மேம்படுத்துவதாகவும், தன்னை பரிசுத்தமாக்கியிருப்பதாகவும் அறிந்து மனம் பூரித்தார்.

மற்றோர் நாள் உண்டான தோற்றத்தில்.—ஸாயி இவரை அழைத்துக்கொண்டுபோய் ஓர் பெரிய மாளிகையையும் அங்குள்ள இடங்களையும் காட்டி, ஒரு இருண்ட பள்ளத்தருகே வரும்போது அதிலிருந்து கறுத்த கையொன்று மேலெழுந்து மகாராஜருடைய காலைப்பற்றி உள்ளே யிழுக்கத்தொடங்கியது. என்னையேன் இழுக்கிறாய்? கைகளை எடு. நீயார்? என்று கத்தினர் மகாராஜர். விடுகிறாயா! இல்லையா! இல்லாவிடில் நான் ஸாயியிடம் சொல்வேன் என்றார். ஸாயி பேரைச் சொன்னதும் விட்டுவிட்டது. அந்த பள்ளம் என்ன தெரியுமா? அது தான் நரகமென்றும் தானங்கு வந்தது தவறென்றும் அறிந்துகொண்டார் அவர். பிறகு அவரிடம் யாரோ ஒரு விளக்கைத்தரும்போது, இதை வாங்கிக் கொள்ளலாமா! வேண்டாமா! என்று யோசித்தார். சூர்ய சந்திரர்கள் வானத்தில் ஒருங்கே தோன்றுவதைக் கண்டார். அப்போ ஸாயி அவர் முன் வந்து "சூர்ய சந்திரர்களுடைய வெளிச்சம் நமக்கவசியமில்லை; இந்த வெளிச்

சம் அவைகளைவிட எவ்வளவோ மேலானது. இதை வாங்கிக்கொண்டால் எல்லாத்துன்பங்களையும் விலக்கி, வருங்காலத்தில் இதன்மூலமாக கணக்கற்ற ஜனங்களுக்கு பிரகாச மளிக்கலாமே" என்றதும், மகாராஜர் விளக்கைப்பெற்றுக் கொண்டார். இந்தத் தோற்றத்தில் ஸ்ரீசாய் ஞானமென்னும் அவியாத அகண்ட தீபத்தைத் தன் சீடனுக்குத்தந்து அறியாமை யிலிருந்து அவரை விடுவித்ததாகக் கருத்து ஏற்படுகிறது.

இந்தத் தோற்றங்களில் சிலவற்றை அவை ஏற்படுவதற்கு முன்பே சூக்ஷமமாகத் தெரிவித்திருந்தார் ஸாயி. "உன் தலையில் பாதி நான் வாங்கிக்கொண்டு என் தலையில் பாதி தருகிறேன்" என்றொருதரம் சொன்னார். கொஞ்ச நாளைக்குப்பின் அப்படியே தன் மூளையிலிருந்த எல்லாவற்றையும் யாரோ துஷ்டர்கள் சுரண்டித் தின்றுவிட்டு ஒடினாற்போல மகாராஜருக்குத் தோற்றமுண்டாயிற்று. தீர்க்கதரிசியான ஸாய் மற்றொருதரம்—"விஷயங்களைப் புறக்கண்ணால் பாராதே, அகக் கண்ணால் பார். அப்போதான் மெய்ஞ்ஞான மேற்படும்" என்று சொல்லி யிருந்தார். சில நாளைக்குப்பின் மகாராஜருக்கு ஒரு ஸ்திரீ தன்னை யழைத்துச்சென்று வேடிக்கை காட்டுவதாகச் சொல்லி குருடாக்கி விட்டதாகவும், அந்தக் கண்களால் ஏன் பார்க்கிறாய்? அவை போனாலென்ன? அவைகளிருந்தால் நீ மேலும் பாவத்திற்குத்தான் ஆளாவாய். அவைகளால் பார்ப்பதைவிட குருடாயிருப்பது நலம் என்று சொல்லி மறைந்ததாகவும் தோற்றமுண்டாயிற்று. நோயுற்ற சிசுவின் சௌக்யத்தை விரும்புந் தாயானவள் எவ்விதம், அதைக் காப்பாற்றி, ஒவ்வொரு சிறிய விஷயத்தையும் கவனித்து அதன் க்ஷேமத்திற் கேற்றதைச் செய்வாளோ, அதுபோலவே, தாயாகிய ஸத்குருவும் பல

நோயுற்ற மகவாகிய சீடனின் க்ஷேமத்திற் கண்ணுங் கருத்துமாயிருந்து அனுகூலத்தைச் செய்கிறார். இது மிகவும் சிரமமும் பொறுப்பும வாய்ந்ததாகும்.

மற்றோர் தோற்றத்தில், ஓர் நூதன இடத்திற்கு ஸாயி இவரை யழைத்துப்போய் பிரும்மாண்டமான தோர் பணக்குவியலையும், அதன்மேல் ராஜசயனத்தில் சயனித்திருக்கும் தேவபுருஷனையும், காட்டி, அவனைப் பார்! என்றார். யாரது என்று கேட்டார் மகாராஜர். உனக்குத் தெரியவில்லையா? நீதான் அவன். உன் புண்ணிய சொரூபமே அவன். இந்த பணக்குவியலும் அதோ அறைகளில் நிரப்பி வைத்திருக்கும் தனமும் எல்லாம் நம்முடையதுதான், இந்த மாதிரி ஆயிரக்கணக்கான வீடுகளும் தனக்குவியல்களும், நமக்கிருக்கின்றன. அதெல்லாம் நம்முடையதுதான் என்று உனக்குந் தெரியப் போகிறது பார்! என்று சொல்லி வெளியே யழைத்து வந்தார், காக்ஷி அத்துடன் மறைந்தது.

தன் சீடனை யாவரும் வணங்கத்தக்க மகிமை யுள்ளவனாகச் செய்யவே, ஸ்ரீஸாய் அவருடைய அகலோகத்தில் நித்தியப் பொருட் குவியலைக் காட்டி, புறத்தில் அழியுந் தன்மையுள்ள பணத்தாசையை அலம்பினார். சிற்பியானவன் வெறுங்கல்லைத் தன் சிருஷ்டித் திறமையைக் கொண்டு அபூர்வமான விக்ரகமாக்குவதைப்போல, ஸாயியும், தனது தெய்வ சக்தியினால் மகாராஜரை குருவடிவமாய்ச் செய்து வந்தார். விக்ரகம செதுக்கக் கல்லும் நல்லதாயிருக்க வேண்டாமா? பிறவியிலேயே இந்திரிய நிக்ரஹமும், தைரியமும் உள்ளவராக மகாராஜர் அமைந்ததனால், பறிக்கப் பறிக்கத் தெளிந்தூறும் நீரூற்றுப்போல் அவர் மனதில் தமது லக்ஷியத்தை ஸ்ரீசாயியினால் சிருஷ்டிக்க முடிந்தது.

# அத்தியாயம்—17

## ஞானமும், ஞானதிருஷ்டியும்

* ஒன்ருய்ப் பலவா யுலகா யெனதுள்
குன்ரு அறிவாய்க் குலவும் சுடரே.
நின்ருண் மலரே மறவா தடியேன்
கன்ரு யிரங்கும் வகைதந் தருளே.

ஞானம் ஸர்வமதங்கட்கும் கடவுளைப்பற்றிய பொது லக்ஷியம். சரீரப்பற்றின்மையும், தெய்வ பக்தியும், எல்லாவுயிர்களுக்கும் இரங்குவதும், அன்பும், ஞானத்திற்கு ஆதாரங்கள், உபாஸனி பாபாவின் பரம்பரையோர் உத்தவர்கள். ஆதிசங்கரருடைய அத்வைதத்தைக் கொண்டவர்களாயிருந்தும், ஒரு சிலரைப்போல சைவ, வைஷ்ணவ பேதமின்றி ஸ்ரீராமானுஜருடைய விசிஷ்டாத்வைதத்தையும் அனுஷ்டிப்பவர்களானதால் மகாராஜரும் மதபேதமோ, மதத்துவேஷமோ இல்லாதவராய் ஸமரஸபாவமுடையவராய் எல்லாம் பரம்பொருளே என்று அறிந்து தெளிவடைந்தார். இந்த ஸமபாவம் அவர்க்கு ஒரு நிலைக்கு வந்து நிற்க ஸ்ரீஸாயியினுடைய சக்தியினுல் விளைந்த அனுபவக் காக்ஷிகளே காரணமாகும்.

இந்த தரிசனங்களில், சரீரம் அழியும் பொருளாகவும், நான் வேருகவும் தோன்றுகிறதே. அப்படியானுல், இந்த சரீரமல்லாத நான் யார்? ஒவ்வொரு சரீரமாக இவ்வான்மா எடுக்கிறதே! ஆனுலந்த காரண சரீரத்தையெடுத்துக்கொண்டு பிறக்கிறதே! அதென்ன? என்று மகாராஜர் மனதில் சங்கையுண்டாயிற்று. இதற்கு அவ

ருக்கேற்பட்ட கடைசி தரிசனத்தில் (ஸ்ரீகிருஷ்ணன் அர்ஜுனனைப் பார்த்து,—ஹே பார்த்த! நான் எடுத்ததும் நீ எடுத்ததுமான அத்தனை பிறப்பும் எனக்குத் தெரியும். ஆனால் உனக்குத் தெரியாது, என்று சொன்னதைப்போல) ஸ்ரீஸாயியும், தானெடுத்த பல பிறவிகளையும், மகாராஜரெடுத்த பல பிறவிகளையும் அவருக்குக் காட்டி, அவைகளிலொருதரம், தான் சீடனாகவும் மகாராஜர் குருவாகவு மிருந்ததையும் காட்டி, ஆத்மாவுக்குப் பேதமில்லை யென்றும், நிலையற்ற, சரீர, உலக, மாயையினால், நீ, நான், என்ற பேதம் தோற்றுகிறதென்றும், நன்மையோ, தீமையோ, நாம் செய்யும் கருமத்தின் பயனாலேயே துவந்துவமாகிய பிறவி உண்டாகிறதென்றும் தெளிவாக்கினார். பாவரூபத்தைக் காட்டினபோது அதை அவரிலிருந்து பிரிக்கக்கூடுமென்பதையுங் காட்டினார். பிறகு புண்யரூபத்தைக் காட்டினபோது மகாராஜர், "இது என் புண்யரூபமும் நீர் அழித்த அது என் பாவரூபமுமானால் நான் யார்?" என்று கேட்டார்.

ஸாய் :—நீ இவையிரண்டையும் கடந்து வேறானவன், எது நானோ அதுவே நீ என்றார்.

இதுவே குருவின் மகாவாக்கியமும் உபதேசமும். மகாராஜருக்கு நான் வேறு நீ வேறு என்ற பேதமெல்லாம் பொய் என்று வர வர வெளிச்சமாய் விட்டது. தேகம், அழியும் பொருளென்று பால்யத்திலிருந்தே அவர் பற்றில்லாமல் இருந்து, பிராயோபவேசத்தால் சாகவும் முயற்சித்தார். ஆனால் இறைவன் திருவருளே வெற்றி பெற்றதனால் அது தடைப்பட்டது. சில வருடங்களான பின் ஸம்ஸார மேற்படவே, உலகத்தாரைப் போலத் தானும், உத்தியோகம், பணம், கல்வி, வாழ்வு, தேகம், இவைகளைப்பற்றி, அக்கரையுள்ளவரானார். அப்

படிப்பட்ட மனோநிலையில்தான் அவர், பணம் ஸம்பாதிக்கவும், அதன் பின் தேகசௌக்யத்திற்காகவும் அலைந்தது. இவ்விரண்டும் அவரை விட்டகன்றபின் சும்மா அலைந்து கொண்டிருந்தார். இவ்வித மனோபாவமுள்ளவரை ஸ்ரீ ஸாய் பொறுக்கியெடுக்கவே, தேக சௌக்யம் உடனே உண்டாயிற்று. ஏராளமான தத்துவப் பொருளுங் கிடைத்தது. இது, இரண்டுந் தந்தாற் போதுமா? மேலான "அறிவை"யுந் தந்து, அகண்ட வாழ்விலே நித்தியானந்தத்தை யடைய வல்ல சக்தியுந் தந்தார்.

ஸாதாரணமாக, எப்போதும் ஒருவன் பணம், பணம், என்றே நினைத்துக்கொண்டு பணத்தாசையிலே மூழ்கி அதற்குத் தானடிமையா யிருந்தால் அதனினுங் கொடியது வேறொன்றில்லை. ஆனால் பணத்தையும் நன்மைக்காகவே தான் கடவுள் சிருஷ்டித்திருக்கிறார். மக்கள் அதைத் தவறான வழியிலே உபயோகிக்க, சிருஷ்டிக்கவில்லை.

* காசைப் படைத்த கடவுள்—நல்ல
காரியஞ் செய்ய வென்றேயதை வைத்தான்
மோசக் கருத்துடன் மக்கள்—அதை
மூடப் பிரயோகம் செய்தே தடுமாறி
பாவங்கள் தேடவுமாமோ—பின்பு
பாழும் பணம்என் றிகழ்ந்திடலாமோ!

பணத்தைத் தனக்கடிமையாக்கிக் கொண்டு அதனால் பகவானுக்குப் பிரீதியான ஸத்கருமங்களைச் செய்து, அந்த பணத்திடம் "ஆசை" என்பதை மாத்திரம் அலம்பி விட்டவனாயிருந்தால் அந்த பணத்தினால் தீமைக்குப் பதிலாக நன்மையே விளையுமென்பதில் ஸந்தேகமில்லை. பகவத் கைங்கரியத்திற்காகவும், பாகவத கைங்கரியத்திற்காகவும் துணிந்து கள்வரான பக்தர்கள் எத்

தனைபேர்! ஸ்ரீஸாயியினுடைய வாழ்க்கையிலும், மேற்கண்ட உண்மையை நிதரிசனமாய்க் காணலாம். தினந்தோறும் கணக்கிலடங்காத ஜனங்கள் பணமும் பொருளுமாய் அவர் காலில் கொண்டுவந்து கொட்டினாலும் அவரதையெல்லாம் "துச்ச"மாக நினைத்தாராகையால் அவருடைய மகிமை குன்றாமல் பிரகாசித்தது. அறிந்த ஞானிகளை லக்ஷ்மியினால் கட்டமுடியாது. "பணம் எப்படி வெளிப்பகட்டோ, அதுபோலவே தேகமும்...." உண்மையான ஆன்மாவின் வெளிப்பகட்டாதலால் ஆன்மா மட்டுமே கவனிக்கத்தகுந்ததென்றும் பகவானையே யண்டியிருந்தால் அது மேன்மையடையு மென்றும், மகாராஜருக்கு அவர் உபதேசித்தார். அவரும் இதைத் தன்னை யடைந்தவர்களுக்கு உபதேசித்தார்.

மகாராஜருக்குக் கடைசி தரிசனத்தில் சிலஜீவர்களின் ஏகத்வத்தை போதித்தபோதிலும், தோற்றம் மறைந்ததும், ஸாயியிடம் குரு பக்தி, முதலிய துவைத பாவமாகிய திரை அவரை மூடத்தான் செய்தது. ஸ்ரீகிருஷ்ணன் தன் வாயினுள்ளே விச்வரூபத்தை யசோதைக்குக் காட்டினாலும், தன் லீலாவினோத விளையாட்டுகளால் அவளுடைய குழந்தையாகவே யிருந்ததுபோல ஸாயியும், ஆன்மா ஒன்றே என்பதைப் போதிப்பதற்காகப் பல தரிசனங்களைக் காண்பித்திருந்தும், சீடருக்கு அவர் தன்னுடைய மகத்தான பூஜித ஸத்குரு, என்ற பாவம் மாறவில்லை.

நீ கடவுளின் அடிமை. கோவில்லில்போயிரு என்று ஸாயி சொன்னபின் இவர் முன்போல அடிக்கடி மடத்திற்குப் போகாமல் சமாதி ஷட்க ஸம்பத்தை யடைய வேண்டி நிச்சல சித்தத்துடன் பகவானை தியானித்துக் கொண்டிருந்தார். பல தரிசனங்களையும் அவற்றின்

அனுபவங்களையுங் கடந்து இரண்டொரு வருடத்தில் ஞான திருஷ்டியினால் அறிந்துசொல்லும் சக்தியையடைந் தார். இதைப்பற்றி பதஞ்சலி யோகஸூத்ரத்தில் 3ஆவது பாதத்தில் பதினாறுமுதல் ஐம்பத்தாறுவது ஸூத்ரங் களில் ஓர் யோகி பிறர் மனதை யெவ்விதம் அறிகிறானென் பதிலிருந்து கைவல்யமடையும் வரையில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த ஸாதனமானது தனக்குத் தெரியாமலே ஏற்படுவதுமுண்டு.

டாக்டர் சிதம்பரம்பிள்ளை யென்பவரும் மற்றுஞ் சிலரும் மடத்திற்கு வந்து ஸாயியைத் தரிசித்துவிட்டு அடுத்தாற்போல் கோவிலுக்கு வந்து மகாராஜரையும் தரி சித்துவிட்டுப் போவார்கள். ஆனால் கோவிலுக்கும் மடத்திற்குமிடையே வெகுதூரமிருந்தாலும், மடத்தில் நடந்தவைகளை அங்கிருந்து வருவோர் ஆச்சரியப்படும் படி அப்படியே மகாராஜர் சொல்வார். அதுவும் எவ னுக்கு சொல்லவேண்டுமோ அவனுக்குமாத்திரம் அது தெரியும்படி (முன் ஸாயி இவர்க்குச் சொன்னதுபோல) சொல்வார். ஜனங்களெல்லாம் இவருடைய ஞான திருஷ்டியைக் கண்டு பிரமித்தனர்.

ஒருமுறை நடந்த ஸம்பவம் என்னவென்றால்,

ஸகோரிக்கு நாற்பது மைல் தூரத்திலுள்ள நிவாஸ் என்ற ஊரிலிருந்து நரஹரிலோண்டா என்பவன் சில ருடன் ஸாயியைக் காணப் புறப்பட்டுவந்தான். வழியில் பார்ப்பனனை தான் போய் ஸாயியின்காலில் விழுவதா என்று மிகக் கேவலமான எண்ணம் தோன்றி அருவருப் புடனேயே வந்துசேர்ந்தான். மற்ற எல்லாரும் ஸாயியை நமஸ்கரித்தனர். ஸாயி அவர்களுடைய காணிக்கைகளை ஏற்றுக்கொண்டு ஆசிர்வதித்தார். இந்த நரஹரி அவர் அருகே வர நினைத்தபோது அவர் பார்த்தபார்வை அவனை

நடுங்கச் செய்துவிட்டது. தான் பக்திஹீனமாய் நினைத்ததை அவரறிந்துகொண்டாரென்று தெரிந்து அவன் அவருடைய மன்னிப்பைப் பெறவேண்டுமென்று மனதில் வேண்டிக்கொண்டு ஸாயியைப் பார்த்தான். அவன் பார்த்தபோதெல்லாம் அவர் கோபத்துடனேயே பார்த்ததால் கிட்டவும் நெருங்கமுடியாமல் அங்கிருந்து எல்லாருடன் மகாராஜரிடம் வநது சேர்ந்தான்.

கால்களை நீட்டி உட்கார்ந்திருந்தாரவர். நரஹரி அவரை நமஸ்கரிக்கவந்ததும் காலைத்திருப்பிக்கொண்டு, அவனை வணங்கவொட்டாமல் செய்ததுமன்றி "நீ ஸாயியை தரிசிக்கமுடியாதவன். என்னிடம் உனக்கென்ன வேலை?" என்றார். நரஹரி மிக்க தாழ்மையுடன் தனது மதியீனத்தை க்ஷமிக்கவேண்டுமெனக் கேட்டும் அதே வார்த்தையையே சொல்லி அனுப்பிவிட்டார்

மற்றொரு ஸம்பவம் என்னவென்றால்,

ஒரு குருடன் ஸாயியிடம் போய் தனக்கு பார்வை தரவேண்டுமென்று பிரார்த்தித்தான். அவர் ஒன்றுமே சொல்லாமல் மௌனமாயிருந்து விட்டதால், மகாராஜரிடம் வந்து முறையிடவே, அவர் அவனைப் பார்த்துக் கண்ணீர் விட்டு, "நீ மிக நல்லவன், ஸ்ரீ ஸாயியைப் போன்ற தெய்வ புருஷரிடம் வந்தபோது ஞானக்கண்ணைத் திறந்துவிடும்படி வேண்டாமல் பாமரரைப்போல இந்த ஊனக்கண்ணுக்காக ஏன் கெஞ்சுகிறாய்? இந்தக் கண் பெறுவதால் பாவமேயொழிய பலனொன்றுமில்லை. ஸர்வசக்தியுள்ள ஸாய் அதைத் தரக்கூடியவர்தான். உனக்கு ஆயுளதிகமில்லாவிடில், புறக்கண் தந்துதானென்னபலன்? அவரிடம் திரும்பச்சென்று ஞானக்கண்ணைத் திறந்துவிடும்படி கேள். மனிதன் சிறிதாவது

ஞானத்தை யடையவேண்டும். இல்லாவிடில் வேகாத மண்போலத் திரும்பவும் பிறக்க ஹேதுவாகிறான். அவன் ஞானமாகிய தீயில் சுடப்பட்டானாகில் மீண்டும் பிறக்க மாட்டான். நீ ஞானோபதேசம் பெறத்தக்கவன் ஆகையால் ஸாயியிடம் திரும்பிப்போ. என்று, அன்போடு உரைத்தார். இந்த ஆதரவான வார்த்தைகள் குருடனுக்கு மிகுந்த ஆறுதலையளித்தது. அவன் மறுபடி ஸாயியிடம்போய் தன் அஞ்ஞானத்தை விலக்கி ஞானோபதேசம்பெற்று ஒரு மாதத்திற்குள் இறந்துபோனான். ஸ்ரீ ஸாயி. “அவன் இறக்கவில்லை, இறப்பும் பிறப்பு மற்ற நித்தியானந்தத்திலிருக்கிறான். அவனுடைய மனைவி மாயைதான் இறந்தவள்” என்று சொன்னார்.

ஜவ்வார் ஸமஸ்தானத்து சிற்றரசன் பரிவார ஸகிதமாக ஸாயியைத் தரிசிக்கவந்தான். தன் சேவகனொருவனிடம் பழங்களும் தக்ஷிணைகளும் வைத்து ஸரிகை மொகமலிட்டு மூடிய தாம்பாளத்தைக்கொடுத்து மகாராஜருக்கனுப்பினான். சேவகனைப்பார்த்து மகாராஜர் வைதார். அவன் கையிலிருந்த தட்டைப்பிடுங்கி வெளியே சாக்கடையில் விட்டெறிந்தார். பொருளை விஷமாக நினைத்தவராதலால் அவைகளை மதிக்கவில்லை. பிறகு அந்த சேவகனைப்பார்த்து அழுதார். இவருடைய செய்கையெல்லாம் பார்த்து, வியப்பும், பக்தியும், பயமும், நிறைந்து பிரமித்து நின்றானவன். “இனி நீ போகலாமப்பா, உனக்கு ஸாயி கிருபைசெய்துவிட்டார், உன்னை எப்போதும் தன் திருவடியிலேயேயிருத்திக்கொண்டு அவர் ஆசீர்வதிப்பார்” என்று சொன்னார். சேவகன் திரும்பிப் போய்விட்டான். மகாராஜர் சொன்னதன் கருத்தை யாருமறியவில்லை. ஆனால் நான்கு நாட்களிலந்த சேவகன் வாந்திபேதி கண்டிறந்துபோனான். ஸாயியினருகே

அவன் இறந்தானாகையால் ஸாயி அவனைத் தன் திருவடியிற் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டும்.

மகாராஜருடைய சக்தியைப்பற்றி இங்கு இனி அதிகம் விஸ்தரிக்கவேண்டியதில்லை. அவருடைய பிந்திய நாட்களில் இம்மாதிரி நேர்ந்த ஸம்பவங்கள் கணக்கில. மகாராஜர் ஞானதிருஷ்டியினாலறியும் சக்தியுள்ளவராவர். ஆனால் இந்த சக்தி வருமுன்பே அவர் பூஜிக்கத் தக்கவர் என்று ஸாயியே அங்கீகாரம் செய்துகொண்டிருப்பது இங்கே கவனிக்கத்தக்கது.

அக்பரிடமிருந்த பீர்பல் என்ற மந்திரி, பட்டினால் மூடிப் பூஜிக்கப்பட்ட ஓர் பன்றி எலும்பின் சக்தியையும், மகத்துவத்தையும், தன் வேந்தனுக்குக் காட்டியதை, தனது உபந்நியாஸங்களில் மகாராஜர் அடிக்கடி உபமானம் எடுத்துக் கூறுவார். ஓர் விக்ரகத்தை ஸ்தாபிக்கும் போது அதன் சக்தியும், விசேஷ நன்மையும், ஆரம்பத்திலே புலப்படுகிறதில்லை. ஆனால் நாட்செல்லச் செல்ல ஜனங்கள் பக்தியுடனதை வணங்குவதால் பலனேற்படுகிறதல்லவா? இவைகளெல்லாம், அந்தந்த வஸ்துக்களினாலா அல்லது அதைப் பூசிப்பவர்களுடைய பக்தியினாலா என்று இங்கே ஆராய்ந்து சொல்லத் தேவையில்லையாதலாலும், இவ்விஷயம் மிகக் கடினமாதலாலும், அதிகம் எழுதப்படவில்லை. ஆவலுள்ளவர்கள், மகராஜரிடம் நேரில் கேட்டறிந்துகொள்ளலாம். எம்மதத்தினரும் அவரவருடைய கொள்கையின்படியே அவரிடம் போவதில் ஆக்ஷேபணையில்லை. அவருடைய அடியார்களைக் கண்டு அவர் தம் அனுபவங்களையும் தெரிந்துகொள்ளலாம். அவர்களில் சிலருடைய அனுபவங்களை அனுபந்தத்தில் காண்க.

# அத்தியாயம் 18

## துன்பத்தின் சிகரமும், அதன் முடிவும்

* துன்பத்தே வெந்து சுவையான இன்னமுதுக்
இன்பத்தே னிட்டா னிறை.

ஸத்ய ஸங்கல்ப ஸாய், சென்ற விஷயங்களை மகாராஜருக்குச் சொன்னதுபோல, வருங்காலத்தைப்பற்றியும் பூடகமாகச் சொல்வார். ஒருதரம் அவர் தன் சிஷ்யனிடம், நீ அநேக செடிகள் மரங்கள் நட வேண்டும் என்றார். மகாராஜர் அதற்கு, ஆம் பாபா! கண்டோபா கோவிலருகே காலி நிலமிருக்கிறதே. அங்கே துளசிச் செடி நடட்டுமா? என்று கேட்டார்.

ஸாய்—என்ன! துளசியா! அவை வெகுநாளைக்கு இருக்காதே. பல நூற்றாண்டுகளிருக்கக் கூடியதும் மாந்தர்க்குப் பயன் படத்தக்கதுமான மரங்களாக நட வேண்டும். பதினான்கு அரச மரங்களை நீ வைக்கவேண்டும் என்றார்.

மகாராஜருக்கு கோவிலருகே அதற்கு இடம் போராதேயென்ற யோசனை யுண்டாய் விட்டது. பாபா! நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே என்றார்.

பாபா:—எல்லாம் போகப்போக விளங்கும் என்று சொல்லிவிட்டு தன் சுருட்டுக் குழாயை அவரிடம் கொடுத்து, நான் உன்னிடம் வரும்போதெல்லாம் நீ எனக்கு சுருட்டு தரவேண்டும். நீயும் புகையிலை யெரிக்க வேண்டும் நீ எவ்வளவு அதிகமாய் எரிக்கிறாயோ அவ்வளவு ஜனங்களுடைய பாவம் எரிந்து போகும். போய் கோவிலில் இரு. நீ கடவுளுடைய அடிமை என்றார்.

மகாராஜர்க்கு ஸந்தேகமே அதிகரித்தது. கடவுளும், சித்தரும், யோகிகளும், ஸாதுக்களும், மறைபொருளான வார்த்தைகளைக் கூறுவதில் உண்மையியேலே மிகவும் பிரிய முள்ளவர்கள் போலும்! ஸாயியின் சொற்களி லிருந்து, மகாராஜருடைய மகத்துவத்தால் வருங்காலத் தில், கணக்கற்ற ஜனங்கள் நிரந்தர நன்மையை யடை வார்களென்ற ஓர் விஷயம் தெளிவாய்விட்டது. புகையிலை யெரித்தால் ஜனங்கள் பாவமெரிக்கப்படும் என்றதன் அர்த்தம் தான் சீடருக்கு விளங்கவில்லை.

வருங்காலம் மகத்தான தாயிருந்தாலும், தற்காலம் மகாராஜர் பட்ட கஷ்டங்கள் அளவில்லாதது. மனநிம் மதியில்லை, புழுதி நிறைந்த தரையிலும் சுவற்றிலுமுள்ள தேள் முதலியவைகள் அடிக்கடி உபவாஸத்துடனிருக்கும் அவரைக் கடித்துவிடும். இரவில் விளக்கு வெளிச்சமு மற்ற அந்த கோவிலில் அதைச் சுற்றி வயல் வெளியா யிருந்ததால் பாம்புகள் அவருடைய போர்வையிலும் படுக் கையிலும் வந்து ஊறும்; ஜன்னலிலிருந்து இவர்க்கு நேராகத் தொங்கும். காலை ஒரு தரம் சுற்றிக்கொண்டது அவர் அவைகளுடைய விஷப்பல்லுக்குத் தப்பினது கட வுள் கிருபையால் தான். தவிர கோவிலுக்குப் பக்கத்தில் மயானம் வேறிருந்தது. மகமதியர்கள் மொஹரத்திற் குப்பின் தங்கள் தெய்வச்சின்னத்தைக் கொண்டுபோய்ப் போடும் கிணறு ஒன்றுமிருந்தது. இவ்விரண்டிடங்களி லும் பேய் பிசாசு இருப்பதாக எல்லாரும் நம்பினார்கள். இவர் ஏதாவது பயங்கரத் தோற்றங்களைக் கண்டால் ஸாயியிடம் போய் சொல்வார். அவர் நான் தான் உன் னுடனிருக்கிறேனே! என்று தைரியப்படுத்துவார். தவிர ஸாயியைத் தரிசித்து இவரையும் தரிசிக்க வரும் ஜனங்கள் ஏதாவது தக்ஷிணை, பிக்ஷைகளைக்கொடுத்து

உபத்திரவிக்கலானார்கள், பார்ஸிகள் ஏராளமாய் வருவார்கள். பலருக்கு மகாராஜரிடம், விசுவாசமும், பக்தியும் உண்டாயிற்று. ஒருவர் மான்தோல் ஆசனமும், தேனுமனுப்பினர். அதை வேறொருவர்க்குத் தந்தார் மகாராஜர். சிலர் தேத்தண்ணீர் கொடுத்தார்கள். அதைக் கீழே தள்ளிவிட்டு அவர்களைக் கோபித்துத் துரத்தினர். இப்படி ஏதாவது தொந்தரவுகளும் ஏற்பட்டுக்கொண்டேயிருந்தது. இவருக்கோ எல்லாம் விஷமாயிருந்தது. ஹஸ்தரேகா சாஸ்திரியான நரசோபாடி கிராமவாஸி, டாக்டர் பிள்ளை இவர்களைப் போன்றவர்கள்தான் அவர் மனமறிந்து அதற்குத் தக்கவாறு நடப்பவர்கள். இவர்களிடம் தான் மகாராஜரும் தன் மனக்குழப்பத்தையெடுத்துரைப்பார். டாக்டரிடம் ஒருதடவை அவர்:— எனது மாளாத கஷ்டமும் அதன்காரணமும் எனக்குத் தெரியவில்லை. அடிபட்டு வலியின் கஷ்டத்தை எடுத்துரைக்க சக்தியற்று வாயடைக்கப்பட்ட ஊமை போலானேன்! என்றார் இனியாவது இம் மனக்கிலேசந்தீர்ந்து நிம்மதிவருமோ அன்றி இன்னியுந் துன்பந்தானோ என்று டாக்டரிடம் சொன்னார். மனம் துன்ப நிலையிலிருந்து விடுபடுவது இலேசல்லவே, "பாவிமனக் குரங்காட்டம் பார்க்க முடியாதே" என்று வள்ளலாரும் முறையிடவில்லையா?

கஷ்டமென்றால் ஸாமானிய கஷ்டமா! அவரை எல்லாரும் பயித்தியக் காரனென்றெண்ணினார்களே தவிர இரக்கப்படுவாரில்லை. அந்த ஊரில் துருக்கர்கள் வீடுகள் 20 அல்லது 30 உண்டு. அவர்களில் வயதான பக்தியுள்ளவர்கள் பயித்தியக்காரர்களிடம் அன்புடன் நடந்து கொள்வார்கள். ஹிம்ஸிக்கமாட்டார்கள். ஆனால் சிறுவர்கள் இவர்மேல் மண்ணுங் கல்லும் எறிந்து காயப்படுத்தி பரிகஸித்து, வதைத்தார்கள். மகாராஜரோ

அவைகளெல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு அவர்களுக்குக் கதைகள் சொல்வார். ஒரு ஸமயம், அந்த துஷ்டர்களெல்லாரும் சேர்ந்து ஒரு சட்டி நிறைய சாணியும் அமேத்தியமும் கொண்டுவந்து அதிலொரு தடியன், ஏ! பொட்டே! இன்றைக்கு ஏன் பேசாதிருக்கிறாய்! இதோ பார்! உனக்கு மிட்டாய்கள்! என்றான். இவர்களுடைய துஷ்டத்தனத்தை எண்ணி வருந்தி மௌனமாயிருந்தாரவர். மற்றொருவன், அதில் கொஞ்சம் எடுத்து அவன் வாயிலே போடடா! அப்போ பேசுவான் என்றதும், விஷ்டையையெடுத்து அவர் வாயில் அடைத்தார்கள். மகாராஜர் அதைத்துப்பவுமில்லை, விழுங்கவுமில்லை. பையன்களெல்லாரும் அவருடம்பைக் கிள்ளி விஷமம் செய்து, அவரைச் சுற்றிக்குதித்து சத்தமிட்டுக்கொண்டு அரை மணிநேரம் போல, அவரை வதைத்துவிட்டுக் கத்தின வண்ணமே ஓடி விட்டார்கள். சிறிது நேரம் வரைக்கும் அப்படியேயிருந்து பாபா அவர்கள் போனபின் விஷ்டையை கீழே உமிழ்ந்தாரேயன்றி அவர்களை ஒன்றும் சொல்லவில்லை. தமக்கின்னல் செய்தார்க்கும் தாம் நன்மை செய்யுங் குணமுள்ளவராதலால் அந்த துஷ்டர்களுக்கும் கூட தண்டனையை விரும்பவில்லை. ஸத்குரு பீடத்திற்கேற்றவர் அவரென்பதற்கு அவருடைய இந்தப் பொறுமையே சான்றல்லவா!

ஆனாலும் அந்த துஷ்டர்கள் அடிக்கடி இப்படியே வந்துகஷ்டப்படுத்திக்கொண்டேயிருந்தார்கள். ஊரெங்கும் இதே பேச்சாயிருந்தது. மகாராஜர் இந்தத் தொல்லை ஸகியாமல் சுடுகாட்டில் ஒரு குழி வெட்டி, அதில் படுத்துக்கொண்டு கட்டுக் கட்டாய் வைத்திருந்த முட்களைத் தன் மேலே தள்ளித் தன்னுடலை மூடிக்கொண்டுவிட்டார். துஷ்டப்பையன்களெல்லாரும் வந்து பார்த்து அவரைத்

தொடமுடியாததால் திரும்பி விட்டார்கள். பிறகு இவரைத் தரிசிக்க வந்த சிலர் இவருடைய நிலைமையைக் கண்டு திகைத்துக் கூப்பிட்டுப் பார்த்தும் பேசாததால் தொந்தரவு செய்தால் கோபம் வருமோ என்றஞ்சி முதல் நாள் பேசாமல் போய்விட்டனர். மறுநாள் அவருடைய பரிதாப நிலைமையைக் கண்டிரங்கிய சிலர் முட்களை யகற்றவும் அவர் வெளியேறினர். இரும்பை வளைக்க எத்தனை தரம் உலையிற் காய்ச்ச வேண்டியிருக்கிறது! துன்பங்களில் உருகின பின்புதான் மனிதன் சுத்தமும் அடக்கமும் பெறுகிறான்.

நல்ல மனிதர்களுங்கூட சில ஸமயங்களில் அவரைக் கஷ்டப்படுத்தினர்கள். சிலருக்கு ஸாயி இவர்மேல் பிரியமாயிருக்கிறாரென்ற பொறாமையும் மிகுந்திருந்தது. இவர் நெடுநாட்கள் பட்டினியாய் கிடந்ததைக் கண்டு வருந்தி ஒரு ரிடயர்டு என்ஜினீயர் ஸாயியிடம் சம்மதம் பெற்று சாப்பாடு எடுத்துக்கொண்டு போய் கோவிலின் கதவைத் தட்டினர்.

மகாராஜர் :—யாரது?

என்ஜினீயர் :—நான்தான், ஸகாராம், ஸாய் பாபா உத்தரவின்படி உங்களுக்கு ஆகாரம் கொண்டு வந்திருக்கிறேன்.

மகாராஜர் .—வேண்டாம், போ.

ஸ்காராம் என்பவருடன் கூடவந்த பீமாபாய் என்பவள்,—பாபு ஸகாராம் சாப்பாடு கொண்டுவந்திருக்கிறார். எழுந்து சாப்பிடுங்கள். என்று சொல்லிக் கதவைத் தள்ளித் திறந்தாள். மகாராஜர் கோபித்து அவளை யடித்தார். பாபு ஸகாராம், கொஞ்சதூரம் சென்று, ஸாயிபாபா சம்மதத்தினால் நாங்கள் வந்திருப்பதால் நீர் கட்டாயம் சாப்பிட்டே தீரவேண்டும் என்றார்.

மகாராஜர் :—ஏன் ! நாய்க்கும் காக்கைக்கும் போடுகிறதுதானே !

பாபு :—உமக்காகக் கொண்டுவந்தோமே தவிர காக்கைக்காகக் கொண்டு வரவில்லை.

மகா :—அவைகளுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? அவைகளுக்குப் போட்டால் எனக்கு அன்னமிட்டதுபோலத்தான்.

பாபு :—இந்த வேதாந்தம் எனக்குத் தெரியவில்லை நீர் சாப்பிடுவதானால் ஆகாரத்தை யிங்கே வைக்கிறேன். இன்றேல் எடுத்துக்கொண்டு போகிறேன்.

மகா :—எப்போ காக்கைக்கும், நாய்க்கும் போட மனமில்லையோ இங்கே நிற்கவும் வேண்டாம். இந்த நிமிடமே வெளியேறலாம்.

பாபு :—உமக்குத்தானே நாங்கள் கொண்டு வந்தோம்?

மகாராஜருக்கு இந்தத் தொந்தரவினால் கோபம் வந்து ஒரு செங்கல்லை யெடுத்து பாபுவின் மேலெறியவே அவர் கையில் அது பட்டு காயமுண்டாயிற்று. பாபு கோபத்துடன், ஊரிலுள்ளவர்களை யழைத்து மகாராஜரைக் கட்டித் தூக்கிவந்து தன் வீட்டு வாசலில் கொஞ்ச நேரம் எல்லோரும் காண நிறுத்தி வைத்திருந்து, ஸாயியிடம் கொண்டுபோய் நிறுத்தினர். எல்லா விபரங்களையும் கேட்டு ஸாய் அவருடைய கட்டுகளை யவிழ்க்கச் சொல்லி “அவன் கடவுளுடைய மனிதன். அவனை யாரும் தொந்தரவு செய்யக்கூடாது” என்று சொல்லி, மகாராஜரைப் பார்த்து, நீ பேசாமல் உன் இடத்திற்குப் போ, என்று அனுப்பிவிட்டார். அப்போ ஷிர்டிக்கு நானாவாலி என்றொரு பிராமண ஸாது வந்திருந்தான். அவன் பார்வைக்கு பைத்தியம்போல் தான் இருந்துகொண்டு,

இவரைச் செய்த சித்திரவதை கொஞ்சமல்ல. ஓயாமல் கோவிலுக்குள் வந்து ஏதாவது தொந்தரவு செய்து கொண்டே யிருப்பான். மகாராஜரைத் தரிசிக்க வரு பவர்களையும் தடுத்து கஷ்டப்படுத்துவான். மண்ணும் மசியுங் கொண்டுவந்து மகாராஜர்மேல் கொட்டுவான். எல் லாரெதிரிலும் அவரைச் செய்யாத கோலமெல்லாம் செய்து அவரைச் சுற்றிக் குதிப்பான். நில், உட்காரு, என்று முழங்கால் வலிக்கும் வரையில் ஒருசமயம் அவரை செய்யச் சொன்னான். கயிற்றால் இறுகக் கட்டி விட்டான். மரியாதையின்றி பேசுவான். இதையெல் லாம் அவர் பொறுத்துக் கொண்டிருந்தார். இருந் தாலும் கஷ்டத்தின் சிகரத்திலே யிருந்தார் என்று தான் சொல்லவேண்டும். துஷ்டர்களை ஊரில் யாரும் கண்டிக்கவுமில்லை. இவரைக் கவனிப்பாரு மில்லாததால் கஷ்டம் வரம்பு கடந்து போய்விட்டது. சில ஸமயங் களில், எதற்காகத் தன்னை இப்படிப்பட்ட நரக வேதனை களுக் குட்படுத்தி ஸ்ரீஸாய் அங்குவைத்துக் கொண்டிருக் கிறாரென்று நினைப்பார். காரணமும் அவருக்குப் புலப் படவில்லை.

காதம்பரி எழுதுவதில் பேர் பெற்ற, ஹெச். என். ஆப்தே (**H. N. Apte**) என்பவர் 1913ம் வருடம் ஜுலை மாதத்தி லங்கு வந்தபோது, மகாராஜர் தன் மனோ பாரத்தை யெல்லாம் அவரிடம் விரிவாய்ச் சொல்லி, தான் இனி வெகுநாளுயிருடன் இருப்பது ஸந்தேகமாத லால், தன் பந்துக்களைக் கடைசியாகப் பார்க்க விரும்புவ தாகச் சொல்லவே, அவர் உறவினருக்குத் தெரிவித்த வுடன், மகாராஜருடைய தமயனாகிய பாலகிருஷ்ண சாஸ் திரி ஷிர்டிக்கு வந்து, தம்பியைப் பார்த்துத் தேறுதல் கூறிவிட்டுப் போனார். பிறகு மகாராஜருடைய அன்னை

யும் புறப்பட்டு வந்தாள். அவளுக்கோ, ஷிர்டியில் ஒருவரையும் தெரியாது. மற்றவர்களுக்கும் அவளைத் தெரியாது. தானாகவே ஸ்ரீசாய் பாபாவிடம் சென்றாள்.

ஸ்ரீஸாயி அவளை ஏதாவது விசாரித்தாரா! ஒன்றுமே கேட்கவில்லை. தன்னருகில் அவளை உட்கார்த்தித் தன் கையினாலேயே அவளுக்கு விபூதியிட்டு அங்குள்ள எல்லாரிடமும் அவள் "பெரும் புண்யவதியான ஸ்திரீ" என்று சொல்லி, அவளிடம் ஒரு விஷயமும் விசாரிக்காமலே அவளை கண்டோபா கோவிலுக் கனுப்பினார்.

வழியிலே, ஊரார் சிலர், அந்தப் புண்யவதியிடம், கோவிலுக்குப் போகாதே யென்றும், போனால் அங்கேயிருக்கும் பைத்தியக்காரன் அடித்து விடுவானென்றும் பயப்படுத்தினார்கள். தன் புத்திரனைப் பற்றி இப்படியா கேள்விப்படவேண்டும் என்று ஆற்றாத வருத்தத்துடன் கோவிலுக்குச்சென்று கதவைத் தட்டினாள். "யாரங்கே" என்ற குரல் கேட்டது. "நான்தான்" என்று பதில் சொன்னாள். ஒரு கணத்திற்குள் மகாராஜர் கதவைத் திறந்து, தனதரும்பெருந்தாயைத் தன் மார்போடு கட்டிக்கொண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்தார்.

* "உற்ற துன்பமெல்லாம் ஒருகணத்திலே மறந்தார்
பெற்ற தாயைக் கண்டபின்"

# அத்தியாயம்—19

## அக்ஞாத வாஸம்

தண்ணீரில் ஒதுக்கின பாசி திரும்பித் தண்ணீரிலேயே சேருவதுபோலத் தாயார் ஊருக்குப்போன பின் மகாராஜருடைய வருத்தங்களுங் கிளம்பின. ஆனாலவர்,

* "நிறைந்திருக்கும் ஆனந்த நித்தியத்தை யெய்துதற்கு
மறைந்திருக்கக் கொண்டார் மனம்"

1914-ம் வருடம் ஜூலை மாதத்தில், ஆசிரமத்திற்குள் புகுந்து மூன்று வருடங்களாயிருந்தன. மகாராஜர் அளவற்ற கஷ்டங்களை யனுபவிப்பதால் கொஞ்சகாலம் ஷிர்டியைவிட்டு வெளியே போகவேண்டுமென்ற ஆவலுண்டாயிற்று. அதேஸமயத்தில், டாக்டர் சிதம்பரம் பிள்ளையின் நண்பரான கணபதி ராவ் என்பவர் நாகப்பூருக்கருகிலுள்ள ஸிந்தியென்னும் ஊருக்கு வந்து தன்னோடு வசிக்கும்படி இவரை அழைத்தார். குரு ஏற்படுத்திய நான்கு வருடத்தில் இன்னும் ஒரு வருடமிருந்ததால் அது முடியும் வரையில் தன்னிருப்பிடத்தை யாருக்கும் தெரிவிக்கக்கூடாது என்ற நிபந்தனையின்பேரில் மகாராஜர் ஸம்மதித்தார். தன் குருவிடம் மனோபாவமாக விடைபெற்றுக்கொண்டு அவருடன் புறப்பட்டார். ஸிந்தியில் சிலவாரங்கள் தங்கியபின் நாகப்பூருக்குப்போய் டாக்டர்பிள்ளையிடம் ஒருமாதம் இருந்தார். ஸிந்திவரு முன்பு ஸாயியின் உத்தரவின்பேரில் இரவில் கொஞ்சம் காபி மட்டும் சாப்பிடுவார். ஸிந்திக்கு வந்தபின் 24-8-1914-விநாயக சதுர்த்தி தினத்தன்று டாக்டர் கணபதிராவ் வீட்டு ஸ்திரீகளுடைய பிடிவாதத்தினால், இவர் சாப்பிட்டாலன்றி அவர்களத்தனைபேரும் சாப்பிடுவதில்லை யென்றதால், அன்றுடன் தன் உபவாஸத்தை நிறுத்தி போஜனம் செய்தார்.

வெகுநாட்கள் பட்டினியிருந்துவிட்டு திடீரென்று கடின ஆகாரம் சாப்பிடவே அது மூல உபத்திரவத்தை உண்டாக்கி ஆபரேஷன் செய்தாலன்றித் தீராதுபோலிருந்தது. வார்தாவைச்சேர்ந்த பார்ஸி ஸிவில் சர்ஜன் வந்துபார்த்து மயக்கம் கொடுத்துத்தான் ஆபரேஷன்

செய்யவேண்டுமென்றதற்கு, மயக்கமே வேண்டியதில்லை யென்று மனோதிடத்துடன் செய்துகொண்டார்மகாராஜர். பயப்படாதீர்கள் என்று டாக்டருக்கே தைரியம் சொன்னார். சிகிச்சை முடிந்தவுடனே அந்த டாக்டர் மகாராஜருக்கு சாஷ்டாங்கமாக வணங்கி, ஆமை தன் அவயவங்களையிழுத்துக் கொள்வதுபோல, மகாராஜர், சரீர உணர்ச்சி நரம்புகள் எல்லாவற்றையும் யோகாப்பியாசத்தினால் தன்வசப்படுத்தி, அறிவையும், புலன்களையும் அபூர்வவிதமாக மீட்கும் சக்திபெற்றிருப்பதையும் பாராட்டிப்பேசினார். விந்தியைவிட்டு நாகப்பூர் வந்து டாக்டர் பிள்ளை வீட்டிலிருந்துகொண்டு பிராமணர்கள் மனையில் பிக்ஷாடனம் செய்துகொண்டிருந்தார். அவருடைய பெரும் மகிமையும் ரகசியமாயிருந்ததாலும் உருவம் மாறியிருந்தபடியாலும் இவர் பழைய பண்டித காசிநாத உபாஸனி சாஸ்திரி யென்று யாரும் அறிந்துகொள்ளவில்லை.

ஒருநாளிரவு எட்டு மணிக்கு ஒரு பிராமணர் வீட்டுக்குப் பிச்சைக்குப்போனார். இவருடைய கந்தைத்துணியையும், கப்பரையையும், அகாலத்தில் வந்ததையும் பார்த்துத் திருடனென்றெண்ணி கல்லைவிட்டெறிந்து கைகளால் குத்தித்துரத்திவிட்டான் வீட்டுக்காரன். அன்றிரவு இவர் வீட்டுக்குவந்ததும் வழக்கம்போலத் தனது பிக்ஷையில் எல்லாருக்கும் பிரசாதம் கொடுத்துவிட்டு, நீங்களின்று சாப்பிட்ட பிரசாதம் "குத்துப் பிரசாதம்" என்றார். அவர்கள் அர்த்தம் விளங்காமற் வற்புறுத்திக் கேட்டபின் நடந்ததைச் சொன்னார். ஆனாலென்ன கட்டாயப்படுத்தியும், பெயரைமாத்திரம் சொல்லமாட்டேன் என்று சொல்லிவிட்டார். ஏனெனில், அவன் தெரியாத்தனமாய்ச் செய்துவிட்டான். தானதைப் பொறுக்கவேண்டும். டாக்டர் பிள்ளைவீட்டார் அவனை

யெங்காவது அடித்துவிடுவார்களோ என்ற காரணத்தி னுலேயே அவன் பேரைச்சொல்ல மறுத்துவிட்டார்.

டாக்டர் பிள்ளையிடம் ஒரு மாதம்போலிருந்தபின், கரக்பூரிலிருக்கும் அவருடைய ஸகோதரரான சின்னஸாமி பிள்ளை வீட்டுக்கு வந்துசேர்ந்தார் மகாராஜர். நாற்பது மணிநேரம் ரயிலிலே பிரயாணம் செய்தவர், ஒருதரங் கூட இருந்த இடம்விட்டெழுந்திராமல் ஆகார வியவகாரம், பேச்சு, ஒன்றுமில்லாமல் வந்து சேர்ந்தார். சரீரம் அவருக்கடங்கி அவர் சொன்னபடி கேட்டது. சின்ன ஸாமிப்பிள்ளை இவரைத் தன் அதிதியாக ஏற்றுக் கொண்டு கேட்பவர்களுக்குத் தன் தமையனுடைய நோயாளியென்றும், மனம் சற்றுப் பேதித்திருப்பதால் தான் அழைத்துக்கொண்டு வந்திருப்பதாயும் சொல்லி விட்டார். ஆகவே மகாராஜருடைய பெயர் ரகசியமாகவே யிருந்தது.

புஷ்பத்தின் வாசனையையும், சந்திர கிரணத்தின் குளிர்ச்சியையும், உத்தமர்களுடைய குணத்தையும், ஸாதுக்களுடைய மகிமையையும், யாராவது மறைக்க முடியுமா? இரண்டு மாதத்தில் அவர் மகத்துவம் வெளிப் பட்டுவிட்டது. இவர் மீரா யென்ற பத்து வயதுள்ள பெண்மேல் மிகவும் அபிமானம் வைத்து, (ஷிர்டியில் சொல்லுவதுபோல) அவளுக்கு உத்தம வழியையும், நற்குணங்களையும் போதிக்கும் கதைகளைச் சொல்லத் தொடங்கினர். தினம் ஒருவர் இருவராகப் பலர் இதை ஒளிந்திருந்து கேட்கலானுர்கள். கிருஸ்மஸ் பண்டிகையில் சின்னசாமிப் பிள்ளை ஷிர்டிக்குப்போயிருந்தார். அந்த ஸமயத்தில் ஜனங்கள் ஏக கூட்டமாய் வந்து மறைந் திருந்து கதை கேட்கலானுர்கள். இதையறிந்த மகா ராஜர் தான் வேடிக்கையார்த்தமாய் ஒரு பெண் குழந்

தைக்குக் கதை சொல்வதாகவும், அதற்கு இப்படி எல்லாரும் கூட்டம் கூடுவது சரியல்ல வென்றும் தடுத்தும் அவர்கள் கேட்கவேயில்லை. அவரை ஸ்திரீகள் அவதாரமாய் பாவித்து பக்ஷணங்களும் நைவேத்யமும் கொண்டு வருவார்கள். ஆடவர்கள் இரவில் கதை கேட்கவந்து கூடுவார்கள். தான் ஸாதுவுமில்லை, ரிஷியுமில்லை, ஒரு பைத்தியக்காரன்தான் என்று மகாராஜர் சொன்னாலும் அதை நம்பாமல், அவர் ஓர் மகிமையுள்ள ஸாது என்ற நம்பிக்கையே ஜனங்களுக்கு அதிகரித்தது. ஷிர்டியிலிருந்து சின்னஸாமிப் பிள்ளையானவர் திரும்பிவந்து பார்க்க, தான் இரகசியமாக வைத்த தெய்வீக மலரின் நறுமணத்தை எல்லாரும் அறிந்து அனுபவிப்பதைக்கண்டு ஆச்சரிய மடைந்தார்.

## அத்தியாயம்—20

## கரக்பூரில் அடைந்த கீர்த்தி

* எண்ணற்ற விந்தைக ளியற்றும் பெருமானைக்
கண்ணுற்றோர் மீளாக் கலிதீர்ந்தார்.

ஸாயியும், உபாஸனி மகாராஜரும், தங்களைத் தெய்வமாக வணங்கக்கூடாதென்று ஜனங்களைத் தடுத்தார்கள். கடைசியாக ஷிர்டியிலே இருவரும் அதற்கு இடங்கொடுத்தார்கள். இறைவனுக்கும் அடியார்க்கும் தொண்டனாகத்தம்மைக்கருதும் பக்தர்கள் தம்மை பிறர்பூஜிக்க விரும்பமாட்டார்கள். மற்றவர்கள் அதனால் க்ஷேமத்தையடையக்கூடுமானால், கடவுளின் கட்டளையும் அவ்விதமிருந்தால் தம்மை வணங்க அனுமதிப்பார்கள். ஸ்ரீஸாயியும் மகாராஜரும் இவ்விதமே

ஈசுவரனுடைய பிரதிநிதியாக யிருந்து பக்தர்களுடைய அன்பை அங்கீகரித்தார்கள்.

தன்னை வணங்கலாகாதென்று கரக்பூர் ஜனங்களை அவர் தடுத்த தெல்லாம் பயனற்றுப்போய் விட்டது. அவர்கள் தன்னைப் பூஜிக்கவிடாமல் எத்தனையோ இடைஞ்சல்களை உண்டாக்கினர். லீலாமிருதம் என்ற மஹாராஷ்ட்ர நூலில் அவைகள் விரிவா யெழுதப்பட்டிருக்கின்றன. இவர் தடை செய்யச் செய்ய ஜனங்களுடைய செய்கை அதிகமாய்விட்டது. தன்னையும் தானிருந்த அறையையும் மிகுந்த அசுத்தமாகவே வைத்திருந்தார். குளிப்பதேயில்லை. வீட்டுக்கெதிரிலுள்ள பலா மரத்தடியில் வெளிச்சத்தில் உட்காருவார். வாரத்திற் கொருமுறை ஸ்திரீகள் சிலர் வந்து அவருக்கு பலவந்தமாய் எண்ணை ஸ்நானம் செய்வித்து ஈரத்தைத் துவட்டிவிட்டு பூஜைக்கு ஸாமான்களும் ஆகாரமுங்கொண்டு வந்துவைத்து புண்ய மடைந்தோமென்ற திருப்தியுடன் செல்வார்கள். அவைகளொன்றையுந் தொடாமல், தன்னை யவர்கள் தொந்தரவு செய்யாதிருக்கட்டும் என்று உடனே புழுதியையும் அழுக்கையும் வாரிப்பூசிக்கொள்வார் மகாராஜர். அப்படியும் அவர்கள் பேசாமலிருக்கவில்லை. அவர்களுக்குத் தன்னைகண்டாலே வெறுப்பேற்படும்படி செய்ய வேண்டுமென்று ஆபாஸ இடத்திலேபோய் உட்கார்ந்து கொள்வார். தன்னுடம்பும் ஆபாஸத்தின் இருப்பிடந்தான் என்றும் தன்னைப் பூசிப்பதைவிட கக்குஸைப் பூஜிக்கலாமென்றுகூட சொன்னர். அவர்களோ இவர் எங்கு சென்றாலும் அங்கங்கே வந்து தங்கள் பூஜையைச் செய்யலானார்கள். பிள்ளையவர்கள் வீட்டைவிட்டு ஒரு கூலியாளின் குடிசைக்குப்போனர். அங்கிருந்து தோட்டிகள் குடிசைக்கும்போனர். பிராமணர்களும் மற்ற வரு

ணத்தாரும் அவரைவிடாமல் பின்தொடர்ந்து அவரைப் பூஜித்து அவர் கொடுத்ததை பிரசாதமாக வாங்கிச் சாப் பிட்டனர். ஸமாராதனைகள் நடத்தினார்கள். மகாராஜர் பிராம்மண ஸ்திரீகளைக்கொண்டு ஹரிஜன ஸ்திரீகளுக்கு ஸ்நானம் செய்வித்து விருந்து அளித்துப் புது ஆடை களும் கொடுக்கச் செய்தார். எல்லாருக்கும் அவர் சொல் ஒவ்வொன்றும் வேத வாக்காயிருந்தது.

ஆனால் முக்கிய விஷயங்களில் அவர் தனியான வழி யையே அனுசரிப்பவர். மதாபிமானத்தினால் ஹரிஜனங் களைத் தீண்டா ஜாதியாரென்று அவருக்குத் தோன்றி னாலும், கடவுள் ஸந்நிதியிலும், ஸத்புருஷர் முன்னிலை யிலும், எல்லா ஜாதியாரும் ஸமமென்றே கருதினார். அவரால் ஹரிஜனங்கள் நன்மை யடைந்தனர். ஆனால் தற்காலம் ஏற்பட்டு வருவது போன்ற பூரண ஸமத்துவத் திற்கு அவர் இணங்கமாட்டார். தன்னெதிரிலும், தான் இஷ்டப்பட்டு அனுமதித்த வரையில் தவிர, மற்ற ஸமயங் களில் தன் பக்தர்கள் வரம்புக்குட்பட்டே நடக்கவேண்டு மென்பார். இருந்தாலும் கரக்பூரிலிருந்தபோது இவ ருடைய கிருபையினால் ஹரிஜனங்கள் தாங்கள் மேலான பதவி பெற்றதாக எண்ணி இவரிடம் அளவற்ற பக்தி கொண்டார்கள்.

தன்னை உபத்திரவிக்காமலிருக்க இன்னொரு வழி செய்தார். திடீரென கோபம் கொண்டவர்போல அடிக் கடித் தந்திரம் செய்துபார்த்தார். என்னவைதாலும் பிடித்துத்தள்ளினாலும் அடிப்பேனென்றாலும் கூட ஜனங் கள் அடங்கவேயில்லை. சந்திரனுக்கிருக்கும் களங்கம் போல இவருடைய கோபத்தையும் நினைத்து, அடித்தா லும் வைதாலும் ஆசீர்வாதமும் அனுக்ரகமுமாகவே எண்ணினார்கள். இத்தேசத்தில் இந்த அபிப்பிராயம்

வெகுநாளாகவே உண்டு. நாம்தேவ் காலத்தில் ஓர் ஸாது தன்னைத் தரிசிக்க வந்தவர்களுக்கு தானிருந்த காட்டுப் பாறையிலிருந்து கல்லை யெடுத்து இதுதான் பிரசாத மென்று அவர்கள் மேலெறிந்தார். தெரியாதவர்கள் கல்லை எறிந்து விட்டார்கள். பக்தியுள்ள சிலர் அந்தக் கற்களை வீட்டுக்குக் கொண்டுபோய்ப் பார்க்க அவைகள் தங்கமாய் மாறியிருக்கக்கண்டார்கள். ஸாதுக்களிடம் அடிபட்டு வசைகேட்பதால் பாவங்களும் வியாதிகளும் விலகி க்ஷேமத்தை யடைவதாக இந்நாட்டில் வெகுவாகக் கருதப்படுகின்றது. மகாராஜரிடம் அடிபட்ட ஸகாராம் பாபு ஸாஹேப் ஜோக் என்பவர் பின்னால் அவரிடமே பூஜை செய்து கொண்டிருந்து காலமானார். ஸகோரியிலே அவருடல் அடக்கம் செய்யப்பட்டு ஓர் கோவிலும் அதன் மீதுகட்டி முறையுடன் பூஜைகளும் நடந்துவருகின்றது. இன்னும் சிலர் அவருடைய கோபத்திற்காளானதில் உத்தியோகமும் தேக ஆரோக்கியமும் பெற்றனர்.

இந்த ஒரு வருஷத்தையாவது நிம்மதியாய்த் தள்ள வேண்டுமென்றவர் நினைத்தார். என்னமுயற்சி செய்தும் ஜனங்கள் அவரைப்பூஜிக்கும் தொந்தரவு நிற்கவில்லை. விதியிலிருந்து யார்தான் விலகமுடியும்! அவருடைய பழக்க வழக்கங்களையும் ஸத்போதனைகளையும் பார்த்தவுடனே அவர் பூஜிக்கத்தக்க மஹான் என்று கொண்டாடி அவரிடம் ஸூர்யனை, ஒரு கைக்குள் மறைக்கமுடியாததுபோல, உங்களுடைய மகிமையை நீங்கள் மறைத்ததால் எங்களுக்குத் தெரியாமலிராது என்று பலர் சொல்லலானார்கள். மகாராஜரால் ஒன்றும் முடியவில்லை, தனது சிக்ஷாகாலமாகிய நான்கு வருடங்களும் பூர்த்தியாகுமுன்பே ஸத்குருவென்ற பட்டத்தைச் சூட்டிக் கொண்டார்.

அடக்கமும், பணிவும் தான் மேலானது என்று யாவர்க்கும் போதிப்பார். தாமோதர பண்டிதர் என்றவொருவர் மிகுந்த வித்யாகர்வமுள்ளவர். அவர் சில அதிகாரிகளுடன் மகாராஜரிடம் வந்தார்.

மகாராஜர் :—நீங்கள் இங்குவந்த காரணமென்ன?

எல்லாரும் :—உபதேசம் பெறத்தான்.

மகா :—நான் உபதேசிக்க சக்தியுடையவனல்ல, நான் ஒன்றுக்கு மற்றவன்.

தாமோதர பண்டிதர் :—எனக்கு பகவத்கீதை உபதேசம் செய்யப் பிரார்த்திக்கிறேன்.

மகா :—நான்தான் சொன்னேனே! எனக்கு அப்படிப்பட்ட சக்தியேதுமில்லை.

தாமோ :—நீங்கள் சொல்வதை நாங்கள் நம்பமாட்டோம்.

மகா :—நானே ஒரு தெருப்பெருக்கும் பெண்ணிடமிருந்துதான் கீதையைக் கற்றுக்கொண்டேன் அவள் என்ன சொன்னாள் தெரியுமோ? முதலில் கீதையை சாக்கடையில் நனைத்து நீயும் அதில் குளி என்று சொன்னாள். நான் அப்படியே செய்தேன்.

தாமோ :—நீங்கள் இப்படிச் சொல்லிவிட்டுத் தப்ப முடியாது. எங்களுக்கு கீதையை உபதேசியுங்கள்.

மகா :—அப்படியானால் நான் சொல்வதைக் கேள். கீதையை யார் யாருக்கு உபதேசித்தார்.?

தாமோ :—கிருஷ்ணபகவான் அர்ஜுனனுக்கு உபதேசித்தார்.

மகா :—அப்போ கிருஷ்ணன்தான் அதை விவரித்து சொல்ல முடியும்.

தாமோ :—நீரே கிருஷ்ணன்.

மஹா :—(தாமோதர பண்டிதர்க்கு உண்மையான குருபக்தி யில்லையென்றெண்ணி) நான் கிருஷ்ணனல்ல. நீ அர்ஜுனனானால் நானும் கிருஷ்ணனாகலாம்.

தாமோ :—நான் எவ்வாறு அர்ஜுனனாக முடியும்?

மகா :—அர்ஜுனனென்றால் மிகக் கேவலமென்று பொருள். நீ உன்னை மிகவும் தாழ்ந்தவனாகவும், துரும்புக்குச் சமதையாகவும் எண்ணவேண்டும். அப்போ கிருஷ்ணனைப்போன்ற குருவையடைவாய். உன்னால் அர்ஜுனனாக முடியாவிட்டால், அகங்காரத்தையும், ஆசா பாசங்களையும் ஒழித்து, உன் பெயருக்குத்தக்கவனாக (அதாவது தாமோதரராக)வாவது ஆகவேண்டும்.

தாமோதர பண்டிதருடைய கர்வத்தை இந்தவிதமா யடக்கினார் மகாராஜர். அவருடைய பக்தர்களுக்கு அடக்கம், பொறுமை, போன்ற நற்குணங்களையே போதித்து வற்புறுத்தினார்.

இந்த நற்குணங்களெல்லாம் கரக்பூரில் யமுனாபாய் என்ற ஒரு பெண்மணியிடம் நிறைந்திருந்தது. அவளும் அவள் கணவனான விநாயகராவும் மகாராஜருக்கு மிகவும் பிரியமுள்ளவர்கள். அவர்கள் இவருக்கு பிரஸாதம் கொண்டு வநதார்கள். முதன் முதல் யமுனா ஒரு கிண்ணம் பால் கொண்டு வந்தபோது அவளைப் பார்த்து மகாராஜர் வருத்தப்பட்டு "கடவுள் விதித்ததை ஏற்றுக் கொண்டு நாம் திருப்தியடைய வேண்டும்" என்று சொன்னார். அடிக்கடி இந்த வார்த்தையைச் சொல்லிக் கண்ணீர் பெருக்குவார். ஒருவருக்கும் இதன் அர்த்தம் விளங்கவில்லை. ஒரு மாதத்தில் யமுனாவின் கணவன் திடீரென்று இறந்துவிட்டான். அன்று இவர் குடிசைக்குள் தனக்கு இடுப்பில் வலி அதிகமாயிருக்கிறதென்று சொல்லி அழுதுகொண்டிருந்தார். யமுனா இந்த கஷ்டம் நேர்ந்த

தும் மகாராஜரிடம் ஓடிவந்து கால்களைப் பிடித்துக் கொண்டு ஏதாவது விமோசனம் ஏற்படுமா என்று கதறினாள். மகாராஜரும் அழுதார். முன்பே "விதியை யேற்கத் தைரியமாயிருக்க வேண்டு"மென்று எச்சரித்திருந்ததாகவும், கடவுள் விதித்த கஷ்டத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதே" என்றும் சொன்னார். ஆனால் அவள் அவர் காலை விடவேயில்லை. அங்கிருந்த ஸ்திரீ பக்தர்களெல்லாம் அவளை வீட்டுக்கு இழுத்துக் கொண்டுபோக வேண்டியதாயிற்று. பிறகு அவளைத் தேற்றி உபதேசித்து மனோதிடத்தை உண்டாக்கினார் மகாராஜர். அவருடைய தீர்க்க தரிசனத்தை விஸ்தரிக்க இதுவே போதும். கரக்பூரிலுள்ள ஸ்திரீ பக்தர்கள் அவரைத் தங்களுக்கு தந்தையும் தெய்வமுமாகப் பாவித்து எவ்வளவு ஆழ்ந்த பக்தி வைத்திருந்தார்கள் என்பது இதனால் நன்கு விளங்கும்.

கீதையிலே கண்ணன், "உடலை விட்டுப் பிரியும் போது ஒருவன் என்னையே நினைப்பானாகில் அவன் நிச்சயமாய் என்னை யடைவான். ஆகையால் என்னையே எக்காலமும் நினைத்துப் போரை நடத்து, உன் மனம் என்னை யடையவே, நீ நிச்சயமாய் என்னை யடைவாய்," என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஸ்ரீஸாயியும் மகாராஜரும் இதை நிரூபித்தனர். ஸ்ரீஸாய் தனது அன்பரான நானுஸாஹேப் நிமோன்கார் என்பவருக்கு அவருடைய அந்திய காலத்தில் அவர் பார்க்கும் எல்லாம் ஸாயி என்னும் ஸ்திரமான நம்பிக்கை தோன்றச் செய்தார்.

மகாராஜர் தன் மெய்த் தொண்டரி லொருவரான ஸ்ரீ தரபந்த் சிங்வேகர் என்பவர் வியாதியாயிருந்தபோது அவருக்கு மகாராஜரைப் பார்க்க ஆவலாயிருந்ததால்

தன்னை மகாராஜரிடம் தூக்கிக்கொண்டு போகும்படிக்கும் இல்லாவிட்டால் மகாராஜரை தன்னிடம் கூட்டிக்கொண்டு வரும்படிக்கும் உறவினரிடம் கேட்டார். மகாராஜர் தினமும் வருகிறேன் என்றே பதில் சொல்லிவந்து ஓர் நாள் நான்தான் நோயாளியின் காலடியிலேயே யிருக்கிறேனே! என்று சொல்லி யனுப்பினூர். சிங்வேகருக்கு மாத்திரம் தன் குரு தன்னருகிலிருப்பது தெரிந்து ஸந்தோஷமுடன் அதே நினைவில் முக்திபெற்ருர். பக்தர்கள் பெருநோக்கமாய் இவ்வித முக்தியையே விரும்புகின்றனர். தன்னை யடைந்தவர்களுடைய பாரமனைத்தும் தான் ஏற்றுக்கொண்டார் மகாராஜர். ஜனங்களெல்லாரும் ஸத்திய விருக்ஷமாகிய ஸாயியின் ஓர் பெருங்கிளையே மகாராஜர் என்று வாழ்த்தினர்.

உண்மைத் தத்துவத்தை பக்தர்களுக்குப் போதித்து வந்ததுடன் சில ஆச்சரியப்படத்தக்க சமத்காரங்களும் செய்யலானூர். அவரைக்கேட்டால் தனக்கு அந்த சக்தியேயில்லை யென்கிருரவர். இருந்தாலும் அதுவாக சில ஸமயங்களில் வெளிப்படுகிறது.

இந்த உலகம், ஒன்றை ஒன்று எதிர்க்கும் துவந்துவங்கள் நிறைந்தது. ஓர் ஸாதுவுக்கு பக்தர்களிருப்பது போலப் பகைவர்களும் ஏற்படுகிருர்கள். ராமதாஸரைப் போன்ற பக்தசிரோமணிகளுக்கும் ஸ்ரீ கிருஷ்ணனுகிய அவதார புருஷனுக்குங்கூட விரோதிகள் இருக்கவில்லையா! மகாராஜரிடமும் சிலர் விரோத பாவங்கொண்டார்கள். ஷிர்டியில் பொருமை கொண்டவர்கள் செய்ததெல்லாம் முன்பே கூறப்பட்டிருக்கிறது. கரக்பூரில் இந்த அவதூத ஸ்வாமியைத் தமது வீட்டுஸ்திரீகள் பூஜிப்பதாவது! எனக் கோபங்கொண்ட சில பிராம்மண உத்தியோகஸ்தர்கள் அவருக்கு இன்னல் விளைவிக்கக் கருதினுர்கள்.

1915-ம் வருஷம் ஆடிமாதத்தில் ஒரு நாளிரவு எட்டு அல்லது ஒன்பது மணிக்குத் தன் குடிசையின் தாழ்வாரத்தில் மகாராஜர் உட்கார்ந்துகொண்டு தன்னைச் சூழ்ந்திருந்த ஸ்திரீ பக்தர்களுக்குத் தன் உபதேசத்தைப் போதித்துக் கொண்டிருந்தார். சில பங்கிகளும் தூர உட்கார்ந்து கொண்டிருந்தனர். அந்த ஸமயத்தில் அவருடைய விரோதிகளில் சிலர் ஆளுக்கு ஒரு விளக்கைப் பிடித்துக்கொண்டு அவரைத் தரிசிக்க வருபவர்போலப் பாசாங்கு செய்துகொண்டு வந்தார்கள். அங்கிருந்தவர்களில் லக்ஷ்மிபாய் காஸ்னீஸ் என்ற ஓர் மாது மகாராஜரிடம் வருபவர்கள் அவருடைய விரோதிகளென்று சொன்னாள். மகாராஜ் அவர்கள் தூரத்தில் வரும்போதே எல்லாரிடமும் "நீங்களெல்லாரும் மௌனமாய் கைவளையல்களைக்கூட அசைக்காமல் சிரிக்காமல் இருங்கள். அவர்கள் வந்தால் நானொரு வேடிக்கை செய்கிறேன்" என்றார். எல்லாரும் நிசப்தமாய் இருந்தனர்.

தாழ்வாரத்தில் உட்கார்ந்திருந்த பங்கிகளுக்கு, வருபவர்கள் பாபாவுடைய பகைவரென்று தெரியாததால், யாரோ தரிசனத்திற்கு வருகிறார்களென்றெண்ணிப் பேசாதிருந்தார்கள். வந்தவர்களிலொருவர், பங்கிகளிலொருவனைப் பார்த்து ஏ! பங்கீ! மகராஜ் எங்கே? என்று கேட்கவே, பங்கி, அதோ தாழ்வாரத்திலிருக்கிறார். போய்த்தரிசித்துக்கொள் என்றான். வந்தவர்கள் விளக்கையேந்திக் கொண்டு தாழ்வாரமெல்லாம் தேடித் தேடிப்பார்த்தும் ஒருவரையும் காணவில்லை. கீழே இறங்கி வந்து பங்கிகளிடம் திரும்பவும் "அவர் எங்கே? தாழ்வாரத்தில் இல்லையே, நீங்கள் எப்படி சொன்னீர்கள்? என்று கேட்டார்கள். பங்கிகள் அதற்கு, அவர் தான் அதோ தாழ்வாரத்திலேயே இருக்கிறாரே, இப்

போதானே எங்களோடு பேசிக்கொண்டிருந்தார். நாங்கள்தான் பார்த்தோம். அப்படியிருக்க நீங்கள் எப்படியில்லையென்கிறீர்கள்? என்றார்கள். மறுபடியும் அவர்களெல்லாம் வந்து மூலைமுடுக்கு விடாமல் சுற்றித் தேடிப்பார்த்தும் அங்கே யாருமில்லை. இந்த பங்கிகளெல்லாம் சுத்தப் பொய்யர்கள். நம்மைக்கேலி செய்கிறார்கள் என்று வைதுகொண்டே அவர்களிடம் வந்து—ஏண்டா! என்ன இது! எங்களுடன் விளையாடுகிறீர்களா? மகாராஜரெங்கே? நிஜத்தைச் சொல்லுங்கள், என்று கூச்சலிடவே பங்கிகளில் தைரியசாலியான ஒருவன்—பாபு ஸாஹேப்! நாங்களோ கேவலம் பங்கிகள். நீங்களோ பாபுகள், உங்களை நாங்கள் கேலிசெய்ய முடியுமா என்றான்.

வந்தவர்கள்:—இது விளையாட்டல்லாமல் வேறென்ன? நாங்களித்தனைபேரும் தேடிப்பார்த்தும் அவரைக் காணோமே?

பங்கிகள்:—உங்களுக்கவர் தெரியாவிட்டால் அதற்கு நாங்களென்ன செய்வோம்? உங்கள் மனதிலேதோ கல்மஷமிருக்கிறது. அதனாற்றான் அவர் உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லை. நீங்கள் அவரைத் தரிசிக்க வரவில்லை. உண்மையான பக்தியுடன் வந்திருந்தால் தெரியாமலிருக்குமா? நீங்கள் வருமுன்தான் அவர் எங்களுடன் பேசினார். எங்களுக்கு அவர் உட்கார்ந்திருப்பது நன்றாய்த் தெரிகிறதே! உங்களுக்குத் தெரியவில்லையென்றால் ஆச்சரியமாயல்லவா இருக்கிறது! போங்கள். மனதை நன்றாய்ச் சுத்தம் செய்துகொண்டு போய்ப்பாருங்கள் என்றார்கள்.

மூன்றும் முறையும் வந்து தேடிப்பார்த்தும் மகாராஜர் காணப்படாததால் பங்கிகளைப் பொய்யர்க

ளென்று சபித்துக்கொண்டு வந்த வழியே திரும்பினர்கள். அவர்கள் சென்ற கொஞ்சநேரத்திற்கெல்லாம் அங்கிருந்த ஸ்திரீகளெல்லாரும் சிரிக்கவாரம்பித்து, இதென்ன மாயை! அவர்கள் கண்ணுக்கு ஒன்றுமே தெரியாதபடி செய்துவிட்டாரே பாபா என்று ஒருவர்க்கொருவர் புகழ்ந்து மகிழ்ந்தார்கள்.

ஓர் ஸாதுவைப் பக்குவப்படுத்துவதற்குத் துணைவரும், பகைவரும், இருதரத்தோரும் அவசியந்தானே! அடுப்பின் அழலினலே சாதம் கொதித்து பக்குவமடைந்து, காற்றின் குளிர்ச்சியினலே சாப்பிடத்தகுந்தபடி ஆறுவதுபோல நன்மை, தீமை யிரண்டும் பிரகிருதிக்கு அவசியம் என்பது அத்வைதிகளுடைய கொள்கை. அந்தப் பிரகிருதியோ அவர்களுடைய ஆன்மாவிலடங்கியிருக்கிறது. இன்பத்திற்குத் துன்பமே விளைபொருள். ஈசுவரனுடைய மாயாசிருஷ்டி விநோதத்திலே, இன்பத்திலே துன்பமும் துன்பத்திலேயின்பமும் அமைந்திருக்கிறது. விவேகிகள் பகைவர்களை நேசிக்கிறார்கள். ஏனெனில் அவர்களாலேயே முக்திகிட்டுவதும் உண்டு. உதாரணமாக, இரண்யன், ராவணன், முதலானோர், துன்பத்தின் காரணர்களாயிருந்தும், பகவானுடைய அவதாரத்திற்குக் காரண புருஷர்களாகி உலகங்களுக்கு நிரந்தர க்ஷேமத்தையும், ஈசுவர சக்தியையும் விளக்கி, அந்தப் பரம்பொருளிற் கலந்து முக்தி பெற்ற வீர, மகா புருஷர்களல்லவா? தன்னிடம் விரோதங் கொண்டவர்களை மகாராஜர் ஒன்றும் நிந்திக்கவில்லை. ஓர் மஹாத்மாவுக்கு உள்ள சாந்தத்துடன், ஷிர்டியில் துஷ்டர்கள் கொடுமை செய்தபோதும், இங்கே கரக்பூரில் விரோதிகள் பல சூழ்ச்சிகள் செய்தபோதும், என்ன செய்தாலும், யார் இகழ்ந்தாலும், புகழ்ந்தாலும்

தெய்வபக்தியுடன் பகவானிடமே தன்னை யொப்புவித்தவ ராய்ப் பேசாமலிருந்தார். அஹிம்ஸா தர்மமே அவரது வாழ்க்கையின் பிரதான நோக்கம். படித்த மூடர்களான கரக்பூர் விரோதிகள் பாபா ஊரில் இரண்டு கக்ஷிகளை யுண்டாக்கி விட்டாரென்றும் அவரால் ஊரின் அமை திக்குப் பங்கம் வந்துவிட்டதென்றும், போலீசுக்கு மனு எழுதிப் புகார் செய்தனர். அது விசாரணைக்கு வந்ததும், ஆங்கிலோ இந்தியரான ஓர் போலீஸ் சூபரிண்டெண்ட் மகாராஜரை விசாரிக்க வந்தார்.

மகாராஜர் அப்போது அமைதியாய் உட்கார்ந்திருந் தார். அவரைச் சுற்றிக் கும்பல் கும்பலாய் கூடியிருந்த ஜனங்களுக்காக ஏராளமாகச் சமையலாய்க் கொண்டிருந் தது. மகாராஜருடைய போதனையினால் அடிக்கடி அம் மாதிரி போஜன சந்தர்ப்பனை நடந்து வந்தது. அன்றைய தினமும் வழக்கம்போல பக்தர்கள் அமைதியுடன் சமை யலைக் கவனித்துக் கொண்டிருந்தனர். இதையெல்லாம் பார்த்த போலீஸ் உத்தியோகஸ்தர் விண்ணப்பத்திற் கண்ட விஷயமத்தனையும் பொய்யென்று தன்னுடன் வந்த விண்ணப்பதாரரிடமே சொல்லிவிட்டுத் திரும்பி ஞர். கொஞ்சதூரம் சென்றதும் தனது நாயைக் காணு மல் மகாராஜரிடம் வந்து என் நாயெங்கே! என்று கேட்க, அது உமது வீட்டுக்குப் போய்விட்டது என்றார் மகாராஜர். உண்மையாக அந்த நாய் அப்போ இவர் காலடியிலேயே படுத்திருந்தது. அதன் யஜமானனுக்கு, அது கண்ணில் படாமற் போனது ஆச்சரியந்தான். அவர் போனவுடனே மகாராஜர் நாயைத் தட்டிக் கொடுத்து "உன் எஜமானன் போகிறார். அவர் போகு முன் நீ வீட்டுக்குப் போய்ச் சேர்" என்றதும் நாய் ஓட் டம் பிடித்தது.

ஆவணி மாதத்தில் இந்த ஸம்பவங்கள் நடந்த சில நாட்களுக்குள் அவருடைய பக்தர்கள் தங்களிடமே அவரை ஸ்திரமாக வசிக்கச் செய்ய வேண்டுமென்று அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கி பாபாவிடமும் தெரிவித்தனர். அவர் ஒன்றும் பதில் சொல்லவில்லை. அவருடைய நான்கு வருட (ஸாயி விதித்த) அனுஷ்டானம் அப்போது முடியுங்காலம். இவர் ஷிர்டியை விட்டுப் புறப்பட்ட பின்பு டாக்டர் பிள்ளை இவருடைய தமயனுக்கு எழுதின கடிதத்தில், இவருடைய அக்ஞாதவாஸத்தையும், அது முடிந்தபின் அவருடைய சொந்தவீட்டை ஒருமுறை வந்து பார்த்துவிட்டு ஷிர்டிக்குத்திரும்புவாரென்றும் எழுதியிருந்தார். ஒரு நாள் யாரும் எதிர்பாராதவிதமாக மகாராஜர் நாகப்பூரில் பிள்ளை வீட்டிலிருந்தார். கரக்பூரில் அவர் திடீரென்று மறைந்ததனுல் பக்தர்கள் துக்கத்திற் களவேயில்லை. நாகப்பூரிலுள்ள அன்பர்களோ அவரைத்திரும்பவும் கண்டதால் எல்லையில்லாத ஸந்தோஷமடைந்தார்கள். இரண்டு மாதம் போல பாபா அங்கு தங்கியிருந்தார். கரக்பூர் பக்தர்கள் அவரைத் தேடிக்கொண்டு அவர்சென்ற விடமெல்லாம் தொடர்ந்தனர். சமாராதனைகளும் பஜனைகளும் நடந்தன. ஆச்சரியங்களும் பல நிகழ்ந்தன. அதில் ஒன்று இங்கே கூறப்படுகிறது.

ஒரு ஸமயம் அவருடைய பக்தி மிக்க சிஷ்யையான மீரா வீட்டில் அவர் தங்கியிருக்கையில் பலர் தரிசிக்கவந்தனர். அவர்களில் தோண்டிபாயென்ற மாதும், அவள் மாமியாரும் வந்து கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தபின் மாமியார் மருமகளைப்பார்த்து, மகாராஜருக்கு ஸேவைசெய்து கொண்டிரு. அவர் உன்னை அடிக்கும்வரையில் வீட்டுக்கு வராதே என்று சொல்லிவிட்டு, மகாராஜரிடமும் அவளை

சிரேஷ்டமானவளாகும்படி அடியுங்கள் என்றாள். மகாராஜர் எனக்குக்கோபம் வந்தாற்றானே அடிக்க! எப்படி அடிப்பது? என்று சிரித்துக்கொண்டு சொன்னார். இருந்தாலும், மாமியார் அவளை அங்கேயே விட்டுவிட்டுப் போனாள். அந்தப்பெண்ணும் மிகுந்த பயபக்தியுடன், பாபாவுக்கு சிசுரூஷை செய்துகொண்டிருந்தாள். மகாராஜர் அவளையடிக்கவேயில்லை. அந்தப்பெண்ணுடைய மாமனார் பாபாவைத்தரிசிக்க விரும்பினார். ஆனால் தேக அசௌக்கியமாயிருந்ததால் தரிசிக்கமுடியவில்லை. ஒரு நாள் கதவைதாளிட்டுக்கொண்டு உள்ளே படுத்திருந்தாரவர். இரவாக ஆக, கைகாலெல்லாம் விரைத்துப்போய் எழுந்துக் கதவைத்திறக்கமுடியாமல் தவித்தார். அப்போ இடுப்பில் சாக்குப்பையுடன் ஓர் ஸாதுவின் உருவம் கதவைத் திறந்து உள்ளேவந்து விளக்கையேற்றி அவரைத் தூக்கி நிறுத்தி இடுப்பெல்லாம் தடவிக்கொடுத்து சக்தி வரச்செய்து மறைந்தது. சில தினங்களில் அவர் தேகம் குணமடைந்து மகாராஜரை நேரில் வந்து தரிசித்து, அவரே தன்னை காப்பற்றினாரென்று சொல்லி அவருடைய பாதங்களை பக்தியுடன் பூஜித்தார். நானே ஒரு நோயாளியாதலால், என் இருப்பிடம்விட்டு நான் நகருவதில்லை; உங்கள் மருமகள் தோண்டி பாயின்புண்ய சேவையினால் கடவுளோ அன்றி உங்கள் இஷ்டதேவதையோ தான் வந்து காப்பற்றியிருக்கவேண்டும் என்றார் பாபா. அமானுஷ சக்திவாய்ந்த ஸத்புருஷர்கள் நீறு பூத்த நெருப்புப்போலத்தானே இருப்பார்கள்! உலகம் முற்றும் ஓர் தராசிலும் தானொரு தராசிலுமாக ஸ்ரீ ஸாயியினுடைய ஸத்யவாக்கை நிரூபித்து, ஸ்ரீ ஸாயியின் திருவருளினாலே நான்கு வருடங்களில் மானிடவாழ்க்கையை சட்டையையுறவும் ஸர்ப்பம்போலக்களைந்து பரிசுத்த

தெய்வீக வாழ்க்கையிலே புகுந்து ஸத்குருவென்ற அவதாரங்கொண்டு, மக்களுக்கு நன்மை செய்து ஈசுவர பக்தியை எல்லாருக்கும் போதிக்கலானுர் ஸ்ரீ உபாஸனி மஹரிஷி.

## அத்தியாயம்—21

## தெய்வீக சக்தியின் மகத்துவம்

*அருஞ்செய லென்ப வெல்லாம், எளிதெனச் செய்து மாந்தர்க்
குறுந்துணைநின்ற திண்மை யுரைதனக் களவிடாதே.

நாகப்பூரிலே ஸ்ரீ உபாசனி பாபாவுடைய கீர்த்தி மகோன்னதத்தையடைந்தது. எம்மதத்தினரும் கணக்கிலடங்காமல் வந்து அவரை சேவித்தனர் அங்கங்கே, தேவாமுதம் போன்ற வேதாந்த உபந்யாசங்களினுல் அடியார்களுடைய மனதைக் களிப்பித்தாரவர். கரக்பூர் பக்தர்கள் அவரைத் தொடர்ந்து போகுமிடமெல்லாம் அவருடைய மகிமையைப் பரவச் செய்தார்கள். டாக்டர் கணபதிராவின் ஊராகிய சிந்திக்கு அவர் போனபோதும் வந்த ஜனக்கூட்டம் கரையற்றது. அவர்கள் அவரிடம் விடைபெற்றுத் திரும்பும்போது பாபா "நீங்கள் ஏன் அவசரப்படுகிறீர்கள்? ரயில் தாமதமாய்த் தான் வரப்போகிறது" என்று சொன்னுர். அவர்கள் அப்படியே அன்று ரயிலுக்காக ஸ்டேஷனில் காத்திருக்க, அது தாமதமாகவே வந்தது. திரும்பி நாகப்பூருக்கு வந்தார் பாபா. ஸமாராதனைகளும் பூஜைகளும் தடபுடலாய் நடந்தேறின. கடைசியில் ஏராளமான ஜனங்கள் அவரைப் பிரிய முடியாமல் வருத்தத்துடனும் பக்தியுடனும் அவரை வழியனுப்பினுர்கள்.

சிக்ஷைகாலம் முடிந்துவிட்டதால் தனக்கு எங்கு போவதானாலும் ஒன்றும் தடையில்லாததால், தன் பக்தர்களையழைத்துக்கொண்டு 1916-ம் வருடத் துவக்கத்தில் பூனாவுக்குப்போய்த் தன் தமையனைப் பார்த்துவிட்டுத் தன் கிராமமாகிய ஸதாராவுக்கும் வந்து அங்கு ஒன்றரை மாதம் போலத் தங்கியிருந்த பின் ஷிர்டிக்குத் தன் குருவிடம் வந்து சேர்ந்து முன்போல, கண்டோபா கோவிலிலேயே வசிக்கலானார். அவரிடம் முன்பு இருந்த நாய் அவரிடம் வந்து சேர்ந்தது. பழய நண்பர்களும் வந்தடைந்தனர். பழய விரோதிகளுமிருந்தனர். தௌலு சேட் என்றவொருவர் ரஹதாவிலுள்ள அவருடைய தோட்டத்திற்கு இவரை அழைத்துச் சென்றார். அங்கும் அனேக பக்தர்கள் அவரைச் சூழ்ந்தனர். பஜனைகளும் போஜன ஸந்தர்ப்பணைகளும் நடந்தன. மகாராஜர் செய்த பல ஆச்சரியச் செயல்களில் ஒன்று என்னவென்றால் :—

ஒரு நாள் ஒரு ஸ்திரீ அவருக்கு ஒரு ஆரஞ்சுப்பழம் கொடுத்தாள். அவருடன் சுமார் இருபது பக்தர்களிருந்தனர். பாபா அந்தப் பழத்தை உரித்து சுளைகளை ஒவ்வொன்றாய் எடுத்து ஒவ்வொருவருக்கும் கொடுக்கலானார். ஒரு பழத்திலே ஒன்பது அல்லது பத்து சுளைகளுக்கு மேலிராது. அப்படியிருந்தும் எல்லாருக்கும் ஒவ்வொன்று கொடுத்துவந்தார். அச்சமயம் இன்னும் ஐந்தாறு பேர் வர அவர்களுக்கும் ஒவ்வொன்று கொடுத்தார். இதை ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்த தௌலு சேட் "பாபா! ஜனங்கள் எப்போதும் வந்து கொண்டேயிருப்பார்கள். ஒரு ஆரஞ்சியை வைத்துக்கொண்டு எத்தனை பேருக்கு சுளை கொடுப்பீர்? என்றுகேட்டார். அதற்கு, "நான் கொடுத்துக்கொண்டே போகிறேன்,


இந்த ஆரஞ்சு எல்லாருக்கும் போதும். ஜனங்கள் வருவது நின்றுவிட்டால் சுளைகளும் வராது. அவர்கள் இப்போது வராவிட்டால் சுளைகளைப் பிரசாதம் பெற்றுக் கொள்ளும் பாக்கியம் அவர்களுக்கில்லை என்றார் பாபா. இவ்விதம் முப்பது சுளைகள் போலக் கொடுத்தபின் ஜனங்கள் வருவது நின்றது. சுளைகளும் மீதி யிருக்கவில்லை.

அடுத்தாற்போல் ஆமத் நகரிலிருக்கும் தௌலு சேட்டுடைய மில்லுக்குப் போய்விட்டு மூன்றும் முறையாக ஷிர்டிக்குத் திரும்பி வந்தார் மகாராஜர். அங்கே குருவுடன் தன் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கும்போது மீரஜ் என்னுமிடத்திற்குப் போக நேர்ந்தது. பிறகு ஸகோரியிலுள்ள சில குடியானவர்கள் 1917-ம் வருடத்தில் அவரை அங்கு அழைத்துச் சென்றார்கள். அந்த ஊரே அவருக்கு நிலையான வாசஸ்தலமாய் விட்டது.

இந்த ஸகோரி, ஆமத் நகர் ஜில்லாவிலுள்ள ஓர் சிறு கிராமம். இருபது வருஷங்களுக்கு முன் அதைப்பற்றி ஜனங்களில் பெரும்பாலோர்க்குத் தெரியாது. மகாராஜருடைய இஷ்டப்படியே அவ்வூர் ஸ்மசானத்தின் ஓர் மூலையில் ஒரு சிறு குடிசையும் அவர்கள் போட்டுக் கொடுத்தார்கள். சில வருஷங்கள் வரையில், பழய பக்தர்களுடன் வேறு சிலரும் அவருடைய மகத்துவத்தைக் கேள்விப்பட்டு வந்து போகலானார்கள். நாளிடைவிலே அங்கு வரும் பக்தர்கள் எதிர்பாராத நன்மைகளையும், ஆச்சரியப்படத்தக்க விந்தைகளையும் செய்யும் அவருடைய மகத்தான சக்தியை யறிந்தனர். பக்தர்களுடைய அனுபவங்கள் ஊர்தோறும் பரவப் பரவ, யாத்ரீகர்கள் முதலாய் ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூட்டங் கூட்டமாய் வந்து அவரை சேவிக்கத் தொடங்கினார்கள். அப்போது மயானமாயிருந்த இடம் இப்போது ஓர் சிறு பட்டணம் போலி


ருக்கிறது. பக்தர்களுடைய முயற்சியினுல், வருவோர்க்குத் தங்குவதற்கு விசாலமான தர்மசாலைகளும், பாபாவுடைய குடிசைக்குப் பதிலாக ஓர் அழகிய கட்டடமும், ஓர் தத்தர் கோவிலும் கட்டப்பட்டிருக்கிறது. முக்கால் பங்கு ஜனங்களுக்கே தெரியாதிருந்த அந்த ஊர், இப்போது மிகப் பிரசித்தி பெற்று விட்டது.

சுமார் 1930ல் பம்பாயில் வால்கேஷ்வர் என்ற இடத்திலுள்ள சேட் கோவிந்ததாஸ் பஞத்வாலா என்பவர் வீட்டில் இவர் ஒரு முறை தங்கியிருந்தபோது இவரைத் தரிசிக்க வந்த ஜனங்கள் ஒவ்வொருவரும் அவரை வணங்கி பாத பூஜை செய்துவிட்டுப் போனுர்கள். பகல் ஒரு மணியிலிருந்து இரவு ஒன்பது மணிவரைக்கும் ஜனங்கள் ஓய்வில்லாமல் வந்தனர் என்ருல், எத்தனை ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்திருக்க வேண்டும்! அவருடைய மகிமை எவ்வளவு வியாபித்திருக்க வேண்டும்! என்பதும் வாசகர்களுக்கு விளங்கும். அவரிடம் பக்தர்களடைந்த நன்மைகளை அவரவர்கள் மொழிந்துள்ளதைப் புத்தகரூபமாகப் பிரசுரிக்கப்பட்டிருப்பதாக முன்னரே கூறப்பட்டிருக்கிறது. அவைகளிற் சில, வாசகர்களுக்காக இதில் எழுதப்பட்டிருக்கின்றன. அவரிடம்வந்து போவதால் பக்தர்களுக்குக் கஷ்டமான கார்யங்களும் கைகூடுகின்றன. ஓர் இந்து ஸமஸ்தானத்தில் உத்தியோகத்திலிருந்த ஒருவருக்கு அந்த வேலை போய்விட்டது. அவர் பாபாவிடம் வந்து தன் விஷயத்தை ஒன்றும் சொல்லாமலே இரண்டு மாதங்கள் தங்கியிருந்தார். மறுபடி அந்த ஸமஸ்தாஞதிபதியே அவரை யழைத்து உத்தியோகங் கொடுத்தார். மற்ரேர் ராஜ்யத்தில் ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் செய்து கொள்ள முடியாமல் கஷ்டங்கள் ஏற்பட்டிருந்தன. அவர்கள் ஸகோரியில் வந்து சேவை செய்தபின் அது



138-ம் பக்கம் பார்க்க.

ஸ்ரீ உபாஸனி பாபா நிவாஸம்



139-ம் பக்கம் பார்க்க.

தத்தர் கோவில்

கைகூடியது. தீராத ரோகங்களும், பேய் பிசாசு தொல்லை களும், தரித்திரம் போன்ற பல கஷ்டங்களும் அங்கே நிவர்த்திக்கப்பட்டு வரவே, பம்பாய், நாஸிக் முதலிய தூர தேசங்களிலிருந்தும் ஜனங்கள் வரும் கூட்டம் பெருகியது.

## அத்தியாயம்—22

## பாபாவுடைய கொள்கையும், உபந்யாஸங்களும்

* ஸத்தியமும் தர்மமுமே தன்னுடைய கொள்கையென்பார்
பக்தி செய்து ஈசன் அருள் பெறலாம் வாருமென்பார்
நித்தியனை நெஞ்சில் நிலைத்திருக்கக் கொண்டுவிட்டால்
முக்திபெறு மார்க்கம் உண்டோ பிறிதென்பார்.

**परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम् ।**
**धर्मसम्स्थापनार्थाय सम्भवामि युगे युगे ॥**

"ஸாதுக்களை ரக்ஷிக்கவும், துஷ்டர்களை நாசம் செய்யவும், தர்மத்தை நிலைநிறுத்தவும், யுகங்கள் தோறும் நான் அவதரிக்கிறேன்" என்று ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார். ஸ்ரீராமாவதாரமும், கிருஷ்ணாவதாரமும் இந்தக் கொள்கையையே நிரூபிக்கின்றன. பகவத் வசனம் இவ்விதமாயிருந்தும் வெகு அத்வைதிகள், அதிலும் முக்கியமாக ஞானமார்க்கத்தை யனுசரிப்பவர்கள் கர்மபரித்தியாகம் செய்தவர்களாய் அமைதியொன்றையே நாடுபவர்களாயிருக்கின்றனர். பக்குவமடைந்த ஸாது லக்ஷியத்தைக்கருதுவது சரியல்லவென்று, சாந்தி, நிர்வாணம், மோக்ஷம், இவைகளில் நோக்க முடையோர் எண்ணுவர். சில அத்வைதிகள், ஓர் ஸாதுவைப் பக்குவப்படுத்தும்

ஸாதனங்களில் கொள்கையும் ஓர் பாகம் என்றும் கூறுகின்றனர்: யோகஸமாதியிலே அமிழ்ந்து தியானமென்னும் பேரின்பத்தைத் தாமொருவரே உண்டு களிப்பதை விட மக்களெல்லாருக்கும் அதை உபதேசமென்ற கரங்களினாலே அள்ளிக்கொடுத்து அவர்களுடைய அறியாமையைப் போக்கி இறைவனுடைய அன்புக்கு ஆட்படுத்த முயல்வது எத்தகைய பேரானந்தக் கைங்கர்யம்! கடவுளும் சதா கர்மானந்தத்திலிருக்க வில்லையா? இத்தர்மத்தையே, ஸ்ரீசங்கர, மத்வ, ராமானுஜர்களும், பக்த பரம்பரைகளும் அனுஷ்டித்திருக்கின்றனர். பகவானே பாகவத ரூபமாகப் பரிணமித்து, தர்மத்தை ஸ்தாபிக்கிறார்.

உபாஸனி பாபாவோ ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு, மோக்ஷமார்க்கத்திற்கு வழிகாட்டி உதவும் இந்தத் திருப்பணியைத் தன்குருவினால் தன்மேற் சுமத்தப் பெற்றவராகி, அதற்காக, மனுஷ லோக பாவத்திலே அளவிட முடியாத கஷ்டங்களையெல்லாங் கடந்து கரையேறித் தன் குரு ஸ்ரீஸாய் பாபாவுடைய வேலையைத் தானும் மேற்கொண்டார். இருவரும் செய்துவந்த பகவத் தர்மத்தினாலே, ஜனங்கள் அவர்களை, ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீ தத்தரின் அம்சங்களென்றும், அவர்களைப் போலவே ஜனஸமூகத்திற்கு தீமைகளையகற்றி ஹிதத்தைச் செய்யவந்த அவதார புருஷர்களென்றும் கருதி பக்தி கொள்ளலாயினர்.

உபாஸனிபாபாவைப்போன்ற பாகவத பிரதானிகள் தர்மத்தை விருத்திசெய்தார் என்றால் போதுமா? அவர் செய்யும் விசேஷகார்யங்களென்ன? அவருடைய கொள்கைகளும், முறைகளும் யாவை? அவர் செய்த கைங்கரியமென்ன? என்று அறியவிரும்பலாம். இவைகளைப் பற்றிச் சரியான அபிப்பிராயங்கொள்வது அவ்வளவு

சுலபமல்ல. தெய்வமென்று பூர்ண விசுவாசத்துடன் தொழும் பக்தன் அப்படித் தொழப்பட்ட குருவின் குண தோஷங்களை அளவெடுத்துக் கணக்கிட்டுச் சொல்ல முடியுமா? ஆகிலும் பக்தர்களுடைய உதவியைக்கொண்டு ஓர் தென்னிந்தியர் (பாபாவினின்றும் வேறு முறையில் பயின்றவர்) உபாஸனி பாபாவுடைய கைங்கரியத்தில் புகுந்து அதன் விசேஷத்தை எடுத்துரைத்திருக்கிறார்.

அவர் ஸ்ரீசங்கரரின் அத்வைதத்தி லீடுபட்டவர். மூன்று வருடங்களுக்குமுன் அவர் உபாஸனி மகரிஷியிடம் போனபோது "நீ எந்த முறையில் பயின்றவன்? உன் கருத்தென்ன? என்று பாபா கேட்டார். அந்தத் தென்னிந்தியர், தனக்குத் தெரிந்த ஒரே நோக்கம் என்னவெனில், பேசாமல் உட்கார்ந்து ஸ்ரீசங்கரருடைய வாக்கியமாகிய "ஜகத் மித்யை பிரும்மமே ஸத்யம்" என்பதையறிந்தனுபவித்து நிஷ்டையிலிருப்பதுதான் என்றார். உடனே பாபா—அது கடைசிப்படி. அதில் உனது மனதை நிறுத்த உன்னால் முடிகிறதா? என்று கேட்டார். அதற்கு அவர், அதுதான் முடியவில்லை. அந்த நித்யத்திலே நிறுத்த முடியாமல் என் உலக வாசனைகள் பலமாயிழுத்து விடுகின்றன. அதைத் தடுத்துக் கொள்ளவே நானிங்கே வந்திருக்கிறேன் என்றார்.

படிப்படியாகத்தான் மேலேற வேண்டும், அவரவர் எந்தப் படிக்குத் தகுதியாயிருக்கின்றனரோ அந்தப்படியிலிருந்து அதற்குத்தக்க முன்னேற்ற முயற்சி செய்ய வேண்டும் என்று பாபா பதிலளித்தார்.

ஆகையினால், மோக்ஷத்தையே ஒருவர் ஸதா நினைத்துக் கொண்டிருப்பது தவறு. அது ஹிருதயத்தில் தனிப்படையாக ஓர் புறமிருக்க வேண்டும், என்று பாபா சொல்வார். நாள்தோறும், ஆரதி, ஸேவா, ஸமயங்களி

லும், அவருடைய உத்தரவினுல் பகவத்கீதையும் அஷ்டாவக்ர கீதை முதலானவைகளும் சிடர்களால் படிக்கப்படுகின்றன. சப்தங்களை உச்சரிப்பதினுலேயே உண்டாகும் சக்தியையும் புண்யத்தையும் எடுத்து விவரித்துச் சொல்வாரவர். அவைகளின் அர்த்தங்கூட தெரிய வேண்டியதில்லையாம். அவைகளைச் சொல்வதினுலும், ஸத்'கர்ம'ங்களினுலுமே, புண்ணியம் வளரும் என்றும், அதன் பலன் பேரானந்த ஒளி திடீரென ஏற்படுமென்றும், சொல்வார். சொல்லச் சொல்ல, அந்த கீதைகளின் உண்மை ஒரு நாள் நன்கு விளங்கிவிடும். பிறகு பேச்சோ கேள்வியோ சாதனையோ தேவையில்லை. அந்த நிலைமைக்குத் தானே வரும் வரையில் குருவிடம் மூடபக்தியுடன் கீதைகளையும் மந்திரங்கள் சுலோகங்கள் எல்லாவற்றையும் படிப்பதும் உருப்போடுவதுமா யிருக்கவேண்டும். வெளிச்சத்தையும் உண்மையையும் விளக்கிக் காட்டுவது குருவுடைய பொறுப்பு என்பார்.

மூடபக்தி என்பது பாபாவின் மடத்தின் முக்யமான கொள்கைகளி லொன்ருகும். பொதுவாக, அங்கெல்லாரும் அவரிடம் மூடபக்தி யுள்ளவர்களே. அவர்களுக்கு பாபாதான் கடவுள். அவர் சொல்வதெல்லாம் அவர்களுடைய நலனுக்கே. முக்காலமு முணர்ந்தவர் அவர். அவர் சக்தியிலே இயலாததொன்றில்லை.

ஒவ்வொருவருக்கும் அவர் சொல்லும் முறைகளில் சில பேதங்களிருந்தாலும் பொதுவில் முக்கியமான அம்சங்கள் அதில் அமைந்திருக்கின்றன. தன் பக்தர்களை கர்மமார்க்கம், பக்திமார்க்கம், இரண்டையும் அனுசரிக்கவேண்டுமென்று எப்போதும் அவர் சொல்வார். முதலாவதாக குருவிடம் பூர்ணபக்தி வேண்டும். பிறகு அவரவர்களுடைய இஷ்டதேவதையிடம் பக்திகொள்ள


வேண்டும். மனதால் நினைப்பதுமட்டும்போதாது. ஸத்கர்மங்களை, சுயநலம் பாராட்டாமல் தர்மத்தை யனுசரித்துச்செய்யவேண்டும் என்பார். பழக்கவழக்கங்களில் பற்றுள்ளவராதலால் பெரியோருடைய வழக்கங்களை, மூடத்தனம், குருட்டுபக்தி யென்றெல்லாம் நிந்திக்கக்கூடாதென்பார். பழய வழக்கத்தில் சில உபயோகமற்றதென்று தோன்றினால் அதைவிட்டுவிட்டு அவரவர்க்குத் தக்கவாறு மற்ற புராதன வழக்கத்தைப் பின்பற்றலாமென்பார். அவரையண்டின பக்தர்கள் அவரிடம் முழு நம்பிக்கைவைத்து நன்மையடைகிறார்கள். அவர்களுக்கிருந்த கவலைகளும், சந்தேகங்களும் நீங்கி, மனதில் புதிய ஆனந்தமும் அமைதியும் ஏற்படுகிறது. அப்படி குருட்டு பக்தியுடனிருப்பதனாற்றான், மேன்மையுள்ள விஷயங்கள் தெரிகிறதென்று அவர்கள் கருதுகிறார்கள்.

பக்திதான் மலையைக்கூட அகற்றவல்லது; அதுவே மதத்தின் முக்கியாம்சம். அவனவனும், தன் கொள்கையுடனே, தனக்குத்தோன்றியவாறே இறைவனைப் பூஜிக்கலாம். அவர்கள் எப்படியிருந்தாலும் பூரணமான பக்தியுடையவர்களாயிருந்தாலே போதும் என்பார் பாபா. பார்ஸிகள்,முஸ்லீம்களுக்கும் அவரவர் மதத்தின்முடிவை விளக்கியிருக்கிறார். பாபா ஹிந்துவென்று அவரிடம் வந்த ஒரு பார்ஸி நெருங்க வெட்கப்பட்டபோது பாபா அவரைப்பார்த்து, பார்ஸிமதத்திலேயே ஓர் ஸத்புருஷனைக்கண்டுபிடிக்கமுடிந்தாலவரை பின்பற்றலாம். அப்படி காணமுடியாவிடில் வேறு மதத்திலுள்ள ஸத்புருஷர்களையாவது காணலாம் என்றும், ஸத்புருஷர்கள் தங்களையணுகியவர்களை மதமாற்றம் செய்யமாட்டார்களென்றும், அந்தந்த பக்தர்களை யவரவர் மதப்படி விருத்தி யடையச் செய்யும் வழியைக் காட்டுவார்களென்றும் சொன்னார்.

பாபாவுடைய போதனைகளெல்லாம், ஸத்கர்மங்களையும் பக்தியையும் பற்றியதே. வேறொரு ஸாதனமும் கவனியாமல் பஞ்சாங்க விதிப்படி விரத நோன்புகளை அனுசரிக்கின்றவர்கள் முக்திபெறுவார்கள் என்றுரைப்பார். பஞ்சாங்கத்திலுள்ள அத்தனையும் பார்த்தால் தலை சுற்றலெடுக்கு மென்பதில் சந்தேகமில்லை. ஆனால் ஸகோரியில் அவர் அதை அனுஷ்டானத்திலேயே விளக்குகிறார். அங்கேயிருந்து அவருடைய முறைப்படியே நாமும் அனுசரித்தாலதன் பலன் தெரியும். அவருக்கும் ஜனங்களுடைய ஸ்வபாவம் தெரியுமாதலால் சக்திக்கு மீறி யாருக்கும் வேலையிடமாட்டார்.

அங்கே அவருடைய தொண்டர்கள் ஒரு நிமிஷமும் விருதாவாக்காமல் முக்ய கார்யங்களிலேயே ஈடுபட்டிருப்பார்கள். பாபா, தத்தர், இவர்களுடைய ஆரதிக்குவருவதோடு, தனியாயும் கூட்டமாயும் பஜனை செய்வதுடன், தமது சொந்த பூஜைகளையும் செய்து, பாபாவையும் மாருதி, தத்தர், கோவில்களையும், அரசமரத்தையும் பிரதக்ஷிணம் செய்கிறார்கள். சமைத்த உணவை, குருவுக்கும், பிக்ஷுக்களுக்கும், பறவைகள், மிருகங்களுக்கும், சமர்ப்பித்துவிட்டு, மீதியை உண்பார்கள். பிராமணர்களுக்கு நித்ய கர்மனுஷ்டானங்களை தவறுமலனுசரிக்கும்படிச் சொல்லி, "ஸப்த"ங்கள் யக்ஞங்களுடைய உட்பொருளை எடுத்துக்கூறுவார் பாபா.

ஸ்ரீராம நவமி, குருபூர்ணிமை சங்கராந்தி நவராத்திரி, முதலான பண்டிகைகளுக்கு முன்னும் பின்னும் மாதக்கணக்கில் தத்தர் கோவிலிலும், பாபாவுடைய மடத்திலும், "ஸப்த"ங்கள் சுருதியுடன் பாராயணம் நடக்கும். இரவும் பகலும் ஓய்வில்லாமல் இவைகள் நடக்கும்போது பாபாவின் வாசஸ்தலமும் கோவிலும், தெய்வ



144-ம் பக்கம் பார்க்க

ஆரதிக்கூடம்



145-ம் பக்கம் பார்க்க.

பாபாவும் கன்னிகைகளும் யாகம் செய்தல்

மயமாகவே தோன்றும். உதாரணமாக ராமநவமிக்கு ஏழு நாட்களுக்கு முன்னாலிருந்து,

**रामाय रामभद्राय रामचन्द्राय वेधसे।**
**रघुनाथाय नाथाय सीतायाः पतये नमः॥**

(அர்த்தம்) ஸீதையின் மணவாளனும், ஸர்வஸம்ரக்ஷக னும், ரகுநாதனும், சந்திரனைப்போன்றவனும், நம் முடைய ஸிருஷ்டிகர்த்தாவுமான ஸ்ரீராமனை நமஸ்கரிக் கின்றேன் எனவும், ராமநவமிக்குப்பிறகு ஐந்து நாட்கள் கீழ்க்கண்டமந்திரமும் பாராயணம் நடக்கும்.

**मनोजवं मारुततुल्यवेगं जितेन्द्रियं बुद्धिमतां वरिष्ठम्।**
**वातात्मजं वानरयूथमुख्यं श्रीरामदूतं शिरसा नमामि॥**

மனோவேகம்போன்ற வேகமுள்ளவனும், ஜிதேந்திரியனும் புத்திமான்களுள் சிரேஷ்டனும், வாயு குமாரனும், வானர சைன்ய முக்யஸ்தனும், ஸ்ரீராம தூதனுமான மாருதியை நமஸ்கரிக்கின்றேன்.

பாபாவுடைய வாசஸ்தலத்திலே இதைக் கவனித்து வந்ததில், இந்த ச்லோகங்களைச் சொல்வதினாலும் சொல் லக்கேட்பதினாலும் மனம் பரிசுத்தமடைந்து கவலைகள் விலகி, உற்சாக மேற்படுகிறதென்கிறார், ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியவர்கள். சிலருக்கு, இந்தப் பாராயணத்திலேயே மனம் லயித்துப் போவதனால், அவர்களுடைய இஷ்ட தேவதையே பிரஸன்னமாவதும் உண்டு; அதனால் "ஸாக்ஷாத்கார" அனுபவத்தை யடைகின்றனர். சப் தங்களானது உள்ளத்தை ஆக்ரமித்து அதை பகவானு டனே ஒன்றுபடுத்தி விடுவதால், அதற்குப் பிறகு பாவச் செயலில் மனிதன் இறங்க ஸந்தர்ப்பமே யிராது. அனேகம்

பக்தர்களுக்கு ஸாக்ஷாத்காரம் ஏற்படும்; அனேகருக்கு ஏற்படாது. அது அவரவர்களுடைய ஜன்ம ஸுகிர்தத்தைப் பற்றியது. பூர்வஜன்மங்களிலே பகவத்தியானமுள்ளவராகவும் ஸத்கர்மம் செய்தவராகவுமிருந்தால், ராம தியானம் செய்ய உட்கார்ந்தால், ராம தரிசனம் கிடைத்து அப்படியே அந்த ஆனந்தத்தில் ஸமாதியடையக்கூடும். மற்றொருவனுக்கு தியானம் செய்யும்போதும்கூட மற்ற சிந்தனைகளே குறுக்கிட்டால் அது அவருடைய பூர்வபலனைப் பற்றியதுதான். ஆனால் முயற்சியினால் இந்த நிலை நில்லா மனதை யொரு நிலையில் நிறுத்தி பகவத் தியானத்துடன் பிணைத்து விட்டால் இப்பிறப்பிலேயே பகவானுடைய கிருபைக்கு ஆட்படுவது திண்ணம். பகவத் ஸ்தோத்திரம் மோக்ஷஸான்னித்யத்தை மாத்திரம் அளிக்குமென்பதல்ல. அவைகளினாலே, சௌக்யம், ஸந்தோஷம், குடும்ப அபிவிருத்தி, தனலாபம், முதலானவைகளும் உண்டாகும். தவிர சிறு குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரையிலும், அழியாத, குறையாத, செல்வமாகிய "பக்தி" யென்னும் பொக்கிஷத்தையும் அடையலாம்.

சும்மா இருப்பதைக் காட்டிலும், பலனைக் கருதியாவது (ஸகாம கர்மம்) கடவுளை தியானிக்கலாம். ஆனால், தியானமோ செய்கையோ, எதுவும், பிரதிபலனைக் கருதாமல், (நிஷ்காம்யகர்மம்) செய்வதுதான் மேன்மையானதும், அனுஷ்டிக்கத்தக்கதும், என்று கூறுகிறார் உபாஸனி பாபா. மகான்களுடைய வாழ்க்கைகளே இதற்கு உதாரணங்களா யிருக்கக் காணலாம். நாம் எல்லா பாரமும் இறைவனிடம் ஒப்புவித்துவிட்டு அவனைத் தவிர வேறு எண்ணமற்று அவனே எல்லாமென்று அடைக்கலம் புகுந்துவிட்டோமானால், அவன் கைவிட்டு

விடுவானு என்ன? அவனே நமக்கு என்ன கிருபை செய் கிறுனே செய்யட்டுமே!

பாபாவுடைய ஸமஸ்தானத்தில் யக்ஞங்களினுலே உண்டாகும் நன்மைகள் அனந்தம். பணக்கஷ்டம், வியாதி, மனக்குறை இவைகளினுல், அவரிடம் வந்தடையும் ஜனங்களுக்கு அளவில்லே. அவர்களே, தெய்வபூஜை, நவக்கிரக சாந்தி, ஏழைகளுக்கும் பிராம்மணர்களுக்கும், ஸமாராதனே, எல்லாம் செய்யச் சொல்வார் பாபா. பக்தியுடன் முறை தவருமல் செய்யும் யக்ஞங்களினுலே, அபார சக்தியுள்ள தெய்வங்களின் அனுக்ரகமுண்டாகும் என்றும், அவ்வித, யக்ஞத்தைப் பார்ப்பவருங்கூட புண்ணியம் பெறுவரென்றும், சொல்கிருர். யக்ஞம் செய்விக்கும் புரோகிதர்களும், யக்ஞகர்த்தாவும், யக்ஞத்தில் ஸம்பந்தப்பட்ட அனேவரும் புண்ணியமடைவதாக வேதமும் சிலாகித்துக் கூறுகின்றது. ஆனுல் எல்லாம் ஸ்வயநலமின்றியே செய்யவேண்டும். ஏதாவது காரணுர்த்தமாக பாபாவிடம் வந்தவர்கள் அங்கே ஸத்கர்மம் செய்துகொண்டிருந்து நாளடைவில், பலனேயே எதிர்பார்க்காமல் கடவுளின் அடிமைகளாகி அந்த கார்யங்களே செய்துவருகிருர்கள். "சதசண்டீ" "விஷ்ணு யாகம்" "ஸூர்ய யாகம்" முதலான பெரியயாகங்களும் பாபாவுடைய கட்டளேயின்படி அங்கே நடப்பதுண்டு. அவைகளெல்லாம் பார்க்கும்போது, புராதன காலத்தில் முனிவர்களுடைய ஆசிரமங்களில் நடந்ததாகச்சொல்லும் யாகங்கள், எவ்விதம் நடந்தனவென்பதைத் தெரிந்துகொள்வதுடன், இந்த யாகங்கள் இந்துமதத்திற்குப் புத்துயிர் தருவதென்றும் தோன்றும். கடவுளிடம், முறையிடுவதும், ஸேவிப்பதும், பூஜிப்பதும் அவருக்கு உகந்த திருப்பணிகளேச் செய்வதும் மூடக் கொள்கைகளல்ல.

அதனாலே உள்ளம் நிர்மலமடைந்து அன்பு உண்டாவ தால் அந்த அன்பினாலே கடவுளைக் காணலாம், என்பதே பாபாவுடைய கொள்கையும் உபதேசமும்.

ஹிந்து மதவிதிப்படி, அறிவுக்கெட்டினவரையில், ஒவ்வொருவரும் தத்தம் கர்மத்தை யாதொரு விதமான எண்ணமுமின்றி தன் கடமையென்று செய்யும் பக்ஷத்தில் ஆத்மாவுக்கு எவ்வித கர்மபலனும் ஒட்டாது என்பது பாபாவுடைய கொள்கை. இதிலே அவர் ஸ்திரீகளுக்கு முதல் ஸ்தானம்கொடுக்கிறார். புராதனக்கொள்கையின் படி, ஸ்திரீயானவள் பால்யத்தில் பிதாவினாலும், யௌவ னத்தில் பர்த்தாவினாலும், வார்த்திகத்தில் புத்திரனாலும் ரக்ஷிக்கப்படுவதனால், ஸ்திரீகள் பிறருடைய ஆதரவி லிருக்கப்பட்ட சிருஷ்டியென்ற, கர்நாடக அபிப்பிராயத் தைத்தான் அவரும் அனுசரிக்கிறார். இதனாலே அவர் அவளைத் தாழ்வாக நினைத்ததாகக் கருதக்கூடாது. அந்த நிலைமைதான் அவளை மேன்மைப்படுத்துகிறதாம். நற்குணம், பதிபக்தி, இவைகளைக் கைக்கொண்டு, கர்ம ஸம்பந்தமான அனைத்தையும் தன் பதியிடம் ஒப்புவித்து விட்டு, கிருக தர்மத்தை மாத்திரம் தன் கடமை வழுவா மல் செய்துவரும் ஓர் ஸ்திரீயிடம் பரிசுத்தமும் புண்ணிய மும் தானே வந்தடையும். இன்னொருவரைச் சார்ந்திருப் பதினாலே ஏற்கனவே அவளுக்கு கர்மபந்தமென்பதில்லை. தன் குணங்களினாலும் பதிபக்தியினாலும் பரிசுத்த மடைந்த அந்த பிராரப்தரஹிதையானவள், தன் சக்தியி னால், தன்னுடன் தன் பதியையும் பெரியோர்களையும் பரி சுத்தமாக்கிவிடுகிறாள் என்று சொல்கிறாரவர்.

இல்லறத்திலே ஸதிபதிகள் உலக வியவகார ஊழல் களை இயன்றமட்டும் விலக்கி, ஸ்வகார்யானுகூலங்களைக் கருதாமல், துர்க்குணங்களுக்கிடந்தராமல், கிருகதர்மத்

தைமாத்திரம் கடமையென்று நடத்தி ஹிருதயத்திலே தெய்வ பக்தியொன்றை மாத்திரம் வகித்து வந்தால் அந்த இல்லறமே ஸ்வர்க்கமும், பரம்பொருளாகிய கடவுளுக்குகந்த இருப்பிடமும் ஆகும். ஆனல் பாபா சொல்லும் பிராரப்தரஹிதா ஸ்திரீ வேறு. அவருடைய ஸித்தாந்த ரத்னமாலா என்னும் புத்தகத்தில் மூன்ரும் அத்தியாயத்தில் அவர் சொல்லும் வாக்கியங்களென்னவென்ருல்,

(11) ஒருவன் தான் செய்ததாக நினைத்தாலொழிய அவன் செயலினல் அவனுக்கு பிராரப்தம் ஏற்படுவதில்லை.

(12) ஸ்திரீ தனக்குத்தானே பிராரப்தமெதுவும் ஏற்படுத்திக்கொள்கிறதில்லை. ஏனெனில் கடவுளமைப்பிலேயே அவளுக்குப் பிரத்தியேக நிலைமை யில்லை. அவளுக்குக் கர்த்துருத்வ வியவகாரமும் கிடையாது.

(13) இப்படி பிராரப்தமே யில்லாமலிருத்தலால், ஸ்திரீகளிடத்தில் தேவ சக்தியோ தேவாம்சமோ இயற்கையாகவே குடிகொள்கிறது. அதனல் அவளுடைய பதி, பெரியோர்கள், இவர்களுடைய பாபங்களும் நசிக்கப்பட்டு அவர்களுக்கும் தேவாம்சம் வளருகிறது.

(14) ஆகையால் ஸ்திரீகளைப் பொறுப்புள்ள நிலைமைகளில் வைக்காமல், கிரியாகர்த்துருத்துவ வியவகாரங்களிலிருந்து புருஷர்கள் விலக்க வேண்டும்.

(15) ஸ்திரீகளும் அம்மாதிரி நிலைமைகளைத் தாங்களாக வகிக்கக்கூடாது.

(16) ஸ்திரீகள் பர்த்துருஸேவை செய்து அதனல் புருஷர்களுடைய கர்ம பலன்களை நாசஞ்செய்ய வேண்டும்.

(17) கங்கையைப் பார்த்தவுடனே பார்ப்பவன் சுத்தமடைகிருன். அதுபோலவே பிராரப்தத்திலிருந்து

விலகியஸ்திரீயைப் பார்த்தமாத்திரத்தில் உலகத்துக்கு சுத்தமேற்படும்.

(18) ஸ்திரீகள் தங்கள் ஸ்திரீதர்மத்தையும், ஸத்தர்மத்தையும் செய்து ஸாத்வீக நிலைமையிலிருந்தால், அவர்கள் பிராரப்தத்திலிருந்து விலகியவர்களாவார்கள்.

ஸ்ரீ நரஸிம்மஸ்வாமியவர்கள் மேற்கண்ட வாக்கியங்களை முதன் முதல் படித்தபோது, அவருக்கு பிரமிப்பாய் விட்டது. இங்கே பாபா சொல்லியிருக்கும் அபிப்பிராயங்கள் ஸ்திரீயை ஓர்பரமஹம்ஸருக்கு ஸமதையாகவல்லவா சொல்லப்பட்டிருக்கிறது! தீர்க்காலோசனை செய்து ஆராய்ந்தபின், சாதாரண ஸ்திரீயை ஓர் பரமஹம்சருக்கு ஸமதையாய்க் கூறமுடியாதாகையால், ஓர் புனிதமான ஸ்திரீ எப்படியிருக்கக்கூடுமோ அதைத்தான் சொல்லியிருக்கிறுரென்று விளங்கியது.

ஆனுல், ஸ்திரீயாவது, பிராரப்தாஹிதையாயிருக்கவாவது, இது ஏதோ சந்தோஷக்கனவுதான் என்று நினைக்கக்கூடும். பாபாவுடைய ஆசிரம வாழ்க்கையை நேரில் காண்பவர்களுக்கு, உண்மையிலேயே அவர் அவர்களைப்பிராரப்த ரஹிதைகளாக்கி அவர்களுடைய பரிசுத்த வாழ்க்கையினுல் எல்லாருக்கும் உத்தம மார்க்கத்தை அறிவுறுத்துவதைக் காணலாம். உபாஸனி மகரிஷியுடைய லக்ஷியம் அதிதீவிர இனத்தையும் மேலான வழியையும் சேர்ந்தது. எத்தனையோ கனவும் நினைவாகப் பலிக்கக் காண்பதில்லையா? எத்தனை அதிசயங்கள் கனவு போல் கேள்விப்பட்டு நம் கண்காண இப்பொழுது நடக்கின்றன! என்னென்ன எதிர்பாரா மாறுதல்களெல்லாம் உலகத்தில் ஏற்பட்டு வருகின்றது! உபாஸனி மகரிஷி ஸ்திரீ ஸமூகத்தையே பிராரப்த ரஹிதமாக்கலாம் என்று கொண்டிருக்கும் கனவும் நினைவாகலாமல்லவா! அவரு

டைய ஜீவியத்திலேயே அதை உண்மையாக நிறைவேற்றி விட்டாரென்பதை யறியும்போது ஆச்சரிய முண்டாகாம லிருக்குமா? இதற்கு எவ்வளவோ இடையூறுகள் நேர்ந் தாலும் அவர் தான் கொண்ட லக்ஷியத்திலே வைத்திருக் கும் அசையாத மனோ உறுதியினால், அவைகளை யுதறி, "ஸ்திரீயானவள் பிராரப்த ரஹிதையாயிருக்க முடியும்" என்பதை செய்கையிலேயே நிரூபித்து விட்டார். மகமது முதலில் நிராகரிக்கப் பட்டும் நிந்தனைக்கும், கஷ்டத்திற் கும் ஆளானாலும், முடிவிலே தனது லக்ஷியத்தை நிறை வேற்றவில்லையா?

பாபாவுடைய ஆசிரமத்திலே 1934-ல் மூன்று பிரா ரப்தரஹிதைகள் இருந்தனர். இவர்கள் 1932-ம் வரு டம் நவம்பர் மாதத்தில் நித்திய கன்னிகைகளாகவும், பரிசுத்தவதிகளாகவும், துளஸி போல பாபாவு டைய கையிலே வைத்திருக்கும் கிருஷ்ண விக்ரகத்திற்கு வாழ்க்கைப் பட்டவர்களாகத் தங்களை அர்ப்பணம் செய்தவர்கள். ஸாமான்ய உலக ஸந்தோஷத்தை உதறி விட்டவர்களாய், தங்களுடைய துல்யமான வாழ்க்கையை பகவத்தியானம், பஜனை, ஆரதிகளிலும், ஏழைகளுக்கும் பிராம்மணர்களுக்கும் அன்ன மிடுவதிலும், குருவுடைய பூஜைக்கு வேண்டிய திருப்பணிகளைச் செய்வதிலும் செலவிடுகிறார்கள். உபாஸனி மகரிஷி இவர்களை பரி சுத்தஸ்திரீ உலகத்தின் மூலாதாரமாக ஏற்படுத்தி, மற்ற படி வெளியிலுள்ளவர்களால் கெடுதலோ, அவர்களுடைய பரிசுத்தத்திற்கு பங்கமோ எதுவும் ஏற்படாமல் பாது காத்து ரக்ஷிக்கிறார். பாபாவுடைய ஸமஸ்தானத்திற்கு அவர்கள் ஜீவகளையைக் கொடுப்பவர்களாகவும், அவர் கள் கையால் பிரசாதம் பெறுவதால் நோய்கூட விலகுவ தாகவும் ஜனங்கள் கருதுகிறார்கள். பிறகு இன்னும்

பதினொரு பேர் சேர்க்கப்பட்டு இப்பொழுது பதினன்கு "கன்னிகை"கள் ஆசிரமத்திலிருக்கிறார்கள்.

ஸ்ரீ நரஸிம்மஸ்வாமியவர்கள் முதன் முதல் ஸகோரிக்குப்போனபோது அங்குள்ளோர், பாபாவுக்கு மட்டுமன்றி பதினெட்டு வயதுள்ள கோதாவரிபாய் என்ற பெண்ணுக்கும் நமஸ்கரிப்பதைக்கண்டு அவளிடம் எல்லாரும் காட்டும் மரியாதையையும் எண்ணி வியப்படைந்தார். பாபா சொல்லும் பிராரப்த ரஹிதாஸ்திரீ அவள் தானும், அவளுக்குத்தேவையோ ஸ்வதந்திரமோ கிடையாது. தன் முழுக்காலத்தையும், ஸ்திரீ தர்மத்திலும் ஸத்கர்மத்திலும் குருவினல் அனுமதிக்கப் பட்டவைகளில் மாத்திரம் கழிக்கிறாள். பிறரால் அவள் பூஜிக்கப்படுவது தவிர உலக சம்பந்தம் வேறெதுவும் அவளுக்கில்லை. உலகப் பற்று இல்லை. அவளைப் பார்த்தவுடனே தாங்கள் பரிசுத்தமடைவதாகவும் அவள் தொட்டதெல்லாம் புனிதமாவதாகவும் அங்குள்ள ஜனங்கள் கருதுகிறார்கள். அவர்கள் உண்மையே நினைப்பதால் அதுவும் உண்மையாகவே நடக்கும். இதுவரையில் அவளுக்கு விசேஷ சக்தி ஒன்றும் ஸ்ரீ ஸாய் ஸ்ரீ உபாஸனி பாபாவைப்போல ஏற்பட்டதாகத் தெரியவில்லை யென்கிறார்கள். ஆனாலும் அவள் சக்தியின் அம்சமென்று ஒன்பது வருஷத்திற்கு முன்பே பாபா சொல்லி எல்லோரையும் அவளை பூஜிக்கச் சொல்லியிருக்கிறார். அவர்களும் பாபாவுடைய கட்டளைப்படியே அவளை வணங்குகின்றனர். விவாகமானவளானாலும், உலக வாழ்க்கையின் சிந்தனையற்றுப் பகவானுக்கே தன்னை யர்ப்பணம் செய்தவளானதால், அவளும் கன்னிகையே என்பது பாபாவின் அபிப்பிராயம், கணவனோடு இல்லறம் நடத்தும் ஸ்திரீகள், தங்கள் தர்மமும் கிருகதர்மமும் குன்றாமல் நடத்தி தங்கள்

வாழ்க்கையைக் கணவனுக்கு அர்ப்பணம் செய்வதை விட சிறந்தது வேறெதுவுமில்லை. பாபாவுடைய கொள்கை பொதுவாக ஸ்திரீ ஸமூகத்தையே புனிதப் படுத்தி கர்மஸம்பந்த மற்றதாகச் செய்யவேண்டு மென்பது. கிருகதர்மத்திலிருக்கும் உத்தமிகளும், தம்முடைய தர்மத்தை கடவுள் தந்த கடமையாக, அவரிடம் பக்தியோடு செய்தார்களானல், அவர்களுடைய வாழ்க்கை "பொன் மலர் வாசனையுள்ளதாயிருப்பது" போலாகுமல்லவா !

ஸ்திரீ தர்மத்தை மாத்திரம் விவரிக்கப் புகுந்தோமாயின் அதன் வழியே வேறு. இங்கே பாபாவுடைய கொள்கையைப் பற்றி மட்டும் கூறப்படுகிறது. அவருடைய ஜீவியத்தில் அவர் ஸ்திரீகளிடம் மரியாதையையும் பரிசுத்தத்தையும், அனுசரித்தே வந்திருக்கிறுர். அங்குள்ளவர்களே தீவிர பக்தர்கள். வீட்டு ஸ்திரீகள் எப்படியிருக்கவேண்டு மென்பதற்கு உதாரணமானவர்கள். ஸ்திரீகள் கர்மபந்த மற்றவர்களானதால், உலகப் பற்றை உதறித் தம்மை ஈசுவரார்ப்பணம் செய்வதற்கு ஆடவரை விட மிகவும் அருக மானவர்கள். மீராபாய், சக்குபாய், போலத் தங்களை பகவானுக்கு அர்ப்பித்தவர்கள் பரமஹம்ஸஸ்வரூபிகளென்பதில் ஸந்தேகமில்லை. ஸ்திரீகளை இழிவென்று கருதுவது பிசகு. கர்மபந்தத்திற் கட்டுப்படாத அந்த மேன்மையான பெண் பிறப்பு, பரிசுத்தமும் பரிசுத்த பக்தியும் உள்ளதாய் விட்டால், அது எல்லாரும் வணங்கி வரம் பெறத்தக்க மகிமையுள்ளதாகவும், கடவுள் நிலையை எல்லாருக்கும் தரும் வல்லமையுடைய தென்பதற்கும் சந்தேகமில்லை. அத்தகைய பிராரப்த ரஹித புண்ணிய ஸ்திரீ ஜன்மம் அடைந்தபேறுக்கு நிகருமில்லை.

ஸ்ரீ உபாஸனி மகரிஷி எதையும் செய்கையிலே நிரூபித்துக்காட்டுங் குணமுடையவர். தன்னால் பட்டினியிருக்கமுடியும் என்பதையும், ஆபரேஷனை நினைவோடு செய்துகொண்டு புலன்களையும் உணர்ச்சியையும் மனிதன் கட்டுப்படுத்தமுடியும் என்பதையும் காட்டியவர் அவர். இயற்கையிலேயே திடச்சித்தமும் தீவிர உறுதியுமுள்ளவர். எவ்வளவோ கஷ்டங்களுக்காளான போதெல்லாம் பொறுமையையும் தான் கொண்ட உறுதியையும் தளரவிடாமலிருந்தவர். பால்யத்திலிருந்தே அவரிடம்வேரூன்றி வளர்ந்த இந்த உறுதியும், சாந்தமும், பரிசுத்தமும், பரிசுத்த லக்ஷியமும், அவருடைய இந்தக் கிழப்பருவம் வரையிலும் மாறாமல் வளர்ந்துவந்திருக்கிறது. நெருப்பின் நடுவிலிருந்தே அதன் உஷ்ணத்தை யெதிர்க்கும் மனோபாவத்தினால் அவர் எவ்வளவு திடச்சித்தத்துடன் பாடுபட்டுத் தன் லக்ஷியங்களை நிரூபித்திருக்கவேண்டுமென்பது படிப்போர்க்கு நன்குவிளங்கும். ஆசாரம், அனுஷ்டானம், மதக்கட்டுப்பாடு, இவைகளை அவருடைய உபதேசத்திலே பிரதானமாகக் கூறுகிறார். செய்கையிலே விளக்குகிறார். மனம் பரிசுத்தமாவதற்கு அவைகள் சாதனங்களென்று எல்லாரும் உணர்ந்துகொள்ளவேண்டும். ஆனால் அவைகளினால்மாத்திரம் முக்திபெறலாமென்பது தவறு. அவைகளை ஹிருதயம் பரிசுத்தமாகாமலிருக்கும்போது விட்டுவிடுவதும் தவறாகும். எதற்கும் முயற்சிசெய்ய வேண்டும். ஸாதனம் செய்தால், அதன்பலனை ஒரு கணம் அடைந்தாலும் அந்த ஆனந்தமானது அந்த கஷ்டங்களனைத்தையும் மறக்கச்செய்துவிடும். பக்தியென்பதும், பக்தியின் பெருமையைப்போதிக்கும் சாஸ்திரங்களும், அவற்றையறிந்து ஆத்மஞானத்துடன், அதாவது "சுத்தப்படுத்தப்பட்ட கண்ணாடிக்குள்ளேயிருந்து ஒளி

வீசும் சுடர் விளக்குப்போல", உபதேசிக்கும் ஸாதுக்க ளுடைய கொள்கையும், வெறும் குருட்டுத்தனமான கொள்கையல்ல. அதுவே பரம்பொருளையடையும் மார்க்கம்.

## அத்தியாயம்—23

## என்ன நன்மை ?

வாசகர்களில் சிலருக்கு, சென்ற அத்தியாயங்களைப் படித்தபின் பாபாவுடைய வேலையினால் நமக்கோ நம் சமூகத்திற்கோ என்ன நன்மை விளையக்கூடும் என்று தோன்றலாம். ஒவ்வொருவருடைய அபிப்பிராயங்களையும் திருப்திசெய்யமுடியாவிட்டாலும் இயன்றமட்டில் சில விஷயங்களைப்பற்றி எழுதப்படுகிறது.

வருஷந்தோறும் பல்லாயிரக்கணக்கான மக்கள் அவரிடம் வருவானேன்? அதன் காரணமென்ன ?

**चतुर्विधा भजन्ते मां जनाः सुकृतिनोऽर्जुन।**
**आर्तो जिज्ञासुरर्थार्थी ज्ञानी च भरतर्षभ॥**

என்று கண்ணன் சொல்லியிருக்கிறார். அதாவது, ஜனங்கள் என்னை நான்குவிதமாக வணங்குகின்றனர். (1) கஷ்டத்திலும் துக்கத்திலுமிருப்பவர்கள். (2) பகவானையறிய விரும்புகிறவர்கள். (3) தனத்தை வேண்டியவர்கள் (4) ஞானத்தை விரும்புகிறவர்கள்.

இவைகளில் மூன்றும்வகுப்பைச் சேர்ந்தவர்கள் தான் பாபாவிடமும் பகவானிடமும் அடைபவர்களில் அதிகம். அடுத்தபடியாக முதல்வகுப்பைச் சேர்ந்தவர்கள். ஸ்வகாரியமாய் வருபவர்களை அதிகமாய் விரும்பா

விட்டாலும், யாரையும் தள்ளுவதில்லை பாபா. தன்னுடைய உதவிக்கு அருகரென்று தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு, தன்னாலான நன்மையைச் செய்கிறார். அவர்கள் க்ஷேமமும், நற்குணங்களும் அடைகிறார்கள்.

தவிர, அவருக்கு ஸ்வகாரியம் ஏதுமில்லை. தன்னிடம் வருபவர்களுக்கு நன்மையைச்செய்து அவர்கள் மனதில் பக்தியை வளர்த்து நற்கதிபெறச்செய்யும் கார்யந்தான். மனோபீஷ்டங்களையோ, முக்திஸாதனங்களையோ வேண்டி அவரையண்டினவனுக்குக் கோரிய வரங்கள் நிறைவேறாவிடினும் பின்னால் நிறைவேறும் என்ற நம்பிக்கை உண்டாய்விடுகிறது. கேவலமான உலகசிந்தனை நீங்கி பக்திமார்க்கத்திலே மனம் மாறிவிடுகிறது. அவரோ விஷயலாபங்களைக் குறித்துத்தன்னை யண்டினவர்களையும், ஏதோ ஒன்றிரண்டு அனுகூலங்களைச் செய்பவர்போலச் செய்தாலும், தன் லக்ஷியமாகிய மோக்ஷஸாதனத்தை அவர்களடையும்படி அவர்களைத்தன் வேதாந்த வழியிலேயே திருப்பிவிடுகிறார்.

கஷ்டப்படுபவர்களும், அருமையான பந்துக்களையிழந்தவர்களும், தாய்தந்தையற்று திக்கின்றித் தவிப்பவர்களும், வியாதியுற்று, வைத்தியர்களாலே கைவிடப்பட்டவர்களும், பிறரால் வஞ்சிக்கப்பட்டவர்களும், கதியில்லாதவர்களுமே அவரிடம் வருபவர்களில் பெரும்பாலும் காணப்படுகின்றனர். அவர்களெல்லாரும் அவருடைய கருணைக்குப் பாத்திரமானவர்களே. சிலருடைய பக்தியை ஒருக்கால் பாபா சோதிக்கவும் கூடும். ஆனால் முடிவில் அவர்கள் அவரிடம் வந்ததில் நலமே பெறுவார்கள். சரீர உலக, விஷயமான லாபங்களையும், செய்து தனது வலையாகிய தெய்வ பக்தியிலே அவர்களை கட்டுப்படுத்தி விடுகிறாரவர். தெய்வ பக்திக்கும், தெய்வத் திரு

வருளுக்கும், ஆட்பட்டபின் அவர்களுக்குக் கஷ்டமேது! கஷ்டம் உலகத்தைப் பற்றினவரையில் இருந்தாலும், அவர்களுக்கு (ஆனந்த நிதியாகிய ஈசுவரன் அவர்கள் இதயத்திலே குடிகொண்டு விடுவதால்) அது கஷ்டமாகத் தோன்ருது. பொருள்களினுலே நமக்கு ஆசை அடங்குகிறதா? இல்லையே, மேலும் மேலும் அதிகரிக்கிறது. இன்று ஒன்று அபூர்வமாய்க் கிடைத்தால் மறுகணமே அதில் சலிப்படைந்து அதிலும் உயர்ந்த ஒன்றில் தாவுகிறது மனம். முடிவிலே உயர்வில் தனக்கு ஒப்பற்ற பகவானிடம் பற்றின பின்பு, வேறு உயர்ந்த பொருளையோ, எழும் ஆசையையோ காணமுடியாது போய், நித்தியானந்தமான பகவானுல் "திருப்தி"யை யடைகிறது. ஆனுல் இறைவனைத் தவிர மற்றதெல்லாம் அநித்யமாயிருப்பதனுலும், துக்கஹேதுவா யிருப்பதாலும், துக்கம், கஷ்டம், முதலானவைகளில் அடிபடுவதனுலுந்தான் தெய்வத்தின் மகிமையையும், அதன் சாசுவத கிருபையை தானடைய வேண்டுமென்ற ஊக்கத்தையும் மனிதன் அடைகிருன். உபாஸனி பாபா கஷ்டத்தைத் "தவம்" என்று சொல்கிருர். ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியவர்கள் முதன் முதல் ஸகோரிக்குப் போனபோது, இருக்கவும் சௌகர்யமான இடமின்றி தூக்கமுமின்றி மிகவும் கஷ்டப்பட்டபோது, பாபா அவரைப் பார்த்து, கஷ்டம் வரும்போது ஜனங்கள் ஸந்தோஷப்பட வேண்டும். வனத்திலே தவசிகள் இந்தக் கஷ்டத்தையே வேண்டுகிருர்கள். அது தானுகவே வந்தால் அது பின்னும் நலமல்லவா என்ருர். உடனே இவர், கஷ்டம் வந்தால் அதை விலக்கப் பிரயத்னம் செய்யவேண்டியதில்லையா என்று கேட்டார். அதற்கு "இல்லை" என்று அழுத்தமாய்ப் பதில் சொன்னுர் பாபா.

பாபாவும் அவருடைய தொண்டர்களும் இந்த வழக்கத்தையே அனுசரிப்பதைப் பார்க்க இவருக்கு மிகுந்த வியப்புண்டாயிற்று. மூட்டைப் பூச்சிகளும் எறும்புகளும் அவருடைய உடம்பின்மேல் ஊறினாலும் அவைகளை விலக்கமாட்டார் பாபா. ஒரு பக்தர் அவைகளைத் தள்ள வந்தபோது தடுத்து அவைகள் இருந்தாலிருக்கட்டும் என்று சொல்லிவிட்டார். ஜுரமோ மற்ற வியாதியோ வந்தால் அது நோயாளியுடைய நன்மைக்குத்தான் என்று சொல்வார். பொறுக்க முடியாவிடில் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டும். அதனால் பக்தனவதுடன் ஈசுவர அனுக்ரகத்தினால் தேக சௌக்யமும் பெற்று இரு வித பயனடையலாம் என்று உபதேசிப்பார். இந்த வியாதியெல்லாம் பூர்வ கர்மத்தினாலேயே விளைவதால், பூர்வ கர்மத்திற்குப் பரிகாரமாக அதை யேற்றுக் கொண்டு, தைரியத்துடனும் திடமனதுடனும், கடவுளைப் பிரார்த்திப்போமானால், அவைகளெல்லாம் நீங்கும் என்றும் மற்ற முறைகளை விட இதுவே சிறந்தது என்றும் சொல்கிறார் பாபா.

கஷ்டத்தினாலே ஏற்படும் நன்மைகளை அவருடைய பிரசங்கங்களிலே முக்கியமாக விவரித்துச் சொல்வார். கஷ்டத்தினாலே மனிதன் திருந்துகிறான். கெட்ட மனதையும் கஷ்டந்தான் உருக்கி நல்லதாக்கி பிறர்க்குதவும் நல் வழியிலே திருப்பும். கல்லான மனதையும் இளக்குவது கஷ்டந்தான். எத்தனை கற்றாலும், என்ன வேதாந்தம் ஓதினாலும், என்ன தவமிருந்தாலும், கொஞ்சமாவது கஷ்டமிருந்தால்தான் மனம் உருக்கத்தையடையும். கஷ்டத்திலே உருகி மிருதுவடைந்த மனமுள்ளவனுக்கே ஸத்குருவுடைய போதனை அவசியமானதாயும் எளிதிலே அடையக் கூடியதாயும் இருக்கிறது. கஷ்டம் அதிகரிப்

பதனால் தெய்வ பக்தியும் வளரும். வைராக்யத்திற்குக் கஷ்டமே வேர். மனிதனை விவேகியாக்கி ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுவிக்க வல்லது கஷ்டமே. கஷ்டத்தின் மேன்மையைக் கடவுளும் அவதாரங்களினாலே உலகோருக்கு விளக்கிக் காட்டியிருக்கிறார். பாபா தன்னுடைய சிறுபிராய முதற்கொண்டே கஷ்டத்தையெதிர்த்து நிற்குங் குணமுள்ளவர் என்பதும், அவருடைய எதிர்ப்பினாலே பகவானுடைய மகிமையை உலகோருக்கு எடுத்துக்காட்டுபவர் என்பதும் வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். "ஜஸே—அஸேல்—தஸே—" அதாவது "விஷயங்களிருக்கிறபடி யிருக்கட்டும்" என்ற வார்த்தையை அவர் அடிக்கடி கூறுவார். அவர் கல்யாணியிலே அலைந்து கொண்டிருந்தபோது மராட்டியக் கிழவியிடம் கற்றுக்கொண்ட பாடலின் கருத்தும் இதுவே.

இதற்கு உதாரணங்கள் கூறப் புகுந்தோமாயின் மிக விரியும். விவேகிகள் கஷ்டத்தை மனந்தளராமல் ஏற்று வந்திருக்கிறார்கள். நாமும் அவர்களையே பின்பற்றி, கஷ்டத்திலே மனம் சலியாமல், அதை ஈசுவரன் தந்த பரிகாரமாகக்கருதி அவனிடம் பக்தி செலுத்துவோமானால் கஷ்டம் தானே நம்மை விட்டகன்று விடும், என்ற உறுதியை பக்தர்களுக்குப் போதிக்கிறார் ஸ்ரீ உபாஸனி பாபா.

அவர் கடவுள்தானா? இன்னும் அதிகமான நன்மையை அவராலே செய்ய முடியாதா என்றும், யாருக்காவது அவர் கடவுளைக் காட்டியிருக்கிறாரா என்றும் சிலர் கேட்கக் கூடும். கண்டவர் விண்டதில்லை. விண்டவர் கண்டதில்லை என்றொரு பழமொழியுண்டு. அதாவது அறிந்தவர் பேசுவதில்லை. பேசியவர் அறிந்திருக்க முடியாது. பாபாவிடம் இந்த அநுக்ரஹத்தைப்பெற்ற

சீடர்கள் வெளியில் தெரிவித்ததில்லை. குருவுடைய ஆக்ஞையாயிருந்தாலும் இருக்கலாம். ஆனால் அதிருஷ்ட வசமாகக் காயாதவர் என்ற பெருந்தன்மையுள்ள வியாபாரி ஒருவர் மட்டும் தனது அனுபவத்தைச் சொல்லியிருக்கிறார். காயாதவர் என்பது அவருடைய மாறு பெயர். அவருடைய அனுபவத்தை அவர் சொன்னதை அப்படியே எழுதப் பட்டிருக்கிறது அதாவது :—

1924-25-ம் வருடத்திலே "பிரும்ம ஸத்யம், ஜகன் மித்யா" (பிரும்மம் நித்தியவஸ்து, ஜகமானது மாயை, அழிவது) என்பதைப்பற்றி பாபா சில நாட்கள் நான்கு ஐந்துமணிநேரம் உபந்யாஸம் செய்து வந்தார். ஜனங்களுக்கு ஏதாவது ஸந்தேகங்கள் எழுந்தால் அவர் அவைகளை உடனுக்குடனே நிவர்த்திப்பார். நானும் எல்லாரையும்போல அவருடைய பிரசங்கங்களைக் கேட்டுவந்தேனானாலும் என்னைப்பற்றியவரையில் என் சந்தேகங்களெதையும் நான் வெளிப்படுத்தவேயில்லை. எனக்குத்தோன்றியது இதுதான். அவர் உபதேசிக்கிறார். நான் கேட்கிறேன். உலகம் இப்படியிருக்கிறது. உலகம் இல்லாவிடில் அவர் சொல்லி நான் கேட்பதெப்படி? இதற்கு உலகம் அவசியந்தானே! ஒரு உபதேசமானது அதன் மூலாதாரத்தையே வெட்டினால் என்ன லாபம்! இது நுனிமரத்திலிருந்து அடிமரத்தை வெட்டுவதுபோலல்லவா இருக்கிறது! என்று எண்ணமிட்டவனாய் பிரசங்கத்தைக் கேட்டுவிட்டு வீட்டுக்குப்போய் தோட்டத்தில் உட்கார்ந்துகொண்டு இதைப்பற்றி ஆழ்ந்தயோசனையிலிருந்தேன். அப்போ பாபாவின் உருவம் திடீரென்று என்முன்தோன்றி,

"உனக்குப் பொய்சொல்வதில் எனக்கென்ன லாபம்! நான் உடுத்தியிருக்கும் சரக்கு தவிர எனக்கு

ஒன்றும் வேண்டாம். உண்மையல்லாத எதையும் நான் எதற்காக உனக்குச் சொல்லவேண்டும்?'' என்றார்.

ஆனாலும் என் சந்தேகம் தீரவில்லை. அதற்கு அவர், உன் சந்தேக நிவர்த்திக்காக உனக்கோர் அனுபவத்தைத் தருகிறேன் என்று சொல்லி அவருடைய காலின் பெருவிரலைத்தூக்கி என் மார்பில்வைத்தார். உடனே தோட்டம், வீடு, ஸகோரி, எல்லாம் சுழன்றுவந்து என்னுள்புகுந்து என்கண்களுக்கே தெரியாமல் மறைந்துவிட்டது. இப்படியே உலகத்திலுள்ள எல்லாமும், உலகமே, என்னுள்புகுந்து கடைசியாக பாபாவுடைய வடிவமும் என்னுடைய கண்ணிலே மறைந்துவிட்டபின் இன்னதென்றறியவோ சொல்லவோ முடியாத ஒரு சாந்தியும் ஆனந்தமும் அடைந்தேன். எவ்வளவுநேரம் இது நடந்ததென்பது சொல்லமுடியவில்லை. அந்த நிலைமையே நிலையானதாயிருக்கவேண்டுமென நான் விரும்பினேன். ஆனால் அக்கணமே பாபா என் நெஞ்சிலிருந்து தன் காலையெடுத்தார். ஒரொருபொருளாய் மீண்டும் என் கண்ணுக்குத் தோன்றவே பாபா மறைந்தார். யாவும் முன்போலாயின.

காயாதவருடைய இந்த அனுபவத்தை மகாராஜரிடமோ பிறரிடமோ அவர் சொல்லிக்கொள்ளவில்லை. இருந்தாலும் இதுபோன்ற பல அனுபவங்களினாலே அவருடைய சந்தேகங்களெல்லாம் நீங்கி, "உலகம் அநித்யம், "பிரும்மமேஸத்யம்'' என்ற உண்மையை அறிந்தார். பாபாவுடைய சிஷ்யையும், பாவ் ஸாஹேப் சிங்வேகர் என்பவருடைய பெண்ணுமான ஸோனிபாய் என்பவளும் இதேபோன்ற அனுபவத்தைத் தானடைந்ததாகச் சொல்லியிருக்கிறாள். இன்னும் சில பக்தர்களும் தங்களுக்கு நேர்ந்த அனுபவங்களை குருவிடம் சொல்லியிருக்கிறார்கள்.

# அத்தியாயம்—24

## ஸகோரியிலே பாபாவுடைய தினசரி வாழ்க்கை.

(ஆனந்தக்களிப்பு)

*ஆனந்த வாழ்க்கையைப் பாரும்—அதை
யாரும் பெறுவ தெளி தெனத்தேறும். (ஆ)

சிந்தை யெல்லாம் தெய்வசிந்தை—செய்யுஞ்
செய்கை யெல்லாந் திருத் தொண்டெனுஞ் செய்கை
பந்த மகன்றிட நாமே—அந்த
பக்தர்கள் வாழ்வைப் பகிர்ந்து கொள்வோமே. (ஆ)

ஸகோரிக்கு பம்பாயிலிருந்து, மான்மத், சிடலி, மார்க்கமாயும், தென்தேசத்திலிருந்து தோண்டு, சிடலி, மார்க்கமாயும், செல்லவேண்டும். சிடலி ரயில் வேஸ்டேஷனிலிருந்து ஸகோரி பதினொருமைல். மோடார் பஸ்கள் போக்குவரத்து உண்டு. ஊருக்கு இரண்டுமைல் தூரத்திலே வரும்போதே தத்தர் கோவி லின் உன்னதமான கோபுரம் கண்ணுக்குத் தெரியும். அந்தக் கோவிலுக்கு மாடியும் உண்டு. கீழே தற்கால கோவில்களைப்போல அமைக்கப்பட்டிருக்கும் ஓர் கூடம் அதனுள் கர்ப்பக்ருஹமும், மழமழ வென்ற தூண்களும் நன்ருய் காரை பூசப்பட்ட சுவர்களில் அனேக ஸ்வாமி படங்களும் இருப்பதைக் காணலாம்.

வெள்ளியினுலே செய்யப்பட்ட தத்தர் பாதங்கள் இரண்டு ஜதைகளுண்டு. கர்ப்பக்ருஹத்திற்குள்ளிருக்கும் இரண்டு பாதங்களுக்கும் தினமும் திரிகாலமும் இடைவி டாமல்பிராம்மணர்களால் அபிஷேகமும் பூஜையும் நடக்கி றது. ஸ்ரீ உபாஸனி பாபா, ஸாய்பாபா, இவர்களுடைய

பெரிய உருவப்படங்களும், கிருஷ்ண விக்கிரகமும், இதர விக்கிரகங்களும் இருக்கின்றன. படங்களருகே எப்போதும் தீபங்கள் எரிந்து கொண்டிருக்கும். நம் தேசத்திலே சந்தி அல்லது தீபாராதனை என்று சொல்வதை அங்கே ஆரதி யென்று சொல்கிறார்கள். பாபாவுடைய சீடர்களும் இன்னும் மற்ற ஜனங்களும் மூன்று வேளையும் கோவிலுக்கு வந்து ஆரதி முடிந்ததும் தீர்த்தப் பிரஸாதம் பெற்றுக்கொண்டு அங்கிருந்து நடந்தே குருவுடைய மடத்திற்குப் போவார்கள்.

அங்கே குருஸ்துதி, பகவத்ஸ்துதி யாகிய சுலோகங்களையும், முக்திக்கு வேண்டிய குணாதிசயங்களைச் சொல்லும் சுலோகங்களையும் பாராயணம் செய்வார்கள். காலை ஸந்தி தவிர மற்ற இரண்டு வேளைகளிலும் பாபா ஆரதிக்கு மடத்திலே எழுந்தருளியிருப்பார். ஒவ்வொருவரும், அவருடைய பாதங்களிலும், அவருடைய பிரதம சிஷ்யையாகிய கோதாவரிபாயின் பாதங்களிலும், புஷ்பங்களை யர்ச்சித்து சிரம்பட வணங்குவார்கள்.

பிறகு பஜனாவளியிலுள்ள பாடல்களை முப்பது, நாற்பது ஸ்திரீகளாய்ச் சேர்ந்து ஹார்மோனிய சுருதியுடன் பாடுவார்கள். பாட்டு முடிந்த பின் இரண்டு பக்கமும் ஸ்திரீகளுக்கும் ஆடவர்களுக்கும் நிற்க இடம் விட்டு விட்டு நடுவே எல்லாருமாய்க் கூடி பாபாவின் பக்தர்களியற்றிய கீர்த்தனங்களையும், ஹிந்தியிலும் மராட்டியிலும் உள்ள பகவானைத் துதிக்கும் கீர்த்தனங்களையும் பாடிக்கோலாட்டம் போடுவார்கள். அவர்களுடைய பஜனைகளும் கோலாட்டமும் பாட்டின் அர்த்த விசேஷமும் எல்லாருக்கும் பாபாவிடம் குழந்தைகளைப்போல நம்பிக்கையை உண்டாக்கி தெய்வ பக்தி கொள்ளச் செய்கிறது. அங்குள்ள பக்த கோடிகளுடைய தினசரி வாழ்க்கை

குற்றமற்ற தூய்மையையும் பக்திமார்க்கத்தையும் அனு சரித்தது தான்.

அதிகாலே நான்கு மணிக்குப் பொதுமணியடித்ததும் எழுந்து, கடவுளைத் தியானம் செய்வதுடன், கோவிலுக் கும் மடத்திற்கும் தீபாராதனைக்குப் போய்விட்டு வந்த பின், தண்ணீரோ காபியோ சாப்பிட்டுவிட்டு தங்களா லியன்ற ஸேவைகளைச் செய்வார்கள். ஸ்திரீ பக்தர்கள், கோவில், மடம், இவைகளைப் பெருக்கி மெழுகிக் கோல மிட்டுப் பூஜைக்கும் இதர காரியங்களுக்கும் தேவையான பாத்திரங்களைத் தேய்த்துச் சுத்தமாக வைப்பார்கள். ஆடவர்கள், நந்தவனத்திலும் கோவிலிலும் சில்லரை வேலைகளை செய்வதும் பூஜைக்கு வேண்டியவைகளைச் சேக ரிப்பதுமாயிருப்பார்கள். தங்கள் நித்யகர்மானுஷ்டானங் களையும், பூஜைகளையும் அவரவர்கள் செய்யத் தவறுவ தில்லை. பக்தர்கள் அனேகமாகத் தர்மசாலைகளிலும் தத்தர் கோவிலிலும் வசிக்கின்றனர். பெரும்பாலோர் சுயம்பாகம்தான் செய்து சாப்பிடுகின்றனர்.

கோவில் மண்டபத்திலே இராப் பகலாக இடை விடாமல் பஜனை நடந்தவண்ணமே யிருக்கும். ஒவ்வொரு வரும் ஓர் குறிப்பிட்ட காலத்தை நிர்ணயித்துக் கொண் டிருக்கிறார்கள். நடு ராத்திரியிலிருந்து பகல் பனிரெண்டு மணி வரைக்கும் ஆடவர்கள் தனியாகவும் கோஷ்டியாக வும் வந்து பஜனை நடத்துவார்கள். பகல் பனிரெண்டு மணியிலிருந்து இரவு வரையில் ஸ்திரீகள் வந்து பஜனை செய்து போவார்கள். பாபாவின் வாசஸ்தலத்திலே மாலை ஆறு மணிக்கு ஸ்திரீகளும், காலை ஒன்பது மணிக்கு ஆட வரும் பஜனை செய்கிறார்கள். காலை பத்து மணியிலிருந்து பதினொரு மணிக்குள் பாபா பிஞ்சிரா (கூண்டு)க்கு அரு கில் வந்து உட்காருகிறார். எல்லாரும் அவருடைய பிரதம

தரிசனத்தைப் பெற்று அவரிடம் சம்பாஷிக்கின்றனர். அரை மணி நேரத்திற்குப் பிறகு நைவேத்ய மணியடிக்கப்படுகிறது. பாபாவுக்காக அவரவர்களும் கொண்டு வந்த நைவேத்யங்களும் தீர்த்தமும், எல்லாருக்கும் பிரசாதமாகக் கொடுக்கப்படுகிறது. கோவிலில் ஒரு மணி சாவகாசமும், குருவுடைய வாசஸ்தலத்தில், இரண்டுமணி நேரமும் பகல்வேளை ஆரதி நடக்கிறது. பாபா முன்னிலையில் வேதபாராயணமும் ஸ்தோத்ரமும் ஆசீர்வாதமும் செய்யப்படுகிறது. பகவத்கீதையிலும், அஷ்டாவக்ரகீதையிலும் ஐம்பது அல்லது நூறு சுலோகங்கள் சொல்லப்படுகின்றன. இதைக்கேட்கவும் பக்தர்கள் வருவதுண்டு. பிறகு சாப்பிடநேரம் விட்டபின், மாலை மூன்றுமணி முதல் ஆறுமணி வரையில் பக்தர்கள் பார்க்க அனுமதிக்கப்படுகிறார்கள்.

அவரிடம் போகிறவர்கள் தங்கள் கஷ்டங்களையெல்லாம் முறையிடுவதை அவர் பொறுமையுடன் கேட்டுத் தேறுதல் கூறுகிறார். அவரவர்களுக்கும் ஸன்மார்க்க உபதேசம் செய்கிறார். வரும் ஜனங்கள் பலர் தங்களுடைய கஷ்ட பரிகாரத்திற்குவேண்டிய விதிகளை அவரிடம் கேட்டுத் தெரிந்துகொண்டு செய்கிறார்கள். அவரவருடைய கஷ்டமும் அவர் அறிந்து அதற்குத்தக்க பரிகாரம் சொல்கிறார். அவருடைய இருப்பிடத்திலேயே அந்தப் பரிகாரங்களைச்செய்வது சிரேஷ்டமென்று; அவ்விதம் செய்து பலனடைந்தவர்கள் அனேகர்.

ஸித்தியைவேண்டி வருபவர்களை அவர் ஆதரிப்பதில்லை. ஆனால் தள்ளுவதுமில்லை. குருவையும் ஈசுவரனையும் தியானியுங்கள் என்றவர்களுக்குச் சொல்கிறார். மாலை மூன்றுமணியிலிருந்து ஆறுமணிவரைக்கும் அவருடைய அலுவல்களிவைதான். உற்சவதினங்களில் பக்தர்களும்

ஜனங்களும் அவரிடம் விசேஷமாய் வரும்போது அவருடைய உபந்யாசம் நடைபெறும். மதுவுண்டவர்கள் போல மயங்கி, ஏராளமான ஜனங்கள் அவருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அவர் பிரஸங்க சாஸ்திர நிபுணரல்ல. இருந்தாலும், அவர் மணிக்கணக்காகப் பேசினாலும், மந்திரத்தில் கட்டுண்டவர்கள்போல அத்தனை ஜனங்களும் சலிப்பறியாமல் உட்கார்ந்திருப்பார்கள். அவர்களே பிறகு, எப்படி நம்மையவர் பிரசங்கத்தினால் இவ்வளவுநேரம் உட்கார்த்திவைத்துவிட்டார்! என்று ஆச்சரியப்படுவார்கள்.

ஓர் ஞானியைப் பலர் தரிசிப்பது ஏன்? அவர் கடவுளைக்கண்டு கடவுளின் அருகேயிருப்பவராதலால், பிறருக்கும், கடவுளைக்காட்ட வல்லவர். ஞானிகளிலே பலர் பலவிதமாயிருப்பவர்கள். ஸ்ரீ பாபா, பகவானையறிந்து ஆத்மஞானத்தினாலே உபதேசிக்கிறவர். வெறும் புத்தகப் படிப்பாளியல்ல, ஆகையால் அவருடைய வாக்கெல்லாம் வேதமொழியாக ஜனங்கள் கருதுவதால், அவர்களுக்கு நேரம்போவதுகூடத் தெரிகிறதில்லை.

பகலில் மூன்றுமணியிலிருந்து ஆறுமணிவரைக்கும் பெண்கள் ஸம்ஸ்கிருதம், வேதாந்த புத்தகங்கள், சாஸ்திரீயமான பாடல்கள், இவைகளைக் கற்றுக்கொள்வார்கள். மாலை ஐந்து மணியிலிருந்து ஆறுமணிவரைக்கும் ஹரிகதா பிரஸங்கமோ, வேதம் ஓதுவதோ நடக்கும். பிறகு ஸ்திரீகள் மடத்தின் வாசலில் பஜனைசெய்வார்கள். பஜனை முடிந்ததும், கோவிலிலும் மடத்திலும் தீபாராதனை நடக்கும். இரவு பத்துமணிக்கு ஸ்திரீகள் மங்களம்பாடி எல்லாம் முடிந்து அவரவர் படுக்கச் செல்வார்கள்.

இம்மாதிரியாய் பக்தர்களுடையகாலம், இரவும் பகலும், பகவத்தியானத்திலும் ஈசுவர கைங்கரியத்திலும்

செல்கிறது. சோம்பேறித்தனம் வீண்வம்பு, வாக்கு வாதம், எதற்கும், பத்திரிகை படிப்பதற்குக் கூட அங்கே உத்திரவில்லை. ஆகையால், பொழுதெல்லாம் பகவத் விஷயமே தவிர வேறு எந்த விஷயமும் அங்கே தலை காட்டுவதில்லை. அவைகளுக்கு இடமும் இல்லை. அப்படிப்பட்ட ஜீவியம் எவ்வாறிருக்குமென்பதை நேயர்களறியக்கூடும். ஸ்ரீ நரஸிம்ம ஸ்வாமியவர்கள் ஸகோரிக்கு வந்து மூன்று மாதமான பின் அவரை, "இப்போது உமது வாசனைகள் எப்படியிருக்கின்றன?" என்று பாபா கேட்டார்." "நீங்கள்தான் ஒவ்வொரு நிமிஷத்திற்கும் ஸரியான வேலை வைத்திருக்கிறீர்களே! வாஸனைகளுக்கு இங்கு இடமேது? அவைகளெல்லாம் மடிந்து கிடக்கிறதே இங்கே!" என்று பதில் சொன்னார்.

நடப்பது எல்லாம் பகவத் விஷயம்தான் அங்கே. செய்வதெல்லாம் ஸத்கர்மங்களே. எல்லாருடைய காலமும் ஒவ்வொரு நிமிடமும் பகவத் ஸம்பந்தத்துடனேயே, பக்தி மார்க்கத்திலேயே கழிகிறது. ஒரு கண நேரமும் வீணாகிறதில்லை. அத்தகைய புனித ஸ்தலத்தை நினைத்தாலும் உள்ளத்திற்கு சாந்தியுண்டாகும்.

* பொய் வாழ்வைப் போற்றிப் பொழுதெல்லாம் போக்காமல்
மெய் வாழ்வைத் தேடி விழைந்திடுவோம் மேதினியீர்!

# அத்தியாயம்—25

## படிப்பினையும் முடிவுரையும்

*உண்டென்று நம்பினவர்க் குள்ளவனை, யில்லையென
விண்டவர்க்குத் தோன்றாத வித்தகனை—உண்டென்று,
சிறக்கும் அடியார்தஞ் சீர்கழலே சேர்ந்தாற்
பறக்கும் முடியாப் பவம்.

இந்நூலின் முடிவுரையின் பொருட்டு பாபாவுடைய ஜீவிய சரித்திரத்திலிருந்து நமக்கேதாவது படிப்பினை யுண்டா என்று கவனிப்போம். அவருடைய சரித்திரத்தைப் படித்தும் அவர் மனம் பேதித்தது, அவருக்குச் சித்தப் பிரமை என்ற அபிப்பிராயம் வாசகர்களுக்கு இருக்குமாயின் அது தவறு. இதில் குறித்துள்ள விஷயங்கள் பெரும்பாலும் மராத்தி பாஷையிலுள்ள உபாஸனி லீலாம்ருதமென்ற புத்தகத்திலிருந்தே எடுக்கப்பட்டவை. பிரமிஷ்டா வஸ்தா, உன்மத்தாவஸ்தா என்னும் பதங்கள் அதிலே காணப்பட்டவை. ஆனாலவைகளை ஆத்மஞானத்தை யடைவதற்கு வாயிற்படிபோலாகுமாதலால் அவைகளுக்கு மேலான அர்த்தங் கொள்வதே உசிதம். அவர் ஓர் ஸத்குருவின் ஆதரவின் கீழ் தான் அந்த அவஸ்தைகளை நிர்வகித்து, குருவுடைய மனோதிடத்தையும், ஆத்ம சக்தியையும் தானும் அடைந்திருக்கிறார்.

அப்படி அவர் குருவின் ஆதரவின்றியே இருந்திருந்தாலும் அவருக்கேற்பட்ட அனுபவங்களை அவர் வெறும் பயித்தியக்காரரல்ல வென்பதை நன்கு விளக்கும். முக்கியமாக பம்பாய் ராஜதானியிலே கணக்கற்ற மக்களின் மனதைத் தன்னிடமிழுக்கும் இந்த ஆத்மாவின் சக்தி

என்ன? ஆரம்பத்திலே மோசமானது போலிருந்தும் முடிவில் பெரும் கீர்த்தி பெற்றிருக்கும் இவருடைய வாழ்க்கைச் சரித்திரத்தை கவனிக்கும்போது நதியின் உற்பத்தியிடமும் ரிஷிகளின் பிறப்பு வளர்ப்பும் விசாரிக்க லாகாது என்னும் மூத்தோர் மொழியின் நோக்கம் தெளி வாகிறது. மஹான்கள் அநேகருடைய ஜீவியங்களைக் கவ னிக்கும்போது ஸ்ரீ உபாஸனி மஹரிஷியைப் பற்றி நாம் ஒன்றும் குறை சொல்ல முடியாது.

பாபாவுடைய கதையைப் படித்துவிட்டு இதெல் லாம் நாமும் பகவானுல்தான் முடியுமென்று நினைக்கக் கூடும். ஆனல் அவர் சொல்லுகிருர்—குகையிலே தவம் செய்தால்தான் சமாதி அனுபவம் ஏற்படுமென்றும் சோமனுதலிங்கத் தருகே பிராணுயாமம் செய்தால்தான் நிர்விகல்ப ஸமாதி பெறலாமென்றும் ஜனங்கள் நினைக்க லாகாது. பாபாவுடைய கீர்த்திக்கு அவை காரணமல்ல: அவருக்கிந்தப் பிறப்பிலேற்பட்ட இந்த பாக்கியம் அவரு டைய பல பிறவிகளின் புண்ணிய விசேஷம்தான் என் கிருர். நூற்றுக் கணக்கான பிறவிகளிற் செய்த புண் ணிய பலனுலேதான் ஒருவன் மேன்மையடைய முடியும். ஆகவே ஒவ்வொருவரும் ஸத்கர்மம் செய்ய வேண்டியது அவரவர் கடமை. நற்கருமமே செய்தால் நாளடைவில் நாதனருள் கூடும். ஸத்வத்தைப் பயில். ஆசையை அடக்கு. எப்போதும் எல்லோர்க்கும் நன்மையே செய். அமைதியோடும் நம்பிக்கையோடும் இரு. பக்தியுடன் புண்ணிய கருமத்தைச் செய். கடவுளுடைய ஆக்ஞைக்கு அடங்கி ஸத்தியமாய் நடக்கக் கற்றுக்கொள். இவைகளை யெல்லாரும் அவசியம் கைக்கொள்ள வேண்டும் என் பதே அவருடைய பொன் மொழிகளும் அவருடைய சரித்திரத்திலிருந்து நாம் அறியும் படிப்பினைகளும்.

இது எல்லாம் எல்லாருக்கும் தெரிந்ததுதானே என்று நினைக்கலாம். ஆனால் கஷ்டத்தைத் தவமாக ஏற்று அதை நாம் கோரவேண்டும் என்று சொல்லி அந்த உண்மையை அவர் தனது வாழ்க்கையிலேயே நடத்திக்காட்டி யிருக்கிறாரென்பதை வாசகர்கள் கவனிக்க வேண்டும். பொறுமையும் திருப்தியும் அடக்கமும் மற்ற நற்குணங்களெல்லாம் மேற்கூறிய அனுபவங்களோடு சேர்ந்து எப்படி அவரைத் திருத்தி ஆன்மாக்களுக்கு வைத்தியராகச் செய்திருக்கிறது என்பதையும் முக்கியமாக அவருடைய ஜீவியத்தைப் பரிசுத்தமாகவும் புண்ணியகரமாகவும் அவர் தள்ளி வந்திருப்பதையும் நாம் கவனிக்கவேண்டும்.

தருமமும் சத்தியமும் அமைதியும் கருணையும் அவரிடம் கரையற்றுப் பிரகாசிக்கிறது. க்ஷமித்தல் ஸர்வ ஸங்கபரித்தியாகம் தயை இவைகளே அவரது மகிமை. பவரோகிகளுக்கு அவர் ஞானவைத்தியர். இதைப்படிப் போர் யாராவது உலக கஷ்டங்களில் மனம் முறிந்து நிம்மதிக்கு ஏங்கும்பக்ஷத்தில் அவர்கள் ஸ்ரீ உபாஸனி மஹரிஷியிடம் பக்திவைத்து அவர் கோணியோ எதுவோ தரித்திருந்தாலும் அவரிடம் ஏதாவது குற்றங்களிருப்பதாகத்தோன்றினாலும் தங்கள் முழுமனதோடு அவரிடம் முறையிடும்பக்ஷத்தில் காலக்கிரமத்திலோ சீக்கிரத்திலோ நிச்சயமாக நிம்மதியடைவார்கள். இதற்கு சாக்ஷியாக பக்தர்களுடைய அனுபவங்களே போதுமானது. இதைப்படிப்போரும் அத்தகைய நன்மைகளை அடைந்தார்களானால் இப்புத்தகம் எழுதியது வீணாகாது.

குற்றம் குறையான நிலைமையிலிருந்துதான் பக்குவமடையக்கூடும். அந்தப்பழுதற்ற நிலைமையிலே தாங்களும் இல்லையென்றும் பகவானைத்தவிர யாருமிருப்பதரிதென்

றும் சாதுக்கள் கூறினாலும், சாதுக்களின் மூலமாக பகவானை அடைந்தவர் அநேகர். குருவிடம் அளவுகடந்த நம்பிக்கையும் தீவிர பக்தியும் ஏற்பட்டுவிட்டால் குறைகள் என்று நினைக்கும் பிசகான எண்ணங்களை அது உதறித்தள்ளிவிடும். மீறிய பக்தியுள்ள அந்தச் சீடனை ஸத்குருவே கடவுளின் பிரதிநிதியாயிருந்து ரக்ஷிக்கிறார். பரப்பிரும்மத்தைப்பற்றி உபந்யாஸிப்பதில் பாபாவை விட பெரியோர் இருக்கக்கூடும். ஆனால் சிஷ்யர்களை பக்தி, ஸத்கர்மம் இவைகளின் வாயிலாகவே பரப்பிரும்மத்தை யடையச்செய்யும் சக்தியில் பாபா நிகரற்றவரென்றே சொல்லவேண்டும். நம்பிக்கைதான் மனிதனைக் கரையேற்றக்கூடியது. விக்கினங்களினாலோ பேய்போன்ற சந்தேகத்தினாலோ அது சிதறினாலும் குழந்தையானது நிற்கவிரும்பி பலமுறை தவறி விழுந்தாலும் தன் முயற்சியைக் கைவிடாமல் பழக்கிக்கொள்வதுபோல் ஹிருதயத்தில் நம்பிக்கையையும் பழக்கத்தினாலே நிலைநிறுத்திவிடலாம். நம்பிக்கையில்லாவிடில் ஸாமான்ய விஷயங்களும் கைகூடுவதரிது. நம்பிக்கையே உயிர்நிலை. நம்பிக்கையும் பக்தியும் முயற்சியுமே மனிதன் விரும்பியதெல்லா மளிக்கும்.

சுபம்

# அனுபந்தம்

## மற்றும் சில பக்தர்களுடைய அனுபவங்கள்

**1.** ஒரு பக்தர் தான் பார்க்கும் உத்தியோகம் மனதுக்குப் பிடிக்காமல் அதை ராஜீநாமா செய்துவிட எண்ணியிருக்கும்போது அவருடைய கனவிலே பாபா தோன்றி, நீ வேலையை விட்டுவிடாதே, நான் உன்னை வேறிடத்திற்கு மாற்றுகிறேன் என்று சொன்னார். ஒரு வாரத்தில் அவர் ஓர் நல்ல இடத்தில் மாற்றப்பட்டார். குஜராத்திகளைத் தவிர பிறரை அந்த இடத்திற்கு நியமிக்கலாகாதென்றிருந்தும், பாபாவுடைய சக்தி அதை நிறைவேற்றியது. அவருடைய கனவிலே அடிக்கடி பாபா தோன்றி பல உதவிகளைச் செய்திருக்கிறார். அவருடைய குழந்தைகள் காயலாவாயிருந்தபோது பாபாவுடைய விபூதியினாலேயே சௌக்ய மடைந்தன. அவர் ஒரு ஸமயம் ஸந்தியாவந்தனம் செய்வதனா லென்னபலன் என்று பாபாவைக் கேட்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு அவரிடம் போனார் அவர் கேட்பதற்குமுன் பாபா, தானாகவே அவரையும் மற்றவர்களையும் பார்த்துப் பொதுவாக, உன் தகப்பனார் மூன்றுவேளைகளிலும் ஸந்தியாவந்தனம் செய்து வந்தாரே, அவர் என்ன முட்டாளா? என்று சொன்னார். அன்று முதல் தவறாமல அனுஷ்டானங்களைச் செய்துவருகிறார் அந்த பக்தர்.

**2.** காயாதவர் என்ற ஓர் பக்தர் தன் ஸகோதரியை பண்டரிபுரத்திற்கு அழைத்துப் போவதாகச் சொல்லியிருந்தார். ஒருநாள் அவருடைய கனவிலே பண்டரிபுரமும் விடோபா கோவிலும் தோன்றியது விடோபாவையே இவர் உற்றுப் பார்க்க விடோபா தன் பாதங்களை (உபாஸனி பாபா செய்வதுபோல) நீட்டவே ஓர் விக்ரகம் தன் கால்களை நீட்டுமா என்று அதிசயித்து இவர் தன் தலையை அதில் வைத்து வணங்கினர். உடனே விடோபா விக்கிரகம் பேசவாரம்பித்தது.

விடோபா:—நான்தான் உன்னைப் பேசும் தெய்வத்திடம் ஒப்புவித்து விட்டேனே. நீ ஏன் இங்கே வந்தாய்?

காயா:—என்னமோ வந்துவிட்டேன். நீ ஆசீர்வாதம் செய்.

விடோபா:—ஏகாதசி விரதத்தை அனுஷ்டித்து வா.

காயா:—ஏற்கனவே அனுஷ்டிக்கிறேனே.

விடோபா:—அது போதாது. பத்து இந்திரியங்களையொடுக்கி பதினேருவது மனதை யெனக்குக்கொடுத்து விடு. நானதை ஒருபோதும் கைவிடமாட்டேன் என்ருர்.

அச்சமயத்தில் சில அழகிய நாய்கள் காயாதவருடைய கால்களை நக்கிக்கொண்டிருந்தன. அவர் கோபத்துடன், ஒன்றை யெடுத்து தூர வீசி யெறிந்தார். அப்போதும் அதற்கு காயமுண்டாகவில்லை. இதைப் பார்த்த விடோபா, பார்த்தாயா! அது சாகவில்லை. விஷய வாசனைகளாகிய இவைகளை கோபிப்பதில் பயனில்லை. ஞானத்தினலே நசுக்கவேண்டும் என்ருர்.

இந்தக் கனவு நிகழ்ந்து சில நாளைக்குப் பின் இவர் பண்டரிபுரம் போனபோது ஊரும் கோவிலும் ஸ்வாமியும தான் கனவில் கண்டது போலவே யிருக்கக் கண்டு ஆச்சர்ய மடைந்தார்.

மற்றொரு ஸமயம் இவருக்கு மிருத்யு தன்னை நெருங்குவதுபோலத் தோன்றியபோது, என் உடலை மாத்திரமே நீ கொள்ளமுடியுமே தவிர, என்னை நீ யணுகமுடியாதென்று கூறி பாபாவை தியானித்தார். ஆனால் பாபா அச்சமயம் தரிசனம் தரவில்லை. இவருக்குத் தவிப்பு அதிகமாய் விடவே உன்னை யிவ்வளவு காலமாய் நம்பியிருந்தும் என் ஆபத்துக்காலத்தில் என்னை கைவிட்டு விட்டாயே என்று பாபாவை வையவே ஓர் ஜோதிச் சக்கரம் தோன்றி அந்த மிருத்யு வடிவத்தைச் சூழ்ந்துகொண்டது. உடனே அந்த மிருத்யு, காயாதவரிடம், உன்னை இப்போது விட்டு விட்டேன் என்று சொல்லி அகன்றது. ஸ்ரீ உபாஸனி பாபாவுடைய கிருபையினாலே இந்தப் பக்தருக்கு இன்னும் பல அனுபவங்களும் ஏற்பட்டிருக்கின்றன. அவைகளில் சில சரித்திரத்திலே வருவதைக் காணலாம்.

3. பம்பாயிலே ஒரு பிரபல டாக்டர் (கோம்பர்பாயில்) வரும்படி ஒன்றுமில்லாமற் போகவே வேதாந்த விஷயமாக பாபாவிடம் வந்து போய்க்கொண்டிருந்தார். சில நாளில் உனக்கு நல்ல வரும்படி வருமென்று சொன்னார் பாபா. அப்படியே ஏற்பட்டது. வீட்டு வாடகை கொடுக்கவும் பணமில்லாமல் தவிக்கும்போது பாபா நீதான் துணை என்று வேண்டுவார். எப்படியாவது அந்

தப் பணத்தை எவனுவதொருவன் (வெகுநாளைக்கும்
வைத்தியம் பார்த்துக்கொண்டவன்) அந்த ஸமயத்தி
கொண்டுவந்து கொடுப்பான். ஓர் ஸமயம் அவருக்
பாபாவிடம் அவநம்பிக்கை தோன்றவே, உடனே அ
உதறித்தள்ளினுர். இதை எப்படியோ அறிந்து கொண்
பாபா அவரைப் பார்த்து, வீட்டைச் சுத்தமாக வை
திருக்கிறேம், காற்றுனது குப்பையைக் கொண்டுவந்
போட்டு மறுபடியும் அடித்துக்கொண்டு போய்விடுகிறது
என்று சொல்லவே, அந்த டாக்டருக்கு பாபாவிடம் அ
பும் நம்பிக்கையும் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்த
அநத டாக்டர் இப்பொழுது சர்வத்தியாகம் செய்
சன்னியாசியாகிவிட்டார்.

4. ஷை டாக்டர் கோம்பர்பேல் (L. M.
என்பவரும் ஸாரஸ்வத கோஷ்டியினரும் வரு
தோறும் வந்து உபாஸனி பாபாவைத் தரிசிக்கலா
கள். அவர்களில் ஒருவனுக்குப் பேய் பிடித்திருந்த
அவன் பாபாவிடம் வந்தபோது அவருடைய பா
களைத் தொட்டவுடனே அது விலகி விட்டது.

PRINTED IN INDIA AT THE LIBERTY P